# பகடையாட்டம்

யுவன் சந்திரசேகர்



# பகடையாட்டம்

யுவன் சந்திரசேகர்

தமிழினி

# மேஜர் க்ருஷ்

... சதுரங்கக் காய்களுக்குச் சுய சிந்தனை கூடாது என்பது முதல் பாடம்...

*சாயங்காலம் தீரவிருக்கிறது. பறவைகளெல்லாம் கூட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு ராணுவ பட்டாலியன் மாதிரி அணிவகுத்துப் பறப்பதையும், அவற்றுக்குப் பின்னாலுள்ள திரையின் வெள்ளை நிறம் சிறுகச் சிறுக ரத்த நிறமாக மாறிவருவதையும் பார்த்துக் கிறங்கியவாறு மிலிட்டரி ரம்மை உள்ளே இறக்கிக்கொண்டிருந்தார் மேஜர் க்ருஷ். பக்கவாட்டுத் தடுப்புகள் இல்லாது, கூரையாக மட்டும் தார்ப்பாய் பரத்தின பந்தலின் கீழ் பிரம்பு நாற்காலியில் உடம்பு சாவதானமாய்க் கிடக்க, மனம் சிறுகச் சிறுக நெகிழத் தொடங்குகிறது. உதவிகரமாக, இடதுகையில் இடைவிடாமல் புகையும் சிகரெட் . சாயங்காலத்தின் தியானத்தன்மை தனக்குள்ளும் இறங்கிப் படிவதுபோல உணர்ந்தார்; குளிரின் காரணமாக, புறச் சலனங்களை நிறுத்திவிட்டு, மரப்பட்டையில் படிந்து மூச்சிறைக்கும் மரப்பல்லியாய்த் தான் ஆவதுபோல.*

*ஆரம்ப இரவின் அந்தரங்கத்துக்குள் முழுநிலா சுதந்திரமாக நகரத் தொடங்கிவிட்டது. நிலா வெளிச்சத்தின் வீச்சு எல்லைக்கு வெளியே கலவரமாக இறைந்திருந்த நட்சத்திரங்கள். இஷ்டம் போலக் கூடியும் பிரிந்தும் விளையாடும் வெண்மேகங்கள். காவல் கூடாரங்கள் அமைந்த மைதானத்தின் விளிம்பிலுள்ள மரங்களிலிருந்து பறவைகளின் உற்சாகக் கூச்சல். மலைச் சரிவின் ஆழத்திலிருந்து வன மிருகங்களின் ஊளைகளும் உறுமல்களும் மேலேறி வந்தன.*

*எதிர்ப்புறம் சுமார் நூறு கஜ தொலைவிலிருந்த கூடாரத்துக் குள்ளிருந்து எழுந்த வயர்லெஸ்ஸின் சிடுசிடுப்பு. வலதுபுறம் நிர்த்தாட் சண்யமாய் உயரும் மலைத்தொடர். இடதுபுறம் சமவெளி போன்ற விஸ்தாரமுடன், கரும் பச்சைத் திடலாகச் சரிவில் உள்ள மரங்களின் உச்சிகள் விரித்திருக்கும் மைதானம். அதன் கீழே பொதிந்திருக்கும்*

ரகசியத்தில் இருளின் அடர்த்தி அதிகரிக்கத் தொடங்குகிறது.

கைவிரலைச் சுட்ட சிகரெட் துண்டைக் கீழே போட்டுத் தேய்த்து விட்டு, அடுத்ததைப் பற்றவைத்துக்கொண்டார். மேஜர் க்ருஷ். புதிய சிகரெட்டின் புகைக்கொத்து, வளையங்களாக வெளியேறிக் கலைவதைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒவ்வொரு வளையத்துக்குள்ளும் தெரியும் ஒரு தனிக் காட்சியைக் கவனிப்பதுபோல உன்னிப்பான பார்வை.

**நா**னாவதியின் ஞாபகம் திரும்பவும் வந்து அமர்கிறது. காங்டாக் தாண்டி, திபெத்திய - ஸோமிட்ஸிய எல்லைகளுக்கருகில் உள்ள எல்லைக் காவல் புறநிலையத்துக்குப் பொறுப்பேற்கக் கிளம்பு முன்னால் அவனைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார் க்ருஷ்.

இனி, ஊருக்குப் போய் அம்மா, சகோதர சகோதரிகளைப் பார்த்துத் திரும்புவது மிகவும் கடினமான காரியமாகி விடுமே உனக்கு.

என்று கவலைப்பட்டான் அவன்.

மலைக் குளிருக்கு உடல் பழகும் வரை தினசரி நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.

என்று புத்தி சொன்னான்.

ஏற்கனவே சீனாவின் கண்கள் பதிந்த பகுதி. உள்ளூர்ப் பூர்வகுடிகள் மத்தியிலும் ஒருவித எதிர்ப்புணர்வு கிளம்பியிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். ஜாக்கிரதையாக இரு.

என்று அறிவுறுத்தினான்.

சோப்பு, பவுடர், வாசனைத் தைலங்கள் தயாரிப்பு நிறுவனமொன்றின் தாணே மாவட்ட முதன்மை முகவராக இருக்கிறான். உட்கார்ந்த இடத்திலிருந்தே பணியாட்களுக்கு உத்தரவு பிறப்பித்த வண்ணம் ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருந்தான்.

நான் ஒருத்தன் இல்லாமல் போனால், தாணே மாவட்டமே நாறி விடும் க்ருஷ். ஜனங்களின் அழகு குறைந்துவிடும்.

என்று சொல்லிச் சிரித்தான். எதற்கும் சிரிப்புத்தான் அவனுக்கு. பாகிஸ்தானுடன் யுத்தம் வரப்போகிறது என்று செய்திகள் வர ஆரம்பித்த போதும், ஒட்டுமொத்த இந்திய ராணுவத்துக்கும் ரத்த அழுத்தம் அதிகரித்த சமயத்திலும், சிரித்துக்கொண்டுதான் இருந்தான்.

சும்மா ஏன் சிரித்துக்கொண்டேயிருக்கிறாய் நானா?

என் ஆரோக்கியத்தின் ரகசியம்... சிரிப்புத்தான்.. டொடய்ங்...

என்று சோப்பு விளம்பரத்தில் வரும் ஸினிமா நடிகை மாதிரி சொல்வான். தொடர்ந்து அதே விகல்பமில்லாத, அடிமனசிலிருந்து

வருகிற சிரிப்பு. குறும்புக்காரன்தான் என்றாலும் அந்தரங்க சுத்தி உள்ள விசித்திரமான பிறவி அவன்... சுதந்திரமாக எதையும் பகிர்ந்து கொள்வதற்கான நண்பன்.

*க்ருஷ், ஒரு முறை என் காதுக்குள் நுழையும் ரகசியத்தை எனக்கு நானே கூட இன்னொரு தடவை சொல்லிக்கொள்ள மாட்டேன்.*

நானாவதியின் கனத்த குரல் காதில் ஒலிக்கிற மாதிரி இருந்தது. நானாவதி மராட்டியன். வீர சிவாஜி, திலகர் இருவருக்கும் பக்தன். அவர்கள் புகழ் பாட ஆரம்பித்தால் லேசில் ஓய மாட்டான். பாக்கிஸ்தானுடன் யுத்தம் வருவதற்கான காரணம், அப்ஸல் கானை சிவாஜி கொன்றதில்தான் ஒளிந்திருக்கிறது என்று சாதிப்பான்.

பாகிஸ்தான் பிரிவினையின்போது, கராச்சியில் பெரும் தனவந்தராக விளங்கியவர் அவனுடைய தகப்பனார். மிகப்பெரிய வியாபாரக் குடும்பம்.

தவிர்க்க முடியாத காரணங்களால் சொத்துக்களையெல்லாம் துறந்து தாணேவுக்குத் திரும்ப வேண்டியதாகிவிட்டது என்று சொல்வான் - அந்தக் காரணங்களில் ஒன்றைக் கூடச் சொன்னதில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவனிடம் எதுவும் பேச முடியாது. முஸ்லிம் விரோதம்.

*உன்னுடைய விரோதபாவம் உனது சுபாவத்துக்குப் பொருத்தமில்லாமல் இருக்கிறது நானா. அவர்கள் ஏதோ மனிதர்களேயில்லை என்கிற மாதிரிப் பேசுகிறாய் நீ.*

*விடு. அதைப்பற்றி மட்டும் என்னிடம் பேசாதே.*

என்று அழுத்தமாக மறுத்துவிடுவான். குழந்தைபோன்ற அவனுடைய முகம் கறுத்து இறுகுவதை விரும்பாது, அந்தப் பேச்சைத் தவிர்த்து விடுவார்கள் யாரும். ஒரே ஒரு தடவை, தனியாக இருவரும் மது அருந்திக் கொண்டிருந்தபோது, வாய்தவறிச் சொல்பவன் மாதிரி, சொன்னான்.

*உன்னுடைய சகோதரிகளெல்லாம் தெற்கில் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள் க்ருஷ். அதிர்ஷ்டக்காரர்கள் நீங்களெல்லாம். கிரேக்கர்கள், பாரசீகர்கள், மொகலாயர்கள் என்று யார் படையெடுத்து வந்தபோதும், முதல் களப்பலியானது வடக்கில் உள்ளவர்கள்தான். உச்சமாக, சகோதரச் சண்டைக்குப் பலியானதும் நாங்கள்தாம்.*

பிறகு மௌனமாகிவிட்டான். பின்னர் வேறெப்போதும் இந்த விஷயம் வந்ததேயில்லை பேச்சில்.

தொடர்ந்து ரம் உள்ளே இறங்கும்போது பௌதிக உலகத்திலிருந்து மெல்ல விலகுகிற மாதிரி ஆகி விடுகிறது. ஞாபகங்களின் ஆழ்

அடுக்குகளில் நிதானமாகச் சரிந்திறங்கி, இறந்த காலத்தின் ஆள் ஒருவன் சந்தர்ப்பம் தப்பி நிகழ்காலத்துக்குள் வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி உணர்ச்சிகளின் கதி தப்பி விடுகிறது. இது மாதிரியான நேரங்களில், ஏதேனும் ஒரு இழப்பைச் சுற்றி மறுகி மறுகிச் சுழல ஆரம்பித்து விடுகிறது சிந்தனை...

பாகிஸ்தானுடன் போர் தொடங்குவதற்குச் சற்று முந்திய நாட்களில் நானாவதியுடன் ஒன்றாக இருந்து வேலை பார்த்த சமயத்தில் கேட்ட அவன் குரலும் சொற்களும் வெளியேறத் தோதான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்து இப்போதைய தனிமையில் நிரம்பி வழிகிற மாதிரி இருந்தது. அவனது அருகாமை மட்டும் இல்லாமலிருந்தால், போர்ச் சூழலின் இறுக்கம் இன்னும் கனத்துத் தென்பட்டிருக்கக்கூடும்.

மிகுந்த நகைச்சுவை உணர்வுள்ளவன் நானாவதி. நேருவின் மரணம் தேசம் முழுக்கப் பிரிவாற்றாமையின் துர்வாடையைப் படிய வைத்திருந்த சமயம் அது. தமிழ்ப் பத்திரிகையொன்றில் வெளியாகி யிருந்த கவிதையை அவனிடம் வாசித்து மொழிபெயர்த்தார் க்ருஷ்.

சீரிய நெற்றி எங்கே?
சிவந்த நல் இதழ்கள் எங்கே?
கூரிய விழிகள் எங்கே?
குறுநகை போனதெங்கே?...

என்று தொடர்ந்த கவிதையை, தொடர்ந்து பொறுமையாகக் கேட்டான் நானாவதி. பிறகு நிதானமாகச் சொன்னான்.

> இந்தக் கவிதையை இந்தியர் அல்லாத ஒருவர் கேட்டால், நேரு என்ற பெயரில், புகழ் பெற்ற ஸினிமா நடிகை ஒருத்தி இருந்து அகாலமாகச் செத்துப் போய்விட்டாள் என்று நினைத்துக் கொள்வார்.

அவன் சிரிக்காமல்தான் சொன்னான். க்ருஷ் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தார்...

அவனுடன் பணிபுரிந்தது மிகக் குறுகிய காலம்தான். பூஞ்ச் ஸெக்டாரின் பிரதான அதிகாரிகளாய் இருந்தார்கள் இருவரும். சரியாக ஒரே வருஷம். ராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டான் நானாவதி. பாக் கிஸ்தான் யுத்தத்தின் ஆரம்ப நாட்களிலேயே, குண்டுத் தாக்குதலில் மோசமாக அடிபட்டான் நானா. கால்கள் இரண்டும் அகற்றப்பட்டு, ராணுவ ஆஸ்பத்திரிப் படுக்கையில் இருந்தவனைப் பார்க்கச் சென்ற போதும், அவனது நகைச்சுவையுணர்வு சிதையாமலே இருந்தது.

> க்ருஷ், முந்தாநாள்தான் டாக்டர் சொன்னார் இந்தமாதிரி நேர்ந்துவிட்டது என்று. உண்மையில், உணர்வு திரும்ப வந்தபோது ஏதோ பலமான அடிபட்டிருக்கிறது என்றுதான் நம்பினேன்.

நானாவதியின் முன்னங்கையைப் பற்றி இறுக்கினார் க்ருஷ். காலை உடற்பயிற்சியின்போது, உயர் அதிகாரி என்ற பாவனையின்றி, கீழ்நிலை சகாக்களுடன் பந்தயம் வைத்து நானாவதி ஓடும் காட்சியும், சலிக்காது மேற்கொண்ட உடற்பயிற்சிகளின் காரணமாகக் கரணைகரணையாய்த் திரண்ட புஜம் மற்றும் நெஞ்சுத் தசைகளுமாக வெற்றுடம்புடன் வியர்க்க வியர்க்க அவன் நிற்பதும், யுத்த முனையில் எதிரியின் பகுதிக்கு முதல் அணியில் செல்ல அவன் கொள்ளும் அதீத முனைப்பும் க்ருஷ்ஷின் ஞாபகத்தில் எழும்பிக் கண்ணீராய்ச் சொரிந்தன.

அட, என்ன இது. சிறுபிள்ளைபோல. கண்ணைத் துடை. டாக்டர் என்ன சொன்னார் என்று முழுக்கக் கேட்கவில்லையே நீ?

திராணியைச் சேகரித்துக்கொள்ளும் விதமாக முகத்தையும் கண்களையும் அழுத்தித் துடைத்தபடி க்ருஷ் சொன்னார்.

சொல்லு, சொல்லு.

என் படுக்கையருகில் வந்தாரா, மிஸ்டர். நானாவதி, உங்களுக்கு ஒரு நல்ல செய்தி இருக்கிறது. ஒரு கெட்ட செய்தி இருக்கிறது. எதை முதலில் சொல்லட்டும்? என்றார்.

ம்.

சரி, முதலில் கெட்ட செய்தியைச் சொல்லிவிடுங்கள். நல்ல செய்தியை அப்புறம் கேட்டு ஆறுதல் பட்டுக்கொள்கிறேன் என்று சொன்னேன். நான் சொன்னது சரிதானே?

முகத்தில் மிகவும் சீரிய பாவம் கொண்டிருந்தான் நானாவதி.

சரிதான். நானுமே அப்படித்தான் சொல்லியிருப்பேன்.

டாக்டர் சொல்கிறார். மிஸ்டர்.நானாவதி, ஐ யாம் ஸாரி. உங்கள் கால்கள் இரண்டையும் குண்டு முழுமையாகச் சிதைத்துவிட்டது. எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இரண்டு கால்களையும் தொடைவரை அகற்ற வேண்டியதாகிவிட்டது. ஐயாம் வெரி ஸாரி எகெய்ன்.

அவன் குரலில் பாவபேதமேயில்லை. தன் அடிவயிற்றில் சுருக்கென்று வேதனையை உணர்ந்தார் க்ருஷ்.

கொஞ்ச நேரம் ஆனது, அவர் சொல்வது எனக்குப் புரிய. சரி, அகற்றிவிட்ட பிறகு சொல்கிறார்கள். இனி நாம் என்ன செய்ய முடியும்... பூமிக்குள் புதைத்திருப்பார்கள் வேறே. விசனமாய்த்தான் இருந்தது. சரி போகட்டும் என்று, நல்ல செய்தியைச் சொல்லுங்கள் டாக்டர் என்றேன். உங்கள் சொந்த ஷுக்கள் இரண்டையும் நல்ல விலைக்கு ஒருத்தர் கேட்கிறார், கொடுத்துவிடலாமா? என்றார் டாக்டர்....

சண்டாளன் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான். க்ருஷ் விசும்பினார். அவனை எழுப்பி உட்கார வைத்து ஆவிசேர்த்துக் கட்டிக்கொள்ள வேண்டும் போல இருந்தது. குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டபோது அது வரை காப்பாற்றிய கட்டுப்பாடு குலைந்துவிட்டது. பலமாகக் குமுறி னார். மூடிய அவனது கண் இமைகளின் மேல், க்ருஷ்ஷின் கண்ணீர் ஈரமாய்ப் படிந்தது.

அட, விடு. தமாஷாய்ச் சொன்னேன். மிலிட்டரி டாக்டர் எவராவது இப்படிச் சொல்வார்களா என்ன? பழைய புஸ்தகம் எதிலோ படித்த ஹாஸ்யம் அது. உன்னைச் சமாதானப்படுத்துவதற்காகச் சொன்னேன். சொல்லி, அதிகமாகக் கலங்க வைத்துவிட்டேனோ....

க்ருஷ்ஷின் வேதனையைப் பகிர்ந்துகொள்கிறவன் மாதிரி, தனக்குள்ளே ஆழ்ந்துவிட்டவன் மாதிரி, மௌனமாக இருந்தான். கொஞ்சநேரம் கழித்து, திடீரென்று நினைவு வந்ததுபோலச் சொன்னான்.

வேறு ஒரு சங்கடம் இருக்கிறது, க்ருஷ். அதைத்தான் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. ராத்திரி ஆகிவிட்டால், இரண்டு உள்ளங்கால்களிலும் அரிப்பு எடுத்து விடுகிறது. தாங்க முடியாத அரிப்பு. கஸரத் முடித்துவிட்டு பயனெட்டால் சொறிந்து கொள் வோமே, அந்த மாதிரி அரிப்பு. எத்தனை வருஷமாகச் சொறிந்து கொண்டிருக்கிறேன்...

முகத்தைப் பூத்துவாலையால் மூடிக்கொண்டான் நானாவதி. சற்றுநேரம் சலனமில்லாமல் இருந்த பின்னர் முகத்தைத் திறந்தான். கண்களும் மூக்கு நுனியும் ரத்தமாகச் சிவந்திருந்தன. அடங்கிய குரலில் தீர்க்கமாகப் பேச ஆரம்பித்தான்.

மனிதர்களைக் கொல்வதை நினைத்தாலே குமட்டுகிறது க்ருஷ். யுத்தம் ஆரம்பித்த சமயத்தில், கொலை செய்வது மிக இயல்பான விஷயமாய் இருந்தது. கர்மசிரத்தையுள்ள கசாப்புக்காரனைப் போல, சர்வசாதாரணமாகத் துப்பாக்கியையும், அவசியமான சந்தர்ப்பங்களில் பயனெட்டையும் பிரயோகிக்க முடிந்தது... உன் கையால் குண்டு பட்டுச் சாகிறவனைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது. குறைந்தபட்சம் அவன் ஒரு மனிதன் கூட அல்ல. உனது கொலைத் திறமைக்கான ஒரு இலக்கு. வெற்றிக்கும் உன் அணிக்கும் இடையில் உள்ள ஒரு தடைக் கல். அவ்வளவுதான். ஓணான் போலத் தலைதூக்கித் தரையில் தவழ்ந்து குறி தவறாமல் சுடும்போது, எதிரியின் ஓலம் காதில் விழும்போது, விசித்திரமான திருப்தி உள்ளுக்குள் பரவும். நல்லவேளை, இந்த முறையும் என் உயிரைக் காத்துக்கொண்டுவிட்டேன் என்று ஆசுவாசமாய் இருக்கும் ...

தலைமாட்டிலிருந்த டீப்பாயிலிருந்து கூஜாவை எடுத்துத் தரும்படி

சைகை செய்தான். கூஜாவை வாங்கும் அவன் கை நடுங்கியதா, இல்லை, தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதா என்று சரியாகப் புரியவில்லை க்ருஷ்ஷுக்கு. ஒருவேளை, தன் கையின் நடுக்கமாகக்கூட இருக்கலாம். நானாவதியின் குரலில் நடுக்கம் இல்லை. தொடர்ந்து பேசினான்.

> ஆனால், நாளாக நாளாக வேறு மாதிரித் தோன்ற ஆரம்பித்து விட்டது க்ருஷ். என்னை நோக்கிக் கைக் குண்டு வீச முனைந்தவனை நான் நேருக்கு நேர் பார்த்த அந்தச் சமயத்திலும் இந்த எண்ணம்தான் மேலோங்கியது. ஒரு கணம் தாமதித்து விட்டேன். இல்லாவிட்டால், அவர்கள் ஊர் ஆஸ்பத்திரியில் அவன் கிடந்திருப்பான். நான் உன்னுடன் ஒட்டப் பந்தயம் வைத்துக்கொண்டு இருந்திருப்பேன்.

சிரித்தான். கைப்பு நிறைந்த சிரிப்பு. நேர்ப் பார்வையுடன் சிரித்துக் கொண்டிருந்தவன், பக்கவாட்டில் திரும்பி, க்ருஷ்ஷைப் பார்த்தான்.

> என்ன இது. பிக்ரம் அவுர் பைத்தாளில் வரும் பேசாப் பெண் போல உட்கார்ந்திருக்கிறாய். அப்படி என்னதான் தோன்றியது என்று கேட்க மாட்டாயா?

> வாயைப் பிடுங்காதே நானா. பேசினால் மறுபடி அழுதுவிடுவேன். உன் உறுதியைக் குலைத்துவிடுவேன் என்று தோன்றுகிறது.

> அப்படியானால், கேட்க மாட்டாய்?

> கேட்காமலென்ன? சொல்லு. அதற்குத்தானே சிறப்பு அனுமதி வாங்கிக்கொண்டு உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன்.

> எனக்கு என்ன தோன்றியதென்றால், அரசியல் களத்தில் ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஒரு காரணமும் இல்லாது, ஒரு மாயப் புலத்தின் உன்மத்தத்துக்கு மனித உயிர்கள் பலியாகவும் செய்யலாம். ஆனால், சாகும் மனிதர்களுக்கு தாங்கள் எதற்காகச் சாகிறோம் என்பது கடைசிவரை தெரியாது. சம்பளம் வாங்கினோம். அதனால் சாகிறோம். என்னவொரு அபத்தம். வாழ்வதற்காகச் சம்பாதிக்கிறீர்கள். சம்பாதித்ததால் சாகிறீர்கள். அபத்தம்தான். அபத்தம். அபத்தம்....

நீண்ட மௌனத்தில் ஆழ்ந்துவிட்டான். க்ருஷ் அவன் கையைப் பற்றியபடி உட்கார்ந்திருந்தார். நானாவதியின் உள்ளங்கையில் கசகசத்த வேர்வை தன் உள்ளங்கையில் படிந்தபோது மிகவும் நெருக்கமாகவும் பரிவாகவும் உணர்ந்தார்.

...நீ சொல்வது நியாயம்தான் நண்பனே. ஆனால், நான் வேறு மாதிரிதான் சிந்திப்பேன். குரூரச் சதுரங்கத்தில் உயிருள்ள ஒரு காயாக இறங்கியாகிவிட்டது. ஆட்ட விதிகளின்படி, இயக்கும் கைக்கு ஆட்பட வேண்டியதுதான். சதுரங்கக் காய்களுக்குச் சுய சிந்தனை கூடாது என்பது

முதல் பாடம்; இரண்டாவது, என் நண்பன் இழந்த கால்கள் சார்பாகத் தீர்க்க வேண்டிய கணக்கு ஒன்று இருக்கிறது. நான் பார்த்துக்கொள்வேன் அதை...

விடு. நான்தான் வெளியேறிவிட்டேன். நீ தொடர்ந்து இருக்கப் போகிறவன். என்னுடைய யோசனைகளால் உனக்கும் நோய் தொற்றிவிடவேண்டாம்... சொல்லு, நிலவரம் எப்படியிருக்கிறது இப்போது?

அடுத்து வந்த நாட்களில் க்ருஷ்ஷின் கொலைவெறி அதிகரித்து விட்டது. பிசாசு பீடித்த வனமிருகம்போல அல்லும் பகலும் குரூரம் தலைக் கேறியிருந்தது. எத்தனை குண்டுகள், எத்தனை உயிர்கள், எத்தனை தொலைவு, இரவுகள், பகல்கள், எத்தனை திட்டங்கள், எத்தனை பதட்டம், எத்தனை துரத்தல்கள், உள்ளுக்குள் ஊறிக் கனன்று கொண்டிருந்த எத்தனையெத்தனை வசவுகள்... போர் நிறுத்தத்துக்குப் பின் பதக்கம்... இன்னொரு பதவி உயர்வு. மலைப் பிரதேச ராணுவப் புற நிலையத்துக்குப் பொறுப்பு...

மருத்துவமனைப் படுக்கையில், மருந்துகளின் நெடியில், வவ்வால்கள்போலத் தொங்கும் ஸலைன் சீசாக்களின் வரிசைக் கிடையில், கழுத்துவரை மூடப்பட்ட போர்வைக்குள் உறங்கிக் கொண்டிருந்த நானாவதியின் முகம் நினைவில் வருகிறது. வாய் ஓயாமல் க்ருஷ் க்ருஷ் என்று அழைத்தவாறேயிருக்கும் அவன் குரல் தனக்குள் ளிருந்து ஊறுவதாக உணர்ந்தார் மேஜர் க்ருஷ். இன்னொரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டார்...

கீழக்குண்டு ஜெயராமன் கிருஷ்ணமூர்த்தி, உச்சரிப்பு சவுகரியம் கருதி, க்ருஷ் ஆயிருக்க வேண்டியதேயில்லை. சுய ஞாபகத்தில் கூட, கிருஷ்ணமூர்த்தி என்று தன்னை நினைத்துக்கொள்ளாத அளவு புதிய நபராக மாறுவதற்கான ஒரு நிர்ப்பந்தமும் இல்லை.

ஆனால், ஹர்ஷரைப் பற்றிய கேள்விக்கு ஷெர்ஷாவைப் பற்றி எழுதினால் மதிப்பெண் எப்படிப் போடுவார்கள். தெரிந்த கேள்வியாய் வந்திருந்தது அது ஒன்றுதான். ஹர்ஷரைப் பற்றிய கேள்வி என்று சரியாகக் கவனித்திருந்தாலும், ஆறாவது ஃபாரம் பெயிலாவதைத் தவிர்த் திருக்க முடியாது. வருஷம் முழுக்கக் கட்டணம் கட்டிப் படிக்க வைத்த, வசதியற்ற தகப்பன் பரிட்சையில் தோற்ற மகனை அடிக்க வர மாட்டானா? அன்று அப்பாவின் கைக்கு வாகாக ஒரு விறகுக் கட்டை கிடைத்தது. மறுபுறம், குறுக்கே வந்து தானும் இரண்டு அடிகள் வாங்கிக் கொண்டாள் அம்மா.

நள்ளிரவில் பூனைபோலப் பதுங்கி வீட்டை விட்டுக் கிளம்பி

வெளியேறியபோதும்; கிடைத்த எடுபிடி வேலைகளைச் செய்து சாப்பாட்டுக்கு மாத்திரம் சம்பாதித்தபடி ஊர் ஊராய் அலைந்த நாட்களிலும்; பிறருடைய சந்தேகமும் அருவறுப்பும் நிழல்போலப் பின்தொடர, அன்றாடம் இரவில் உறங்க இடம் தேடிக் கண்டுபிடிப்பது மிகப்பெரிய சவாலாக இருந்த சமயங்களிலும்; ஏன், பட்டாளத்தில் சேர்ந்து பலகாலம் வரைக்கும், அம்மாவுடைய முகம்தான் சதா நினைவில் வந்து கண் மல்கச் செய்துகொண்டிருந்தது. தலைச்சன் பிள்ளை உருப்படாதவனாய் வளரக் கிடைத்த துர்ப்பாக்கியவதி அவள். நானுமென்ன, படிக்க வேண்டாமென்றா நினைத்தேன்? ஏறவில்லை அப்போது. என்ன செய்ய ..

ஆறு வருஷங்களுக்குப் பிறகு, 'மிலிட்டரியில் இருக்கிறேன்' என்று ஆரம்பித்து ஒவ்வொருவரிடமும் பேச வேண்டிய வசனங்கள், ட்ரங்க்குப் பெட்டி நிறையப் பரிசுப்பொருட்கள் எல்லாம் சுமந்துகொண்டு ஊருக்குப் போய்ச் சேர்ந்தால், அப்பாவின் மூன்றாம் நாள் காரியம் நடந்துகொண்டிருக்கிறது. பாழ் நெற்றியோடு அம்மா க்ருஷ்ஷின் தோளில் சாய்ந்து கதறினாள். திடீரென்று தரை கொழகொழவென்று ஆகிவிட்டமாதிரி உடலும் மனமும் துவண்டன அந்தக் கிருஷ்ண மூர்த்திக்கு .

சதா வழிந்தவாறிருந்த கண்ணீரோடு உத்தியோகத்துக்கு ரயிலில் திரும்பினார். படிக்கச் சொல்லி அப்பா அடித்த நாட்கள் ஞாபகம் வந்து இம்சை செய்தன. ஒழுங்காகப் படித்திருந்தால், அவருக்குக் கொள்ளி போட ஊரில் இருந்திருக்கலாம். ஜவான்களின் பெட்டியில் சீட்டு விளையாட்டு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. கதறி அழுத அம்மாவின் ஞாபகமாக அடிக்கடி கண்களைத் துடைத்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் ஞானோதயமாயிற்று: வெள்ளைக் காரனுக்கு, உள்ளூர்க்காரனை அடக்கி வைக்கத் தேவைப்பட்டது புத்திசாலிகளில்லை, பயில்வான்கள்தாம்.

சப்பாத்திகளைத் தின்றுகொண்டு, தினசரியும் அதிகாலையில் பரேடு போய்க்கொண்டிருந்த நாட்களில், கல்வி வெறி கூடிவிட்டது. படித்துக்கொண்டேயிருந்தார். கல்யாணம் பண்ணிவைக்கிறேன் என்று அடம் பிடித்த அம்மாவை நயமாகவும் பயமாகவும் சமாதானம் செய்தார். வீட்டை விட்டு வெளியேறிய அந்த நள்ளிரவில் குடும்பம் என்ற அமைப்பை விட்டும் வெளியேறிவிட்ட மாதிரித்தான் இருக்கிறது. அம்மாவின் மேல் அளவில்லாத பாசம் உண்டு. சகோதர சகோதரிகளின் குழந்தைகள் மேல் அன்பும் நெருக்கமும் உண்டு. போதும். தனக்கான குடும்பம் என்று ஒன்றைக் கட்டியமைக்க விருப்பம் இல்லாமல் போய் விட்டது, துளிக்கூட .

இலாகாவின் தேர்வுகளை ஒவ்வொன்றாய் எழுதித் தேர்ந்து,

போர்முனையில் சாகசங்கள் புரிந்து - தனியனுக்கு உயிரொன்றும் வெல்லக்கட்டி இல்லையே - இதோ, மேஜர் க்ருஷ் இப்போது.

எல்லாமே தன்னியல்பாக நடந்த விஷயங்கள் என்று பட்டது. தூசி அடுக்கடுக்காகப் படிகிற மாதிரி, ஒன்றின் மேலொன்றாக நிகழ்ந்து வந்திருக்கின்றன எல்லாம். எதையும் தான் முன்கூட்டித் தீர்மானிக்க வில்லை. ஏதோ ஒரு மாயக் கரம் முடிவெடுத்து நடத்தி வைத்திருக்கிறது. ஒவ்வொரு நிகழ்விலும் தனது பங்கு என்ன, லாப நஷ்ட விகிதம் என்ன என்பதை, நிகழ்ந்து முடிந்த பின்னர் மட்டுமே தெரிந்துகொள்கிற விநோதப் பங்குதாரனாக இருந்து வந்திருக்கிறார். விதவிதமான சம்பவங்களின் கொத்து நடுவே, அவற்றின் மகரந்த மையம் போல, தான் நிற்கிற மாதிரி உணர்வு கொண்டார் மேஜர் க்ருஷ். ஞாபகங்களின் அழுத்தம் நிரம்பின மையமாக இருக்க விருப்பமின்றி, முடிந்த அளவு தூரம் விலகிச் சென்றுவிட முனைபவர் போல அவசரமாக எழுந்து வெகுவேகமாகக் கிளம்பினார். வழக்கமான மாலைநடை தொடங்கியது.

ஞாபகங்களைக் கலைக்கிற மாதிரி கூர்மையாக உரக்கிறது நைட்டிங்கேலின் குரல். பனிப்பாளத்துக்கடியில் ததும்பும் நீர்ப்பரப்பு போல சலனமின்றிக் கிடக்கும் நிசப்தத்தின் பரப்பில் வலுத்த நீர்ச் சொட்டாக வீழ்ந்து இருளைக் கீறித்துளைக்கிறது. இரவு கனத்துவிட்டது. காற்றில் குளிர் மிகுந்து தோலைக் கீறுகிறது. ஜனவரி மாதத்தில் தன் உச்சநிலையை அடைந்திருக்கும் குளிர். முதுகெலும்பு உதறுகிற மாதிரி உணர்ந்தார்.

தேநீர் கொடுத்துவிட்டு சமையல் கூடாரத்துக்குத் திரும்பிப் போன லங்கர் நாயக் ஃபூ தோர்ஜீ, வயர்லெஸ் கூடாரத்திலிருந்து வெளிப்படு கிறான். வேகமாக எட்டு வைத்து நடந்து க்ருஷ் உட்கார்ந்திருக்கும் இடம் நோக்கி வருகிறான்.

ஸாப், செய்தி ஒன்று வந்திருக்கிறது.

எழுந்து வயர்லெஸ் உள்ள கூடாரம் நோக்கி நடந்தார் க்ருஷ். எவ்வளவு குடித்தபின்னும் கால்கள் பிறழாமல் நடக்கப் பழகியிருக்கிறது உடம்பு. நாலடி தள்ளி, பணிவாய் உடன் வந்தான் தோர்ஜீ.

சங்கேத மொழியில் பெறப்பட்ட வயர்லெஸ் செய்தியை ஆங்கிலத்தில் பெயர்த்து அரசாங்கச் சாணித்தாள் பதிவேட்டில் எழுதி வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தான் கெய்ஸிங். கூடாரத்துக்குள் பீடி மணம் பரவியிருந்தது.

பதினைந்து பேர் கொண்ட கோஷ்டி ஒன்று எல்லை தாண்டி இந்தியாவுக்குள் வரவிருப்பதாக உளவுத்தகவல் கிடைத்திருக்கிறது. இன்றிரவு உங்கள் பிராந்தியத்துக்கு வந்து சேரலாம். தயாராக

இருக்கவும். வருபவர்களைக் கைது செய்ய வேண்டாம். உங்கள் கண்காணிப்பிலிருந்து விலகாமல் வைத்துக்கொள்ளவும். அவர்கள் கோரும் உதவிகளைச் செய்து தருவதில் தவறில்லை.

இதுதான் செய்தியின் சாரம்.

வருகிறவர்களிடம் ஆயுதம் உண்டா, இருந்தால் எப்படி எதிர் கொள்வது, வாகனம் எதிலும் வருகிறார்களா, எத்தனை பேர் ஆண்கள், என்கிற மாதிரி எந்த விபரமும் இல்லை.

மேஜர் க்ருஷ் தனக்குக் கீழுள்ள வீரர்களுக்கு உரிய ஆணைகள் பிறப்பித்துவிட்டு, அவர்களுடன் சேர்ந்து காத்திருக்கத் தொடங்கினார்.

*

# ஸோமிட்ஸிய பூர்வ கிரந்தம் 1

... ஆட்டங்கள், எதிர் ஆட்டங்கள், பிறழ் ஆட்டங்கள் என, பூமித் தலத்தின் பொழுதுகள் மெல்ல மெல்ல நிரம்பின ...

*பிரபஞ்ச உறக்கத்தின் பேய்க்கனவில் சக்கரச் சுழற்சியாய் வந்து வந்து செல்கின்றன இரவுகள் பகல்கள்.*

*இருபுறமும் சமுத்திரம் பிதுக்க, இடைப்பட்ட பகுதி அழுத்தம் தாளாது உயர்ந்து மலைத் தொடராகிறது.*

*வெளியற்ற வெளியில், காலமற்ற காலத்தில் ஊழித் தீயின் ஜ்வாலைகள் ஓங்கி உயர்ந்ததன் காரணமாகப் பல கோடி ஆண்டுகளாகக் கொதித்துக் கிடந்த பூமி, மெல்ல மெல்லக் குளிர்ந்து வந்திருக்கிறது.*

*உயிரற்ற தண்மையின் குளிர் போர்த்தி மூடி மௌனத்தில் உறைந்து கிடந்தன சில கோடி ஆண்டுகள். பேரண்டத்தின் சுவாசம் தன்னை உயிர்ப் பித்துக்கொண்டபோது, புதிய தான்யங்களும் புதுப்புது உடல்களும் சிருஷ்டியுற்றன. பால் பேதம் பூடகச் சுனையாய்த் ததும்ப உயிர்ப் பொருட்கள் பெருகின, தாவரங்கள் போல. தான்யங்கள், உடல்களின் சாம்ராஜ்யங்களில் அதிகார அடுக்குகளும், வலிமையை அளப்பதற்கான உயிரியல் அளவைகளும் உருவாயின. ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு நிறம் பூணும் ஆகாயத்தின் சாயலில் உயிர்த் தள உணர்ச்சி களின் வேகங்கள் மாறுதலுற்றன.*

*வாலுள்ள உயிர்களின் பொறுப்பில் பூமியும், இறக்கையுள்ள உயிர் களின் பொறுப்பில் ஆகாயமும் வந்து சேர்ந்தன.*

*புலியிலிருந்து பூனையும் கரடியிலிருந்து ஓநாயும் பிரம்மாண்ட எறும்புதின்னியிலிருந்து பல்லியும் உயிர்த் தளத்தின் ஏற்றத்தாழ்வுகளால் உருவானதும்;*

*மறுபுறம், ஈ பெருத்து வவ்வால் ஆனதும், கொசுவின் பரிணாமம் வல்லூறாய் ஆனதும்;*

மின்னல் சொரிந்த நெருப்பு, மரங்களை பிராணிகளை புடம் போட்டுப் புதுக்கியதும்;

யாவற்றையும் வேடிக்கைபார்த்தபடி, கைவிரல்களில் மாட்டிய நூலால் சகலத்தையும் இயக்கி வைக்கும், சர்வவியாபி தன் தலையிலிருந்து பிடுங்கித் தரையில் எறிந்த முடி ஆண் என உருவெடுத்ததும்; அக்குளிலிருந்து எடுத்த மற்றொரு ரோமம் பெண்ணாகியதும்;

கோரைப்பற்களில் கூர்மையின்றி, முதுகெலும்பில் கூன் இன்றி, நிமிர்ந்து நேர்கோட்டில் நடக்கிற, முதுகின் ரோமப் படலம் அடர்த்தியிழந்த, முன்னங்கால்களைக் கைகளாய்ப் பயன்படுத்துகிற, புதிய இனம் சிருஷ்டியுற்ற வரலாறும்;

அறிவின்மையிலிருந்து அறிவை நோக்கி உயிரினங்கள் நகர்ந்த பாதையும், அதன் வாதையும், பூமியெங்கும் சமமாய்ப் பரவும் வெய்யில் போல எங்கெங்கும் விரவியதும்;

யாரும் அறிந்த ரகசியமாய்ப் பொலிவதை,

அறிவாயா மின்மினியே?

உடலெங்கும் மண்டிய ரோமங்கள் உதிர்ந்ததால் சருமத்தின் ஸ்பரிச உணர்வு தூண்டுதலுற்று,

குகைளில் உறைந்த வெம்மை தேடி நகர்ந்தன ஜீவராசிகள்.

உயிர் கொண்ட உடல்கள் அனைத்திலும் இனம் பெருக்கும் ஆவல் ரகசிய நீரூற்றாய்ப் பொங்க,

ஈரம் இறுகி உடலாய்ப் பொலிய,

உருவான உடம்பில் தற்தொடர்ச்சியின் வேர்கள் ஆழப் பதிந்து,

விருட்சமாய்க் குடை விரிந்ததை,

உணர்வாயா மென்காற்றே?

அரூபியான சர்வலோக மாந்திரீகன் மனமுவந்து கொள்ளும் ரூபமென,

தம் உடம்பின் ரகசியத் தடங்களில் கிளர்ச்சியேற்று,

செடிகள் மரமாகின.

பாறைகள் மணலாகின.

ருதுக்கள் தோறும் வசியம் பரப்பின பூக்கள், விருத்தாப்பியமுற்று உதிர்ந்தன.

பெண் ஜீவராசிகள் விடாயின் சுழிக்குள் சிக்கிச் சுழன்றன.

வெம்மை இழந்த மனித உடல்கள் அழுகி மண்ணில் கலந்து உரமாகின; நுண்ணுயிர்க் கூட்டத்தின் உணவாகின.

வெவ்வேறு கிளைகளில், வெவ்வேறு இடங்களில்,

வெவ்வேறு காலங்களில் கனிந்தாலும்,

ஒரு மரத்தின் கனிகள் யாவும் ஒரு ருசி கொண்டிருக்கும், என்றறி வாயா கருங்குருவீ....

வெற்றுத் தரிசாய்க் கிடந்த நிலவெளி, பருவமுற்றது.

மனிதர்களின் உழைப்பும், இயற்கையின் ஒத்துழைப்பும் ஒட்டிப் பிறந்த இரட்டையரின் ரத்த ஓட்டம் போல இசைந்தன.

பசுஞ் சோலைகளும், சிற்றோடைகளும்,

அபரிமிதமான விளைச்சலும், வற்றாத நல்லெண்ணமும் நிரம்பிய கூட்டத்தில்

ஓசைகள் சீருற்று, ஒலிகளின் வால்போல அர்த்தம் தொடர்ந்ததை,

கூறவா வெட்டுக்கிளீ?

தனித்திருந்த உடல்களுக்கிடையே உறவுகள் முளைத்ததும்,

நெருப்பின் பயன்கொண்டு ருசிகள் கிளைத்ததும்,

வெற்றுடலை வதைக்கும் சீதோஷ்ணத்துடன் பொருதவேண்டி, இலைதழைகள் மரப் பட்டைகள் ஆடைகளாய் மாறியதும்,

கோடைகாலத்தில் துணிமணிகள் தேவையென்றால்;

குளிர்காலத்தில் கம்பளி தேவையென்றால்;

உயிர் வாழ உணவு வேண்டுமென்றால்;

உளம் வாழச் சிந்தனை வேண்டுமென்று,

தெரியாதா தவளைப் பெண்ணே?

ஓரினமென உணர்வுற்ற போதும், தன் உடல் தன் மனம் தன் சந்ததி என்னும் பகுப்புகளின் வழியாக

ஆட்டங்கள், எதிர் ஆட்டங்கள், பிறழ் ஆட்டங்கள் என, பூமித் தலத்தின் பொழுதுகள் மெல்ல மெல்ல நிரம்பியதும்,

பிற உடலைச் சிதைப்பதன் மூலம் பிற மனத்தின் தாதுவை அழிக்க, சலனமுறும் உயிர்ச் சிற்பங்கள் கற்றதும்,

வசந்தருதுவில் பல்கிப் பெருகும் புற்கூட்டம்போல விதிகளும்,

எதிர்விதிகளும், விதிவிலக்குகளுமாய்ப் புதிய விளையாட்டொன்று இயற்கையாய் ஸ்தாபிதமாகிக் கொலைத் தொழில் செழித்ததும்,

உயிருள்ள காய்கள் பணயமாகும் சொக்கட்டான் ஆட்டம் யாவரும் உவக்கும் இன்பத் தொழிலாய் ஓங்கி வளர்ந்ததும்,

பிற உடலையோ மனத்தையோ சிதைப்பதன் மூலம் தன்னுடல் அல்லது தன் மனத்தைப் போஷிக்கும் வித்தையில் பாண்டித்தியம் கூடியதும்,

வெறுங் கைகளின் உக்கிரம் போதாமல் கற்களும் மரத்தண்டுகளும், பூமிப் படுகையில் ஊறிக் கிடந்ததால் உரமேறிய உலோகத் துண்டுகளும் உப கரங்களாய் வீற்றிருக்கத் தொடங்கியதும்,

கண்டாயே மழைத்துளியே...

*

# செல்லச்சாமி வாத்தியார்

... சாமான்யர்கள் சாவதின் துக்கம், அவரவர் குடும்பத்தின் சரித்திரத்தில் மட்டும்தான் பதிவாகிறது ...

செல்லச்சாமி வாத்தியாருக்குப் பொடிபோடும் பழக்கம் உண்டு. அசல் நிறம் என்னவென்று விண்டு சொல்ல முடியாத கைக்குட்டையைச் சட்டைப் பையிலிருந்து எடுத்துவிட்டாரென்றால், தியான மனநிலைக்கு வந்துவிட்டார் என்று அர்த்தம். கைக்குட்டையை மேசை மீது வைத்துவிட்டு, பொடிடப்பியை எடுத்து வலது ஆள்காட்டி விரலால் அதன் மூடியைச் சீராகத் தட்டுவார். கவனமாக டப்பியைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து மூளைக்கு நேரடியாக அனுப்பும் வேகத்தில் உறிஞ்சுவார்.

இன்றைக்குப் பொடிடப்பியை எடுத்தவர் அப்படியே வைத்துவிட்டார், மேசை மேல். முகம் கடுகடுவென்று இருந்தது. நெற்றியில் எந்நேரமும் வேர்த்துக்கொண்டேயிருந்தது. வகுப்பறையின் சுவரோரமாக இருந்த கட்டுரை நோட்டுக்கட்டை எடுத்து மேசைமேல் வைக்கும்படி மாணிக்கத்திடம் சைகை காட்டினார். முதல் வரிசையில் இருந்த மாணிக்கம் பணிவாக எழுந்து வந்து எடுத்து வைத்தான். நோட்டுகளைக் கட்டியிருந்த நாடாவின் பாவாடை முடிச்சை உருவினார்.

நம்ம க்ளாஸ்லே, புதுசா நெறையப் பேர் வந்து சேர்ந்திருக்காங்க, தெரியுமோ?

வகுப்பு மௌனமாக இருந்தது. வாத்தியாரின் குரலில் இவ்வளவு நிதானம் இருப்பது ஆரோக்கியமான விஷயமில்லை. யாருடைய உள்ளங்கை பழுக்கப் போகிறதோ.

அது யாரப்பா, ஆர்.ஏ. பத்மநாபன்?

அனந்த பத்மநாபன் எழுந்து நின்றான்.

சி.கே. சாமி?

கிருஷ்ணசாமி எழுந்தான்.

*கோபாலகிருஷ்ணா, நீ ஏண்டா பயித்தியக்காரனா இருக்கே? பி.கோபாலகிருஷ்ணன் னு முழுப் பேரையும் எழுதுறே. இன்னிமே நீ பி.ஜி.கே.ணன் னு சுருக்கமா, ஸ்டெயிலா எழுது. என்னா?*

முதலில் எழுந்து நின்றவர்களின் நோட்டுகளை விசிறித் தரையிலடித்தார்.

*பொம்பளைக் குரங்குகளுக்கும் வால் நீண்டுருச்சு. அது யாரு நிர்மலா தேவி?*

அந்தச் சிறுமி எழுந்தாள்.

*உங்கப்பன் ஆத்தா வெச்ச பேரு என்ன?*

*நிர்மலா அய்யா...*

*அப்பறம் என்ன தேவி?.... பெரிய மூதேவி. இவ நிர்மலா தேவி. அடுத்து இருக்குற கருங்குரங்கு, கற்பக தேவி. அந்தா, கடேசியில இருக்கே, அந்தச் செங்குரங்கு, வசந்தா தேவி. நீங்கள்லாம் எட்டாங் கிளாஸ் படிக்கிற முண்டங்களா, சினிமாக்கார மூதேவிகளா?*

நோட்டுகள் தொடர்ந்து பறந்தன.

*செல்லப்பாப்பா. எந்திரி. நீ இன்னிமே செல்லப்பாப்பா தேவின்னு தான் உன் பேரை எழுதணும். என்னா? கெஜட்லே போட்டுறலாம். நம்ம பள்ளிக்கூடத்தையும் விவேகானந்தா தேவலோகம்னு மாத் திப்புடலாம். உக்காருங்க நாய்களா.*

ஓட்டுக் கூரையிலிருந்து இறங்கும் உஷ்ணம் உடலெங்கும் எரிச்சலாய்த் தொற்றுகிறது. பக்கத்து அறையிலிருந்து திடீரென்று ஒரு பேரிரைச்சல் உயர்கிறது... சொற்களைப் பிரித்தறியச் சற்று நேரம் பிடித்தது.

*வேதாளம் சேருமே... வெள்ளெருக்குப் பூக்குமே...*

ரத்தினமேரி டீச்சரின் கணீர்க்குரல். ராகம் போட்டுப் பாடித்தான் சொல்லித்தருவாள். ஆனால், எல்லாப் பாட்டுகளுக்கும் ஒரே ராகம்தான், பாவம். குழந்தைகள் வழிமொழிந்து அலறினார்கள்.

*வேதாளம் சேருமே... வெள்ளெருக்குப் பூக்குமே...*

மீண்டும் ரத்தினமேரி.

*பாதாள மூலி படருமே...*

குழந்தைகள். பேரிரைச்சல். அந்தப் பாடலும் இரைச்சலும் தன்னை, சின்னையா இறந்த பிறகு அழகழிந்துவிட்ட தன் வீட்டை, குழந்தை யின்மை காரணமாக வெறுமை பூண்டுவிட்ட செல்லம்மாளின் முகத்தை, பூடகமாக நையாண்டி செய்கிற மாதிரித் தோன்றியது செல்லச்சாமி வாத்தியாருக்கு. தலைவலி வருகிற மாதிரி இருந்தது. பொடிடப்பியைக் கையிலெடுத்துக்கொண்டு, வெளியேறினார். போவதற்கு முன்,

விஞ்ஞானப் புஸ்தகத்தை எடுத்து எட்டாம் பாடத்தை உருப் போடுங்க எல்லாரும். வந்து கேள்வி கேப்பேன். டாண் டாண்ணு பதில் வல்லேன்னா தோலெ உரிச்சுப்பிடுவேன்.

வேப்பமரத்தடியில் இருந்த கழிவறையிலிருந்து எழும் அழுகிய பலாப்பழ நாற்றம் மனதுக்கு இதமாக இருப்பதாக உணர்ந்தார். சிறுநீர் கழிக்கும்போதும், சின்னையா ஞாபகம் விலகவில்லை. அவனுடைய திதி நாள் இன்று. படுபாவி. சரியாக இருபத்தோரு வருஷம் ஆகிவிட்டது. சாகும் நேரத்தில் என்ன நினைத்துக்கொண்டானோ? இவன் போய்த் தான் பாரத தேசத்தை விடுவித்துவிடுகிற மாதிரி ஆவேசமாய்ப் போனான். போன வேகத்தில் போய்ச் சேர்ந்தும் விட்டான். தந்தி மட்டும் தான் வீடு வந்து சேர்ந்தது. கடைசியில் சுபாஷ் போஸும் காணாமல் போய்விட்டார். ஐ.என்.ஏ. இருந்த இடம் தெரியவில்லை.

...அந்தத் தந்தி வந்த நாள் பசுமையாக நினைவிருக்கிறது. செல்லச்சாமி வாத்தியாருக்கு முப்பத்து மூன்று வயது அப்போது. கருப்பசாமி கோவிலில் கொடை நடந்துகொண்டிருக்கிறது. சாமியாடி பொன்னையா சுடுகாட்டுக்கு வெளியில் உள்ள கொட்டகையில் பூங்கரகத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். ஊருக்குள் குட்டையன் என்றுதான் கூப்பிடுவார்கள் அவரை. ஹரிஜனக் காலனியைச் சேர்ந்தவர். கோவில், அம்பலகாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சாமியாடு வது பொன்னையாதான். கொஞ்சம் அரசியல் சகவாசம் உள்ளவர். மட்டப்பாறை வெங்கட்ராமய்யருடனும் மதுரை வைத்தியநாதய்ய ருடனும் சிநேகம் உண்டு. மதுரையில் மீனாட்சியம்மன் ஆலயப் பிரவேசத்துக்குச் சென்றவர்.

மீனாட்சியம்மன் கோவிலுக்குள்ளே போனா, அதுவும் ஐயிரு வீடு மாருதித்தான் இருக்கு செல்லச்சாமி.

என்று சொன்னார், போய்விட்டு வந்து.

பறைவநத்தம் ஜனங்கள் சுற்றிலும் நின்று சளசளவென்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். காற்றில் சாராய வாடை கலந்திருக்கிறது. கரகாட்டக்கார அலிகளும், குறவன் குறத்தி ஆட்டக்கார ஜோடியும் ஊரனாற்றிலிருந்து வயல்களுக்குக் கிளைபிரியும் ஓடை மதகின் மேல் உட்கார்ந்து பீடி குடிக்கிறார்கள். கெங்குவார்பட்டி நையாண்டி மேள காரர்கள் தங்கள் வாத்தியங்களை ஓரமாக வைத்துவிட்டு ஒருவரை யொருவர் சீண்டிக்கொண்டிருக்கிறார்கள். சற்றுத் தள்ளி, பற்றியெரியும் வைக்கோல் நெருப்பில் பறைகளைக் காட்டி, தோலுக்கு முறுக்கேற்று கிறார்கள் காலனிக்கார ராமனும், அருள்தாஸும்.

ஆசீர்வாதம் சித்தப்பா மூச்சிறைக்க ஓடிவந்தார். செல்லச்சாமியின்

தகப்பனாருடைய நாலாவது தம்பி. சனிக்கிழமை சாயங்காலம்வரை பெரியசாமி அம்பலமாக இருந்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை மகிமை ஆசீர்வாதமாக மாறினவர். பறவைநத்தம் முக்கியஸ்தர்களில் ஒருத்தர்.

> ஏலே, செல்லச்சாமி, கர்த்தர் நம்ம தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டார்றா.

என்றவாறு தந்தியை நீட்டினார். பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் தந்தியைப் படித்தபோது செல்லச்சாமி வாத்தியாருக்கு அதிர்ச்சியில் வயிறு கலங்கிவிட்டது. ஓடைக்கரையில் ஓடிச் சென்று ஒதுங்கினார்...

கூடப் பிறந்த நாய்களுக்கு தம்பி செத்துப்போன துக்கத்தைவிட, அவன் பங்குக் காணியைப் பங்கு போட்டுக்கொள்கிற சந்தோஷம்தான் பெரிசாய்ப் போய்விட்டது. அந்தந்த போகத்தில் சாப்பாட்டுக்கு விளைகிற அளவு நிலம் இருந்தால் போதாதா? அட, சொந்தமாய் நிலம் இல்லாதவனெல்லாம் சாப்பாட்டுக்கில்லாமல் செத்தா போனான்? ஒரு டாம்பீகம்தான். கூட வருகிறவன் கிட்டே,

> அந்தா தெரியிதே, அந்தப் பன்னண்டாவது தென்னை மரம் வரைக்கும் நம்ம காணிதான். அடுத்த போகத்துக்குக் கெணறு ஒண்ணு தோண்டிப் போடலாம்னு இருக்கேன். மிளகி போட ணும்னு ஆசை.

என்கிற மாதிரி வசனம் பேசியாக வேண்டாமா?

வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் இவன்களெல்லாம், பறவைநத்தத்தில் சாமான்யன்களாக இருக்கிறான்கள். கொஞ்சம் சுழி மாறியிருந்தாலும் போதும், ஹிட்லராகவும் முஸோலினியாகவும் அவதாரமெடுத்து நாடு பிடிக்கக் கிளம்பியிருப்பான்கள். அந்தப் பயல்கள் ரெண்டு பேரும் ஜோடி போட்டுக்கொண்டு உலகத்தை ஜெயிக்கப் புறப்பட்டான்கள். செல்லச்சாமி வாத்தியாருக்கு உள்ளூற ஒரு நம்பிக்கை. எல்லா தேசமும் மடங்கினதுக்கப்புறம் நடக்கப் போகும் வேடிக்கையை எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஒருத்தனுக்கொருத்தன் மித்திர ஹத்தி செய்து சாகப் போகிறான்கள் என்று முழுக்க முழுக்க நம்பினார். நடந்ததென்னமோ வேறு மாதிரி ஆகி விட்டது. ருஷ்யாவில் போய்க் குப்புறக் கவிழ்ந்துவிட்டது ஹிட்லரின் வண்டி. கத்தியெடுத்தவன் கத்தியால் சாவான் என்கிற மாதிரி முஸோலினி சுடப்பட்டுச் செத்தான்.

தனிப்பட்ட மனுஷன்களின் அகம்பாவத்துக்குக் கூட்டங் கூட்டமாய் எவ்வளவு ஜனங்கள் செத்தார்கள்? மரணத்தைத் துச்சமாய் மதிக்கிற தீரன்கள் கொத்துக் கொத்தாய் மரித்தார்கள். என் தம்பியையும் காவு வாங்கியது, எவனோ ஒருத்தனின் மண்ணாசைதான். நீ தேசபக்தி

அது இது என்று என்ன வேணுமானாலும் சொல்லிக்கொள்ளு. நான் மண்ணாசை என்றுதான் சொல்லுவேன். ஆயிரங் கோவிலில் வைத்து அடித்துச் சொல்லுவேன்.

அடே, சின்னையா, உன் பங்கு நிலத்தில் என் பாகத்தை வேணா மென்று சொல்லிவிட்டேன். தம்பி, என்னதாண்டா ஆச்சு உனக்கு? பாவி, பாவி, ஒரு சொப்பனத்திலேயாவது வரக்கூடாதா? ஐயோ, என் தம்பீ...

**வ**குப்பில் மயான அமைதி நிலவியது. எல்லாரும் தலைகுனிந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். ராசகோபாலன் மட்டும் தலையைத் தலையை அசைக்கிறான். பார்வை புஸ்தகத்தில்தான் இருக்கிறது. காது மாத்திரம் வேறெதையோ கேட்டுக்கொண்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கும் கனகராசன் எதையோ முனகிக்கொண்டிருக்கிறான்.

அதிகப்பிரசங்கிப் பயல். போனவாரம் இப்படித்தான். பாடம் நடத்தின நேரம் போகப் பொது விஷயங்கள் கொஞ்சம் சொல்லித் தரலாம் என்று ஹிட்லர், முஸோலினி, ஸ்டாலின், சர்ச்சில், மான்ட் கோமரி, யாமமோத்தோ என்று உலக யுத்தத்தில் அடிபட்ட பெயர்களை யெல்லாம் இன்னார் இன்னார் இவர் இவர் என்று கொஞ்ச நேரம் எடுத்துச் சொன்னார்.

மறுநாள், இந்தக் கனகராசு எழுந்து கேட்டான். இத்தனைக்கும், அப்போது களப்பிரர் படையெடுப்பு பற்றிப் பாடம் நடத்திக் கொண்டி ருந்தார். என்ன செய்ய, எட்டாம் வகுப்பு வரைக்கும் இருக்கிற கிராமப் புற நடுநிலைப் பள்ளிக்கூடமாயிற்றா, எல்லா இழவையும் ஒரே வாத்தியார்தான் கூட்டவேண்டியிருக்கிறது.

அய்யா.

சொல்லுடா.

நேத்து இட்டலர் பத்தியும் முஸ்ஸொலீனி பத்தியும் சொன்னீங்கள்ல?

ஆமா.

அவுங்க ரெண்டுபேரும் கூடப் பெறந்த அண்ணந் தம்பிகளாய்யா?

கையிலிருந்த பிரம்பு அவன் தலையை நோக்கிப் பறந்தது. நல்லவேளை, ஒதுங்கிக்கொண்டு விட்டான். இல்லாவிட்டால், படாத இடத்தில் பட்டிருக்கும்....

கனகராசு, ராசகோபால் ரெண்டுபேரும் எந்திரிங்க.

எழுந்தார்கள்.

என்னடா பேசிக்கிட்டிருக்கீங்க. பாடம் படிக்காமெ.

அய்யா, அடுத்த பிரதம மந்திரி...

என்னா, பிரதம மந்திரி வீட்லெ போயிப் பொண்ணு கேக்கப் போறியா? இல்லே, அவுரு ஒங்கம்மா கூடப் பெறந்த தாய்மாமனா? தாஷ்கெண்ட் போனவருதான் தவறிப் போனாரே. அடுத்த ஆள் வர்ற வரைக்கும், போங்க... வெளியே போய் மண்ணுலெ முட்டி போடுங்க...

அய்யா.. அதில்லேய்யா...

என்னடா, அது இல்லை, வெளக்கமாறு இல்லேன்னுக்கிட்டு... போ. மொதல்லே முட்டிபோடு.

வகுப்பைவிட்டு வெளியேறி, பருக்கைக் கற்கள் இறைந்த வெற்றுத் தரையில் பரிதாபமாக முழந்தாளில் மடிந்து நின்றார்கள் இருவரும். வகுப்பிலிருந்து வெளியில் பார்த்தால், கட்டாந்தரையின் உஷ்ணம் கண்க ளில் பளபளத்துக் கூசுகிறது. வழக்கமான தை மாதம் போல இல்லை இது. பருவம் தப்பிக் கோடை ஆரம்பித்துவிட்டது மாதிரி வெயில் இப்போதே கடுமையாய் உறைக்கிறது.

கெடங்க நாய்களா. பட்டாத்தான் புத்திவரும்...

என்று முனகிக்கொண்டார் வாத்தியார்.

செல்லச்சாமி வாத்தியாரின் காலைநியமங்களில் தினச் சஞ்சிகை படிப்பதையும் சேர்த்துக் கொள்ளுமளவு அவகாசம் கிடையாது. நாலரை மணிக்கு எழுந்து பல் துலக்கிவிட்டு, விடுவிடுவிடுவென்று நடக்கச் செல்வார். கூத்தியார்பட்டி விலக்கு நோக்கிப் பத்து ஃபர்லாங் தூரம் நடை. பறவைநத்தத்தின் வடக்கு எல்லையாக நின்றிருக்கும் சிறு குன்றின் அடிவாரம் வரை செல்வார். தன்னந்தனியாக ஊருக்கு வெளியே நின்றிருக்கும் குன்றின் உச்சியில் பாதாளி அம்மன் கோயில் உயர்ந் திருக்கிறது. கிருஷ்ணதேவ ராயர் காலத்தில் மதுரைக்கு வந்த நாயக்கர் களின் தளபதிகளில் தேவி உபாசகரான ஒருத்தர் கட்டிய கோயில் என்று சொல்வார்கள்.

பறவைநத்தத்தின் சம்பாத்தியங்களுக்கும், இழப்புகளுக்கும் மௌனசாட்சியாக நின்றவாறு, தன் தனிமையைத் தானே ருசித்துக் கொண்டிருக்கும் குன்றையும், கோவில் சுவரிலுள்ள காவி வெள்ளைப் பட்டைகளையும் பார்த்தபடி கொஞ்சநேரம் நின்று ஆசுவாசம்.

திரும்பி வந்து சுத்தமாகக் குளித்துவிட்டு யோகாசனம். பலபேர் யோகாசனம் செய்துவிட்டுக் குளிக்கிறார்கள். அது முறையில்லை. யோகாசனம், வெறும் தேகப்பயிற்சி மாதிரியான சங்கதி கிடையாது. எடுத்துச் சொன்னால் கேட்டுக்கொள்கிறவர்கள் யார் இருக்கிறார்கள். இந்த விசித்திரம் வேறெந்த சமூகத்திலும் நிகழ்ந்திருக்காது... ஒட்டு மொத்தமாக அத்தனை ஜனங்களுக்கும் காது அடைத்துப் போவது.

அதனால்தான், அர்த்தமில்லாத அலங்கார வார்த்தை அடுக்குகளில் கிறங்கிக் கிடக்கிறார்கள்...

பிறகு, வயிறு முட்ட நீராகாரம் அருந்திவிட்டுத் தக்ளி நூற்க உட்கார்ந்தால், பள்ளிக்கூடத்துக்குக் கிளம்புகிற வரை தொடையைத் தேய்த்துக்கொண்டிருப்பார்.

சும்மா, ஒரு பத்து நிமிஷம் தினத்தாளைப் படிக்கலாம்தான். என்ன பிரயோஜனம்? நல்ல செய்தி ஒன்றாவது இருக்குமா அதிலே? பக்கம் பக்கமாக இழவுச் செய்திகள். அங்கே அத்தனைபேர், இங்கே இத்தனை பேர். உச்சமாக, ஜப்பானிலே லட்சத்திச் சொச்சம் பேர் ஒரே குண்டில் அடிபட்டுச் செத்துப் போனார்கள். ஒரு மாதத்துக்குச் சாப்பிட முடியாமல் சிரமமாகிவிட்டது. பிசைந்த சோற்றிலே சாம்பலும் எலும்புத் துண்டு களும் கரிக்கட்டைகளும் கிடக்கிற மாதிரி பிரமை. அதுக்குப் பிறகு இந்த இருபத்திச் சொச்சம் வருஷத்திலே, ஒரு நாளும், காலையில் பேப்பர் படிக்கிறதில்லே.

சரிதான், உள்ளூரிலே மண்டை உடைந்து சாகிறான்கள். யுத்தத் திலே, குண்டுபட்டுச் சாகிறான்கள். பொம்பளை, சாப்பாடு, மண்ணு. இந்த மூணுமட்டும் இல்லைன்னா, கொலைன்னு ஒரு சங்கதியே வந்திருக்குமா மனுஷக் கூட்டத்துக்குள்ளே?

இந்த மாதிரியான வியாகூலத்துடன் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தால், பிள்ளைகள் சின்னச் சின்னத் தப்புகள் செய்தாலும் கொலை வெறி கூடிவிடுகிறது...

கிராமத்துக்கு வருவது ஐந்தே தினசரிகள்தான். பெரியதனக்காரர் வீட்டுக்குத் தினமணி. சுந்தரராஜ் வாத்தியார் வீட்டுக்கும் அதேதான். இளமாறன் வீட்டுக்கு முரசொலி வருகிறது. மற்றபடி ஊருக்குள் நாலைந்து வீடுகளில் தினத்தந்தி. நாட்டாமைக்காரர் வீட்டில் மட்டும் நவசக்தி. அவர் எப்போதும் கதர்தான் உடுத்துவார்.

செல்லச்சாமி வாத்தியார் வாங்கும் பத்திரிகை பெங்களூரிலிருந்து வெளியாவது. The Newsman. ஸிந்திக்காரர் ஒருத்தரின் பத்திரிகை. ஆசிரியராக இருப்பவர் தமிழ்நாட்டுக்காரர்தான். பழ.அருணாச்சலம். தேவகோட்டைக்காரர். ரொம்ப நடுநிலையான பத்திரிகை. செய்தி களைத் தனியாகவும், அபிப்பிராயங்களைத் தனியாகவும் தருகிற கண்ணியம் உள்ள பத்திரிகை. மதுரைக்கு வந்து, பறவைநத்தத்துக்கு ராமராஜ் ட்ரான்ஸ்போர்ட்டில் வந்து சேரும். செய்திகள் கொஞ்சம் தாமதமாக வரும் என்றாலும், ஊர்ஜிதமானதாக இருக்கும். யாராவது செத்துப்போனால், அஸ்தியைக் கரைத்தபிறகுதான் செய்தியை அச்சேற்றுவார்கள். தவிர, செய்தியோடு, செய்தியைப் பற்றிய விமர்சனமும் அன்றன்றே வெளியாவது ஒரு தனிச் சிறப்புத்தானே?

என்ன, சாயங்காலம் தினத் தாளைச் செல்லச்சாமி வாத்தியார்

பிரிக்கும்போது, அதில் பிரசுரமாகியிருக்கும் எந்த ஒரு சம்பவமும் நடந்து குறைந்தது நாற்பத்தெட்டு மணிநேரம் ஆகியிருக்கும்.. அதனாலென்ன, உலகம் சுழல்வது ஒரு ரெண்டுநாள் ஒத்திப் போனால் என்ன கேடு வந்துவிடப் போகிறது?

லால்பகதூர் சாஸ்திரி, பாக்கிஸ்தானோடு சமாதானப் பேச்சு வார்த்தைக்குப் போன இடத்தில் மரணமடைந்த விபரமும் தாமதமாகத் தான் தெரிந்தது செல்லச்சாமி வாத்தியாருக்கு. இன்றைக்குப் பேப்பரில் நேருவின் மகளைப் பிரதம மந்திரியாக்கிவிட்டார்கள் என்று செய்தி போட்டிருக்கிறான். அந்தப் பயல் கனகராசு இது சம்பந்தமாகத்தான் ஏதோ சொல்ல வந்தானோ என்று வெட்டிய மின்னலைப் புறக்கணித்து விட்டு, செய்திகளுக்குள் நுழைய முயன்றார்.

மனத்துக்குள் இனம் புரியாத குமுறல் எழும்பி எழும்பித் தணிந்தது. நியாயப்படி, தேசாயைத்தான் கொண்டுவந்திருக்க வேண்டும். எங்கே, அதுதான் வயசானவர்களுக்கு எங்கேயுமே மரியாதையில்லை என்ற காலமாகிவிட்டதே. அந்தப் பொம்பளை, சாஸ்திரி மந்திரிசபையில் இருந்ததுதான். ஆனால், சாஸ்திரி மாதிரி வருமா? பார்த்த உடனே நம்மூர்க்காரர்னு தெரிகிற வெகுளியான உருவம். சாந்தமான முகம்... சாஸ்திரியின் மரணத்துக்கு ஆழ்ந்த துக்கம் அனுஷ்டிக்கத் தொடங்கினார் செல்லச்சாமி வாத்தியார்.

காந்தி இருக்கும்போதே இற்றுப்போய்விட்ட கூரை அது, காந்தியம். சும்மா இருக்கமாட்டாமல் பத்து ஐம்பது தூண்கள் சேர்ந்து நிறுத்தி வைத்திருந்தன அந்தக் கூரையை. வல்லபபாய் பட்டேல் போனார். நேரு போனார். அடுத்து சாஸ்திரி போனதோடு, இன்னொரு முக்கியமான தூண் விழுந்துவிட்டது.

ரசவாதம் மாதிரி மனிதர்கள் தோன்றுகிறார்கள். மறைகிறார்கள். பிரபலஸ்தர்கள் செத்துப்போனால் சரித்திரத்தில் சேர்த்துக் கொள்கிறார் கள். என் தம்பி மாதிரி சாமான்யர்கள் சாவதின் துக்கம், அவரவர் குடும்பத்தின் சரித்திரத்தில் மட்டும்தான் பதிவாகிறது. அதுவும் ஆப்தமாய் இருந்தால் மட்டும்தான். காணிமேல் கண் விழுந்தால் போச்சு.

கண்ணுக்குத் தெரியாத அழிரப்பர் ஒன்று எல்லாவற்றையும் அழித்துக்கொண்டே போக, தன் முயற்சியில் தளராத மாயப் பென்சில் பின்தொடர்ந்து எழுதிப் போகிறது என்று தோன்றியது செல்லச்சாமி வாத்தியாருக்கு. ஆனாலும், ரப்பரின் சக்திதான் பெரியது. மீண்டும் அதேமாதிரி எதையும் எழுத முடியவில்லை பென்சிலால்.

மறைவாய்ப் புதைத்த ஓடு
மறைந்த மாயமென்ன - மா

முனிவரே அறியேன்...

சன்னமாக முனகிக்கொண்டார்.

கீர்த்தனை மாதிரியான பாட்டுக்கள் அழிந்து, இது ஜாலிலோ ஜிம்கானா.. டாலிலோ கும்கானாவின் காலம். டக்கரபுக்கரவென்று ஓசையெழுப்பினால் சங்கீதம். கெங்குவார்பட்டி நையாண்டி மேளகாரன் இழவுக்குக் கொட்டுகிற தாளத்தை ஸினிமாவில் கேட்டுப் புல்லரிக்கிறான்கள் இளவட்டங்கள்.

இந்தப் பக்கம், அபேட்சகர் வேட்பாளராகிறார். அக்ராஸனர், தலைவர் ஆகிறார். மெம்பர், உறுப்பினர் ஆகிறார். ஆகட்டுமே. தாராள மாக ஆகிவிட்டுப் போகட்டும். வேண்டாமென்று சொல்ல, கேவலம் இந்தச் செல்லச்சாமியார்? அலைகளால் மெல்ல மெல்ல ஒதுக்கப்பட்டுக் கரைநோக்கிச் செல்கிற வெறும் குப்பைதானே...

பிடிவாதமாகத் தலையை அசைத்து யோசனை ஓட்டத்தை நிறுத்த முயன்றார். லால்பகதூர் சாஸ்திரியின் குள்ள உருவமும், எளிமையும், முகத்தில் தெரியும் அப்பாவித்தனமும், வாத்தியாரின் கண்களிலிருந்து நீராய் இறங்கின. மேல் துண்டால் கன்னத்தைத் துடைத்துக்கொண்டு, தினத் தாளின் மற்றச் செய்திகளுக்குள் இறங்கினார். இருட்டுவதற்குள் ஒரு பார்வை பார்த்துவிட வேண்டும். அரிக்கேன் வெளிச்சத்தில் பொடி எழுத்துக்களை வாசிப்பது மிகச் சிரமமான காரியம்.

அஸ்ஸாம் சட்டமன்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் பெயர் அறிவிக்கப்பட்டிருந்தது. வரும் வருஷக் கோடையில் உஷ்ணம் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று ஒரு செய்தி. பணவீக்க விகிதம் .78 சதவீதம் அதிகரித்திருக்கிறதாம். இன்னும் நாலைந்து வருஷங்களுக்குள் நிலாவில் மனிதனைக் கொண்டு போய் இறக்கிவிட முடியும் என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது. அவசரமாக மேய்ந்துகொண்டே போன செல்லச்சாமி வாத்தியாரின் கவனத்தை ஈர்த்தது, கட்டச் செய்தி ஒன்று.

ஸோமிட்ஸிய அரசியல் பிரமுகர் ஒருவர் காங்டாக் அருகில் கொல்லப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட இடத்தின் ராணுவ உயர் அதிகாரியை வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்திருக்கிறது என்றும் சொன்னது. இது பற்றிய அமித் மிஸ்ராவின் விமர்சனக்கட்டுரை எட்டாம் பக்கத்தில் உள்ளது என்று கூறின, அடர்த்தி அதிகமான கறுப்பெழுத்துகள். வாரந்தோறும் பிரசுரமாகும் Know Your World பத்தியில் நாளை மறுநாள் ஸோமிட்ஸியாவைப் பற்றி வெளிவரும் என்றும் குறிப் பிட்டிருந்தது.

பக்கங்களை ஆசையாய்ப் புரட்டினார். அமித் மிஸ்ரா கில்லாடி . உலக அரசியல் நிகழ்வுகளை அனுமானிப்பதில் விற்பன்னன். எளிமையான வாக்கியங்களில் சம்மட்டி அடியாகச் சொல்வான்,

*அரசியல் ஆரூடங்களை. நேருவும் சூ யன் லாயும் ஒரே தட்டில் சாப்பிட்டு, ஒரே குளத்தில் கால்கழுவும் நண்பர்களாக, இந்தி சீனி பாய் பாய் என்று தோளுக்குத் தோள் கைபோட்டு அலைந்த நாட்களிலேயே சீனாவுடன் யுத்தம் வரும் என்று கணித்தவன்.*

*மேலோட்டமாக வாசிக்கத்தான் பொழுது இருந்தது. The Real Chess என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையை,*

> *கறுப்பு வெள்ளைக் கட்டங்களும் காய்கள் நகருவதும் நன்றாகத் தெரிகிறது. நகர்த்தும் கைகள் மட்டும் புலப்படவில்லை பார்வைக்கு...*

*என்று முடித்திருந்தான் அமித் மிஸ்ரா.*

*

# பூர்வ கிரந்தம் 2

... கேள்விக்கு விடை தெரிவதால் ஆகப் போவது என்ன? பருவங்கள் சுழல்வதும், காலம் புரள்வதும் மாறிவிடுமா? ...

*ஹிமாலயத்தின் அடிவாரங்களில் உள்ள பிரதேசம் அது.*

*மன்னனின் கனவில் ஒரு கேள்வி உதிக்கிறது. காற்று நிரம்பும் பை போல மெல்ல மெல்ல ஊதிப் பெருத்துக் கனவெங்கும் இரவெங்கும் நிரம்பி வழிந்த கேள்வி, பொழுது விடியும்போது ஊரெங்கும் நாடெங்கும் பரவிப் பெருகுகிறது.*

*ஒற்றைக் கேள்வி பல்கிப் பெருக்கும் அலைகளில் ஆகாயம் செந்நிறம் கொள்கிறது. காற்று சற்றே ஸ்தம்பித்து மீண்டும் நகர்கிறது. பட்சிராசிகளின் இறக்கைகள் கருங்கல்லாய்க் கனக்கின்றன. வீழ்ந்து கொண்டிருக்கும் மழைத்தாரைகள் அந்தரத்தில் உறைகின்றன ஒரு கணம்.*

*கேள்வியின் உஷ்ணம் உள்ளங்கையைத் தகிக்க, காண்போரிட மெல்லாம் கொடுத்து வாங்குகிறான் மன்னன்.*

*அறியாமையின் இருள் விலகி வழிவிட, சூரியன் எழுகிறது. அன்றாடம் கிளம்பும் சூரியன் போலின்றி, ஞானத்தின் விந்தொளி வீரியமாய்ப் பெருகி, பார்க்கும் விழிகளைக் கூசவைக்கும் சூரியன்.*

*வருக ஒளியே... வருக தீட்சண்யமே... வருக தவமுனியே...*
*இளம் பிராயத்தின் வலுவும்,*
*பலகோடி ஆண்டுகளின் ஞானமும்,*
*சூரியச் சந்திரரின் தேஜஸும்,*
*ஆல விருட்சத்தின் அமைதியும்,*
*மலை ஊற்றின் தெளிவும்,*
*காட்டெருமையின் வீரியமும்,*
*கல் மரத்தின் பொறுமையும்,*
*பனிப் பாறையின் சாந்தமும் கொண்ட இளந் துறவி தேசாடனம் முடிந்து அரண்மனைக்குள் நுழைகிறான்.*

அவன் பார்வை படும் வெற்று இலைகள் பச்சிலைகளாய் மாறுவதும்;

கர்ப்பத்திலிருக்கும் சிசுவின் தலையெழுத்தை உள்ளங்கை ரேகையைப் போல அவன் காட்சி கொள்வதும்;

கறந்த பாலில் ஒளிந்திருக்கும் நோய்த்தாதுவைத் தனியாய்ப் பிரித்தெடுக்க அவனால் இயல்வதும்;

வேண்டும் பொழுதில் பொழியவும், வேண்டாத சமயம் நிறுத்தவுமென மேகவர்ஷத்தைத் தன் வளர்ப்புப் பிராணிபோல அவன் இயக்குவதும்;

அடுத்த நூறு வருஷங்களுக்கான சந்திர சூரிய கிரகணங்களைக் கணித்துச் சொல்லும் அவனது வல்லமையும்;

மாண்டவரை மீட்டெடுக்கும் அவனது தபோபலமும், ஜகத் பிரசித்தம்.

அரண்மனைக்குள் இளந்துறவி நுழைந்த முகூர்த்தத்தில் அண்ட சராசரத்தின் வெற்று வெளியில் புதிதாய் உதித்தது ஒரு கோள்.

**வ**ரவிருக்கும் சந்ததியின், மாபெரும் சாம்ராஜ்யத்தின், மகத்தான சரித்திரத்தின் முதல் சொட்டு, மன்னனின் அகத்தில் அகந்தையாய் உருக் கொண்டது.

எண்ணற்ற கைகளைப் பொசுக்கியும்,

பதில் வறண்ட மனங்களைச் சிரமறுத்தும்,

மீண்டும் மீண்டும் தன் உள்ளங்கையில் வந்தமரும் நெருப்புப் பந்தைத் துறவியிடம் கையளிக்கிறான் மன்னன்.

தன் கைக் குழிவில் பனிக்கட்டி போலக் கிடக்கும் கேள்வியைப் பார்வையால் வருடுகிறான் துறவி. ஓங்காரமான குரலில் ஒலிக்கிறது அது.

'அண்டவெளியின் ஆதி ரூபம் எது, இருளா, வெளிச்சமா?'

'ஆதி வெளியை நிரப்பியது ஓசையா, நிசப்தமா?'

இளந் துறவி புன்னகைக்கிறான்.

அரசே, இதற்கு பதில் தெரிந்தவர் இருவர்.

சொல்லும் எங்கே என்று. உடனடியாய் ஆளனுப்புகிறேன்.

மன்னிக்கவும் அரசே. தேடிச் சென்றவர் திரும்பமாட்டார்.

கிராதகர்களோ அந்த இருவர்?

இல்லையில்லை. அவர்கள் நிலத்தில் கிராதகமும் இல்லை,

கருணையும் இல்லை.

மாவீரர்களோ?

அங்கே வீரமும் இல்லை, கோழைமையும் இல்லை.

தந்திரசாலிகளோ?

அங்கே தந்திரமும் இல்லை, வெகுளித்தனமும் இல்லை.

அவர்கள் இருக்கும் இடம் தெரியுமா உமக்கு?

தெரியும் என்று சொல்வதற்கில்லை. தெரியாது என்றும் சொல்வதற் கில்லை.

ஆத்திரமுற்ற மன்னன், அரியாசனத்திலிருந்து இறங்கி வருகிறான். உறையிலிருக்கும் வாள் வெளியேறுகிறது. வியாதியஸ்தனின் நாடி போலச் சீரற்றுத் துடிக்கும் கைவாளை குருவை நோக்கி நீட்டியபடி அலறுகிறான் மன்னன்.

யார் அவர்கள்? யார் அவர்கள்? யார் அவர்கள்...?

அரண்மனையின் சுவர்களில் பட்டுத் தெறிக்கும் மன்னனின் குரல் நகரின் தெருக்களிலும், முச்சந்திகளிலும், கடைவீதிகளிலும், தீபஸ்தம்பங் களிலும், கூரைகளிலும், நடைபாதைகளிலும், நீர்த் தேக்கங்களிலும் சிதறி அலைகிறது, தாயற்ற குழந்தையென.

துறவி, தன் கையில் இருக்கும் பனிக்கேள்வியைப் பார்க்கிறான்.

சொல்கிறேன் அரசே. அதற்கு முன், இந்தக் கேள்வியை முதலில் பெற்றுக்கொள்ளுங்கள்.

துறவியின் கையில் குளிர்ந்து கிடந்த கேள்வி, மன்னன் கை சேர்ந்ததும் மீண்டும் கொதிக்கிறது. ஒரு கையில் வெம்மை தாளாமல் மறு கையை உதறியபடி மன்னன் கேட்கிறான்.

சொல்லும். யார் அவர்கள்?

உபகேள்வி ஒன்று இருக்கிறது அரசே.

சொல்லும்.

இந்தக் கேள்விக்கு விடை தெரிவதால் ஆகப் போவது என்ன? பருவங்கள் சுழல்வதும், காலம் புரள்வதும் மாறிவிடுமா? இப் போதின் ருசியும் அருசியும் வேண்டாதவை ஆகுமா? மேகத்தி லிருந்து அக்கினி பொழியுமா?

உபகேள்வியின் பிரசன்னத்தில் மூலக் கேள்வியின் உஷ்ணம் சடாரென்று இறங்குவதை உணர்கிறான் மன்னன். துறவி தொடர்ந்து பேசும்போது, நீராய் உருகி ஓடிவிடுமோ அது?... ஆயினும், தான் மன்னன் என்பது நினைவு வந்ததால், சொல்கிறான்.

அதிகப்பிரசங்கித்தனம். பதில் தெரியவில்லை என்றால் அதை

மட்டும் கூறும். மழுப்ப வேண்டாம்.

அவர்கள் இருவரும் யாரென்று தெரியவேண்டும். அவ்வளவு தானே?

ஆமாம்.

ஒருவன் பிறவாதவன். மற்றவன் இறந்தவன்.

அன்றிரவில் ராஜ்ய எல்லையை விட்டு வெளியேறியது துயரத்தால் கனத்த ஓர் இளம் உருவம்.

தனிமையும்,

மாயாலோகத்தின் மின்மினிகள் போலச் சிமிட்டிய விண்மீன் களும்,

ஏழாம் பிறைச் சந்திரனும்,

வனத்தின் ரகசிய ஓசைகளும்,

இருளின் கூக்குரலும் துணை வர

நடந்தது. நடந்தது. நடந்துகொண்டேயிருந்தது.

மலை ஓடைகள் தாகம் தணித்தன.

காட்டு மரங்கள் கனிகளும் காய்களும் உவந்து ஈந்தன.

விளைந்து அகலமாய்ப் படர்ந்த இலைகள் உதிர்ந்த மரத்தடிகள் மஞ்சமாகி உதவின.

எண்ணூற்றி முப்பத்திரண்டு நாட்கள். சமவெளியிலிருந்து மலையின் மேல் அடுக்குகள் நோக்கிச் செங்குத்தாய் நீண்ட பயணம்.

தவம் போலக் கடந்த நாட்களின் இறுதியில், நூறாண்டுகளாகக் காற்றுடன் சரசம் புரிந்தவண்ணம் நின்றிருக்கும் மரத்தின் கனத்த வேரில் தலையைக் கிடத்தியது அந்த உருவம். அதன் பெயர் ஸோமிட்ஸு.

*

# ஜூலியஸ் லுமும்பா

பாவம், அவர்களுக்குத் தெரியாது, இந்த நூற்றாண்டின் அதிதேவதை துப்பாக்கிக் குண்டுதானென்று ...

*தா*ர்ச்சாலையிலிருந்து விலகி மர வரிசைக்குள் நழுவிச் செல்லும் அகலமான மண்பாதையின் சிறகில் மிகப் பெரிய தேவதாரு மரம் ஒன்று நின்றிருந்தது. முதுகுச் சுமையை இறக்கிவைத்துவிட்டு, அடிமரத் தண்டில் முதுகைச் சாய்த்து அமர்ந்தான். சாம்பல் நிற முதுகு கொண்ட இரட்டை வால் குருவி தன்னிச்சையாய் அமர்வதும் எழுவதுமாய் ரகளை செய்து கொண்டிருந்தது. வெய்யிலின் அழுத்தம் லேசாகக் கூடியிருந்தது. கீழே, தான் ஒதுக்கி விலகிய தார்ச்சாலை சூரிய ஒளியில் மினுங்குவதை வெறித்துப் பார்த்தான்.

தார்ச்சாலைகளின் மீதான வெறுப்பு, ஜூலியஸ் லுமும்பா வினுடைய மனத்தின் நிலவறை ஒன்றில் ரகசியமாய்க் கனல்கிறது. தன் இனத்தின் கலாச்சாரத்தைத் துடைத்தழித்துவிட்டு, அடிமை கொள்ள வந்த வெள்ளைத் தோல்ச் சதியின் சூட்சுமம் இந்தத் தார்ச்சாலைகளில் தான் இருக்கிறது என்று எப்போதுமே தோன்றும் அவனுக்கு. சாலைகளை அழித்துவிட்டு அந்த இடங்களில் மரங்களையும் முட்செடி களையும் நட்டுவிட வேண்டும். அதைவிடவும் முக்கியமான இன்னொரு விஷயம் இருக்கிறது செய்வதற்கு.

சக்கரத்தைக் கண்டுபிடித்த அதிமனிதனின் உடலை - காலத்தின் படுகைகளில் எத்தனை ஆழத்தில் அது புதைந்திருந்தாலும் சரி - மீண்டும் தோண்டியெடுத்துத் தூக்கிலிடவேண்டும். நேரத்தை வேகமாகக் கடக்கத் தொடங்கிய நாளில்தான் மற்ற இனங்களின் பிராந்தியத்துக்குள் அத்து மீறுவதும் தொடங்கியிருக்க வேண்டும்...

பையைக் குடைந்து நாட்குறிப்புப் புத்தகம் போன்ற ஒன்றை எடுத்தான். பிரிட்டிஷார் வெளியிட்ட வரைபடத்தை அதனுள்ளிருந்து உருவித் தரையில் விரித்தான். வளைந்தோடிய இழைகளில், சீறும் நதிகள் சிறுகோடாய் நெளிந்தன. மகா மலைத் தொடர்கள் சன்னத் திரிகளாய்க்

கிடந்தன. ஆயிரக்கணக்கான சதுர மைல்களின் பரப்பும், மில்லியன் கணக்கான ஆண்டுகளின் தொகுப்பும், ஒரு தாளில் சுருக்கப்பட்ட கனவாகத் தன் முன் கிடப்பதாகத் தோன்றியது ஜூலியஸ் லுமும்பா வுக்கு.

சாலைகளைத் தவிர்த்து மலையின் சரிவில் குறுக்காக ஏறிச் செல்வதால் காலம் கொஞ்சம் விரயமாகத்தான் செய்கிறது. திபெத்திய எல்லையைச் சென்று அடைவதற்கு இன்னும் முழுசாக மூன்று இரவுகளும் நான்கு பகல்களும் தேவைப்படலாம் - மழை பெய்யாதிருந் தால். காட்டு விலங்குகள் எதிர்ப்பட்டு வழியைத் தடை செய்யாதிருந் தால். வனச் சேற்றில் வசிக்கும் பூச்சிகள் நோய் எதையும் தொற்றுவிக்கா திருந்தால்.

திபெத்திய எல்லையில் எந்தவிதமான வரவேற்பு இருக்கும் என்று தெரியவில்லை. பொதுவாக, தன்னிச்சையான மலையேறிகளை எந்த நாடும் தடை செய்வதில்லை. ஆனால், திபெத் பிற நாடுகளைப் போன் றது கிடையாது. எல்லாப்புறமும் மூடிய தேசம் அது. இறுக அடைத்த கலாசாரம்.

தவிரவும், மனித வாசனை கொண்ட பிராந்தியங்களுக்குள் நுழையும்போதே, விளிம்புகளும் வரையறைகளும் தடைகளும் சலுகை களும் உருவாகிவிடுகின்றன. லுமும்பாவின் மனத்தில் மண்டிய கசப்பும் அதிகரித்துவிடுகிறது.

ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு வரலாறு இருக்கிற மாதிரி, இந்தக் கசப்புக்கும் ஒரு தனித்துவமான வரலாறு இருக்கிறது...

நேற்று நடந்தது என்றோ நடந்ததுபோலவும், பதினைந்து வருஷங்களுக்கு முன்பு நடந்தது சற்று முன்தான் நிகழ்ந்து முடிந்தது போலவும் மனம் கொள்ளும் விசித்திரக் குறளிகளில், இப்போது என்னும் மாயத் தருணம் நிர்ணயமாகாமலே கழிந்துவிடுகிறது...

உஷ்ணமும் வறட்சியும் நிரம்பி, வெம்மை பளபளக்கும் ஸயரின் நிலவெளியும், சூடேற்றப்பட்ட அலுமினியம் போல உறைபனி தகிக்கும், குளிரும் செழுமையும் ததும்பும், ஐரோப்பிய நிலவெளியும் மாறிமாறி உதயமாகின்றன மனதில்... வெண்ணிறத் தரையும் செம்மண் தரையும் அடுத்தடுத்துக் கிடக்கின்றன. மாமிசக் கவிச்சி மற்றும் காலில் இடறும் குப்பைகழிவுகள் இவற்றின் ஞாபகத்துக்கு அடுத்த பாத்தியில், டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவும், சுத்தமான சிமெண்ட் தெருக் களும் கிடக்கின்றன. கர்த்தருக்கும் தன் இன தேவதைகளுக்கும் உள்ள பேதம் ஒருபோதும் மாறாதது என்று நினைத்துக்கொண்டான் லுமும்பா.

அப்பமும் ஒயினுமாய் இருக்கிறார் கர்த்தர். இனதேவதைகளோ,

கழுத்தறுபட்ட மிருகராசிகளின் பச்சைக் குருதியையும், ஈச்சங் கள்ளையும் படையலாகக் கோருபவை. கள்ளும் பச்சைக் குருதியும் இனதேவதைகளும் அகாலமாய் மாண்டுபோன தகப்பன் பெரிய லுமும்பாவை ஞாபகத்தில் தருவித்தன. வரைபடத்தைப் பிடித்திருந்த ஜூலியஸ் லுமும்பாவின் கைகள் நடுங்கின.

அட, இந்தக் கைகள். புறங்கைக்கும், உள்ளங்கைக்கும் வித்தியாசம் தெரியாத அளவு கருநிறம் கொண்ட இந்தக் கைகள். பட்டம் விட்டு மகிழ்ந்த கைகள். மரப் பீப்பாய்களில் குடிநீர் சுமந்து வந்து குடும்ப வளாகத்தின் வட்டத் தொட்டிகளில் ஊற்றிய கைகள். வெள்ளைச் சத்துருக்கள் ஊருக்குள் வரத் தொடங்கிய நாட்களில் பிஸ்கட்டுக்கும் சாக்லேட்டுக்கும் யாசித்து ஏந்திய கைகள். ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயத்தில் நடக்கும் வேதாகமப் பள்ளிக்குத் தோலுறை தைத்த வேதாகமத்தைச் சுமந்து சென்ற கைகள். விபரம் அரும்பும் வயதில், இச்சினாவின் இளமுலைகளைப் பிசைந்த கைகள். தனக்குள் ஊறிய வேட்கையைத் தனக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள உதவிய கைகள். உச்சமாக, திறந்த மார்புடன் நின்ற தகப்பன் பெரிய லுமும்பாவைச் சுட்டுக் கொன்ற கைகள்...

நீர்ப்பரப்பில் சிந்திய எண்ணெய்போல, வர்ணப்பிரளயம் கொண்டு மனதில் படர்கிறது அந்தக் காட்சி. பெரிய லுமும்பா தன் மேலாடையைக் கழற்றிவிட்டு நிற்கிறான். ஸயரின் பெண் கடவுளான இன்ஸாம்பியைத்தன் உடலில் இறக்கிக்கொள்ளும் வல்லமையுள்ளவன் அவன். ஆண்டுதோறும் விழாக்காலத்தில், பிராயம் முதிர்ந்த எருமை மாட்டைத் தன் வெறும் கைகளாலேயே கொன்று இன்ஸாம்பிக்குப் படைக்கிறவன்.

சுடு மகனே.

என்கிறான்.

கையிலிருக்கும் சுரைக்குடுக்கையிலிருந்து அவன் அவசரமாய் வாயில் சரித்துக்கொள்ளும் கள், கொஞ்சம் சிந்தி, கறுத்த மார்பில் ஓடை போல இறங்குகிறது.

சந்நதம் வந்துவிட்ட சமயங்களில் ஆவது போல, அவன் கண்கள் கங்குகள் போலச் சிவந்திருக்கின்றன. சொற்களைக் குழறலாகவும், கட்டுக்கடங்காத ஆவேசத்துடனும் குதப்பி மென்று துப்புகிறான். போதைக்கு ஆட்பட்டிருக்கிறானா, அல்லது இன்ஸாம்பி அவன் மேல் ஆவிர்ப்பவித்திருக்கிறாளா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இன்ஸாம்பிக்கும் பிரியமானது கள்தானே.

சுடு மகனே. இன்ஸாம்பி இறங்கியிருக்கிறாள் என்மேல். சும்மா

சுடு.

தன்னையும், தன் இனத்தையும், குறிப்பாக இன்ஸாம்பியையும் காவு வாங்குவதற்காக வந்த வெள்ளை அரக்கர்களிடம் பெரிய லுமும்பாவுக்கு உள்ள குரோதம் ஊரறிந்தது. நீருக்கு நெருப்பின் மேலுள்ள விரோதம் போன்றது அது. இயற்கையிலேயே உள்ள எதிர்நிலை...

பக்கத்துக் கிராமக் கருமானிடத்தில் ஆறு ஆடுகளை விலையாய்க் கொடுத்து, அந்த ஒற்றைக் குழல் துப்பாக்கியைப் பெரிய லுமும்பா சம்பாதித்துக்கொண்டு வந்த தினத்தில், கிராமத்தின் பொது விளை யாட்டுத் திடலில் ஒரே கூப்பாடும் கொண்டாட்டமுமாய் இருந்தது. வில் அம்புகளும், குத்தீட்டிகளும், ஈட்டிகளும் கொண்டு சமாளிக்க முடியாத எதிரியை இனி சுட்டுப் பொசுக்கிவிடலாம்.

மக்கோபா நெருங்கி வந்து, துப்பாக்கியைத் தொட்டுத் தடவிப் பார்த்துவிட்டுக் கேட்டான்.

இது எப்போது குட்டி போடும்?

எல்லாரும் சிரித்தார்கள். எதற்கெடுத்தாலும் சிரித்துக் கொண்டிருந்தார் கள் எல்லாருமே. வழக்கத்தைவிடவும் அதிகமாய்ச் சிரித்தார்கள். அதிகமாய்க் குடித்தார்கள். குடிவெறி மீறியபோது, பெரிய லுமும்பா கூட்டத்துக்கு அறிவித்தான்.

> இன தேவதையின் சக்திக்குக் காற்றும் நீரும் கட்டுப்படும்போது, நிலமும் ஆகாயமும் வால் சுருட்டிய நாய்போல ஒடுங்கும்போது, இந்தக் குழாய்ச் சனியன் எம்மாத்திரம்? இன்ஸாம்பியின் பிறப் புறுப்பிலுள்ள ஒரு ரோமத்தைக்கூட இந்தக் குழாய் நெருப்பால் பொசுக்க முடியாது என்பதை நிரூபிக்கப் போகிறேன். இன்ஸாம் பியை என் மேல் வந்திறங்க வேண்டப் போகிறேன்.

தோற்கருவிகள் முழங்கத் தொடங்கின. நிதானமாகத் தொடங்கி உச்சம் நோக்கிச் சீராக உயர்ந்த அவற்றின் தாளகதியில் நரம்புகள் முறுக்கேறி அவரவரும் ஆடத் தொடங்கினார்கள். காற்றில் வன்மம் அடர்ந்தது. மாபெரும் ஸ்தனங்கள் குலுங்கத் தலைவிரித்தாடினர் பெண்கள். குழந்தைகள் கூச்சலிட்டன. சுற்றிச் சுற்றி வந்த கோழிகளும், ஆடுகளும் இடைவிடாமல் கத்தின. சப்தத்தின் ஆக்கிரமிப்பில் ஒளிர்ந்தன சுற்றிலுமிருந்த மரங்களின் கரும்பச்சை இலைகள். இரவின் நாடி அதிர்ந்தது. மூங்கில் குச்சியால் அறையுண்ட தோற் பரப்பினுள்ளிருந்த காற்று ஆம் ஆம் என்று அரற்றியது. தரையளவு நீண்ட மூங்கில் குழாய் இசைக் கருவியை மூச்சுத் திணறத் திணற உரத்து ஊதிய மக்கோபாவின் தொண்டை நரம்புகள் விறைத்துப் புடைத்தன. அவன் மார்பு வெடித்துவிடும்போலப் புடைத்தது.

பெரிய லுமும்பாவின் குரல்வளையிலிருந்து மிருக ஓலங்கள்

வெளியேறின. சுழன்று சுழன்றாடிய பெரிய லுமும்பா, வேகமாய்ப் பாய்ந்து துப்பாக்கியை எடுத்தான்.

மகனே, லுமும்பா. வா என் அருகில்.

சக பையன்களோடு குதித்தாடிக்கொண்டிருந்த சின்ன லுமும்பா தகப்பனின் ஆணைக்கிணங்கி அந்த ஒற்றைக் குழாய்ச் சனியனைக் கையில் வாங்குகிறான். பெரிய லுமும்பா, துப்பாக்கிக் குதிரையை இயக்குவது எப்படி என்று மகனுக்குச் சொல்லித் தருகிறான்.

நாலடி தள்ளிச் சென்று நின்றுகொள்கிறான். மேலாடையைக் கழற்றிச் சுழற்றி வீசுகிறான். தாறுமாறாக ஆடிக்கொண்டிருந்த கூட்டத்தின் மத்தியில் ஒரு வட்டவெளியும், ஆவல் நிரம்பிய மௌனமும் உருவாகின்றன. காலங்காலமாக உழைத்ததின் காரணமாகக் கரணையாய்த் தசை திரண்ட மார்பை விடைத்து முன்னோக்கித் துருத்தி,

சுடு மகனே.

வேண்டாம் தந்தையே.

வெள்ளைக்காரப் பயந்தின்னி நாயா நீ? அல்லது மாவீரன் பெரிய லுமும்பாவின் மகனா?

கூட்டம் கைகொட்டி ஆர்ப்பரிக்கிறது.

ம். சுடு. இன்ஸாம்பியின் காலடியில் அந்த நெருப்புத்துண்டம் பூப்போல வந்துவிழும் பார். ம். தாமதம் செய்யாதே. சுடு. உத்தரவு வந்தாகிவிட்டது. சுடு மகனே. நீ சுடுகிறாயா, இல்லை அதைப் பிடுங்கி நான் உன்னைச் சுடட்டுமா?

துப்பாக்கி பிடித்தறியாத சின்ன லுமும்பா, தன் தகப்பனின் இடுப்புக்கு நேரே நீட்டினான் அதன் குழல்வாயை. குதிரையைப் பின்னுக்கு இழுத்த மாத்திரத்தில் தன்னை எதுவோ தாக்கியதுபோல மல்லாக்க விழுந்தான். சுதாரித்து எழுந்தபோது, தகப்பனின் மார்பிலிருந்து பச்சைக் குருதி வெளியேறுவதையும், மார்பில் அடித்துக்கொண்டு தன் தாய் கதறுவதையும், கூட்டத்தின் ஆட்டபாட்டம் நடந்த இடம் ஒரே கணத்தில் மாபெரும் துக்க வெளியாக மாறிவிட்டதையும் கண்டான்...

பெரிய லுமும்பாவின் உடலை அடக்கம் செய்தபோது குழிக்குள் நிறுத்திவைத்துப் புதைத்தார்கள். மாவீரர்களுக்குரிய இறுதி மரியாதை அது. சவக்குழிக்குள் வள்ளிக் கிழங்குகளையும், கள் நிரப்பிய சுரைக் குடுவையையும், புகையிலைக் கற்றைகள் மூன்றையும் போட்டார்கள். குனிந்து இரண்டு கைகளாலும் குழிக்குள் மூன்றுமுறை மண் சரித்து நிமிர்ந்த ஆண்கள் ஒவ்வொருவரின் கண்களிலிருந்தும் நீர்த் தாரை இறங்கியது.

பெரிய லுமும்பா, மலர்ந்த முகத்துடன் சவக்குழிச் சுவரில் பெருமிதமாய்ச் சாய்ந்து நின்றிருந்த காட்சியை இமைகளின் உட்புறத்

திரையிலிருந்து அகற்ற முடியவில்லை, இன்றுவரை.

பாவம், அவர்கள். நெருப்பில் கிடக்கும் பசுமரம் போல வாழ்வின் தன்மை மெல்ல மெல்லக் கருகி வருவதை உணராதவர்கள். எந்திரங்கள் தேவதைகளாக வரிக்கப்படும் காலகட்டம் வந்துவிட்டதை அறியாதவர்கள். பாவம், அவர்களுக்குத் தெரியாது, இந்த நூற்றாண்டின் அதிதேவதை துப்பாக்கிக் குண்டுதானென்று.

தகப்பன் இறந்த சில நாட்களில், பாதிரியார் ஃபெர்டினாண்டு சின்ன லுமும்பாவைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவனுக்கு ஞானஸ்நானம் செய்வித்தார். அன்றுதான் இவனுடைய பெயரின் முன்னொட்டாக ஜூலியஸ் என்ற சொல் வந்து உட்கார்ந்தது. ஜூலியஸ் லுமும்பாவின் ஞானத் தந்தையானார் ஃபாதர் ஃபெர்டினாண்டு. ஆஸ்திரியாவுக்கு அழைத்துச் சென்றார்.

பாதிரியாருக்குப் பிடித்த காரியங்கள் மூன்று. 1.கடைப்பட்டவர்களை தேவனின் ராஜ்யத்தில் முதல் தரமான பிரஜைகளாக்குவது. 2.சிறுவர்களின் மனங்களில் கல்வியையும், நெறியையும், தேவனின் மகிமையையும் புகட்டி அவர்களை மேன்மக்களாய் உருவாக்கத் தேவையான நிதி தேடி அலைவது. 3.பறவைகளை அவதானிப்பது.

இத்தனை வருட மலைவாழ்க்கையில், எதிர்ப்படும் எந்த ஒரு பறவையும், விலங்கும் அந்நியமாய் இன்றி நெருங்கிய பந்துக்கள் போலத் தென்படுவதற்குப் பாதிரியார் ஒரு முக்கியக் காரணம். பறவைகள் எழுப்பும் ஒலிகளின் விந்நியாசம் பற்றி அலுக்காமல் வெகுநேரம் எடுத்துச் சொல்வார் அவர்.

அதோ, அந்தத் தங்கநிறப் பறவை எத்தனை பிரியமாய்க் கூப்பிட்டு ரகசியம் சொல்கிறது பார்.

இந்த ரினோசரஸ் ஹார்ன்ஸ் எப்படிக் கண்டிப்பாய் அதட்டுகிறது பார்த்தாயா?

செங் கண் விரியோ கூவுவது, இந்தாப்பா, உன்னைத்தான் என்பது போலில்லை?

இன்னும், மஞ்சள் அலகுள்ள குயிலின் குரல் கடகடகடவென ஒப்பிக்கும் சிறுவன் போலவும், வேகமாகத் தட்டச்சு செய்யும் டைப்ரைட்டர் போலவும் இருக்கிறதென்பார். ரூபி க்ரவுன்டு கிங்லெட் மிழற்றும்போது, சீச்சீ, தள்ளிப்போ என்று விலக்குவது போலவும்; வெள்ளை நெஞ்சு ந்யுத்தாட்ட்ர் குழந்தை போலக் குவா குவா என்கிறதென்றும் சொல்வார். ஸ்கார்லெட் டானேஜர் எந்நேரமும் புகார் சொல்லிக்கொண்டே அலைகிறது, ஜூலியஸ் லுமும்பாவைப் போல, என்று கேலி செய்வார்.

பறவைகள் போலவே கூட்டமாக வாழ விதிக்கப்பட்டதுதான்

மனித ஜாதியும் என்பார். இறக்கையின் வர்ணத்தைப் பொறுத்து, பறவைகள் சாம்ராஜ்யத்தில் தீண்டாமை நிலவுகிறதா என்று கண்டறிய அவர் முனைந்ததில்லையே என்று தோன்றுகிறது இப்போது.

முதல் முறை சென்றபோது, அதிக காலம் இருக்கவில்லை அவருடன். மூன்றே வருடங்கள்.

பள்ளியிலும், விடுதியிலும் பாதிரியாரின் கண்முன்னால் பேதமின்றிப் பழகும் வெள்ளைச் சிறுவர்கள், அவரது பார்வை விலகியதும் இவனையும் பிற கறுப்புச் சிறுவர்களையும் விலக்கி விடுவார்கள்.

விடுதிக்கு வந்து சேர்ந்த நாட்களில் புறங்கைகளிலும் மேல்பாதங் களிலும் இருந்த சிரங்குகள் மிகச் சுத்தமாக ஆறி விட்டன என்றபோதும், தோல் வெளுப்பதற்கு வாய்ப்பில்லையே. அனாதைச் சிறுவர்களிலும் நிறத்தைப் பொறுத்து உயர்ச்சி தாழ்ச்சி இருப்பதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஊர் திரும்பினாலே ஆயிற்று என்று அடம் பிடித்து விட்டான் லுமும்பா.

ஆஸ்திரியாவில் இருந்த நாட்களில் இரவுணவும் பிரார்த்தனையும் முடிந்த பிறகு சாவகாசமாக இருந்த ஒரு நாளில் லுமும்பா தன் ஞானத் தந்தையிடம் கேட்டான்.

*ஃபாதர், கர்த்தர் ஏன் கறுப்பராகப் பிறக்கவில்லை?*

கனிவே உருவான ஃபாதரின் கன்னங்கள் கடுமையாய்ச் சிவந்தன. கண்களில் ஒளிர்ந்த சினத்தைப் பிரயாசைப்பட்டு அடக்கிக் கொள்ப வராகத் தோன்றினார் ஃபாதர் ஃபெர்டினாண்டு. உருகிய மெழுகுபோல வழுவழுத்து வெளிவந்தன சொற்கள்:

*நிந்திப்பவர்களையும் ஆசீர்வதிப்பவர் கர்த்தர்.*

திரும்பி வந்தபோது, கிராமம் பெருமளவு மாறியிருந்தது. மரவள்ளிக் கிழங்கையும் ஆடுகளையும் கோழிகளையும் கொடுத்துத் துணிமணிகளும் அலுமினியப் பாத்திரங்களும் கருவிகளும் வாங்கிய கிராமத்தவர்கள், சுரைக்குடுவைக்குள் கரன்ஸி நோட்டுகளைச் சேகரிக்கத் தொடங்கியிருந்தார்கள். டப்பாக்களில் அடைத்து வந்த பால் மாவைக் கரைத்துக் குழந்தைகளுக்குப் புகட்டினார்கள். தாமும் அருந்தினார்கள். நொறுக்குத்தீனியாக, வறுத்த ஈசல்கள் மற்றும் வெட்டுக் கிளிகளுக்குப் பதிலாக பிஸ்கட்டுகளையும் சாக்லேட்டுகளையும் தின்றார்கள் சற்று வளர்ந்த குழந்தைகள். கிராமத்தவரில் கணிசமானவர் கள், கீற்று வேய்ந்த தேவாலயங்களின் மணல் பரப்பிய தரையில் ஞாயிற்றுக்கிழமை காலைகளில் முழந்தாளிட்டு, தேவனைப் பிரார்த்தித் தார்கள். இச்சினா கொஞ்சம் பெரிதாகிவிட்ட மார்புகளைக் கச்சுக்குள்

பொதிந்து அதன்மேல் சல்லாத் துணியாலான முழு நீள இரவு உடை அணிந்திருந்தாள். குழந்தைகள் அன்றாடம் சிலேட்டுகளைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடம் போனார்கள். குடும்ப வளாகத்தைச் சுற்றித் திரிந்த, விரைவிலேயே சாப்பாடாகவிருக்கிற, சேவல்கள் கூடத் தலையைச் சற்று உயர்த்திக் கொண்டையைச் சிலுப்பி நடந்த மாதிரிப் பட்டது ஜூலியஸ் லுமும்பாவுக்கு.

என்றாலும், நாலைந்து மனைவியரை மணந்துகொள்வதும், பத்துக்குக் குறையாமல் பிள்ளைகள் பெற்றுக்கொள்வதும், அவரவர் வளாகத்திலிருந்து அடிவாங்கும் பெண்களின் அலறல்கள் ஓங்கி உயர்வதும் கொஞ்சமும் குறைந்திருக்கவில்லை.

தனியாக உணர்ந்தான் ஜூலியஸ் லுமும்பா. தன்னுடைய தாயின் வாஞ்சை மிகவும் வேண்டியிருந்தது. ஆனால், அவளது பழமொழிகளும், கைமருந்துகளும், ஒழுகும் மூக்கும் காணச் சகிக்காததாய் இருந்தன.

வந்து சேர்ந்த முதல் வாரத்தில், கொசுக்களும் வண்டுகளும் பூச்சிகளும் சுதந்திரமாய்ப் பறந்தலையும் வீட்டில், சாணம் மெழுகிய கட்டாந்தரையில் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தவனின் அருகில் வந்து உட்கார்ந்தாள் தாய். லுமும்பாவின் ஒட்டவெட்டப்பட்ட சுருட்டை முடித் தலையை வருடினாள். குடிசையின் கூரையிலிருந்து குதித்தோடிய பல்லியை வெறித்தபடி படுத்திருந்தான் அவன்.

> ஊரை விட்டுப் போனதிலிருந்து உன் தோல் மெலிந்துவிட்டது மகனே. சாப்பாட்டில் இருக்கிறது சூட்சுமம் என்று சொல்வார் உன் தந்தை. உனக்குத்தான் கிழங்கும், கலைமான் கறியும் பிடிக்கவில்லையே இப்போது. கரையில் ரொம்ப நேரம் விளையாடி விட்டுக் கடலுக்குள் இறங்கின கடல்ஆமை, ஐயோ குளிர்கிறதே என்றதாம்...

மூச்சு விடாமல் அவள் பேசுவது பிடிக்காமல் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான் லுமும்பா.

கண்ணாடிச் சில்லுகளால் பற்கள் கூர்படுத்தப்பட்ட தம்பி தங்கைகளோடு உண்டாகும் தகராறுகளில் அவர்கள் கடித்து விடுவார்களோ என்ற பயம் சதா இருந்துகொண்டேயிருந்தது.

மொத்தத்தில், வெள்ளைக்காரர்களின் நகர்ப்புற நாகரிகத்துக்கும், தன் இனத்தின் வனப்புற நாகரிகத்துக்கும் இருந்த இடைவெளியின் கனபரிமாணங்களைக் கையாலாகாமல் பார்த்துக்கொண்டிருந்தான். பாக்கு மரத்துக்கும் செர்ரி மரத்துக்குமான வித்தியாசம் போன்ற இடைவெளி அது. இரண்டிலும் பொருந்த முடியாமல் இரண்டுங் கெட்டானாய் ஆகிவிட்டோமே என்று குமைந்துகொண்டான். அகாலமாய் இறந்துவிட்ட தகப்பன் பெரிய லுமும்பாவின் ஞாபகம் ஈர விறகின் புகைபோலச் சுற்றிச் சுற்றி வந்தது. உல்லாசமான இரவுகளில்,

குடும்ப வளாகத்தில் தனக்கென்றுள்ள குடிலுக்குக் கூட்டிச் செல்வான் பெரிய லுமும்பா. நிலவொளியின் கூரைக்குக் கீழமர்ந்து ஒருமுறை சொன்னான்.

தவளைக்கு எதிரி தரையிலும் உண்டு, தண்ணீரிலும் உண்டு, மகனே.

தகப்பனின் நினைவு ஆதிக்கம் செலுத்தும் நாட்களில், கொலைவெறி பூண்டுவிடும் மனது. எப்படிப்பட்ட தகப்பன்... வரிக்குதிரை வேட்டைக் குக் கூட்டிச் சென்றவன். தாதுவிருத்திக்கு உதவும் கொம்புக்காக, காண்டாமிருகத்தை வேட்டையாடுவதற்குச் செல்லும் மாவீரன் அந்தப் பிரதேசத்திலேயே பெரிய லுமும்பா ஒருவன்தான்.

புலிகளும் சிறுத்தைகளும் கூட, உன் தகப்பனைக் கனவில் காண விரும்பாது மகனே.

என்று பெருமையாகச் சொல்வாள் தாய். பெரிய லுமும்பா எவ்வளவோ கற்றுத் தந்திருக்கிறான்.

வாலை வெளியில் கிடத்திப் பொந்துக்குள் தலைவைத்துக் கிடக்கும் பாம்பை வாலைப் பிடித்து இழுத்து, அது சுதாரிப்பதற்குள் கடும் வேகத்தில் சுழற்றி, தலையைத் தரையில் அடிக்கும் வித்தைக்கு செய் முறைப் பயிற்சி அளித்தவன் அவன்தான். உணவாகவும் மருந்தாகவும் உதவும் இலை எது, நஞ்சாக மாறி உயிர் பறிக்கும் இலை எது என்று சொல்லிக் கொடுத்தவன். ஓடும் பாம்பின் உடலையும் நெளிவையும் வைத்தே விஷப்பாம்பு எது, விஷமற்றது எது என்று அறியக் கற்றுத் தந்தவன். சுள்ளிகளைக் கொளுத்திய குறுந் தீயில் அணில்களை வாட்டி உண்ணத் தந்தவன். குரங்கை விடவும் வேகமாக மரமேறப் படிப்பித் தவன். எத்தனை பாடல்கள்... எத்தனை கதைகள்... எத்தனை சம்பவங் கள்...

ஒரு முடிவோடு தன் ஞானத்தந்தை ஃபெர்டினாண்டு பாதிரியாரிடம் மீண்டும் சென்று சேர்ந்தான் ஜூலியஸ் லுமும்பா. அக்கறையாய்ப் படித்தான். பள்ளிக்கூடக் கல்வி முடிந்ததும், இங்கிலாந்துக்குச் சென்று மேல் படிப்புப் படிக்க அறிவுரைத்தார் பாதிரியார். ஆனால், லுமும்பா வேறுவிதமாக யோசித்து வைத்திருந் தான், தன் எதிர்காலத்தைப் பற்றி. மலையேறும் சங்கமொன்றில் பதிவு செய்துகொண்டு அமெச்சூர் மலையேறியாக வாழ்வைத் தொடங்கத் திட்டமிட்டிருந்தான். ஆசீர்வதித்து, போதுமான பணமும், புத்திமதிகளும் கொடுத்து, ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பினார் ஃபாதர் ஃபெர்டினாண்டு.

ராயல் ஜியாக்ரஃபிக்கல் சொஸைட்டியில் பதிவு செய்துகொள்ள அறிவுரைத்திருந்தார். வெள்ளையர்களின் சகவாசமோ, அவர்களின்

ஸ்தாபனங்களோ எதுவும் வேண்டியதில்லை என்றும் சுயேச்சையான மலையேறியாக வாழ்வைக் கழிப்பதென்றும் ஜூலியஸ் லுமும்பா முடிவெடுத்திருந்தது அவருக்குத் தெரியாது.

...எனக்குள் வளர்ந்து வந்த தாவரம் நானே விதைத்துப் போஷித்தது. இனபேதத்தின் துர்நாற்றத்துக்கு எதிரானது.

அதன் பிறகு இந்தப் பதினேழு வருடங்களில், விதவிதமான மலைகள். விதவிதமான பிராந்தியங்கள். விதவிதமான சீதோஷ்ணங்கள். விதவிதமான உணவுகள். விதவிதமான தாவரங்கள், பறவைகள், பூச்சிகள், மண், மனிதர்கள். மலையின் காதலனாக ஆகியிருக்கிறேன். தன் யோனித் துவாரத்துக்குள் மீண்டும் மீண்டும் நுழைத்துக்கொள்ளும் தாபத்துடன் என்னை அணைத்து இறுக்கிக் கொள்கிறாள் மலைக் கன்னி...

தலையை உதறிக்கொண்டான்.

மலைகளில் தனித்துத் திரியும்போது, இதுகாறும் மனிதப் பிரக்ஞை உருவாக்கி வைத்திருந்த பாத்திகளுக்கும் வரப்புகளுக்கும் அப்பால், சுதந்திரவெளியில் தன்னிச்சையாகத் திரியும் வனவிலங்குபோலத் தன்னை உணர்வான் ஜூலியஸ் லுமும்பா. அடிவாரத்திலிருந்து பார்க்க, ஆகாயத்தை உரசுவது போலத் தெரியும் மலைமுகடுகள், உச்சியை அடையும்போது, தன் காலடியில் தோற்றுச் சுருண்டு கிடப்பதைக் காண்பதில் மனம் கொள்ளும் விசித்திரமான வெற்றியுணர்வு மிதமிஞ்சிய போதையைத் தந்தது.

மலையின் சரிவுகளில், இயற்கையே தன் பிரதான உறவாகவும், பிரதான விரோதியாகவும் உருக்கொள்வதற்கும்; தரையில் காலூன்றிய வாறே ஆகாயத்துடன் தொடர்பு கொண்டவன்போல, காற்றுக்கிசைந்து ஓடும் காகிதம்போல, அலைந்து திரியும்போது மனம் கொள்ளும் விம்முதலுக்கும் ஈடான உணர்வு வேறொன்று உண்டா என்ன...

தகப்பனின் கம்பீரம் விறைத்த விழிகளும் இச்சினாவின் இளமார்புகளும் வெம்மை விரவிய செம்மண் வெளியும் வெண்பனி அடர்ந்த அந்நியத் தரையும் பாதிரியாரின் சாந்தம் தவழும் வெண் தாடியும் வெவ்வேறு தேசங்களின் மலைகளும் நதிகளும் வெள்ளை விரோதிகளாயிருந்தும் தன் பயணப்பாதையை அமைத்துக் கொள்ள ஆதாரமாயிருந்த நவீன இந்திய வரைபடவியலின் தந்தையாகிய ஸர். ஜேம்ஸ் ரென்னெல் மற்றும் ஸ்வீடிஷ்காரரும் நாஜி ஆதரவாளருமான ஸ்வென் ஹெடின் ஆகியோரின் உபயத்தில் உருவாகிய ஹிமாலய வரைபடமும் புத்தகங்களில் மட்டுமே அறியக் கிடைத்திருந்த லாஸாவும் அதன் பொன்வேய்ந்த அரண்மனையும் சுழன்று சுழன்று துரித'கதியில் சுற்றிவரும் ஞாபகப் பாதையின் புதைகுழியொன்றில் இறங்கிக் கொண்டி ருந்த வேளையில், உறக்கத்தின் காந்த அலைகள் தன் நரம்புகளில் மெல்ல

மெல்லப் பரவுவதை அனுபவம் கொண்டான் ஜூலியஸ் லுமும்பா...

விழித்திருக்கிறோமா, தன் கனவில் விரிந்த நிலவெளியில் படுத்திருக்கிறோமா என்று குழப்பமாக இருந்தது. ஒரு திரவமென உடலை விட்டு மெல்ல வடிந்திறங்குகிறது உறக்கம். மரங்களும், கீழே, சரிவின் பள்ளத்தில், உயிரிழந்த பாம்பு போல நீண்டு கிடக்கும் தார்ச்சாலையும், மிருதுவான காற்றும், தலைக்கு அடியில் திடமாகத் தட்டுப்படும் முதுகுப் பை மூட்டையும், விழித்திருக்கும் நிஜத்தின் பகுதியாகப் புலனாகின்றன.

எல்லாப் புறமும் விரிந்திருக்கும் மலைப்பகுதியைப் பார்வையால் பருகினான் ஜூலியஸ் லுமும்பா. எழுவதற்கான அவசியத்தை இன்னும் உணரவில்லை உடல். கிளையை நீங்கிய சருகு ஒன்று மெல்ல மிதந்து மிதந்து, முடிவற்று வீழ்ந்து வீழ்ந்து, நீட்டிய கால்களுக்குச் சற்றுத் தொலைவில் தரை சேர்ந்து படிவது பல யுகங்களுக்குத் தொடர்ந்து நடந்தவாறிருப்பதை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

தியானம் போலக் கவிந்திருந்த தனிமையின் சாவகாசத்தைக் குலைப்பது போல, அந்தச் சிறு ஓசை கேட்டது.

ஏதோ ஒரு வன விலங்கின் சுவாசம் போல. சுயப்பாதுகாப்பின் செய்தி உடனடியாக மேலோங்கியது உடலெங்கும். மேல் சட்டையின் வலது கீழ்ப்புறப் பையில் இருந்த கைத்துப்பாக்கியை அனிச்சையாய் இறுகப் பற்றியது வலது கை. ஓசையெழாமலும், நிதானமாகவும் புரண்டு படுத்து, தலைமாட்டில் அடர்ந்திருந்த குத்துப் புதரை ஊடுருவிப் பார்த்தவாறே, துப்பாக்கியின் பாதுகாப்புக் கொக்கியைப் பைக்குள் வைத்தே விடுவித்து, சுடும் நிலைக்கு ஆயத்தமாக்கினான்.

சீராகக் கேட்கிறது சுவாசத்தின் ஓசை. செவிகளின் கேட்கும் திறன் ஒட்டுமொத்தமாக அந்த ஓசையின்மேல் கவிந்து குவியும்போது, சூறைக்காற்றின் பேரோலமாகக் கேட்கிறது அந்தச் சுவாசம்... சுதாரிப்பு கொஞ்சமும் குறையாமல், புதரிலிருந்து பார்வையை விலக்காமல், எழுந்து உட்கார்ந்தான். லேசாகச் செருமி ஒலியெழுப்பினான். சீராகத் தொடர்ந்தது சுவாச ஓசை.

எழுந்து நின்று, காலால் சருகுகளைக் கலைத்துச் சப்தமெழுப்பினான். எதிர்வினையொன்றுமில்லை. ஒரு முடிவுக்கு வந்தவனாக, புதரின் இடப்புறம் துரிதமாகச் சென்றான். உடம்பின் ஒவ்வொரு அணுவும் ஒரு தாக்குதலை எதிர்பார்த்துத் துடிப்புடன் இருந்தது.

புதரின் மறுபுறம் தென்பட்ட காட்சியில், ஜூலியஸ் லுமும்பாவின் பதட்டம் சடாரென்று கலைந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு மனிதன் படுத்திருந்தான். லுமும்பாவின் ஆசுவாசம் வியர்வை முத்துக்களாய்ப்

பூத்தது. பைக்குள் செருகிய கை தானாக வெளியேறியது.

வெள்ளையன். உறங்கிக்கொண்டிருந்தான். களைப்பில் சுளித்த முகம். உடைக்கு வெளியில் தெரிந்த உடல் பாகங்களில் கீறல்களும் ரத்தம் காய்ந்த பொருக்குகளும் தெரிந்தன. எதனிடமிருந்தோ தப்பிக்க ஓடி வந்து, கால் இடறி விழுந்து, விழுந்த நிலையிலேயே உறங்கிவிட்டவன் போலக் கிடந்தான்.

தலைமாட்டில் அவன் வைத்திருந்த பயணப் பை மிகவும் சிறியதாக இருந்தது. தொலைதூரப் பயணி இல்லையோ என்னவோ. பையின் பக்கவாட்டில் இருந்த திறப்பைப் பித்தான்கள் அவிழ்த்துத் திறந்தான் லுமும்பா. பாஸ்போர்ட்டும் அடையாள அட்டையும் இருந்தன. அடையாள அட்டையில், ஹான்ஸ் வெய்ஸ்முல்லர், இசைக் கலைஞன், பெர்லின், ஜெர்மனி என்று இருந்தது.

ஜூலியஸ் லுமும்பாவுக்குள் ஒரு ஜ்வாலை பற்றிக்கொண்டது. ஆஹா, எதிராளியின் சுதாரிப்பை மழுங்கடிப்பதற்காக உறங்குவது போலப் பாசாங்கு செய்கிறானோ... செய்தாலும் செய்வான். ஜெர்மானியர்களால் எதுவும் செய்ய முடியும்...

நூறு மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்றவன் ஜெஸ்ஸி ஓவன்ஸ் என்ற கறுப்பன் என்பதால், பதக்கம் வழங்கவும் கைகுலுக்கவும் மறுத்து விளையாட்டரங்கத்தை விட்டு வெளியேறிய அடால்ஃப் ஹிட்லர் என்ற ஜெர்மானியப் பிசாசின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தவன்தானே இவனும். ஒடுக்கப்பட்ட காட்டுவிலங்காய்த் தற்சமயம் சுணங்கிக் கிடக்கும் தேசத்தின் பிரஜை என்றாலும், உடன் பிறந்த திமிர் அணையாமல்தானே இருக்கும்...

ஜூலியஸ் லுமும்பாவுக்குள் பல வருஷங்களாக நிலவி வந்த தவநிலை சடாரென்று குலைந்தது. பால்யத்தின் ஆழங்களிலிருந்து வெறி ஊறி, தலைக்கேறியது. எழுந்து நின்றான். சட்டைப்பைக்குள் இருந்த கைத்துப்பாக்கியை அனிச்சையாய் இறுக்கிப் பிடித்தது வலதுகை... தூக்கம் கலையாமலே மோட்சத்துக்குப் போய்ச் சேர் நண்பனே. உன் இனத்தின் மேல் உள்ள வெறுப்புப்போல, நூறு மடங்கு அதிகமாய் உன் தேசத்தின் மேல் இருக்கிறது எனக்கு...

கவனத்தைக் கலைப்பது போல விச் விச் விச் என்று சூள் கொட்டியது மரப்பல்லியொன்று. சற்றுத் தள்ளி இருந்த இன்னொரு மரத்திலிருந்து, *hear hear hear* என்று மன்றாடி எழுந்தது பறவைக் குரல். தெரிந்த பறவைதான் அது. குடுமியுள்ள டிட்மௌஸ். வெய்ஸ் முல்லருக்கு அருகிலிருந்த புதருக்குள்ளிருந்து விருட்டென்று வெளியேறி அதிகபட்ச வளைவுகளோடு நெளிந்து ஓடியது ஒரு பாம்பு. கட்டாயம் விஷப்பாம்புதான் அது. அதன் நெளிவுகளில் விஷம் தெரிகிறது. காற்றின் மெல்லிய அலை ஜூலியஸ் லுமும்பாவை வருடியது...

வாளால் வெட்டிய நீர்த்தடம் சேரும் வேகத்தில் சமநிலை மீண்டும் கூடியது. உறங்குகிறவனை மீண்டும் உற்றுக் கவனித்தான். நிச்சிந்தையான உறக்கத்தில் இருந்தான் அவன். அருகில் நிதானமாக மண்டியிட்டு அமர்ந்தான் லுமும்பா. உலுக்கினாலும் எழ மாட்டாதவன் போலக் கிடந்தான் அவன். சுவாசம் வெகு ஆழத்திலிருந்து வந்து திரும்புகிறமாதிரி வெகு சீராக இருந்தது.

அபத்தம். அபத்தம். என்னவொரு பிறழ்வுக்கு ஆட்பட்டுவிட்டேன்.

இவன் என்ன செய்வான், பாவம். தூக்கத்தில் ஒருத்தன் ஐரோப்பியனாகவோ, ஆப்பிரிக்கனாகவோ இருப்பானா, என்ன.

விலகிப் போனான்.

மரணம் தன்னை நெருங்கிவிட்டு, வந்த சுவடு பதியாமல் விலகிப் போனது அறியாமல் உறக்கத்தின் பரிவான அணைப்பில் கிடந்தான் ஹான்ஸ் வெய்ஸ்முல்லர். அவன் கண்விழிக்கும் தருணத்துக்காக அருகில் ஒரு பாறையில் உட்கார்ந்து காத்திருந்தான் ஜூலியஸ் லுமும்பா.

*

# பூர்வ கிரந்தம் 3

... விசைகொண்டு விரைந்த காலம், சற்றே ஓய்ந்தது போலத் தோன்றிய தருணம் அது ...

*பூ*ர்விக ராஜ்யம் போலில்லை இந்த நிலவெளி. வெற்றுடம்பைக் கீறுகிறது குளிர். பாறையில் விளைந்த உப்பைப் போலப் பரந்திருக்கும் பனித்துகள்கள். மரங்களின் உச்சியில் மாவு போல வெண்ணிறமாய்ப் படர்ந்திருக்கிறது எதிர்காலம்.

பசியுடனும், வீங்கிய கால்களுடனும், பாளம் பாளமாய்க் கீறிய பாதங்களுடனும் இருந்த ஸோமிட்ஸு வின் முன்னால் தோன்றியது ஒரு வன தேவதை. பனிப்படலம் பெண்ணுருக் கொண்டது போன்ற தோற்றம். கனத்த ஸ்தனங்களிலிருந்தும், மலர்ந்த கண்களிலிருந்தும், மென்குரலிலிருந்தும், பரிவாய் அசைந்த வலது கையிலிருந்தும் ஊற்றாய்ப் பெருகிய ஆதுரத்தைப் பருகத் தந்தது.

தேவதையின் சாந்நித்தியத்தில் ஸோமிட்ஸுவின் வதனத்தில் யௌவனமும் வசீகரமும் திரும்பக் குடியேறின.

பூமிக் கர்ப்பத்தில் பன்னெடுங்காலம் புதைந்து கிடந்த அக்னித்தாது பீறி வெளியேறத் துடிப்பது போலச் சீற்றம் கொண்டது ஸோமிட்ஸு வின் பௌருஷம்.

சிருஷ்டி தத்துவத்தின் மகா ஈர்ப்பு, இருவரின் நாசியில் வாசனையாய் நாவில் ருசியாய் செவியில் லயமாய் சருமத்தில் நெருப்பாய்ப் பரந்து பரவி ஆவேசம் கொண்டது.

மேகங்கள் உரசிக்கொள்வதென சரீரங்கள் பிணைந்தபோது கண் கூசும் பிரகாசத்துடன் மின்னல் கீறியது. கணப்பொழுதும் ஓயாமல் செயலாற்றும் பிரபஞ்ச தாளத்துடன் ஒத்திசைந்து இயங்கின ஒரு ஜதை அவயவங்கள்.

ஸோமிட்ஸியப் பெரும் பரப்பின் மகத்தான சித்திரம் வரையப் படுவதற்கான திரைச்சீலையென நிணத்தின் சாயலில் தாது ஊறியது

வனதேவதைக்குள்.

பல்லாயிரம் ஊசிமுனைகள் ஏககாலத்தில் பாய்வதென, ஸோமிட்ஸுவின் இந்திரியம் வன தேவதையின் உதரத்துள் பாய்ந்தது.

விசைகொண்டு விரைந்த காலம், சற்றே ஓய்ந்தது போலத் தோன்றிய தருணம் அது.

**ஸோ**மிட்ஸிய ஆதித்தாதுவைத் தரித்த வனதேவதை, நாளுக்கொன்றாக ஐநூற்று இருபத்தெட்டுச் சொற்களை ஈன்றெடுத்தாள்.

சன்னக் கம்பியிழை போன்ற ஒலித் தொடர் வெவ்வேறு அளவுள்ள துண்டங்களாக, பேரண்ட ஓசையின் பகுதியாக, நயம் கெடாதவண்ணம் கோத்துக்கொண்டதற்குச் சாட்சி பூதங்களாக நின்றன மரங்களும் பாறைகளும்.

நியதியால் இயக்கப்படுபவள் போல வந்து இருந்து ஈன்ற வன தேவதை, நியதியின் ஆணையேற்று, புறப்பட மனங் கொண்டாள்.

ஸோமிட்ஸிய நிலவெளியையும், வருங்காலத்து ஞானவெளியையும் ஆளும் பொறுப்பை ஸோமிட்ஸுவிடம் ஒப்படைத்தாள்.

மீண்டும் தனிமை எய்திய ஸோமிட்ஸுவின் கையில், தான் வனைந்தெடுத்த சொற்களையும் சில நிபந்தனைகளையும் விடுத்தாள்.

சரீரச் சேர்க்கையை, தித்திக்கும் கனிகளை, மலைத்தேனை, மலர்களை ஒருபோதும் அண்டவிடக்கூடாது என்றன நிபந்தனைகள்.

இரண்டாம் மனிதன் வந்து சேரும் வரை, உறவுத் துணையாகத் தொடர்கவெனச் சொற்கூட்டத்தை ஆசீர்வதித்தாள்.

வந்தனம் கூறி விலகினாள்.

வந்த இடம் புரியாமல் மலங்க மலங்க விழித்தன வார்த்தைகள்.

**நி**பந்தனையிலிருந்து விலகாமலும், தன் சித்தத்தின் உள் மையம் நோக்கிக் குவிந்தும் ஆயிரத்தெட்டு வருஷங்கள் வாழ்ந்து மறைந்த முதலாம் ஸோமிட்ஸுவின் கதை இது. ஸோமிட்ஸியப் பெண்கள், தாய்ப்பாலுடன் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டியது. சொல்பவர்களையும், கேட்பவர்களையும் உன்னத ஸ்தானத்துக்கு உயர்த்துவது. சூழும் துயரமேகங்கள் சாம்பிராணிப் புகை போல விலகும்படி துரத்துவது. தினசரிப் பாராயணத்துக்கு நூற்றி இருபத்திரண்டாம் ஸர்க்கத்தைப் பார்க்கவும்.

**தி**றந்து வைத்த உணவுப் பண்டத்தை ஈக்களும் எறும்புகளும் தேடி

வருகிற மாதிரி, வனதேவதை வழங்கிச் சென்ற சொற்களைப் பயன்படுத்தவும், வனத்தின் நிலத்தைப் பதப்படுத்தவும், ஸோமிட்ஸிய வாழ்முறையை வாழ்ந்து வாழ்ந்து வளர்த்தெடுக்கவும் மனிதர்கள் வந்து சேர்ந்தனர்.

வனத்தின் பல்வேறு மூலைகளிலுமிருந்து
இனத்தால் ஒதுக்கப்பட்டவர்களும்
இனத்தை விட்டு வெளியேறியவர்களும்
சாகசம் தேடிப் போனவர்களும்
சாகசம் வெறுத்து விலகியவர்களுமாக
ஆதி ஸோமிட்ஸுவின் கண்ணெதிரே விரிந்தது
ஸோமிட்ஸிய சாம்ராஜ்யம்.

பின் வந்த நாட்களில், ஸோமிட்ஸியாவின் எண்ணற்ற அறிஞர்களும் வறிஞர்களும் மேதைகளும் பேதைகளும் வள்ளல்களும் உலோபிகளும் ஆண்களும் பெண்களும் சித்தர்களும் பித்தர்களும் வஸ்துவுக்கொன்றாகவும் உறவுக்கொன்றாகவும் பெயர்களைக் கண்டு பிடித்துச் சூட்ட, தற்கால ஸோமிட்ஸிய மொழி, மனிதக் குரங்குக்கும் மனிதப் பிறவிக்கும் உள்ள அளவு தொலைவு நகர்ந்து வந்திருக்கிறது.

தன்னிச்சையாய் வளர்ந்த
மென்மையான சொற்களைக் காதலர்களும்
பயத்தையும் ஏக்கத்தையும் குறித்த சொற்களைக் குழந்தைகளும்
மன்னிப்பு மற்றும் நீதி பற்றிய சொற்களைக் கோழைகளும்
அதிகாரம் மற்றும் சட்டம் பற்றிய சொற்களை மாவீரர்களும்
காமம் பற்றிய சொற்களை அலிகளும்
பொய்யுரைக்க உதவும் சொற்களைப் புலவர்களும்
பிரிவு மற்றும் ஆற்றாமை குறித்த சொற்களைக் கிழவர்களும்
அன்பு பற்றிய சொற்களைத் தாய்மாரும்
ஓய்வு மற்றும் ஊர்வம்பு குறித்த சொற்களைத் தந்தையரும்
ஓசைகள் பற்றிய சொற்களைக் கருமார்களும்
பாவம் பற்றிய சொற்களைக் குருமார்களும்
மரணம் பற்றிய சொற்களை மருத்துவர்களும்
உருவாக்கிப் புழங்கி வளர்த்த மொழி ஸோமிட்ஸிய மொழி.

ஆதிச் சொற்கள் வேர்விட்டு, கிளைவிட்டு, விழுதுவிட்டு, செயல்பட்ட மனங்களிலும் சோம்பேறி மனங்களிலும் ஆதிக்கம் செலுத்தவாரம்பித்தன.

இலக்கியங்களும் இலக்கணங்களும் ஒன்றையொன்று உருவாக்கவும் சார்ந்திருக்கவும் அவமதிக்கவுமான நிலை பல நூற்றாண்டுகளுக்கு நிலைத்து நீடித்தது.

மொழியின் ஸ்திரமான ஓட்டத்தில் சலித்த மனங்களிலிருந்து பிறழ்ந்திறங்கிய சொற்கள் கொச்சை வழக்குகளாக உருப்பெற்றன.

சொற்கள், தொடர்ந்த புழக்கத்தால் தேய்ந்து களிம்பேறுவதையும், புதிய அர்த்தங்களையும் அனர்த்தங்களையும் மேற்கொள்வதையும், முனை முறிந்து, சில குப்பைமேட்டில் சென்று சேர்வதையும், நகைச்சுவைக் கேளிக்கை போல வேடிக்கை பார்த்தவாறிருந்தன, விலங்குகளும் பறவைகளும்.

*

# ஒரு தேர்வு

பிரஜைகளைப் பொறுத்தமட்டில், அரசாங்கக் காரியங்கள் ரகசியமாகவும் மர்மமாகவும் இருப்பதுதான் நல்லது ...

*கூடாரத்தின் வாயிலில், மரவேலைப்பாடுகளுள்ள நாற்காலியில் அமர்ந்திருந்த ஈனோங் ஆகாயத்தைப் பார்த்தார். சந்திரனின் முழுமையில் கொஞ்சம் ஒச்சமிருந்தது. ருதுவான மாத்திரத்தில் சோகை பீடித்த பெண்ணின் முகம் போல வெளிறிக் கிடந்த ஆகாயத்தில் வெண் மேகங்கள் இறைந்து கிடந்தன. முதல் மஞ்சரியின் முதல் முழுநிலா நாளுக்கு முந்தின நாள். தலைநகரத்தை விட்டுக் கிளம்பிப் பதினேழு நாளாகிறது.*

*இதுவரை நிமித்தம் ஒன்றும் தட்டுப்படவில்லை.*

*கூடாரத்தின் வாயில் திரைக்கு அருகில் நிழல்போல அமர்ந் திருந்தான் வாங் சுக். நின்றிருக்கும்போது மிகக் குள்ளமாகத் தெரியும் அவனது உடல், கோணலான வடிவம் கொண்ட பாறை போல இப்போது சமைந்திருந்தது. உட்கார்ந்தபடியே ஆழ்ந்து உறங்க முடியும் அவனால். ஈனோங் கைகளை ஓங்கித் தட்டினார். விதிர்விதிர்த்து எழுந்து நின்ற வாங் சுக்கைக் கைசொடுக்கி அழைத்தார். அருகில் வந்து தலை தாழ்த்தி வாய்பொத்தி நின்றவனிடம்,*

*வாங்யேவை வரச் சொல்.*

*என்று கட்டளையிட்டார். அவன் நாலாவது கூடாரத்தை நோக்கி விரைந்து நடந்தான்.*

*ஈனோங் தன் ஞாபகங்களில் மூழ்கினார். நிமித்தக்காரன் சொன்ன திசையில்தான் பயணப்பட்டிருக்கிறோம். மஞ்சள் பறவை இடமிருந்து வலமாகப் பறக்கவில்லை இன்னும். தூபக் காலில் நிறுத்திவைத்த மெழுகுதிரி தானாகவே பற்றிக்கொள்ளவில்லை. குடுவையில் சுமந்து*

வரும் நீர் நீல நிறம் கொள்ளவில்லை. உடன்வந்தவர்கள் உட்பட, யாருடைய கனவிலும் அன்னப் பறவை வந்து சேரவில்லை இன்னும். விதிக்கப்பட்ட நிமித்தங்களில், மூன்றேனும் நிகழ்ந்தேறினால்தான் புதிய ஸோமிட்ஸு அகப்படுவார் என்கிறது கிரந்தம்.

மலைப்பாக இருக்கிறது. முந்தின ஸோமிட்ஸுவுக்குச் செய்த ஏற்பாட்டை இன்னும் கொஞ்சம் தள்ளிப் போட்டிருக்கலாமோ? இல்லையே, அந்தச் சமயத்தில், வெவ்வேறு குழந்தைகள் எடுத்துத் தந்த சுவடிகள் அனைத்திலுமே, அசுர வதம் பற்றிய ஸர்க்கம்தானே இருந்தது. தவிர, கிஸீயாவின் சொற்கள் தவறாதே. அவர் கூறியிருக்கிறாரே, உடலைக் காப்பாற்ற விரலைத் தரிக்கலாம் என்று...

மனதில் கிளைத்த சோர்வு உடலில் தொற்றுகிறது. தொடர்ந்து பல நாட்கள் பயணம் செய்ய உடல் ஒத்துழைக்கும்போது, மனம் ஒத்துழைக்க மறுக்கிறது. நிரூபாவின் ஞாபகம் அடிக்கடி வருகிறது. அவளது தொப்புள் குழியைச் சுற்றிச் சுழல்கின்றன கனவுகள். அவளையும் அழைத்து வந்திருக்கலாமோ? ஸோமிட்ஸுவைத் தேடும் பணியில் பெண்கள் ஈடுபடலாமா கூடாதா என்பது பற்றி கிரந்தம் எதுவும் சொல்லவில்லை.

உணவு இருப்பு இன்னும் எத்தனை நாளைக்கு வரும் என்று வாங்யேவிடம் கேட்க வேண்டும். தலைநகரில் விட்டு வந்தால், கலகம் எதையும் தொடங்கிவிடுவானோ என்று இவனை வேறு போகுமிட மெல்லாம் கூட்டிச் செல்லவேண்டியிருக்கிறது. வாங்யே கெட்டிக்காரன் தான். கொஞ்சம் திமிர்வாதம் பிடித்தவன். வயது கூடும்போது, ரத்தத்தில் சோர்வு தட்டும்போது, சருமத்தில் சுருக்கம் ரேகைகள் போலப் படியும் போது, வசத்துக்கு வந்துவிடுவான். மனோபாவத்திலும் முதிர்ச்சி கூடி விடும். பார்க்கலாம், இவன் சம்பந்தமாக அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்துவிட முடியாது. இவன் தகப்பனுடைய விசுவாசிகள் ஸோமிட் ஸியாவெங்கும் பரவியிருக்கிறார்கள்...

புதிய ஸோமிட்ஸு கண்டுபிடிக்கப்பட்டதும், அவரை அழைத்துச் செல்வதற்காகக் கொண்டு வரப்பட்ட விசேஷப் பல்லக்கு நிலவொளி யில் அநாதையாய்க் காய்ந்துகொண்டிருந்தது. அதைக் கொஞ்சநேரம் வெறித்துப் பார்த்தார் ஈனோங்.

...இத்தனை பிரயாசைப்பட்டு இந்த தேசத்தைப் பரிபாலித்து வருகிறேனே, எனக்கு அமரலோகத்தில் இடமுண்டா?

ஆதி ஸோமிட்ஸுவின் வழித்தோன்றல்களே, அமரர்களே, உங்கள் திருவுள்ளம் கனியும்படி நடந்து வருகிறேனா. தனிமனிதனாகச் சில பிறழ்வுகளைத்தவிர்க்கமுடியாமல் தவிக்கிறவன்தான் நான். என்றாலும், ராஜ்யத்தைப் பொறுத்தவரை, கிரந்தத்தின் வரிகளை விட்டு விலகாமல் நிர்வாகம் நடத்திவருகிறேன் என்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள்தானே?...

வந்தனம், தலைவரே.

விறைப்பாக நிமிர்ந்த நெஞ்சுடன் அருகில் வந்து நின்றிருந்த வாங்யேவின் குரல், தன்மயமாக முயங்கிக் கிடந்த ஈனோாங்கை மீட்டெடுத்து வந்தது.

நிமிர்ந்து வாங்யேவை நோக்கினார் ஈனோாங். காதோரங்களில் மெல்லிய நரையோடியிருந்த முகம். நாற்பது வயது இருக்குமா இவனுக்கு? அகலமான நெற்றி. ஸ்திரமாக ஒரே இடத்தில் நிலைத்துப் பார்க்கும் கண்கள். நிற்கும் விதத்தில்தான் எத்தனை அழுத்தம்? கருவூலத் துறைத் தலைவராக மாத்திரம் இருந்து வாழ்க்கையைக் கழித்துவிட மாட்டான் இந்த இளைஞன். வேறு ஏதோ சொந்தத் திட்டங்கள் வைத்திருக்கிறான். அநேகப் பிரபுக்கள் இவன் பட்சத்தில் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இன்னும் தீவிரமாக இவனை வேவு பார்க்கச் சொல்லவேண்டும் என்று நினைத்தவாறு,

வந்தனம். உட்காரும்.

என்று எதிர் இருக்கையைச் சுட்டினார் ஈனோாங்.

இருக்கட்டும்.

என்று நயமாக மறுத்தார் வாங்யே.

அதெல்லாம் தலைநகரில் இருக்கும்போதுதான். இப்போது இந்தப் பயணத்தில் வந்திருக்கும் எல்லாருமே சமமானவர்கள். பல்லக்குத் தூக்கி வருகிறவனும், பல்லக்கில் அமர்ந்து வருகிறவனும் ஒருவருக்கொருவர் சமம்தான். ஸோமிட்ஸுவைத் தேடும் புனிதப் பணியில் ஈடுபட்ட மனிதர்களில் ஏற்றத்தாழ்வு கிடையாது.

கிழவனின் மனநிலையில் இன்று கனிவு கூடியிருக்கிறது என்று நினைத்தவாறே அமர்ந்தார் வாங்யே. எப்போது மழைபெய்யும், எப்போது வெயிலடிக்கும் என்று கணிக்க முடியாத ஸோமிட்ஸிய வானிலை போன்றதுதான் இவனுடைய மன அமைப்பும். ஒரு நாள் கிறுக்கனாக இருப்பான். மறுநாள் பொறுப்புள்ள தகப்பன் போலிருப்பான். இவனுக்குப் பிறகு ஸோமிட்ஸியா கொஞ்சம் சிரமப்படத்தான் செய்யும். ஆனாலும், அதன்பின் வரவிருக்கும் சுபிட்ச காலத்தில் உலகின் பிற நாடுகளுக்குச் சமமாக ஸோமிட்ஸியா தலைநிமிர்ந்து நிற்கும். இப்போது போல, வளைக்குள் பதுங்கிய பெருச்சாளி மாதிரி இருக்காது... ஆனால், இவன் எப்போது அகல்வது, சூரியன் எப்போது உதிப்பது?....

வாங்யேவின் சிந்தனையை ஈனோாங்கின் கரகரத்த குரல் அறுத்தது. எங்கோ தொலைவிலிருந்து மிதந்து வந்த கேள்வி, மந்தமாகக் காதுக்குள் நுழைந்தது.

வாங்யே, உணவுக் கையிருப்பு எத்தனை நாளைக்குத் தாங்கும்?

*திரும்பிச் செல்லும் வரை போதுமான உணவு இருக்கிறது.*

*எப்போது திரும்புவோம் என்று தெரியவில்லையே வாங்யே. பதினேழு நாட்கள் ஆகிவிட்டன, ஒன்றும் நடக்கவில்லையே.*

மெலிதாகச் சிரித்தார் வாங்யே.

*என்ன சிரிக்கிறீர்.*

*எது நடந்தாலும் நடக்காவிட்டாலும், நாளை இரவு திரும்பியாக வேண்டும். சீன எல்லையை நெருங்கி விட்டோம். இங்கிருந்து ஒரு பகலும் இரண்டு இரவுகளும்தான் இருக்கின்றன, சீனாவில் நுழைய.*

ஈனோங்கின் முகத்தில் கவலையின் அடர்த்தி கூடியது.

*சம்ப்பு கிராமத்தில் ஒரு மஞ்சள் பறவை தட்டுப்பட்டது. அங்கேயே ஓரிரண்டு நாட்கள் முகாமிட்டிருக்கலாமோ?*

வாங்யே அமைதியாக இருந்தார்.

*வேறு சில தேசங்களில், ஜனங்கள் அனைவரும் ஒன்றாகக் கூடித் தங்கள் அரசரைத் தேர்ந்தெடுப்பார்களாம். கேள்விப்பட்டிருக்கிறேன், வாங்யே.*

*ஆமாம் தலைவரே. நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அங்கெல்லாம் வேறுவிதமான நடைமுறைகள் புழக்கத்தில் இருக்கின்றன.*

*என்ன, பழைய இடத்துக்கே திரும்புகிறீராக்கும்...? எல்லா ஜனங்களுக்கும் படிப்பறிவு உண்டாக்க வேண்டும். அதுதானே.*

வாங்யே ஒன்றும் பேசவில்லை.

*இதோ பாரும் வாங்யே, இளவயது உமக்கு. அதனால்தான் புரியாமல் பேசுகிறீர். ஜனங்கள் அனைவருக்கும் கல்வியறிவு கொடுத்துவிட்டால் இப்போதிருக்கிற மாதிரி கீழ்ப்படிய மாட்டார்கள் வாங்யே. உம்முடைய தகப்பனார் இப்போது இருந்திருந்தால், அவரே நீர் சொல்வதற்கு உடன்பட மாட்டார். கருவூலத் துறையில் வேலை செய்யும் பணியாளர்களையும் காவல் வீரர்களையும் கூட ஆண்டுக்கொருமுறை மாற்றிவிடுவார் அவர். தொடர்ந்து இருந்தால், நடைமுறைகளைக் கற்றுக்கொண்டு விடுவார்கள் என்று காரணம் சொல்வார். பிரஜைகளைப் பொறுத்த மட்டில், அரசாங்கக் காரியங்கள் ரகசியமாகவும் மர்மமாகவும் இருப்பதுதான் நல்லது என்பார். நல்ல நிர்வாகி, பாவம். வியாதி அவரைத் தூக்கிக்கொண்டு போகும் என்று யார்தான் எதிர் பார்த்தார்?*

வாங்யே எச்சிலைக் கூட்டி விழுங்கினார். தொண்டையைச் செருமிக் கொண்டு, நிதானமாகச் சொன்னார்.

...தந்தையாரின் காலமே வேறு. ஒருவேளை கல்வியறிவு பரவலாக இருந்திருந்தால், வேறு மாதிரியான ரசாயன வைத்தியங்களையும் அனுசரிக்கக்கூடிய மருத்துவர்கள் ஸோமிட்ஸியாவில் இருந்திருப் பார்கள். தந்தையாரும் அமரராகியிருக்க மாட்டார். அவ்வளவு ஏன், முந்தின ஸோமிட்ஸுவும் கூட அமரராகியிருக்க மாட்டார், இத்தனை இளம் பிராயத்தில்...

ஈனோங்கின் கைகள் நடுங்கின. குரல் நடுங்கியது. அவசரமாகச் சொன்னார்.

அதற்கு சாத்தியமேயில்லை வாங்யே. கிரந்தத்தில் அப்படியான உத்தரவு எதுவும் இல்லை. பிரபுக்கள் கல்வியறிவு நிரம்பியவர் களாக இருக்கவேண்டும் என்று சட்டமிட்டதே பதினெட்டாம் ஸோமிட்ஸுதான். அதற்கு முன்பு ஸோமிட்ஸுவும் ஈனோங்கும் மாத்திரமே கல்வியறிவு உள்ளவர்களாக இருந்தார்கள். புரிகிறதா? என் உடலில் உயிர் உள்ளவரை, கிரந்தத்தை மீறமாட்டேன். மீறுபவர்களை மன்னிக்கவும் மாட்டேன்.

கடுமை ஏறியிருந்த குரலைச் சற்று உயர்த்தி,

சரி, நீர் போகலாம்.

என்று ஆணையிடுவதுபோலச் சொன்னார். அமைதியாக எழுந்து வந்தனம் தெரிவித்த வாங்யே, தன் கூடாரத்தை நோக்கி நடந்தார். ஏழெட்டுத் தப்படிகள் கடந்தவரை ஈனோங்கின் குரல் விளித்தது.

வாங்யே.

நின்று, திரும்பிப் பார்த்தார்.

ஜனங்கள் கல்வியறிவு அடைந்துவிட்டால், முதலில் பிரபுக்களைத் தான் துரத்தியடிப்பார்கள்... புரிந்து கொள்ளும்.

சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார் ஈனோங். நிதானமாகத் தொடர்ந்து நடந்தார் வாங்யே.

ஈனோங் உறங்குவதற்கு வெகுநேரம் ஆயிற்று. எண்ணெய் விளக் கொளியில், சுவடிகளைப் பிரித்துப் படிப்பதும், கூடாரத்துக்கு வெளியில் வந்து ஆகாயத்தை வெறித்துப் பார்ப்பதுமாக இருந்தார். உடலும் மனமும் ஓய்ந்தபோது, ஒரு குவளை சாராயம் இருந்தால் தேவலையே என்று தோன்றியது.

வாங்யே போன்ற பிரபுக் குல இளைஞர்கள் புட்டியில் அடைக்கப் பட்ட சீமைச் சாராயம் குடிக்கிறார்கள். ஈனோங்குக்கு, நிருபா வடித்துத் தரும் சாராயத்துக்கு மாற்றே கிடையாது என்று ஒரு அபிப்பிராயம். ஆனால், புனிதப் பயணத்தில் மதுவுக்கு இடம் கிடையாதே.

பின்னிரவில், கண்கள் அயர்ந்தபோது, ஈனோங் இரண்டு கனவுகள் கண்டார். முதல் கனவில் நிருபா வந்தாள். சித்திரங்கள் புடைத்த தாமிரக் குடுவையில் மிதமான சூட்டில் சாராயம் கொண்டுவந்தாள். தன் வாயில் ஒரு மிடறு ஊற்றி, நேரடியாக ஈனோங்கின் உதடுகளுக்குள் பீய்ச்சினாள். கண்களும் மனமும் கிறங்கிய ஈனோங்கின் பிம்பம் முழுக்க முழுக்க மாறியிருந்தது. காதோரங்களில் மாத்திரம் நரை விழுந்த, அகலமான நெற்றி கொண்ட, ஸ்திரமாகப் பார்க்கிற, அழுத்தமாக நிற்கிற இளைஞனாக உருவெடுத்திருந்தார் அவர். தன் யௌவனத்தின், பௌருஷத்தின் ஜீவ ஊற்றை நிருபாவுக்குள் பாய்ச்சினார்.

உடல் உதற, தூக்கம் கலைந்து எழுந்து கூடாரத்துக்கு வெளியே வந்து ஜலசுத்தி செய்துகொண்டு மீண்டும் சென்று படுத்தார் ஈனோங். நிருபாவின் நினைவும் கனவின் மிச்சமும் தனது நரம்புகளில் இதமான பரவச அலைகளாக மிதந்துகொண்டிருப்பது கலைந்ததறியாமலே உறக்கத்தில் மூழ்கியபோது, இரண்டாவது கனவு வந்தது.

இறக்கைகளைப் பறப்பது போல் விரித்தபடி வந்த வெண்ணிற அன்னம், உல்லாசமாக இங்குமங்கும் நடமாடியது. ஈனோங்கின் அருகில் வந்து அவரது வஸ்திரத்தைத் தன் இறகால் உரசியது. செங் கொன்றை மலர்களால் ஆன மாலை ஒன்றைத் தன் கூர் அலகின் நுனியில் ஏந்தி வந்திருந்தது அது. ஒரு சிறு குடிலின் வாசல் நோக்கிப் பறந்து போனது. குடிலின் வெளிவாயில் மூங்கில் படலால் மூடப்பட்டிருந்தது. குடிலை மூடிய கதவின் முன் தொங்கிய திரைச்சீலையில், பாயத் தயாரான மலை யெருமையின் சித்திரம் தீட்டியிருந்தது. முன்வாசலில் கொன்றை மரம் நிற்கக் கண்டார் ஈனோங்...

உடல் முழுக்க ரோமாஞ்சனமாகி விழித்துக்கொண்டார். எழுந்து கூடாரத்தை விட்டு வெளியே வந்தார். ஆகாயத்தின் சரிவில் இறங்கியிருந்தது நிலவு. விடிவெள்ளி தளுக்காய் மினுக்கியது.

பொழுது புலர்ந்தபோது, குடுவைத் தண்ணீர் நீலம் பாரித்து விட்டதாகச் செய்தி சொன்னார்கள். வெண்ணிற அன்னத்தின் வருகையை ஈனோங் மற்றவர்களிடம் சொன்னபோது, அவர்களும் அதே கனவைக் கண்டதைப் பகிர்ந்துகொண்டார்கள். கிட்டத்தட்ட அனைவருமே அந்தக் கனவைக் கண்டிருந்தார்கள், வாங்யேவைத் தவிர.

...சரி, போகட்டும், நம்பிக்கைதான் கனவுகளை உருவாக்கும்.

பாதித் தொலைவுதான் கடந்திருக்கிறோம். மீதித் தொலைவு கடக்க, பரபரப்பாக இயங்கியாக வேண்டும். இந்தக் கிராமத்தில் மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று விசாரிக்கச் சொல்ல வேண்டும். முந்தின ஸோமிட்ஸூ பயன்படுத்தின

பொருட்களைப் பெட்டியைவிட்டு வெளியே எடுத்து ஆயத்தப்படுத்தச் சொல்லவேண்டும்.

மூன்று வயதுக்குள் ஸோமிட்ஸுவை அடையாளம் கண்டாக வேண்டும் என்கிறது கிரந்தம். அந்த வயதுக்கு அப்புறம் சுவடி சுத்தமாக இருப்பதில்லை. ஏகப்பட்ட கீறல்களுடன் பழுப்படையத் தொடங்கி விடுகிறது. கூடாரத்தின் வெளியே, தரையில் விரித்த பட்டுத் துணியில் அமர்ந்து, சூரிய திசையை நோக்கித் தியானத்தில் அமர்ந்தார் ஈனோங்.

தியானம் முடிந்து திறந்த கண்களில், இடமிருந்து வலமாகக் கடந்தது அந்த மஞ்சள் பறவை. குக் குக் குக் என்ற சப்தத்துடன், ஈனோங் பார்ப்ப தற்காகக் காத்திருந்த மாதிரி, கண்களிலிருந்து மறைந்தது. ஈனோங்கின் உடலில் ஆழமான சிலிர்ப்பு ஓடியது.

சற்றுக் குறுகலான தெரு அது. முடியுமிடத்தில் சிறு மைதானமாக விரிந்தது. சிறுவர்கள் சிலர் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கூச்சலும், புழுதியும் ஓட்டமும் நிறைந்து களேபரமாக இருந்தது.

பெரியவர்களின் வருகை தங்கள் அந்தரங்கத்தைச் சேதப்படுத்தி விட்ட மாதிரி, சடாரென்று அமைதி பூண்டு ஒதுங்கினார்கள் சிறுவர்கள். முறையற்ற வரிசை ஒன்று தன்னிச்சையாக உருவானதில், வலது பாரிசத் தில் நின்ற பையன் முன்னால் வந்தான். குதிரைமேல் இருந்த வாங் சுக்கின் முகத்தை உற்று நோக்கினான்.

என்ன, வாங் சுக். கவனிக்காமல் போகிறாய்?

என்று கேட்டான். அதிர்ச்சி பரவிய முகத்துடன் சேணத்தை இழுத்துக் குதிரையை நிறுத்தினான் வாங்சுக். பல்லக்கின் மூடுதிரையைக் கையால் ஒதுக்கி வெளியே பார்த்து வந்த ஈனோங், அவசரமான குரலில், பல்லக் கைக் கீழிறக்கும்படி உத்தரவிட்டார்.

அந்தப் பையனின் வயது இரண்டரை என்று சொன்னார்கள் அவனது பெற்றோர்.

அவனுடைய வலது உள்ளங்காலைத் தனது கையில் ஏந்தி ஆராய்ந்தார் ஈனோங். கருநிறமான அம்புக் குறி மச்சம் இருந்தது அங்கே.

அவனது வலது கையின் ரேகைகளைப் பார்த்து ஆமோதிப்பாய்த் தலையசைத்துக்கொண்டார்.

ஆறு ஜோடிக் காலணிகள் அவன் முன் வைக்கப்பட்டன. முந்தின ஸோமிட்ஸுவினுடையவை அவை. அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அவன். அரக்கு நிறம் கொண்ட ஒரு தோல் ஜதைக்குள் அவனது சின்னஞ் சிறு கால்கள் நுழைந்தன.

ஈனோங் தன் நெற்றி தரையில் பட உடனடியாக விழுந்து

வணங்கினார். உடன் வந்தவர்களும் அவ்வாறே செய்தனர்.

பதின்மூன்று கைத்தடிகள். யானைத் துதிக்கை வடித்திருந்த முனை கொண்ட கைத்தடியை ஊன்றி விளையாட்டாய் நடந்தான் சிறுவன்.

அவர்கள் ஒருமித்த குரலில் ஆஹா என்றனர்.

ஈனோங்கின் நீட்டிய சுட்டுவிரலைப் பற்றிக்கொண்டு, அவர் அழைத்துச் சென்ற மறைவிடத்திற்கு வெகு குதூகலமாய்ப் பின்தொடர்ந்தான் அவன். சில பரிசோதனைகளை ஈனோங் மாத்திரமே செய்தாக வேண்டும். பிறர் யாரும் பார்த்துவிடாதவண்ணம் நிகழ்த்தப்பட வேண்டியவை அவை.

நடுங்கும் விரல்களுடன், தாம் கொண்டுவந்திருந்த எண்ணெய் விளக்கின் திரியைப் பற்ற வைத்தார் ஈனோங். சுற்றியிருந்தவர்கள் இருபத்தாறு தடவைகள் தரையில் படிந்து வணங்கி எழுந்தனர். நாலாயிரம் ஆண்டுப் பழமையான ஸோமிட்ஸிய தேசத்தின் மன்னரும், தலைமை ஞானியுமான இருபத்தாறாம் ஸோமிட்ஸு கண்டறியப் பட்டுவிட்டார்.

யாத்திரைக் குழுவில் குரல்கள் மீண்டும் உரக்கத் தொடங்கின. இனி, அவர்கள் கடும் விரதங்களை அனுசரிக்க வேண்டியதில்லை. குறிப்பாக, மது அருந்தத் தடையில்லை. ஸோமிட்ஸுவைத் தேடும் புனிதப் பயணத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஸோமிட்ஸுவின் பெருங் கருணை மாத்திரமின்றி, சன்மானங்களும் கிடைக்கவிருக்கிறது.

ஆனால் அந்தக் குழுவின் சந்தோஷத்தைக் கீறுகிற மாதிரி, குடிலுக்குள்ளிருந்து வீரிட்டலறும் பெண் குரல் வெளியேறி வந்தது. அந்த அம்மாள் பிடிவாதமாகக் கூவினாள்.

> என் குழந்தை வேண்டும் எனக்கு. அவனை விவசாயியாக வளர்ப்பேன் நான். என் குழந்தையைத் தரமாட்டேன்.

குடிலுக்கு வெளியில் ஈனோங்கும், புதிய ஸோமிட்ஸுவின் பூர்விகத் தகப்பனாரும் பிறருக்கெட்டாத குரலில் வெகுநேரம் பேசினார்கள். இரவு கவிந்துகொண்டு வந்தது. முழு நிலா உச்சி வானுக்கு வந்தபோது, உறங்கிக்கொண்டிருந்த மன்னர் இருபத்தாறாம் ஸோமிட்ஸுவைத் தன் மடக்கிய முன்னங்கைகளில் ஏந்தி வந்து, பல்லக்கினுள் விரித்த பஞ்சு மெத்தையில் கிடத்தினார் ஈனோங்.

குடிலின் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த இன்னொரு பல்லக்கில் அந்த அம்மாளைச் சுமந்து வந்து கிடத்தினார்கள். மூர்ச்சையுற்றிருந்தாள் அவள். இந்தப் பல்லக்கு வேறு திசையில் நகர்ந்தது. எல்லையை

ஒட்டியே சென்று உரிய இடத்தில் அவர்களைக் கொண்டுசேர்க்கும்படி உத்தரவிட்டிருந்தார் ஈனோங், பல்லக்குத் தூக்கிகளின் தலைவனிடம். அவர்கள் செல்லுமிடம் வாங்யே உள்ளிட்ட எவருக்கும் தெரியாது. பல்லக்குத் தூக்கிச் செல்பவர்களுக்கும் தெரியாது. அவர்களுக்கு இன்னொன்றும் தெரியாது; அவர்களுடன் செல்லும் காவல் வீரர்களின் தலைவனிடம் ஈனோங் இட்டிருந்த உத்தரவு.

திரும்பும் வழியில், பல்லக்குத் தூக்கிகள் அனைவரையும், அவர்களின் தலைவன் உட்பட, கொன்றுவிடும்படி உத்தரவு.

பல்லக்குகள் இரண்டும் கிராம எல்லையைத் தாண்டும்போது, மன்னர் இருபத்தாறாம் ஸோமிட்ஸு அவதரித்த குடிலைத் தீச் சுவாலைகள் புசிக்கத் தொடங்கியிருந்தன.

*

# பூர்வ கிரந்தம் 4

... ஆறுகளும் மலைகளும் வனங்களும் பிராணிகளும் ரத்தக் கொதிப்பும் செரிமானமும் காமமும் கலவியும் பேதமும் பிளவுகளும் பொங்கி வழியும் ரணப் பரப்பு அது ...

இரண்டாம் ஸோமிட்ஸுவைக் கண்டறிந்தவன் ஒரு வனவாசி. மழைக்காலத்தில் முதலாம் ஸோமிட்ஸு மரித்த துக்கத்தை ஸோமிட்ஸிய ஆதிகுடிகள் செரிக்கமுடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டம் அது.

பூதவுடலை நீங்கிய பின்னரும், ஒளி ரூபமாக ஸோமிட்ஸிய ஆகாயத்தில் மேகம்போலத் தங்கியிருந்த முதலாம் ஸோமிட்ஸு, காட்டின் ஓரத்தில் அனாதையாய்க் கிடந்த சிறுவனை வனவாசி கண்ட மாத்திரத்தில் மங்கத் தொடங்கினார்.

தலைநகரிலும், அதைச் சுற்றிலுமிருந்த ஐம்பது சதுர மைல் பரப்பிலும் மாத்திரமே அச்சமயம் வேர் பிடித்திருந்த ஸோமிட்ஸிய சாம்ராஜ்யம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

வனவாசி கண்டெடுத்த குழந்தையின் தலையைச் சுற்றிக் குடை போலப் படர்ந்திருந்தது ஒளிவட்டம். சுற்றிலும் பொழிந்து கொண்டிருந்த மழைத்தாரைகள், ஒளிவட்டக் குடையைத் தவிர்த்துப் பெய்தன. வனவாசியின் கைபிடித்து நடந்த சிறுவன், அரண்மனைக்குள் நுழைந்து, நேராக ஸோமிட்ஸுவின் அரியாசனத்தில் சென்று அமர்ந்தான்.

முதலாம் ஸோமிட்ஸுவுக்காகத் தயாரிக்கப்பட்ட, வைரமோடிய தேக்கு மரத்தால் செய்யப்பட்ட, பலநூறு ஆண்டுகள் பழமையான பாதக் குறடுகள் குழந்தையின் கால்கள் பட்டவுடன் அதன் பிஞ்சுக் கால்களின் அளவுக்குச் சுருங்கின.

ஸோமிட்ஸியாவெங்கும் நறுமணம் பரவியது. மரங்கள் ஏக காலத்தில் பூத்தன. பறவைகளும் மிருகங்களும் ஆனந்தக் கூச்சலிட்டன. ஆலயமணிகள் தாமாக ஒலித்தன. மலடிகள் கர்ப்பந்தரித்தனர். வியாதியஸ்தர்கள் சொஸ்தமாயினர்.

இறந்து பலகாலமாகியும் ஆகாயவெளியில் தத்தளித்துக் கொண்டிருந்த ஆன்மாக்கள் சொர்க்கத்தை நோக்கி நடை போட்டன. முதலாம் ஸோமிட்ஸுவின் ஆன்மா, அவர்களை வழிநடத்திச் சென்றது. இக்காட்சியை ஊனக் கண்களாலும் காண முடிந்தது என்று ஸோமிட்ஸியப் பிரபுக்களும், பூசாரிகளும் தங்களது நாட்குறிப்புகளில் பதிந்து வைத்திருக்கின்றனர்.

நிகழ்ந்துவிட்ட மாயத்தின் பௌதிகச் சான்றாக, அரண்மனையின் மூடிய கூரையிலிருந்து புதிய ஸோமிட்ஸுவின் தலையில் ஒரு கொத்துப் பூக்கள் சொரிந்தன.

இரண்டாவது குரு, செம்மறியாடுகளை வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்தினார். பாலுக்காகவும் தோலுக்காகவும் ரோமங்களுக்காகவும், வீட்டுக்கொரு ஜதை செம்மறியாடுகளும் தலைக்கொரு மலை எருமையும் வளர்க்க வேண்டும் என்று சட்டமியற்றினார். இதுபோக, அரசாங்கமே சொந்தமாக ஆடுகளை உற்பத்தி செய்யுமென்றும் மேய்ப்பர்களைப் பணியில் அமர்த்துமென்றும் அறிவித்தார். அதற்கு உகந்ததான கல்வி முறையை உண்டாக்குவது பற்றியும் சிந்தித்தார்.

மேய்ப்பர்களுக்கும் மேய்ச்சல் கல்விக்கான போதனாலயங்களின் தலைவர்களுக்கும் செம்மறி ஆடுகளுக்குமான தலைமைப் பொறுப்பில் ஈனோாங் என்ற ஆளுநர் பதவியை உருவாக்கினார். ஸோமிட்ஸிய மன்னனைத் தேர்ந்தெடுக்கப் பதினேழு சோதனைகளை வகுத்தவரும் அவரே. அச் சோதனைகளில் ஆறில் மட்டுமே தேறி, மீதிப் பதினொன்றில் தோற்று விடுபவர்களை ஈனோங் பொறுப்பில் நியமிக்கலாம் என்றும் வரையறுத்தார்.

ஈனோங்குகள், கடவுளின் கீழ்ப் பிறப்பு அவதாரங்கள்.

பூவுலகம் என்பதும், அதைச் சார்ந்த உயிர் வாழ்க்கையும் ஒன்றன் மேல் ஒன்றாகப் படிந்த ஒன்பது தளங்களைக் கொண்டது என்றும், ஏழாவது தளத்துக்கு அப்பால், இரவு பகல் என்னும் இரட்டைத் தன்மையற்ற நிரந்தரக் காலவெளி ஒன்று இருப்பதையும் கண்டு சொன்னவர் இரண்டாவது குருவே.

இவற்றில் முதல் ஐந்து தளங்கள், எல்லாச் சாமான்ய உயிர்களுக்கும் உள்ளது.

அபூத வெளி வாழ்வு.

குழந்தைமை,

வாலிபம்,

மூப்பு,

மீண்டும் அபூத வெளி வாழ்வு

எனச் சக்கரமாகச் சுழல்பவை இவ் வைந்து தளங்களும். முதலாவதும் ஐந்தாவதும் ஒன்றுபோலவே தோன்றினாலும், அவையிரண்டுக்குமிடையில் உள்ள வித்தியாசம் மகத்தானது.

ஆறுகளும் மலைகளும் வனங்களும் பிராணிகளும் ரத்தக் கொதிப்பும் செரிமானமும் காமமும் கலவியும் பேதமும் பிளவுகளும் பொங்கி வழியும் ரணப் பரப்பு அது.

ஆறாவது தளத்தில், பார்வை, ஊடுருவும் சக்தி கொண்டதாகிறது. காலத்தையும் இடத்தையும் முன்னும் பின்னும் நகர்த்திப் பார்வை கொள்ள இயலும் இந்தத் தளத்தை எட்டுபவர்களால். யாருமே இந்தத் தளத்தை எட்ட முடியும், தாம் இருக்கும் இடத்தையும் காலத்தையும் பற்றிய வரையறைகளைத் தாண்டுவதற்காக மேற்கொள்ளும் கடும் முயற்சி மற்றும் பயிற்சிகள் மூலம்.

ஏழாவது தளம். உடல் ஆயுளை அதன் சராசரி விளிம்புகளுக்கு அப்பால் உந்தித் தள்ளுவது. பல்லாயிரம் கோடி உயிரணுக்களால் ஆன மனித உடலிலிருந்து வெளியேற்றப்படும் சில நூறு உயிரணுக்களைத் தொடர்ந்து பலகாலம் புசிப்பதே இந்த நடவடிக்கைக்கான ஆரம்ப கட்டம். அங்க லட்சண சுத்தமான வாலிபர்களின் உடலிலிருந்து ஊறும் அமிர்தத்தாதுவுடன் மூலிகைகள் சிலவற்றையும் கலந்து தினசரி உணவில் சேர்த்துக்கொள்வது நலம்.

இந்த அப்பியாசம் ஸோமிட்ஸுகளுக்கு மாத்திரமே உரியது. சாமான்யப் பிரஜைகள் இந்த வைத்திய முறையைப் பயிலுவதாகத் தெரிந்தால், உடனடியாகச் சிரச்சேதம் செய்யப்படுவார்கள். இந்தப் புனிதப் பணிக்குத் தாமே உவந்து உடல் தரும் இளைஞர்கள் ஸோமிட்ஸுவின் நேரடிப் பார்வையில் புஷ்பக விமானத்திலேறி அமர உலகம் செல்வர்.

எட்டாவது தளம், அண்டபேரண்டத்தை ஒரு நொடிப் பொழுதாகச் சுருக்கித் தர வல்லது.

ஒன்பதாவது தளம், தேவ ரகசியம். ஸோமிட்ஸுவாகும் எவருக்கும் முதல் நாளிலேயே சித்தித்து விடுவது. அவர்கள் யாரும், தமது அனுபவத்தைச் சுவடிகளில் பதிக்காமலிருக்கவும், மீறிப் பதிக்க முயன்றால், எழுதும்போதே சுவடிகள் எரிந்து போகவும் கடவது.

*

# இருபத்தாறாம் லோமிட்ஸு

... ஒரு நட்சத்திரத்துக்கும் இன்னொன்றுக்கும் உள்ள அதே அளவு இடைவெளி, ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையிலும் இருக்கிறது ...

*அந்தப் பையன் நிதானமாக மலையேறிக்கொண்டிருந்தான். பதினாறு அல்லது பதினேழு வயதிருக்கலாம். மேலுதட்டில் அரும்பியிருந்த பூனைமயிரில் வியர்வைத் துளிகள் கோத்திருந்தன. நெற்றிப் பொட்டுகளிலும், மொட்டைத் தலையில் வளர்ந்திருந்த ஒரு வாரக் குறுமயிரிலும் நீர்ப் பளபளப்பு. அலைபாயும் விழிகளால் சுற்றுமுற்றும் பார்த்தவாறு ஏறினான். கைக்கோலை நன்கு ஊன்றி, முன் காலை நன்கு பதித்துப் பின்னங்காலை உயர்த்தி, சீரான லயத்துடன் மேலேறி வந்தான். நேற்றிரவுக்கு முந்தைய இரவில் பெய்த மழையின் ஈரம் வனத்தின் தரையில் இன்னும் கசகசக்கிறது. சமவெளியில் போலில்லை, வனத்தினுள் பெய்த மழையின் சுவடுகள் சுலபமாய் மறைவதில்லை.*

*உடம்பின் நிதானத்துக்கு எதிர்மாறாக, மனம் எங்கோ விரைந்து அலைவதுபோலத் தீவிரம் கொண்ட முகம், நெற்றிச் சுருக்கங்கள்.*

*ஊளைச் சத்தம் கேட்கும் பொழுது நெருங்குகிறது. ஆனால், அது நரியின் ஊளை அல்ல. நரி போல ஊளையிடும் மனிதக் குரல். முதல் ஆளாக முன்னால் செல்கிறவன், அந்தந்த இரவு தங்குவதற்கு வாகான இடம் ஒன்றைக் கண்டறிய வேண்டும். அவனுடைய முதல் ஊளை கைகள் மாறி வந்து கடைசி ஆள்வரை போய்ச் சேரும்.*

*வெளிச்சத்தின் அழுத்தத்தை வைத்துச் சொல்வதானால், இன்னும் இரண்டு நாழிகைகள் ஆகலாம். ஊளை கேட்டதற்குப் பிறகு கால்கள் கொஞ்சம் வலிக்கிற மாதிரித் தோன்றும். சேருமிடம் நெருங்கும்போது உண்டாகும் ஆயாசம். அவ்வளவுதான்.*

*பையன் அனிச்சையாய்க் கீழே திரும்பிப் பார்த்தான். மலைச் சரிவின் ஆழத்தில் பதில் ஊளை கேட்கவிருக்கும் இடத்தைக் குத்து*

மதிப்பாகக் கூட அறியமுடியாவண்ணம் அடர்ந்த மரங்களின் தலைகள் பச்சை மைதானம் போலக் கிடந்தன. உடன் வருபவர்களால் ஊளையிட மட்டும்தான் முடியும். அவர்கள் அனைவருமே பேசும் சக்தியற்றவர்கள். எல்லாம் ஈனோங் கிழவரின் ஏற்பாடு.

அந்தக் கிழவருக்குத்தான் எத்தகைய உடல்வலு. பத்து நாட்களாக மலையேறியும், கொஞ்சமும் துவளவில்லை அவர். இரவில் ஒன்று கூடுமிடத்துக்கு வந்துசேரும்போது, நிச்சிந்தையான உறக்கத்துக்குப் பின் அப்போதுதான் விழித்தெழுந்தது போன்ற புத்துணர்வுடன் இருப்பார். பல பத்தாண்டுகளாகத் தான் அனுஷ்டிக்கும் கடுமையான பிரம்மச் சரியம்தான் காரணம் என்று சொல்லிக்கொள்வார். வாங்யே பிரபு போன்றவர்கள், தானே தயாரித்த லேகியம் ஒன்றை நாள் தவறாமல் உட்கொள்கிறார் அவர், அதனால்தான் வலுவான உடலுடன் இருக்கிறார் என்று சொல்வார்கள் - அவர் இல்லாத சமயங்களில். எதுவானாலும், எண்பது பிராயத்துக்கு இத்தனை வலிமை மிகமிக அதிகம்தான். அவர் மாத்திரம் கொஞ்சம் நல்லவராக இருந்திருந்தால்...

ஒரே அரண்மனையில் பகற்பொழுது முழுவதையும் கழித்தாலும், இருவருக்குமிடையில்தான் எவ்வளவு தொலைவு? ஒரு நட்சத்திரத்துக்கும் இன்னொன்றுக்கும் உள்ள அதே அளவு இடைவெளி, ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையிலும் இருக்கிறது என்று பண்டைய கால ஸோமிட்ஸிய ஞானியும், வான சாஸ்திரியும், வைத்திய மேதையுமான கிஸீயா எழுதியிருக்கிறார்.

இந்தப் பத்து நாட்களில், இரவுக்கும் இருளுக்கும் உடலும் மனமும் வெகுவாய்ப் பழகிவிட்டன. அரண்மனையும் அதன் சுகசௌகரியங்களும் கொடுத்த பாதுகாப்பு உணர்வைவிட , அடர்ந்த கானகத்தின் இருளும் பயங்கரமும் மிகவும் உவப்பாகவும் இதமாகவும் இருக்கின்றன. கிட்டத்தட்டப் பன்னிரண்டு வருடங்களாக அனுபவித்திராத தனிமையுணர்வும் விடுதலையுணர்ச்சியும் பொங்கிப் பீறிடுகின்றன.

ஆசிரியர் ஹான்ஸ் அடிக்கடி சொல்வார்:

> பறவைகளின் இடம் கூடோ, மரக்கிளையோ அல்ல. அளவற்று விரிந்திருக்கும் ஆகாயத்தில் திரிவதே பறவையாயிருப்பதன் தன்மை. ஸோமிட்ஸியாவின் அரண்மனைக்குள் அடைகாத்துக் கிடக்கும்வரை, வெளியுலகத்தில் காத்திருக்கும் சாகசமும் பரவசமும் பயங்கரமும் உனக்குக் கிடைப்பதற்கில்லை, பையா.

ஆசிரியர் ஹான்ஸ் மிகவும் சாதுரியம் உள்ளவர். ஈனோங்கின் பார்வையிலிருக்கும்போது,

> மேன்மை தங்கிய மன்னரே.

என்று விநயமாக அழைக்கவும், தனியாய் இருக்கும் சந்தர்ப்பங்களில், தம்பீ, கண்ணா, பையா என்றெல்லாம் வாஞ்சையுடன் அழைக்கவும் அவரால் முடியும். ஜெர்மன், ஆங்கிலம் மற்றும் உடற்பயிற்சிப் பாடத்தின் எல்லைகளுக்கு அப்பால் எத்தனையோ விஷயங்கள் சொல்லிக் கொடுக்கக் கூடியவர். ஒருமுறை சொன்னார்:

பையா, மரணத்துக்குப் பின்னான வாழ்வு என்பது ஒரு அனுமானம் தான். மரணம் வரையிலான வாழ்வோ, ரத்தமும் சதையும் சதியும் பிரியமும் நிறைந்தது. வலியும் பரவசமும் கொண்டது. நிஜமானது.

அமரத்துவத்தின் மாண்பைப் பற்றிக் கிரந்தங்கள் ஓயாமல் முறையிடுவதைக் கேட்டு வளர்ந்த காதுகளுக்கு அவருடைய வார்த்தைகள் ஒரே நேரத்தில் பயங்கரமானவையாகவும், வசீகரமானவையாகவும் ஒலித்தன.

இன்னொருமுறை ஆசிரியர் ஹான்ஸ் கேட்டார்.

மனிதன் எப்படி உருவானான் தெரியுமா?

ஆஹா. கிரந்தம் சொல்கிறதே. கடவுள் தன் தலைமுடியிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கித் தரையில் எறிந்தார். அது ஆணாக உருவெடுத்தது. அக்குள் முடியிலிருந்து எடுத்த இன்னொரு ரோமம் பெண்ணாகியது.

இந்தக் கதைகளையெல்லாம் ஸோமிட்ஸியாவின் குழந்தைகளுக்கு விட்டுவிடு. முதல் மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்று கண்டுபிடித்துவிட்டார்கள்.

பையனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

நீங்கள் சொல்வது தெய்வநிந்தையாக அல்லவா இருக்கிறது?

இல்லை. தெய்வத்தின் பாதையில் நான் குறுக்கிடுவதில்லை. என் நம்பிக்கைகளின் பாதையில் தெய்வம் வருவதையும் அனுமதிக்க மாட்டேன். அவ்வளவுதான்.

தொடர்ந்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். ஜூலியஸ் லுமும்பாவின் தேசத்திலுள்ள அடர்காடுகளில், மனித ஜாடையுள்ள குரங்குகள் இன்னமும் வசிக்கின்றனவாம். லுமும்பாவின் பெயரைச் சொல்லும் போது, அவருடைய முகத்தில் வேதனை கவிவதைப் பார்த்தான் சிறுவன். வாய் தவறித்தான் அந்த ஒருதடவை மாத்திரம் குறிப்பிட்டுவிட்டார் ஆசிரியர். மற்றபடி, அவரது நண்பரும், அகால மரணமுற்றவருமான ஜூலியஸ் லுமும்பா பற்றிய எந்தக் கேள்வியையும் புறமொதுக்கிவிடுவார்.

அவருடன் ஸோமிட்ஸியாவுக்குள் நுழைந்த அவரது நண்பர் ஜூலியஸ் லுமும்பாவை, அந்த விருந்துக்கு அப்புறம் காணக் கிடைக்கவில்லை. அப்போது சிறுவனாயிருந்தபடியால், லுமும்பா பற்றிய

அழுத்தமான ஞாபகங்கள் எதுவும் இல்லை. சொல்லப்போனால், அந்தப் பெயரைத் தவிர வேறெதுவும் ஞாபகத்தில் இல்லை. மலையேற்றமும் பூகோள சாஸ்திரமும் வனவியலும் கற்றுத் தருவதற்காக நியமிக்கப்பட்ட ஜூலியஸ் லுமும்பாவிடம் தொடர்ந்து பாடம் கேட்க முடியாமல் போனது, நிச்சயம் ஒரு ஆயுட்கால இழப்புதான் என்று சொல்லி அந்த உரையாடலை முடித்துவிட்டார் ஆசிரியர் ஹான்ஸ்...

மலையேற உதவியாக ஊன்றிவந்த கைக்கோலைப் பக்கத்தில் வைத்துவிட்டு, இயற்கையாய் உருவாகியிருந்த பாறைக் குழிவொன்றில் உடல் பதிய அமர்ந்தான். இடதுகையில் இருந்த சுவடிக் கட்டையும், கோலி அளவு பருமனுள்ள மணிகள் கோத்த தியானச் சரத்தையும் தரையில் இட்டான்.

புட்டத்தில் தொற்றி முதுகெங்கும் படர்ந்த தண்மை, பகற்பொழுது முழுவதும் மலையேறி வந்த அலுப்புக்கு மிகவும் இதமாக இருந்தது. உயரம் நோக்கி ஏறும் நாட்களை விட , சரிவில் இறங்கும் நாட்களில், சாயங்காலத்தில் உடல் கெஞ்சும். துவளும் கால்களில் சிறு நடுக்கம் இருக்கும். இன்னும் குறைந்தது பத்து நாட்கள் நடக்க வேண்டி வரலாம் என்கிறார் ஈனோங்.

இருள் மெல்ல மெல்ல இறங்குகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில், தரையை முழுக்கத் தழுவிக் கொண்டுவிடும். நிலா வீசும் நாட்களை விட இன்று இறங்கும் இருளின் ஓசை காத்திரமாய் ஒலிக்கிறது. சலிப்பின்றி எத்தனை யுகங்களாக ஓடிப்பிடித்து விளையாடுகின்றன, இருளும் வெளிச்சமும்? வெளிச்சத்தைப் பெண் என்று கற்பிதம் செய்து கொண்டான். அப்படியானால் நான்தான் இருள்.

சில நாட்களாகக் காணாமல் போயிருந்த அந்தப் பிம்பம் மீண்டும் உதயமாகிறது, ஆழ்மனத்தின் திரையில். அம்மாவின் பிம்பத்தை இடம் பெயர்த்த புதிய பிம்பம்.

...**அ**ந்த நாளின் முற்பகல் பொழுது ஒவ்வொரு விநாடியாக மறு உயிர்ப்புக் கொள்கிறது. அந்த பிரம்மாண்டமான அறையில் தறிகெட்ட வடிவங்களில் மிதக்கும் ஊதுபத்திப் புகையும் இவனும் மட்டுமே இருக்கிறார்கள். சூரியன் தோளைத் தாண்டி உயர்ந்துவிட்டிருக்க வேண்டும். இதமான உஷ்ணம் பரவியிருக்கிறது அரண்மனையின் உள் தாழ்வாரத்தில். வெகுநேரம் தனியாக உட்கார்ந்து சுவடிகளை வாசித்ததில் சுரணை மரத்திருந்த கால்களை வசத்துக்குக் கொண்டுவருவதற்காக நடந்துகொண்டிருக்கிறான். கைகளைப் பின்புறம் கோத்தபடி, முன்னும் பின்னுமாகச் சென்று வருகிறவனின் உதடுகள் கிரந்தத்தின் மனன வரிகளை அனிச்சையாக உச்சாடனம் செய்துகொண்டிருக்கின்றன.

அந்தப் பகுதியில் சுவர்கள் மகா உயரம். காற்றுக்காகவும் வெளிச்சத் துக்காகவும் இரண்டு ஆள் உயரத்தில் பொத்தல்கள் போடப்பட்டிருக்கும். அவற்றின் வழி, சூரிய ரேகைகள் பலவீனமான வெளிச்சத்தைப் பரப்பி யிருந்தன தாழ்வாரத்தில். வில்லைகளாகப் படிந்த ஒளிப் புள்ளிகளி லிருந்து பொத்தல்கள் வரை எழும்பும் ஒளிக் கோல்கள் கம்பி அழிகள் போல விறைத்திருந்தன. சிறைக் கம்பிகள் போல... ஒளியில் மின்னும் தூசித்துகள்கள் ரகசியமான ஓர் உயிரியக்கம் நடப்பது போலத் தோற்றம் காட்டின.

ஓடிக்கொண்டிருந்த நதிவெள்ளம் சடாரென்று உறைந்ததுபோல உச்சாடனம் கதி தப்பியது. அன்று காலையில் எழுந்ததிலிருந்தே கால்கள் இரண்டும் துவண்டிருந்தன. ஆடுசதையின் உட்புறம் தொடர்ந்து யாரோ கீறுவது போல உளைச்சல். மனத்தின் அடியாழத்திலிருந்து கிளம்பிய தனிமை கால்களில் வழிந்து கனப்பதுபோல உணர்வு. நடக்கச் சிரமமாக இருந்தது. நின்றான்.

நின்ற இடத்திலிருந்து இருபது கஜம் தொலைவில் ஒரு சிறு மேடை. அதன்மேல் விசிப் பலகையில் திறந்து வைக்கப்பட்ட கிரந்தத்தின் பக்கங் களில் இரண்டு மூன்று ஒளிவில்லைகள் படிந்திருந்தன. நிதானமாக நடந்து அருகில் நெருங்கிப் பார்த்தான். கிரந்தத்தின் சுவடிகள் பொன் னிறம் கொண்டு மினுங்கின.

அவற்றில் எழுதப்பட்ட மகாவாக்கியங்கள் ஒவ்வொன்றுக்கும் நடமாடும் சான்றாக விளங்கியாக வேண்டும் இவன். சர்வ வியாபியின் செய்தியைப் பொதிந்த வாக்கியங்களின் உயிர் ஆவணமாகத் திகழத் தக்கவன் என்று இவனைச் சுட்டிய நிமித்தங்கள், இன்று தேசத்தின் வரலாறு.

தனக்குள் ஒரு குமிழ் உடைவதை உணர்ந்தான். இந்த தேசத்தின் வரலாறு போலவே, என்னுடைய உடம்புக்கும் சொந்த வரலாறு ஒன்று இருக்கிறது. அந்த வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்பத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். நேற்றிரவு கனவில், அம்மாவின் பிம்பம் என்னுடைய சொந்த பிம்பத்தை விடவும் வயது குறைந்ததாக ஆகிவிட்டது. முகத்தின் முதிர்ச்சி முற்றிலுமாக நீங்கி, ஈரம் பளபளக்கும் உதடுகளுடன் புதிய சாயல் கொண்டிருக்கிறது. அது இனி அம்மாவின் பிம்பம் அல்ல.

முகமற்ற ஒரு பரிவென என்னுடைய உணர்வின் அடியாழங்களில் வண்டலாகப் படிந்திருந்த அம்மாவின் பிம்பத்தை முற்றாக இடம் பெயர்த்துவிட்டது புதிய பிம்பம்.

அந்தப் பெண் பிம்பத்தின் நெரிந்த புருவங்களுக்கு இடையில் உதடுகளைப் பதிக்க இவன் முயன்றதும், கச்சைக்குள் பொதிந்த சின்னஞ் சிறு சதைக் குமிழ்களில் தன் முகத்தை அழுத்தி நுகரத்துடித்ததும் நினைவு வந்தது. பிம்பத்தை இறுக்கி அணைத்து அதன் எலும்புகள் நொறுங்கும்

அளவு தன் மார்புடன் பிணைத்துக்கொள்ளும் வெறி மிகுந்தது.

அந்தப் பிம்பத்தின் மடியில் படுத்துக்கொள்வதற்கு அல்ல, வெளிவந்த வழியாகவே கருப்பைக்குள் நுழைந்துவிடவேண்டும் என்று பல்வேறு மார்க்கங்களைப் பரிசோதித்துக்கொண்டிருந்தான். ஒரு உச்சகட்ட முயற்சியில், தனக்குள்ளிருந்து கிளம்பிய ஊற்றுப்பெருக்கு முழுக்க வெளியேறி விசையுடன் தன்னை நனைத்து இழுத்துச் செல்வதாக உணர்ந்தான். அரை உடுப்பு ஈரம் கண்டிருந்தது.

விடிந்த பிறகு, வெளிச்சம் புதிதாக இருக்கிறது. ஆகாயம் புதிதாக இருக்கிறது. தண்ணீர் புதிதாக இருக்கிறது. சாப்பாட்டின் ருசி புதிதாக இருக்கிறது. அரண்மனைக்குள் இயல்பாகச் சாடித் திரியும் பூனை பேர ழகாக இருக்கிறது. அரண்மனைத் தோட்டத்தின் ஒவ்வொரு பூவிலும் அழகின் தனித் தனிச் செய்திகள் தென்படுகின்றன. தாழ்வாரத்தில் மிதந்து வருடும் காற்று உல்லாசமாக இருக்கிறது.

அன்று திறந்துகொண்ட உடல் இன்னமும் மூடவில்லை.

தானாய் வந்து தழுவிச் சென்ற அந்த அனுபவம் மீண்டும் சித்திக்காதா என்று ஒரு ஏக்கம் அடிமனத்தில் நெருடிக் கொண்டேயிருக் கிறது...

பக்கத்தில் புதர்கள் சலசலத்தன. கைக் கோலை உறுதியாகப் பற்றி உயர்த்தியபடி, பார்வையை மட்டும் இடதுபுறம் செலுத்தினான். மாலைப்பொழுதின் மஞ்சள் வெளிச்சத்தில் கடந்து செல்கிறது ஒரு மான் கூட்டம். பின்தங்கியும் துள்ளிக் குதித்தும் ஓரிரண்டு குட்டிமான்கள். மான்கள் இணைந்து உருவாக்கிய பிரதிகள். ஆசிரியர் ஹான்ஸ் சொல்வதுபோல, இனம் பெருக்குவது உயிர்ராசிகளின் ஆதார குணங் களில் ஒன்றல்லவா...

கூட்டத்தை விட்டு மிகவும் பின்தங்கி வந்த குட்டி ஒன்று தன்னருகில் வந்ததும், சடாரென அதைக் கழுத்தோடு அணைத்துப் பிடித்தான். அதன் சின்னஞ்சிறு உடலின் மிருதுவான மயிர்போர்த்திய சருமத்தினுள் படபடப்பு ஓடுவதைத் தன் உடலால் உணரும்வண்ணம் அணைத்துக்கொண்டான்.

மலைச் சரிவில் மெல்ல இறங்கிக்கொண்டிருக்கும் குளிருக்கு, மழையின் வாசனை பொங்கும் சூழலுக்கு, இளம் உஷ்ணம் வெதுவெதுக் கும் மான்குட்டியின் உடல் இதமாக இருந்தது. சற்று நேரம் அணைத் திருந்துவிட்டு, விடுவித்தான்.

> போ, சுதந்திரமாகத் திரியவேண்டிய உன்னை மறித்துத் தடுத்த பாவம் சேர வேண்டாம் என்னை.

விடுதலையின் பரவசத்தில் துள்ளித் தாவி ஓடும் அதைப் பார்த்தவாறு

முணுமுணுத்தான்.

போதும், எழுந்து நடக்கலாம். கோலை எடுத்துக்கொண்டு, சுவடிக் கட்டையும், மணிச் சரத்தையும் எடுக்கக் குனிந்தபோது, நாலைந்தடி தூரத்தில் நீள்கோடாக விரைந்த பாம்பு பார்வையில் பட்டது. நெளிவற்ற உடலுடன் விடுபட்ட அம்புபோலப் பாய்ந்து மறைந்தது அது. அதன் நேர்கோட்டுப் பாதைக்கு மிக அருகிலேயே, தன் முன்னங்கால்களை ஒரு சிறு கல்மீது ஊன்றிக் கழுத்தை எக்கிப் பார்த்துக்கொண்டிருந்த ஓணான் சலனமற்று நின்றிருந்தது.

தன்னிச்சையாய் உதிரும் சருகுபோல, பறந்தவாறே பறவையிட்ட எச்சம் போல, இயல்பான காட்சியாய், கண்ணில் பட்டு விலகிய பாம்பும் தியானிக்கும் ஞானிபோல நின்றிருந்த ஓணானும் தனக்குள் இறுக மூடிக் கிடந்த கதவொன்றைத் திறந்துவிட்டதாக உணர்ந்தான்.

கானகத்துக்குள் நுழைந்த முதல் நாளிலிருந்தே மனித உணர்வு சிறுகச் சிறுகக் குறைந்துவிட்டது. பாதுகாப்பும் பத்திரமும் விழையும் மனம் ஓய்ந்துவிட்டது. காற்றுப்போல லகுவாகிவிட்டது மாதிரி ஓர் உணர்வு. காட்டின் நிசப்தம் ஓசைகள் நிரம்பியதாய் இருக்கிறது. வெளியில் ஊறும் ஓசைகளுக்கிணையாக உள்ளுக்குள்ளும் தனித்த பேச்சொலி நிறைந்து உயர்கிறது.

மிருகராசிகளும் பறவைகளும் பூச்சிகளும் புழுக்களும் வண்டுகளும் உறுமல்களும் சீற்றங்களும் ஊளைகளும் கிளைகளை உலுப்பும் வலுத்த காற்றும் வாஞ்சையுடன் வருடிப்போகும் இளங்காற்றும் சிதறிய மேகம் உதிர்க்கும் ஓரிரு நீர்ச் சொட்டுகளும் இன்று வரவிருக்கிறவனுக்காக ஏற்கனவே பழுத்திருக்கும் கனிகளும் காய்களும் உவப்போர் இன்றியே பூத்துக் குலுங்கும் மலர்கள் விடுக்கும் நறுமணமும் நிரம்பித் ததும்பும் உயிர் வெளியின் ஈரத்தில் தானும் ஒரு துளியாக உணரத் தலைப்பட்டு விட்ட புதுமனம் ஒன்று வியாபகம் கொண்டுவிட்டது.

இந்த மாபெரும் ஒத்திசைவின் பகுதியாக இருப்பதை விட்டு, கட்டடங்களும் பாத்திகளும் வரையறைகளும் சடங்குகளும் கோலோச்சும் சாம்ராஜ்யத்துக்கு அதிபதியாய் இருப்பது என்னவொரு அபத்தம்?

இடதுகையில் இருந்த சுவடியில் யானையின் கனம் ஏறிவிட்டதாகப் பட்டது. உடலைப் போஷித்து நீண்ட ஆயுள் சம்பாதிக்க வலியுறுத்தும் கிரந்தம், உடலின் உள் ஆழங்களில் இயல்பாக ஊறும் சுனைகளின் தோற்றுவாயை அடைக்கச் சொல்லி அறிவுரைக்கும் முரண்தான் என்ன? தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். தொடர்ந்த யோசனையால் உருவாகியிருந்த படபடப்பு மெல்லச் சமனமுறுகிறது.

இந்த மாலைப்பொழுது, சாந்தத்தின் பொழுது. ஒவ்வொரு

பொழுதுக்கும் ஒரு குணபாவம் இருக்கிறது. எதிர்கொள்ளும் மனித மனம் முன்கையெடுத்துச் செயல்படுத்தும் குணபாவம் அது. மனத்தில் துயரம் மண்டும் பொழுதில், காதில் விழும் ஓசைகளும், பார்வையில் விழும் காட்சிகளும் துயரத்தின் செய்தியைச் சுமந்து வருகின்றன. ஆனந்தம் ததும்பும் பொழுதுகளில், சுவர்க்கோழியின் சப்தம் தேவ கானமாய்க் கேட்கும்.

வனத்தினுள்ளிருக்கும்போது, உணர்ச்சியின் வேகம் மந்தித்து விடுகிறது. தன்னுடைய பூதாகாரமான பயங்கரத்தை விடுத்து, மெலிந்து விடுகிறது மரணம் பற்றிய எண்ணம். சரீரம் பருவுலகத்துடன் கொள்ளும் இன்னொரு உடன்பாடுதான் மரணம் என்கிற அளவுக்குச் சுருங்கிவிடுகிறது. தனிமையின் கைக்குழிகளில் சிந்தனை நிரம்புகிறது.

எந்தக் கேள்விக்கும் பதில் தேட வேண்டிய அவசியமின்றி, தேவையானபோது உண்பதற்கான உணவு மூட்டையாய் மாறிவிடுகிறது மனதில் சேகரமாகியிருக்கும் தகவல் தொகுப்பு. ஆண்டாண்டு காலமாய் பதில்களால் சிரமறுக்கப்பட்டும், அயராது தலைமுளைக்கும் கேள்விகள் பரிதாபமாய்த் தோற்றோடுகின்றன... தோற்று விழுந்த கேள்விகளின் குவியலில் மனிதர்கள் மூச்சுத் திணறி அழுந்திக் கிடப்பது போன்ற சித்திரம் உண்டானது...

மனிதத் தொண்டையிலிருந்து கிளம்பிய ஊளை, மலையின் பாதாளம் வரை எதிரொலிக்கிறது. கீழிருந்து மேலேறுகிறது பதில் ஊளை.

மாயச் சுழற்சியொன்றின் பௌதிகச் சான்றாக மெல்லமெல்லச் சரிகிறது அந்தி. மரங்களும் செடிகளும் பாறைகளும் பார்வையும் கொண்ட வர்ணபேதங்களைக் கருக்கி ஒருநிறமாக்கும் வேட்கையுடன் பரவுகிறது இருள். உறக்கம்போல நிலவெளியை மிருதுவாய்த் தழுவும் கருமையின் தனிமையில் அமிழும்போது, தன் உடலும் கருநிறம் பூணுவதையும், மனத்திலுள்ள புகார்கள் அத்தனையும் பயனிழந்த செதில்கள்போல உதிர்வதையும் கவனித்தவாறு எழுந்தான்.

ஒளியைத் தேடி உடலை முறுக்கிக் கிளையை நீட்டும் மரத்தைப் போல சாந்தமும் அமைதியும் தேடிக் குவியும் மனத்துடன் கைக் கோலை ஊன்றித் தொடர்ந்து மேலேற ஆரம்பித்தான்.

*

# பூர்வ கிரந்தம் 5

... மனிதர்களுக்குப் பச்சோந்தியிடமிருந்து கற்றுக்கொள்வதற்குச் சில பாடங்கள் உள்ளன ...

மூன்றாவது குரு, ஸோமிட்ஸியாவின் முதல் மொழியகராதியை உருவாக்கினார். புலன் அனுபவங்களுக்கும், பொருட்கள் மற்றும் அரூபங்களுக்குமான உறவை நிர்ணயிக்கும் ஒலிக்குறிப்புகளை வரி வடிவமாக்கும்போது உண்டாகும் சிக்கல்களைப் பற்றி ஏகப்பட்ட சுவடிகளில் பதிந்திருக்கிறார். என்றாலும்,

ஒலிக்குறிப்புகளில் ஒரு பொதுத் தன்மை உருவாக்கப்பட வேண்டும்; அப்போது,

மனிதர்களும், விலங்குகள் மற்றும் பறவைகளும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதும், தமக்கிடையிலான பேதங்களை அடையாளம் காண்பதும் எளிதாகிவிடும்.

என்பது மூன்றாவது ஸோமிட்ஸுவின் வாக்கு.

நான்காவது குரு, காய்கனிகளையும், மாமிசத்தையும் நெருப்பு மற்றும் நீரின் உதவியால் பதப்படுத்துவதன் மூலம், அவற்றின் உள்த் தளங்களின் ரகசிய அடுக்குகளில் சில மாறுபாடுகளைச் செலுத்த முடியுமென்றும், இயல்பான வன வாழ்க்கையை விடுத்து, நிழலிலும் உறக்கத்திலும் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிடும் ஸோமிட்ஸியப் பிரஜைகளின் ஜீரண உறுப்புகள் லகுவாகச் செயல்பட ஏதுவாய் இருக்குமென்றும் எடுத்துச் சொன்னார்.

ஐந்தாவது குரு உணவுப்பழக்கங்களைப் பற்றி மேலும் ஆழமாகச் சிந்தித்தவர். அவருடைய கருத்துக்கள்,

உணவின் இன்றியமையாமை,

ருசி என்ற செயற்கையான மனப்பழக்கம்,

உணவின் தேவை மீறும் போது பனிக்கட்டி போல உருகி ஓடிவிடும் தர்மங்கள்

ஆகியவை பற்றி விவரிக்கின்றன. அவருடைய பார்வைகள் வழங்கிய தரிசனங்களால் ஸோமிட்ஸிய ஞானப்புலம் செறிவு பெற்றது.

பசிக்காதபோது விலங்கினங்கள் எதுவுமே புசிப்பதில்லை, மனித இனம் மட்டுமே எந்நேரத்திலும் உண்ணத் தயாராயிருக்கிறது என்று எடுத்துச் சொன்னவர் ஐந்தாவது ஸோமிட்ஸு. அது மாத்திரமின்றி, விழித்திருக்கும் பொழுதின் பெரும்பாலான நேரத்தை உணவு தயாரிப் பதிலும் உணவுக்கான மூலப் பொருட்களைத் தயாரிப்பதிலும் ஈடு படுத்தும் காரணத்தால், மனித குலம் இயற்கை என்னும் மகத்தான சமையலறையை விட்டு விலகி விலகிச் செல்கிறது என்று கண்டறிந்தார் அவர்.

பஞ்சபூதங்களில் நெருப்பையும் நீரையும் உணவுத் தயாரிப்பில் நேரடியாகச் செயல்படுத்துவதன் மூலம் விலங்கினங்களுக்கும் மனித இனத்துக்குமான இடைவெளி அதிகரித்து விட்டதென்றும், இந்த ஒரே காரணத்தால் பிற ஜீவராசிகளை விடத் தான் உயர்ந்தது என்பதான பிரமை மனித குலத்தின் மேல் தூசு போலப் படர்ந்துவிட்டது என்றும் அறிவித்தவர் ஐந்தாவது ஸோமிட்ஸு. ஸோமிட்ஸுவாக நியமிக்கப்படு பவர்களுக்கு வேக வைக்காத பண்டங்களை மாத்திரமே படைக்க வேண்டும் என்று விதி வகுத்தார்.

ஆறாவது குரு, தன் வாழ்நாள் முழுவதும், பச்சோந்திகளைப் பற்றி மட்டுமே சிந்தித்தவர். இருக்கும் இடத்துக்கேற்றபடி நிறத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் ஆயுளை நீட்டித்துக் கொள்வது பற்றி எழுதி யிருக்கிறார். சிரஞ்சீவித்துவத்துக்கான விழைவு கொண்ட மனிதர் களுக்குப் பச்சோந்தியிடமிருந்து கற்றுக்கொள்வதற்குச் சில பாடங்கள் உள்ளன என்றும் எடுத்துரைத்திருக்கிறார். ஐந்தாவது குருவின் உபதேச மாக ஸோமிட்ஸுகள் மீது விதிக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டை நெகிழ்த்தியவர் இவர். ருசியை மனப்பழக்கம் என்று கொள்ள வேண்டியதில்லை, அது ஒரு இயற்கை விந்நியாசமே என்று உரைத்தார். ருசி செயற்கையானது எனில், காய்களுக்கும் கனிகளுக்குமான வித்தி யாசத்தை உண்டாக்குவது இயற்கையின் தொழிலாக எவ்வாறு இருக்க முடியும் என்று வினவினார்.

ஏழாவது குருவுக்கு ரசாயனத்தில் மிகுந்த ஈடுபாடு. தனிம உலோகங்களிலிருந்து கலப்பு உலோகங்களை உருவாக்கும் முறையை

யும், சாதாரண உலோகங்களைப் பொன்னாக மாற்றும் ரஸவாதத்தையும் பற்றிச் சிந்தித்தவர். ஆலயங்களிலும் அரண்மனையிலும் பூஜைப் பொருட்களுக்கான கொள்கலங்களாகக் கலப்பு உலோகத்தால் செய்யப் பட்ட பாத்திரங்களையே பயன்படுத்த வேண்டும் என்ற நியமத்தை உண்டாக்கியவர்.

ரஸவாதம் என்பது வெறும் தொழில்முறைச் சூத்திரங்களை மட்டுமே கொண்டது அல்ல, தீராத வியாதிகளை, குறிப்பாக மரணத்தை சொஸ்தப்படுத்துவதற்கான வைத்திய முறை என்பதை முன்வைத்தார். தொடர்ந்து பல பத்து வருஷங்கள் ஆராய்ச்சி செய்ததன் முடிவில் தங்கத்தை உட்கொண்டதால் இவர் மரணமுற்றார். தன் சரீரத்தின் நுழைவாயில் வரை வந்து நின்று, உள் நுழையத் தயங்கிய மரணத்தை இரு கை நீட்டி வரவேற்று உபசரித்தவர் அவர்.

எட்டாவது குரு, வளர்ப்பு மிருகங்களுக்கும் வனமிருகங்களுக்கும் உள்ள வேறுபாட்டையும், ஸோமிட்ஸியர்களுக்கும் அந்நியர்களுக்கு மிடையில் உள்ள வேறுபாட்டையும் உறுதி செய்யும் விதமாக, தேசத் திலுள்ள அனைவரின் இடது புஜங்களிலும், பிராணிகளின் நெற்றியிலும் அரச இலச்சினையைப் பதிக்க ஆணை பிறப்பித்தார். பழுக்கக் காய்ச்சிய இரும்பால் சூட்டுத் தழும்பாக இலச்சினை பதிக்கப்பட வேண்டும் என்றது ஆணை.

இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்கு, ஸோமிட்ஸி யாவின் குடியிருப்புப் பகுதிகளில் எழுந்த அலறல் ஒலி, மேகம் போல உயர்ந்து நிரம்பியதாகச் சுவடிகள் சொல்கின்றன. வளர்ப்புப் பிராணிகள் வனம் நோக்கி ஓடத் தொடங்கினவாம்.

முப்பதே நாட்களில், ஸோமிட்ஸிய வைத்தியர்களிடம் ஏழு தலை முறைக்கான சொத்துக்கள் குவிந்தன. ஸோமிட்ஸுகளின் மீதான ஆராதனையை மாத்திரமே செய்யுளாக எழுதி வந்திருந்த ஸோமிட்ஸியக் கவிஞர் பெருமான்கள் வேறுவிதமான கவிதைகள் எழுதத் தொடங் கினர். நெருப்பு பற்றியும், வலி பற்றியும், ஓடி ஒளிதல் பற்றியும், துரத்திச் செல்வது பற்றியும் பல்லாயிரம் கவிதைகள் எழுதப்பட்டன. ஸோமிட்ஸிய சிருஷ்டி மொழி செறிவுற்ற காலகட்டம் அது.

ஸோமிட்ஸிய ஜனத்தொகையின் கடைசி நபரும் சூட்டுக்கோல் பதிவின் ரணம் கொண்டுவிட்ட தகவல் தலைநகர் காமியாவிலுள்ள அரண்மனையை எட்டிய அன்று காலையில் வானில் உயர்ந்த சூரியன், எட்டாவது ஸோமிட்ஸுவின் மரணத்தைக் குறித்துக்கொண்டான். ஐம்பத்திரண்டு பிராயமே எய்தியிருந்த எட்டாவது ஸோமிட்ஸுவின் இறப்பு பற்றிப் பல்வேறு யூகங்கள் நிலவுகின்றன. ஆனால், அவை யெல்லாம் வெறும் யூகங்களே.

ஒன்பதாவது ஸோமிட்ஸுவின் காலகட்டம், ஸோமிட்ஸிய வரலாற்றிலேயே மிகவும் வித்தியாசமான ஒன்று. அரண்மனைப் பணியில் பெண்களை ஈடுபடுத்திய ஒரே ஸோமிட்ஸு இவர்தான். அரண்மனை வளாகம் பாதசரங்களின் ஒலியாலும், அரண்மனைத் தோட்டம் விடாய்த்துணிகளாலும், அரண்மனையின் அறைகள் பிரசவக் கவிச்சியாலும் நிரம்பியதாகப் பதிவுகள் சொல்கின்றன.

அரண்மனை வளாகத்துக்குள் புதிதாய்ப் பிறந்த சிசுக்களின் வருகையொலி அடிக்கடி கேட்டதாகவும், அரண்மனை மதில்களுக்கு வெளியே ஓநாய்கள் நடமாட்டம் மிகுந்ததாகவும், சிலவேளைகளில் பச்சிளங் குழந்தையின் குதறப்பட்ட அங்கங்களோ, சின்னஞ்சிறு தலையோ மட்டும் சிதறிக் கிடந்ததாகவும் செய்திகள் உண்டு. ஆதி ஸோமிட்ஸுவில் தொடங்கி, அதிக பட்சம் ஆயிரத்தெட்டு வருஷங்களும், குறைந்த பட்சம் எண்ணூற்றிருபத்தாறு வருஷங்களும் ஆட்சி செய்து வந்திருந்த ஸோமிட்ஸுக்களின் வரிசையில், ஒன்பதாவது ஸோமிட்ஸுவே ஆகக் குறைந்த ஆயுள் கொண்டவர். முப்பத்து மூன்று வருஷங்கள்.

பத்தாவது ஸோமிட்ஸு பதவியேற்ற உடன் செய்த சீர்திருத்தங்களில் முக்கியமானது, பிரஜைகள் அரசாங்கத் தழும்பு பொறித்துக் கொள்ள வேண்டியதில்லை என்பது. மனிதர்களும், அவர்தம் வளர்ப்பு மிருகங்களும் அரசாங்க முத்திரையிடப்பட்ட, தோலாலான பட்டி ஒன்றைக் கழுத்தில் அணிந்தால் போதும் என்று அரசாணை பிறப்பிக்கப் பட்டது. பின் வந்த நாட்களில், பிரபுக்கள் குழு கூடி, மன்னருக்கு ஒரு விண்ணப்பம் அளித்தது.

ஒரே விதமாகக் கழுத்தில் தோற்பட்டி அணியும்போது, மிருகங்களுக்கும் மனிதர்களுக்குமான வேறுபாடு வெளிப்படையாகத் தெரியாமல் போகிறது என்றும், மனிதர்கள் தம் அங்கிகளில் தைக்கப் பட்ட பை போன்ற அமைப்பில் பட்டியை வைத்துக்கொள்ளலாம் என்றும், மிருகங்கள் அங்கி அணியும் வழக்கமில்லையாதலால், அவை தம் கழுத்திலேயே தொங்க விட்டுக்கொள்ளலாம் என்றும் கருணை புரியுமாறு மன்னரை இறைஞ்சியது அந்த விண்ணப்பம்.

மன்னரின் கருணையானது மழைபோல வர்ஷித்தது ஸோமிட்ஸியக் குடிகளின் மேல்.

பதினோராவது ஸோமிட்ஸுவின் காலத்தில் முதன்முதலாக ஸோமிட்ஸியாவில் மக்கட் தொகைக் கணக்கெடுப்பு நடந்தது. பாரதத்தின் மீது பாரசீகம் மற்றும் காந்தாரத்தை ஆண்ட மொகலாய

மன்னர்களின் படையெடுப்பு தொடர்ந்து நிகழ்ந்து வந்தபடியாலும், புதியதொரு தூமகேது ஆகாய வெளியில் பிரவேசித்தபடியாலும், தேசத்துக்குள் அந்நியர்களது வருகை அதிகரித்தது. மன்னர் பதினோராம் ஸோமிட்ஸுவின் ஆணைப்படி, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளின் எண்ணிக்கை தொகுக்கப்பட்டது.

ஆண்கள் பெண்களின் எண்ணிக்கை பிராய பேதங்களுடன் பதிவு செய்யப்பட்டபோது, ஒரு பேருண்மை தெரியவந்தது. தேசம் பெண்களால் நிரம்பியிருந்தது. மூன்றரைப் பெண்களுக்கு ஒரு ஆண் என்ற விகிதத்தில் இருந்த ஜனத்தொகை பெண்களின் ஏக்கப் பெருமூச்சுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தகவலும் தெரிய வந்தது. மூன்றாம் ஸோமிட்ஸுவின் காலத்தில் தொடங்கி, அதுவரை அமலிலிருந்த ஒருத்திக்கு ஒருவன் என்ற மரபை அதிகாரபூர்வமாக நொறுக்கி ஆணையிட்டார் பதினோராம் ஸோமிட்ஸு.

பன்னிரண்டாவது ஸோமிட்ஸுவின் காலத்தில், மேற்சொன்ன ஆணையின் காரணமாக, பிரபுக்கள் குழுவுக்குள் பிளவொன்று உண்டானது என்றும், இதன் காரணமாக இந்த ஆணை பற்றிய தீவிரமான மறு பரிசீலனையைப் பன்னிரண்டாவது ஸோமிட்ஸு நிகழ்த்தினார் என்றும், இந்த ஆணையைத் திரும்பப் பெறும் திட்டம் ஒன்று உருவானதாகவும், அதை அரசாணையாகப் பிறப்பிக்கு முன்பே பன்னிரண்டாவது ஸோமிட்ஸு அகால மரணமடைந்துவிட்டதாகவும் அப்போதைய ஈனோங் பதிவு செய்திருக்கிறார்.

வேட்டையாடுவதில் வல்லவரான பன்னிரண்டாம் ஸோமிட்ஸு, தம்முடைய அறுபதாம் வயதில், வனவாசி ஒருவனின் விஷ அம்பு பாய்ந்து மரணமடைந்ததாகச் சுவடிகள் சொல்கின்றன.

ஸோமிட்ஸியாவில் பிரவேசிக்கும் அந்நியர்களுக்கான கடுமையான தண்டனைகள் அனைத்தையும் ரத்து செய்தவர் பதின்மூன்றாவது ஸோமிட்ஸு.

உலக மக்கள் அனைவருமே ஆதி ஸோமிட்ஸுவின் குழந்தைகள் தாம் என்றும், ஸோமிட்ஸியப் பிரதேசத்தின் அக அமைதியைக் குலைக்கக்கூடியவராகத் தென்படும் வெளி மனிதரை, தேசத்தை விட்டு வெளியேற்றினால் மட்டுமே போதும் என்றும் வரையறுத்தார் அவர்.

*

# ஒரு நட்பு

... சக மனிதர்களின் உணர்வுகளைச் சாப்பிடாமல் மனிதர்களால் உயிர் வாழவே முடியாது ...

*பதினேழு வருஷமாகவா?*

*ஆச்சரியம் திமிறும் குரலில் வெய்ஸ்முல்லர் கேட்டான்.*

*ஆமாம்.*

*தொடர்ந்து மலைகளில் மாத்திரமே சஞ்சரித்து வந்திருப்பதாய்ச் சொல்கிறீர்கள்?*

*ஆமாம். இருபதாவது வயதில் தொடங்கினேன். மனிதர்கள் தொடர்ந்து பல பத்துவருஷங்கள் மனைவியோடு வாழ்க்கை நடத்து வதில்லையா?...*

*நிதானமாகப் பதிலிறுத்த லுமும்பாவின் குரலில் சிறு கேலி தொனித்தது. பருத்த உதடுகளில் நிறைந்து வழிந்த குறுஞ்சிரிப்புடன் சொன்னான்.*

*...பதினேழு வருஷங்களாக ஆகாயத்திலோ சமுத்திரத்தினடியிலோ வசித்தேன் என்று நான் சொன்னது மாதிரியல்லவா ஆச்சரியப்படு கிறீர்கள்.*

*ஒரு தேசத்திலும் தடை செய்யவில்லையா உங்களை?*

*எதற்குத் தடுக்கிறார்கள். அமெச்சூர் மலையேறி என்று சான்றிதழ் வைத்திருக்கிறேன். முறையான ஆவணங்கள் இருக்கின்றன.*

*மலை வாழ்க்கையின் தனிமை அலுக்கவில்லையா?*

*எதற்காக அலுக்க வேண்டும். இங்கே நான் தனியாக இருப்பதாக யார் சொன்னது. எத்தனை விலங்குகள், எத்தனை பட்சிகள், எத்தனை பூச்சிகள், எத்தனை தாவரங்கள். பார்க்கப்போனால், மனித அமைப்புகளில் வாழ்கிறவர்களை விடவும் அதிகமான உயிர் களுடன் வசித்து வந்திருக்கிறேன். ஆனால், ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது...*

ஆவல் பொங்கக் கேட்டான் வெய்ஸ்முல்லர்:

*என்ன அது?*

*தாவரங்களுக்கும் சரி, பிற ஜீவராசிகளுக்கும் சரி, இயற்கையான உணவு மனிதன் அல்ல. ஆனால், சக மனிதர்களின் உணர்வுகளைச் சாப்பிடாமல் மனிதர்களால் உயிர் வாழவே முடியாது. அதிலும் கொஞ்சம் நுண் உணர்வு கொண்டவன் தன் சக மனிதன் என்றால் போதும், புரதம் மிகுந்த சாப்பாடு அது.*

சந்தோஷமாகச் சிரித்தான் லுமும்பா. ஆரோக்கியமான வெண்பற்கள் முகத்தின் கருமையை அதிகரித்துக் காட்டின.

பிற்பகலின் மந்தமான வெளிச்சம் சல்லாத் துணிபோலப் பரவியிருந்தது யாவற்றின் மீதும். மழை வருவதற்கான அறிகுறி போல வானத்தில் சிறுகச் சிறுக மேகங்கள் சேகரமாகின்றன. அமர்ந்த நிலையைச் சற்று மாற்றிப் புரண்டு உட்கார்ந்த வெய்ஸ்முல்லரின் முகம் வேதனையின் சுளிப்புக் கொண்டது. புட்டத்தில் ரத்தக் காயம் உண்டான இடத்தில் ஒட்டிப் பொருக்குத் தட்டியிருந்த காற்சட்டைத் துணி பிய்ந்து விட்டதுபோல. சுருக்கென்று உயர்கிறது வலி.

சற்றுத் தள்ளிப் பாறையில் அமர்ந்திருந்த லுமும்பா திரும்பிப் பார்த்தான். சட்டையின் மேற்புறப் பைக்குள் அனிச்சையாகப் போனது வலது கை. சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றை உருவி வெய்ஸ்முல்லரிடம் நீட்டினான்.

*இல்லை. நான் சுருட்டுப் பிடிக்கிறவன்.*

சூழலின் குளிருக்கு இதமாக உள்ளே இறங்கும் புகையைச் சற்று அடக்கி வைத்திருந்து, வளையங்களாக வெளியேற்றினான் லுமும்பா. மிருதுவான சில்லிப்புடன் இருந்த உள்ளங்கைகளால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

வெய்ஸ்முல்லர் சுருட்டுப் பற்றவைப்பதைப் பார்த்துக் கொண்டேயிருந்தவன், ஞாபகப்படுத்துவது போலச் சொன்னான்.

*உங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே...*

வெய்ஸ்முல்லரின் மனதுக்குள் சஞ்சலம் பரவியது. புதிதாக அறிமுகமாகியிருக்கிறான். இவனை எவ்வளவு தூரம் நம்புவது? வெகுளியான, குழந்தை முகம் கொண்டவனாகத்தான் இருக்கிறான். படபடவென்று பேசினாலும், வார்த்தைகளில் கவனமும் ஆழமும் இருக்கிறது. ஆனால் கண்களில் கள்ளம் இல்லை. முகத்தைப் பார்த்தபடிதான் பேசுகிறான். ஆராயும் பார்வையில்லை, வாஞ்சை ஊறும் பார்வை. என்றாலும், யாரிடமும் தயங்காமல் எடுத்துச் சொல்லக்கூடிய கதையா என்னுடையது? ஒவ்வொரு அங்குலத்திலும் மரணத்தின் கற்கள் பாவிய பாதை அல்லவா.

...உன்னைப்போலவே நானும் இருந்திருக்கலாம் நண்பனே. வெகுளியாகச் சிரித்துக்கொண்டு, தேசம் தேசமாகத் திரிந்துகொண்டு, மனித வாடையிலிருந்து விலகி, சமூகத்தின் எதிரியாய் ஆகாமலே அதை விட்டு வெளியேறி...

ஒரு கணம் நிதானித்தான். தனக்குள் ஊறும் உணர்வைப் பொறாமை என்று கொள்ள வேண்டுமோ. இல்லை, என் வாழ்வின் மீது புகார் ஒன்றும் கிடையாது எனக்கு. சொல்லப்போனால், விரும்பிய விதமாகச் சென்றுகொண்டே இருக்கக் கருணையுடன் என்னை அனுமதித்து வந்திருக்கிறது வாழ்க்கை, இன்று வரை. ஆமாம், இப்போது வரை... இந்த ஒரு புள்ளியையும் பதட்டப்படாமல் இருந்தே கடக்க வேண்டும். இனி ஒரு நாளும் உண்மை அடையாளத்தைச் சொல்ல முடியாத அளவு சிடுக்காகிவிட்ட வாழ்வின் மீது கலவையான உணர்ச்சிகள் ஊறின.

அறிமுகமான மாத்திரத்திலேயே, தன் முப்பத்தேழு வருட வாழ்க்கையை ஒரு மணிநேரத்தில் கடகடகடவெனச் சொல்லி முடித்து விட்ட புதிய நண்பனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் வெய்ஸ்முல்லர். சுருட்டு நெடியடிக்கும் வார்த்தையில் பதில் சொன்னான்:

சொல்கிறேனே...

என்னுடைய தந்தையாருக்கு நான் மிஷனரி ஆகவேண்டும் என்று ஆசை. எனக்கு வேறு மாதிரி விருப்பம் இருந்தது. பியானோவின் கட்டைகள் மீது விரல்களைப் புரட்டி, ஒலியின் விநோத சாத்தியங்களை வெளியேற்றுவதில் தனி போதை இருந்தது. மொஸார்ட், பாக்ஹ் போன்ற மேதைகளுடைய கனவுகளின் வரிவடிவத்துக்கு என் விரல்களின் மூலம் மறு உயிர்ப்பு தருவது ஆனந்தமாக இருந்தது. வியன்னாவில் ஒரு இசைப் பள்ளியில் இசையாசிரியனாக இருக்கிறேன். ஏன் சிரிக்கிறீர்கள்?

வியன்னாவில் உள்ள இசையாசிரியர் ஹிமாலயத்தின் மரத்தடியில் மண்தரையில் படுத்து உறங்க வேண்டிய அவசியம் என்ன என்று யோசித்தேன். அதுசரி, நீங்கள் பிறப்பாலேயே ஆஸ்திரியரோ?

ஆமாம். பிறந்தது வளர்ந்தது பணிபுரிவது எல்லாமே வியன்னாவில் தான்.

நல்லது நண்பரே. உங்களோடு பேசிக்கொண்டிருந்த நேரம் மிக நன்றாகவும் இன்பமாகவும் கழிந்தது...

என்றவாறு ஜூலியஸ் லுமும்பா எழுந்தான். புதருக்கு மறுபுறம் இருந்த தன் முதுகுப்பையைச் சேகரித்துக்கொண்டு வெய்ஸ்முல்லரின் எதிரில் வந்து நின்றான்.

...அது கொஞ்சம் உண்மையாகவும் கழிந்திருந்தால் இன்னும் இன்பமாக இருந்திருக்கும்... பார்ப்போம். நான் செல்கிறேன்....

என்று சிரித்தான். கசப்பு வெளிப்படையாகச் சிந்தும் சிரிப்பு. வெய்ஸ் முல்லரின் முகம் வெளிறியது.

என்ன சொல்கிறீர்கள்?

உங்களுக்குத் தெரியாத எதை நான் சொல்லிவிடப் போகிறேன் நண்பரே.

புரியவில்லை எனக்கு.

உண்மையை நினைத்துக்கொள்ளாமல், பொய் சொல்ல முடியுமா என்ன? சரி, நான் புறப்படுகிறேன்.

வெய்ஸ்முல்லர் பதட்டமாக எழுந்தான். வலது பின்னங்காலின் சதையில் உண்டாகியிருந்த காயத்தில் சீழ் கோத்திருக்கிறது போல. நிற்க முடியாதபடி காலில் வலி சுண்டியது. இருக்கும் ஒரே ஆதரவை இழக்கும் அளவு உடலில் திராணியில்லை. இந்தக் கறுப்பனை நம்பாமல் இருப்ப தற்கான காரணம் எதுவும் உதிக்கவில்லை மனத்தில். ஆனாலும், தொடங்கிவிட்ட நாடகத்திலிருந்து சடாரென்று விலகுவதெப்படி?

நான் பொய் சொல்கிறேன் என்கிறீர்களா?

லுமும்பா சிரித்தான். கொஞ்சம் கேலி கலந்த சிரிப்பு.

நீங்கள் ஆஸ்திரியரும் அல்ல; இசைக் கலைஞரும் அல்ல. நான் சிறு குழந்தையும் அல்ல. பெர்லினை ஆஸ்திரியாவுக்கு நகர்த்திக் கொண்டுபோனது யார்? ரஷ்யர்களா? அமெரிக்கர்களா?... டோக்கியோ பழைய இடத்தில்தான் இருக்கிறதா இப்போது?

மறுபடியும் சிரித்தான். வெய்ஸ்முல்லர் மௌனமாக இருந்தான். சிறு இடைவெளிக்குப் பிறகு ஏதோ சொல்ல வாய் திறந்தவனைக் குறுக்கே வெட்டியது லுமும்பாவின் சீற்றம் கலந்த குரல்.

மனித உயிர்களை இடம் பெயர்ப்பதில்தான் ஜெர்மானியர்கள் வல்லவர்கள் என்று நினைத்தேன். இடங்களையும் நகர்த்திச் செல்லும் வல்லமை உள்ளவர்கள் போலிருக்கிறது...

ரணத்தின் பொருக்கை நிதானமாகப் பிய்த்து ரத்தம் காட்டும் கறுப்ப னைச் செய்வதறியாது உறுத்துப் பார்த்தான் வெய்ஸ்முல்லர். எச்சிலை விழுங்கிக்கொண்டு தயக்கமாகச் சொன்னான்.

மன்னியுங்கள் மிஸ்டர் ஜூலியஸ். நான் ஜெர்மானியன்தான். எங்கள் தந்தைநாட்டைச் சேர்ந்த யாருமே தங்கள் பூர்விகத்தைப் பெருமிதமாய் அறிவித்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இப்போது உலகெங்கும் நிலவுவதை நீங்கள் அறியமாட்டீர்களா, என்ன?

அதெல்லாம் சரிதான்.... இசைக் கலைஞரல்லவே நீங்கள். அதை

எப்போது ஒத்துக் கொள்வீர்கள்?

வெய்ஸ்முல்லருக்கு உதறலெடுத்தது. பிரிட்டிஷ் ஒற்றனோ இவன்? குனிந்த தலை நிமிராமல் தன் கைப்பைக்குள் கைவிட்டுத் துழாவினான். மனம் வெகுவாக அதிர்ந்தது.

ஜூலியஸ் லுமும்பா உரத்துச் சிரித்தான். குலுங்கிக் குலுங்கி அவன் சிரிப்பதைக் கையாலாகாமல் பார்த்துக்கொண்டேயிருந்த வெய்ஸ்முல்லரிடம், அவனது பைக்குள் கிடைக்காத கைத்துப்பாக்கியைத் தன் இடது கையால் நீட்டினான்.

இந்தாருங்கள். இதைத்தானே தேடுகிறீர்கள்? பத்திரமாக இருக்கிறது. என்னிடமும் ஒன்று இருக்கிறது. பார்க்கிறீர்களா?

சட்டையின் வலதுபுறக் கீழ்ப் பைக்குள் நுழைத்திருந்த கையைச் சரேலென்று வெளியே எடுத்தான். பளபளத்த துப்பாக்கியைச் சுடும் நிலையில் வைத்து நீட்டினான்.

இப்போது புரிகிறதா? நான் ஏன் மனிதர்களை விட்டு விலகிச் செல்கிறேன் என்று? மவுண்ட் கைலாஸுக்கு அருகில் மனித வாடையற்ற பனிப்பிரதேசத்துக்குச் சென்றுவிடுவேன், மிஸ்த்தர் ஹான்ஸ்.

வெய்ஸ்முல்லர் சரணடைவது போல இரண்டு கைகளையும் தூக்கினான்.

அட, கைகளைக் கீழே போடுங்கள். உங்களைப் பற்றிய என் சந்தேகம் முழுக்க ஊர்ஜிதமாகி விட்டது. எந்த முனையில் போர் புரிந்தீர்கள்?

ஸ்டாலின்க்ராட்.

அடேயப்பா, தப்பியோடி இவ்வளவு தூரம் வந்துமா பயம் தணியவில்லை?

குழந்தை போலச் சிரித்தான். தன் துப்பாக்கியை மீண்டும் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். முன்பு உட்கார்ந்திருந்த அதே பாறையில் அமர்ந்தான்.

முதல் முறை உங்களுடன் கை குலுக்கும்போதே தெரிந்துவிட்டது மிஸ்த்தர் ஹான்ஸ். இசைக் கலைஞனின் உள்ளங்கை இத்தனை முரடாக இருக்க வாய்ப்பில்லை. துப்பாக்கி பிடித்துக் காய்த்த கையை அடையாளம் காண்பது சிரமமா என்ன?... சொல்லுங்கள், பிரிட்டிஷாரிடமிருந்து தப்பி வருகிறீர்களாக்கும்?

ஹான்ஸ் வெய்ஸ்முல்லர் தன் உள்ளங்கைகளால் முகத்தை மூடிக்கொண்டான். அவனுடைய உடல் அதிர்வதைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்த லுமும்பா, தன் கைப்பையிலிருந்து தோலுறை மாட்டிய தண்ணீர்ப் போத்தலை எடுத்து அவனருகில் கொண்டு நீட்டினான்.

*ஆசுவாசம் கொள்ளுங்கள் நண்பரே. நான் உங்கள் நண்பன்தான். பிரிட்டிஷாரின் ஒற்றனில்லை. என்னை நம்பலாம். என்னைப் பற்றி உங்களிடம் சொன்ன ஒவ்வொரு தகவலையும் நீங்கள் நம்பலாம். கடந்த பதினேழு வருஷங்களில், பொய் சொல்வதற்கான வாய்ப்பு எதையும் நான் சந்திக்கவில்லை. இனிமேலும் சந்திக்க வேண்டிய அவசியம் வராதென்றே நம்புகிறேன். என்னுடைய ஆவணங்களை வேண்டுமானால் பார்க்கிறீர்களா?...*

நீரை மடமடவென்று குடித்துக்கொண்டிருந்த வெய்ஸ்முல்லர், வேண்டாமென்று அவசரமாகத் தலையசைத்தான். புரையேறியது. அவனுடைய முகம் குழந்தையினுடையது போல மாறிவிட்டதாய்க் கண்டான் லுமும்பா. தவறு கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனையும் அனுபவித்தபின், பரிவுக்காக மன்றாடும் குழந்தையின் முகம் போல.

*...இத்தனை காயங்களுடன் இருக்கும் உங்களை ஒற்றையில் விட்டுச் செல்ல மனமில்லை எனக்கு. அதனால்தான் பேச்சை வளர்த்து வாயைப் பிடுங்கினேன். ஆசுவாசமடையுங்கள்...*

லுமும்பாவின் சொற்கள் தனக்குள் பனிக்கட்டிகளாய் இறங்குவதை உணர்ந்து விம்மினான் வெய்ஸ்முல்லர்.

*ஸாரி....ஸாரி...ஸாரி...*

என்று முனகினான் பலதடவை. கை நடுங்க ஒரு சுருட்டைப் பற்றவைக்க முயன்றான். மலைக் காற்றில் ஜ்வாலை தொடர்ந்து எரிய மறுத்தது. லுமும்பா மண்டியிட்டு அமர்ந்து, வெய்ஸ்முல்லரின் சிகரெட் லைட்டர் உயர்த்திய சுடருக்குத் தன் இருகைகளாலும் தடுப்பு அமைத்து உதவினான். ஹான்ஸ் வெய்ஸ்முல்லர் பேச ஆரம்பித்துச் சொல்லிக் கொண்டே போனான்...

மூன்றாவது சிகரெட்டைப் பற்ற வைத்திருந்தான் ஜூலியஸ் லுமும்பா. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கேட்டுக் கொண்டிருந்த அலுப்பு அவன் முகத்தில் பரவியிருந்ததைக் கவனிக்காமல் தொடர்ந்தான் வெய்ஸ் முல்லர்.

*...ருஷ்யாவில் இருக்கும்போது பலதடவை எனக்குத் தோன்றும். அந்த தேசத்தின் அரசியல் பாதையைத் தீர்மானித்த சித்தாந்தத்தைக் கருத்தரித்தவர் என் தந்தைநாட்டைச் சேர்ந்தவர். ஆனால், எங்கள் நாட்டின் அரசியலுக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை. எத்தனை அழகான முரண்? ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகத்திற்குக் கருவாகத் தகுந்த சூழ்நிலை. அல்லவா?*

*...போர் நின்று, தேடப்படும் ராணுவக் குற்றவாளியாகி, தலை மறைவாகச் சென்ற பிறகு, நான் யோசிக்கும் மனிதனாகிவிட்டேன்;*

ஓரிடத்தில் நிலைகொள்ள முடியாதவனாக. மனம் போன போக்கில் தேசம் விட்டு தேசம் திரிந்தபோது இந்தியாவுக்குள் வந்து சேர்ந்தேன். பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மானியப் பிரஜைகளைக் கைது செய்து முகாம்களில் அடைத்து வந்த சமயம்.

...வியட்காங் கொரில்லாக்களைச் சமாளிக்கக் கூலிப்படையாகச் செல்வதற்கு ஜெர்மானிய நாஜி ராணுவ அதிகாரிகளை ரகசியமாக நியமனம் செய்து வந்தது ஃப்ரெஞ்சு அரசாங்கம். அதன் ஏஜெண்ட்டுகள் பணத்துக்காக எதுவும் செய்து கொடுக்கக் கூடியவர்கள். அவர்கள் மூலம், என்னுடைய நாஜி அடையாளத்தை மறைத்து, ஒரு இசைக் கலைஞன் என்பதாக ஏற்கெனவே பாஸ்போர்ட் சம்பாதித்திருந்தேன். அதன்படி பதிவு செய்துகொண்டு முகாமில் அடைபட்டேன்.

...அது ஒரு தனி வாழ்க்கை. ஒருவேளை உணவுக்காக அலுமினியத் தட்டையும், தகரக் குவளையையும் ஏந்தி, வரிசையில் நிற்கும்போது உண்டாகும் கேவல உணர்ச்சியைச் சகித்துக்கொள்ள ஒருவனுக்குப் பெரும் தீரம் வேண்டும்; உயிர்வாழ்வதன் மேல் அடங்காத ஆசை வேண்டும். வெற்றிகொண்ட தேசங்களின் மக்களை ஜெர்மனி நடத்தியதை விடவும் கௌரவமாக நடத்தினார்கள் எங்களை என்றுதான் சொல்லவேண்டும். இருந்தாலும், உணவுக்காக வரிசையில் நிற்கும் போது, பயனெட் பொருத்திய துப்பாக்கிகள் உங்களைச் சுற்றிலும் நின்று, நீங்கள் பிறழும் ஒரு கணத்திற்காகக் காத்திருக்கும்போது, உயிர் வாழ்வின் அர்த்தம் முற்றாக மாறிவிடுகிறது. நிச்சயமின்மையும் தர்க்கமுறிவும்தான் வாழ்வின் செய்திகள் என்று தெரிய வருகிறது.

....கூண்டில் உயிர் தரித்திருப்பதைவிடவும் ஆகாயத்தில் பருந்துக்கு இரையாவதே மேல் என்று எண்ணும் சிறுபறவைபோல, பிரிட்டிஷ் காவலிலிருந்து தப்பினேன். என்னுடன் தப்பி வந்த இத்தாலியன், கணுக்காலில் குண்டடிபட்டுச் சிக்கினான். இத்தனை வருடங்களை ஒரு கீறலுமின்றிக் கழிக்க உதவிய என் அதிர்ஷ்டம் என்னைக் கைவிட்ட முதல் சந்தர்ப்பத்தில் மலைப்பாதையில் கிடக்கிறேன். உடல் முழுக்க ரணகாயங்களுடன்... வளைக்குள் பதுங்கிய எலிக்கு, வளை வாயில் மீது ஓடும் சருகும் மரணத்தின் சங்கேதம் போலத் தெரிவது நியாயம்தானே... என்னைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம் நண்பர் ஜூலியஸ். உங்களை நான் முழுக்க நம்புகிறேன்...

ஜூலியஸ் லுமும்பா முதன்முறையாகக் குறுக்கிட்டான்.

உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது நண்பர் ஹான்ஸ். ஆனாலும், அவர்களுக்கு நீங்கள் வேண்டும். கைதியாகவாவது வேண்டும். காரணம், அவர்களுடைய இனம் நீங்கள். போர்வீரர் என்று அறியாத வரை உங்களை அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள்.

*ஆனால், நான் அப்படியல்ல. நான் வேண்டாதவன். என் இனத்துக்கு வெளியில் யாருக்குமே வேண்டாதவன்...*

வெய்ஸ்முல்லர் எழுந்து நாலு தப்படிகள் நிதானமாக நடந்து, ஜூலியஸ் லுமும்பாவின் வாயில் புகைந்துகொண்டிருந்த சிகரெட்டைப் பறித்தெடுத்துத் தன் உதடுகளில் பொருத்திப் புகையை உறிஞ்சினான்.

*கனத்த குரலில் லுமும்பா தொடர்ந்தான்.*

*...பாவம். மனிதர்கள்தாமே. எதிர் நிலை இல்லாது போனால், தன்னிலையையே அறிய முடியாதவர்கள். முரண்களின் அடிப்படையில் தங்கள் அறிதல்முறையை வளர்த்துக்கொண்ட வெள்ளையர்கள். இரவும் பகலும் ஒன்றுக்கொன்று எதிர்நிலைகள் என்றுதான் அவர்களால் அறியமுடியும். ஒரே தொடர்நிலையின் இரு அங்கங்கள் அவை என்று தெரியாது அவர்களுக்கு...*

*நீங்கள் மலையேறியாக இருக்க வேண்டியவரே இல்லை, மிஸ்டர் ஜூலியஸ். தத்துவவாதியாகி இருக்க வேண்டியவர்...*

வெய்ஸ்முல்லரின் இடையீட்டைக் கவனிக்காதவன்போலத் தொடர்ந்தான் லுமும்பா.

*நெருக்கடியில் இருக்கும் மனத்துக்குத் தெரியும், முடிவற்றுத் தொடரும் அந்தகாரத்தில், வெளிச்சம் என்பது வெறும் குறுக்கீடு மட்டுமே என்று...*

வெய்ஸ்முல்லரிடமிருந்து திரும்பப் பெற்ற சிகரெட்டை ஆழ்ந்து இழுத்தான். தலையை வேகமாக அசைத்துக்கொண்டான்.

*வரிக்குதிரைக்கும் சிங்கத்துக்கும் உள்ள விரோதம் நிச்சயம் தோலின் நிறம் சார்ந்ததல்ல மிஸ்த்தர் ஹான்ஸ். என்னை, என் இனத்தைக் கீழ்த்தரமாக விலக்கினாலும், சில உண்மைகளை அவர்களால் அழிக்க முடியாது. பல்லாயிரம் விந்தணுக்களின் பாய்ச்சலில் தற்செயலாக விளைவதுதான் மனித உடல் என்பதும், கர்ப்பவாசம் யாவருக்கும் பொது என்பதும் பிரபஞ்ச சத்தியங்கள்... மிஸ்த்தர் ஹான்ஸ், ஆஸ்திரியாவின் விடுதியில் இருந்த காலத்தில் என்னை ஒரு சிட்டுக்குருவி என்று கற்பிதம் செய்துகொள்வேன். ஆகாயவெளியில் காத்திருக்கும் பயங்கரங்களுக்கு அஞ்சி, கூட்டுக்குள் அடைந்து கிடக்கும் சிட்டுக்குருவி என்று...*

திரும்ப அமைதி கவிந்த முகத்தில் மெலிதான புன்சிரிப்பு விரிந்தது. சடாரென்று வாய்விட்டுச் சிரித்தான்.

*ஏன் மிஸ்டர் ஜூலியஸ், சிரிக்கிறீர்கள்?*

*இல்லை, விடுதியில் இருந்த நாட்களில் நான் ஒரு பாட்டு எழுதினேன். கறுப்பின நண்பர்கள் ஒன்று கூடி அதற்கு மெட்டமைத்தோம். மெட்டு மறந்துவிட்டது. பாட்டு மட்டும் முழுசாக*

*நினைவிருக்கிறது...*

*நான் கேட்கலாமா அதை?*

*நிச்சயமாக. எனக்குமே அதை வாய்விட்டுச் சொல்ல விருப்பம் தான்.*

சாந்தமான குரலில் விவிலிய சங்கீர்த்தனம் போலச் சொல்லிக் கொண்டே போனான் ஜுலியஸ் லுமும்பா.

*ஒரு சிட்டுக்குருவியைக் கொல்வது*
*வெகு சுலபம்.*

*முதலில், உள்ளங்கை நிரம்பிய*
*தானிய மணிகளால் அதைக்*
*கவர்ந்திழுக்க வேண்டும்.*

*ஆகாயத்தை விடவும்*
*கூண்டு பாதுகாப்பானது என்று*
*நம்பச் செய்யவேண்டும்.*

*சுவாதீனம் படிந்த பிறகு,*
*எதிர்பாராத தருணமொன்றில்*
*அதன் சிறகுகளைத் தரித்துக்*
*குப்பையில் வீச வேண்டும்,*
*தூவிகளில் ஒட்டிய*
*ஆகாயக் கனவுகள் மட்டும் வண்ணம்.*

*பிறகு*
*அதன் கால்களை ஒடித்து விடவேண்டும்.*
*உயிர்வாழும் வேட்கையால்*
*நடந்தேனும் இரைதேட விடாதபடி.*

*அடுத்ததாக,*
*அதன் அலகை முறித்து விடுவது*
*நல்லது. தானாய் வந்து*
*சிக்கும் இரையைப் பிடிப்பதையும்*
*தடுத்துவிடலாம்.*
*இப்போது*
*சிட்டுக்குருவி ஒரு கூழாங்கல்*
*ஆகிவிட்டது, சிறு வித்தியாசத்துடன்.*

*கல்போலின்றி, பறந்த நாட்களை*
*நினைவு கூரும் குருவி.*
*பூர்விக ஞாபகம் போல*

*உயிர் துடிக்கும்*
*அதன் கண்களில்.*

*இனி, நீங்கள் செய்யவேண்டியது*
*ஒன்றுதான். குருவிமிச்சத்தைத்*
*தரையில் இட்டுக் காலால்*
*தேய்த்துவிட வேண்டும்.*

*சிட்டுக்குருவியைக் கொல்வது,*
*ஒரு நட்பையோ,*
*ஒரு ஆன்மாவையோ*
*முறிப்பது போல,*
*மிக மிகச் சுலபம்.*

மெலிதாக ஊதிய காற்றுக்கு இசைவாக அசைந்தன மரங்களின் தலைகள்.

*

# *The Newsman*
# தினத்தாளின் ஞாயிறு இணைப்பு

... மனிதப் பிரக்ஞையின் ஆழ்தளங்களில், கொஞ்சமும் அடிபிறழாமல், குகைவாழ்க்கையின் வன்முறை அம்சம் வண்டலாக மீந்திருப்பதற்கான நிதர்சனமான சான்றுகள் ...

## மூடிய அறைக்குள் திரியும் பூனைக்கூட்டம்

*- அமித் மிஸ்ரா*

*(முன் குறிப்பு: இந்தக் கட்டுரையை எழுதப் பெரிதும் உதவிகரமாக இருந்தது, Somitsia - Unfolding the Mystery of a Closed Beauty என்ற தலைப்பில் மிக்கைல் ருப்பர்ட் என்ற அமெரிக்கர் எழுதிய நூல்.*

*அவசியமான சில தகவல்களைக் கொடுத்து உதவியவர், இந்திய வெளியுறவு அமைச்சகத்தில் கீழ் நிலைச் செயலாளராகப் பணியாற்றும் டி.வி.சக்ஸேனா.*

*ஸோமிட்ஸியாவிலும் திபெத்திலும் விரிவாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு திரும்பியவரும், ராஜ்ய சபாவில் ஆங்கிலோ இந்தியர்களுக்கான நியமன உறுப்பினருமான ஜூட் ஜி. ராய்ல்.*

*ஸோமிட்ஸியப் பூர்வ கிரந்தம் பற்றிய பகுதிக்கு ஆதாரமாக இருந்தது, The Scripure: Longivity Redefined என்ற நூல். ஸோமிட்ஸியாவில் பல்லாண்டுகள் தங்கி, கிரந்தத்தை ஆங்கிலத்தில் ஆர்வமுடன் மொழி பெயர்த்தவர் தாமஸ் மன்ரோ என்ற ஆங்கிலேயர்.*

*மற்றும் அடையாளம் தெரிவித்துக்கொள்ள விரும்பாத, டெல்லி அதிகாரிகள் வட்டப் பிரமுகர்கள்.*

*இவர்களது உதவியின்றி, இக்கட்டுரை எழுதப் பட்டிருக்க முடியாது. இவர்களுக்கு தி நியூஸ்மேன்*

*வாசகர்கள் சார்பில் எனது மனமார்ந்த நன்றி.*

*- அமித் மிஸ்ரா. )*

கடந்த வாரத்தின் சஞ்சிகைகளில், பரவலான கவனத்தைக் கவராத வகையில் பிரசுரமாகியிருந்தது ஒரு செய்தி. பெரும்பாலான தினசரிப் பத்திரிகைகள், தேசிய நாளிதழ்கள் உட்பட, முதல் பக்கத்தில் சிறு துணுக் காகப் பிரசுரித்துவிட்டு மறந்துவிட்ட செய்தி அது. பொதுவாக இந்திய தினசரிகளின் உலக அரசியல் ஞானம் மற்றும் தீர்க்கதரிசனம், அவசிய மான அளவைவிடக் குறைவாகவே இருப்பதற்கு இன்னொரு அத்தாட்சி இது.

எங்கெங்கோ தம் சுழற்பாதையில் திரியும் கோள்கள் தமது உடனடி வாழ்வின் மீது ஆதிக்கம் செலுத்துவதாக நம்பும் இந்திய மக்கள் கூட்டத்துக்கு, அண்டை நாட்டின் அதிகாரமட்டத்தில் நேர்ந்திருக்கும் விபத்தினால் உருவாகக்கூடிய நீண்ட காலப் பின்விளைவுகள் பற்றி எடுத்துச் சொல்வது நம் கடமையாகிறது.

ஆசியாவின் அரசியல் சமநிலையைக் குலைக்கக்கூடிய கொடும் சம்பவம் ஒன்று இந்திய எல்லையில் அரங்கேறியிருக்கிறது. அண்டை நாடான ஸோமிட்ஸியாவின் உயர்மட்ட அரசியல் பிரமுகர் ஒருவர், இந்திய எல்லைக்குள் வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தியாவுக்கும் சீன மக்கள் குடியரசுக்கும் இடையில், 1962 யுத்தத் துக்குப் பின்னர் தீர்க்கப்படாமல் இருந்துவரும் எல்லைத் தகராறின் பின்னணியில் பெரும் முக்கியத்துவம் பெறுகிற நிகழ்வு இது.

பொதுவாகவே, தெற்காசியாவில் நிலவி வரும் சீரற்ற அரசியல் நிலை இன்னும் மோசமடைவதற்கான அறிகுறியாகவே இதைக் கொள்ளவேண்டும். மழையை எதிர்பார்த்துக் குடையைத் தயார் செய்பவனே புத்திசாலி என்கிறது ஒரு வியட்நாமியப் பழமொழி. இந்திய அரசாங்கத்தின் புதிய ஆட்சியாளர்களுக்கும், அவர்களின் தென்னாட்டு ஆலோசகர்களுக்கும் ஸோமிட்ஸியப் பிரச்னை தாளமுடியாத தலை வலியாக உருவெடுக்கும் வாய்ப்பு, மிகப் பிரகாசமாக இருக்கிறது. என்றாலும், படவேண்டியவர்களின் கண்களில் அது இன்னும் பட வில்லை என்பதுபோலவே காண்கிறது.

திபெத்தின் நையாண்டிச் சித்திரம் போலத் தென்படுகிற ஸோமிட்ஸிய தேசத்தைப்பற்றிய ஒரு குறுக்குவெட்டுப் பார்வையை தி நியூஸ்மேன் வாசகர்களுக்கு வழங்க விரும்புகிறேன். முதலில், ஸோமிட் ஸியாவைப் பற்றிய நிலவியல் குறிப்புகள்.

*நாடு :* ஸோமிட்ஸியா.

*எல்லைகள் :* மூன்று புறங்களிலும் சீனா, திபெத், இந்தியா. ஒருபுறம் இமாலயம்.

*மொழி :* ஸோமிட்ஸியன்.

*இனம் :* மங்கோலிய இனம்.

*ஆட்சி முறை :* மன்னராட்சி.

*ஜனத்தொகை :* எண்பத்தெட்டு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்துப் பதினேழு. (1963 கணக்கெடுப்பின்படி) அறுபது சதவீதம் ஆண்கள். நாற்பது சதவீதம் பெண்கள். நகர்ப்புறங்களில் 7 சதவீதமும், கிராமங்களில் 93 சதவீதமும் நிரவியிருக்கிறது.

*பெரும்பான்மை மதம் :* ஸோமிட்ஸிய மதம். எல்லைப் புறங்களில் அபூர்வமாகச் சில ஹிந்துக் குடும்பங்களும், பௌத்தக் குடும்பங்களும், மிகச் சில ஜைனக் குடும்பங்களும் வசிக்கின்றன. இவற்றின் கூட்டுத் தொகை நூறைத் தாண்டாது. மத்திய ஆசியாவில் தோன்றிய மதங்கள் இங்கு வேரூன்றாததற்கு, இந்தப் பிராந்தியத்தில் நிலவும் கடும் குளிர் முதன்மையான காரணமாய் இருக்கலாம் என்று சமூக ஆய்வாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

*விஸ்தீரணம் :* எழுபத்தெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு சதுரமைல்கள்.

*நில அமைப்பு :* இமாலயத்தின் சரிவுகளில் சார்த்தி வைத்த பலகை போலக் கிடப்பது. மூன்றிலொரு பங்கு மலைகளும், மீதி சமவெளிப் பகுதியும்.

*பிரதான தொழில்கள் :* கம்பளி ஆடுகள் வளர்த்தல். விவசாயம். பணப்பயிர்கள் வளர்த்தல். மலையெருமை வெண்ணெய் தயாரித்தல். பழங்களைப் பதப்படுத்துதல். தோல் பதனிடுதல். தோல் பொருட்கள், கம்பளி மற்றும் ஆடைகள் தயாரித்தல்.

*பிரதானப் பயிர்கள் :* பார்லி, கோதுமை, அரிசி, பழங்கள், காய்கறிகள்.

*கிடைக்கும் உலோகங்கள் :* தாமிரம், ஒரு சில இடங்களில் பாக்ஸைட் கிடைப்பதாகச் சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

*தலைநகரம் :* காமியா. கடல்மட்டத்திலிருந்து பதினாலாயிரம் அடி உயரத்தில் உள்ளது.

*அதிகாரபூர்வ மொழி :* ஸோமிட்ஸியன்.

*தேசியக் கொடி :* முழுமையான மஞ்சள் செவ்வகத்தின் நடுவே ஒரு பச்சை இலை.

*நாணயம் :* பெரிய நாணயம் குப்யா. சிறிய நாணயம் சதம். நாணய மாற்று அடிப்படையில் நான்கு குப்யாக்கள் ஒரு இந்திய ரூபாய்க்குச் சமமானவை.

*கல்வியறிவு விகிதம் :* மொத்த ஜனத்தொகையில் நாலேமுக்கால்

*சதவீதம் எழுத்தறிவு பெற்றவர்கள்.*

*சீதோஷ்ணம் : மலைப்பகுதிகளில் வருடத்தில் ஒன்பது மாதங்கள் உறைபனியும் மூன்று மாதங்கள் மிதமான உஷ்ணமும். சமவெளிப் பகுதிகளில் வருடம் முழுவதும் மிதமான சீதோஷ்ண நிலை.*

உலகின் பூர்வகுடிகள் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் உலகப்புகழ் பெற்ற நிறுவனமும், மணிலாவைத் தன் தலைமையகமாகக் கொண்டதுமான **தெற்காசிய சமூக ஆய்வுக் கழகம்**, ஸோமிட்ஸிய மக்களை *random sampling* முறையில் தேர்வு செய்து கேள்விகள் எழுப்பி, ஸோமிட்ஸிய வெகுமனத்தை உளவியல் பகுப்பாய்வு செய்ய உத்தேசித்தது. பதினேழு முறைகள் முயற்சி செய்தும், ஸோமிட்ஸியாவுக்குள் நுழையவே அனுமதி மறுக்கப்பட்டதாக அதன் இயக்குநர், டெங் சி மின் ஒரு அறிக்கையில் தெரிவிக்கிறார்.

ஹிமாலயத்தின் உயர்தளங்களில் நிறுவப்பட்ட நிலவறை போன்று விளங்கும் ஸோமிட்ஸிய சமூகம் மிகவும் இறுக்கமானது. ஸோமிட்ஸியக் கலாசாரத்தின் மூல வேர்கள் எவை என்று நிர்ணயிக்க முடியாத வண்ணம், வேதகால சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களும், புராண கால இறைநம்பிக்கையும் ஸோமிட்ஸிய சமூகத்தில் நிலவுகின்றன.

ஸோமிட்ஸியாவின் அரசியல் நிலைமையையும் சமூக வாழ்க்கையின் கதியையும் முழுக்க முழுக்க நிர்ணயிப்பது, பூர்வ கிரந்தம் என்றழைக்கப்படுகிற நூல். அரசியல் சாசனம் என்று கொள்ள முடியாத, மத நூல் என்று தள்ளவும் முடியாத, குழந்தைகளுக்கான மாயாஜாலப் புத்தகம் என்று சுவாரசியமாக ரசிக்கவும் முடியாத, விநோத நூல்.

டார்வினியக் கோட்பாட்டின் அழுத்தமான சான்றுகளும், அந்தக் கோட்பாட்டின் தர்க்கத்துடன் வெகுவாக முரண்படும் பல்வேறு கருத்துருவங்களும் இந்நூலில் காணப்படுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், கடுமையான கள உழைப்புக்குப் பிறகு தொகுத்து முன்வைக்கப்பட்ட பரிணாமத் தத்துவம்; இந்த நூற்றாண்டின் தலைசிறந்த நவீன பௌதிகவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் மூளைக் குழந்தையான சார்பியல் தத்துவத்தையொட்டிய பௌதிகக் கோட்பாடு போன்றவை இந்தப் புராதனமான கிரந்தத்தில் இடம் பெற்றுள்ளமை, இடைப்பட்ட காலத்தில் ஏகப்பட்ட இடைச்செருகல் களுக்கு ஆளானது இந்தத் தொகுப்பு என்று சந்தேகிக்கச் செய்கிறது.

ஸோமிட்ஸியா நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய தேசம் என்கிறது பூர்வ கிரந்தம். அதாவது, கி.மு. இரண்டாயிரத்தில். அதற்கான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் காணக் கிடைக்கவில்லை. பொதுவாகவே ஸோமிட்ஸியாவின் தோற்றம் மற்றும் உருவாக்கம்

பற்றிப் பதிவு பெற்றிருக்கும் குறிப்புகள் எல்லாவற்றிலுமே கணிசமான அளவு பொய்மை கலந்திருக்கிற மாதிரிதான் தோன்றுகிறது. சொற்களின் அதீதத் தன்மையும் விவரிப்பின் சீரற்ற தன்மையும், எவ்விதத் தர்க்கத்துக்குள்ளும் அடையடாத மாயத்தன்மை கொண்ட நிகழ்வுகளுமே ஸோமிட்ஸிய பூர்வ கிரந்தமாய் விளங்குகின்றன.

சமூகவியல், மற்றும் உளவியல் நிபந்தனைகளைப் பிரஜைகளின் மேல் நிறுவுவதற்காக எவரோ ஒரு இடைக்கால ஸோமிட்ஸுவின் ஆணைப்படி தொகுக்கப்பட்டிருக்கலாம் இந்த நூல் என்பதே ஆய்வாளர்களின் கருத்து. ஆதிகுடிகளின் வழிபாட்டு முறைகளையொட்டி பஞ்ச பூதங்களை வழிபடும் மதாசாரத்தை முன்னிறுத்தும் இந் நூல், வேத காலம் உருவாக்கிய நம்பிக்கைகளையொட்டி, ஸோமிட்ஸு என்ற தனிநபரைக் கடவுளாக வணங்கவும் நிர்ப்பந்திக்கிறது. இந்நூலின் அடிப்படை முரண்களுக்கு வலுவான சான்றாக உள்ள அம்சம் இது.

கோமிங் டோ என்பவரால் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது இந்த கிரந்தம். பழமையும், கற்பனைப் பாய்ச்சலின் விம்மிதமும் கொண்ட மொழியில் எழுதப்பட்டிருக்கும் இந்த கிரந்தத்தை அதன் காவியத்தன்மைக்காக மட்டுமே மதிக்கலாகும். மற்றபடி, அது வரலாற்று ஆவணமல்ல. வேறு ஒரு நோக்கில், உள்நோக்கம் கொண்ட அரசியல் ஆவணம் எனலாம். ஸோமிட்ஸியக் குடிமக்களின் ஆழ்மனத்தின்மீது நுட்பமான நிபந்தனைகளைக் கட்டியெழுப்பும் ஆவணம்.

கிரந்தத்தின் முழுமையான வடிவம் ஸோமிட்ஸியாவிலேயே இல்லை என்பதும்; விடுபட்ட பகுதிகளைச் சேர்க்கும் பட்சத்தில் மட்டுமே ஸோமிட்ஸியப் பூர்வ கிரந்தத்தின் அசல் வடிவம் உலகுக்குத் தெரியவ்ரும் என்பதும்; விடுபட்ட பகுதிகள் இடைக்காலத்தில் அரசியல் காரணங்களுக்காக அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய யூகங்கள்.

**ஸோ**மிட்ஸிய மக்களின் சில சடங்குகள் நவீன காலத்துக்குள் வந்து சேராத ஆதிகுடிகளுடையவை போலத் தென்படுகின்றன. ஸோமிட்ஸுவின் பதவியேற்பு தினத்தன்று நடைபெறும் விழாவில், மலையெருமையின் கழுத்தைக் கடித்துக் கொன்று பச்சை ரத்தத்தைக் குடிப்பாராம் பூசகர். செம்மறியாட்டின் பாலை உண்ணும் இவர்கள் வெள்ளாட்டுப் பாலை தெய்வ காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

உடைகளிலும், உணவிலும், உறவுமுறைகளிலும், மத நம்பிக்கைகளிலும் சிற்சில வேறுபாடுகள் கொண்டிருந்தாலும், திபெத்தி இனத்தின் இன்னொரு உட்பிரிவாகவே ஸோமிட்ஸியர்களைக் கருத வேண்டும்.

ஸோமிட்ஸிய தேசமே, திபெத்தின் குறுவடிவம் போலத் தான் இருக்கிறது.

ஸோமிட்ஸிய மக்களின் சராசரி உயரம் நாலரை அடி. தட்டையான மூக்கு. சிறு கோடு போல இடுங்கிய கண்கள். அடர்த்தியற்ற புருவம். பொதுவாகவே ரோமக்கட்டு குறைவாக இருப்பதால் உடலெங்கும் சருமத்தின் பளபளப்பு. சின்னஞ்சிறு உதடுகள். அகலமான காதுகள். கிறீச்சிடும் குரல். மஞ்சள் நிறச் சருமம். பயந்த சுபாவம். எதைச் சொன்னாலும் உடனடியாக ஆமோதிக்கிறார்கள். குறைவாகப் பேசுகிறார்கள்.

பல நூறு பேர் கூடும் அங்காடிகளும் நூலகம் போல நிசப்தம் பூண்டிருக்கின்றன. கண்மூடித்தனமான மதநம்பிக்கை உள்ளவர்கள். உதாரணமாக, குழந்தை பிறந்தவுடன் அதன் இடது கால் சுண்டுவிரலைத் துண்டித்து ஆதி ஸோமிட்ஸுவின் ஆலயத்தில் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள். இங்கே பிறந்த குழந்தைகள், ஸோமிட்ஸியாவை விட்டு ஒருபோதும் வெளியேறமாட்டேன் என்று உறுதியளிக்கும் சடங்காகும் இது.

விவசாயத்தில் ஈடுபாடு உள்ள மக்கள். கங்கையிலிருந்து பிரிந்து வரும் கிளைநதியொன்று ஸோமிட்ஸிய விவசாயத்தின் ஜீவாதாரமாக இருக்கிறது. ஸோமிட்ஸிய மொழியில் துங் லோ என்று பெயர். வெள்ளை நதி என்று பொருள். பார்லியும், கோதுமையும், சற்றுக் குறைவான அளவில் அரிசியும் முக்கிய விளைபொருட்கள். ஏற்றுமதி செய்யும் அளவு மகசூல் இல்லாவிட்டாலும், ஸோமிட்ஸியாவின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவு விளைவதாகச் சொல்கின்றன புள்ளிவிவரங்கள்.

மூன்றில் ஒரு பங்கு சரிவுப்பிரதேசமாகவும், இரண்டு பங்கு சமவெளி நிலமாகவும் அமைந்த தேசம் ஸோமிட்ஸியா. பெருமளவும், சமதரையிலேயே துங் லோ பயணிப்பதால், அதிகம் சரிவதில்லை நதியோட்டம்; நாட்டின் முக்கியமான நீர்வழித் தடமாக இருக்கிறது. பெரிய ஓடங்களில் விற்பனைப் பொருட்களும் மனிதர்களும் சதா சென்றுகொண்டும் வந்துகொண்டும் இருக்கிறார்கள். அந்த நதி பற்றி குட்டிக் கதையொன்றும் பரவலாக உலவுகிறது.

ஆதி ஸோமிட்ஸு தமது தபோவலிமையால் கங்கைமாதாவின் நீண்ட கூந்தலைப் பற்றி இழுத்ததாகவும், இழுபடும் வலி தாங்காமல் கதறிய கங்கைமாதா, தன் பின்னல் இழைகளில் ஒன்றை மாத்திரம் ஸோமிட்ஸியாவில் தவழ விடுவதாக மன்றாடி வாக்களித்து மீண்டதாகவும் ஒரு புராணக்கதை இருக்கிறது. இந்த உடன்படிக்கைக்குச் சாட்சிகளாய் நின்றவை ஒரு ஊசியிலை மரமும், வெள்ளாட்டுக் குட்டியும், கரும் பாறை ஒன்றும். ஆதி ஸோமிட்ஸுவின் ஆலயத்தில் தனி சந்நிதி ஒன்றில் வைத்து வணங்கப்படுகிறது அந்தப் பாறை.

வெள்ளாட்டின் பாலைக் கடவுளுக்குப் படைக்கிறார்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்போது, வாசலில் ஊசியிலைக் கொத்துகளைத் தோரணமாகத் தொங்கவிடுகிறார்கள்.

நிலவழிப் போக்குவரத்துக்குப் பயன்படுவன, மட்டக் குதிரைகளும் கோவேறுகழுதைகளும். தொலைவில் பார்க்கும்போதே துர்நாற்றமும் அருவருப்பான தோற்றமும் காட்டும் யாக் என்னும் மலையெருமையைப் பணக்காரர்கள் வளர்க்கிறார்கள். செம்மறியாடுகள் இழுத்துச் செல்லும் சிறு வண்டிகளும் புழக்கத்தில் உள்ளன.

ஸோமிட்ஸிய அரசியல் அமைப்பு மிகவும் எளிமையானது. கடவுளின் அவதாரமாகக் கருதப்படும் முதல்நிலைத் தலைவர் ஸோமிட்ஸு என்று அழைக்கப்படுகிறார். வானியல் வழிகாட்டலின் படி, ஸோமிட்ஸியப் பிரஜாமண்டலத்தில் ஆதி ஸோமிட்ஸுவின் மறு அவதாரமாகப் பிறந்த குழந்தை, மூன்றாம் பிராயம் முடிவதற்கு முன்னதாகவே சூசகங்களின் மூலம் கண்டறிந்து தேர்ந்தெடுக்கப்பட்டு முடிசூட்டப்படுகிறது. ஆழ்ந்த குறியீட்டுத் தன்மை கொண்ட பதினேழு சோதனைகளில் வெல்லும் குழந்தையை ஸோமிட்ஸுவாக அடையாளம் காண்கிறார்கள்.

தற்போதைய ஸோமிட்ஸுவாக இருந்தவர் இருபத்தாறாம் ஸோமிட்ஸு. பதினாறு வயது நிரம்பியவர். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டில் முடிசூட்டப்பட்டவர். திபெத்தைச் சீனம் ஆக்கிரமித்ததின் எதிர் விளைவாக, தம் பரிவாரங்களுடன் ஸோமிட்ஸியாவை விட்டு வெளியேறி, தற்சமயம் இந்திய எல்லைக்குள் நுழைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறார். இந்திய ராணுவத்தின் கவனக் குறைவினால் நிகழ்ந்துவிட்ட அசம்பாவிதத்தின் காரணமாக, இந்த ரகசிய விஜயம், உலக அளவில் பகிரங்கமாகியிருக்கிறது. இந்திய ஆட்சியாளர்களின் படுக்கையில் புதிதாகப் படர்ந்திருக்கும் முட்செடி இது.

பூர்வகாலத்தில் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்ததாக நம்பப்படும் ஸோமிட்ஸுக்கள், மனித நாகரிகம் வளர வளர, சராசரி மனித ஆயுள் கொண்டவர்களாக மாறியிருக்கிறார்கள். கடுமையான பிரம்மச்சரியம், அன்றாட உடற்பயிற்சிகள், உணவுக் கட்டுப்பாடு இவற்றின் காரணமாகச் சராசரி ஸோமிட்ஸியர்களை விடக் குறைந்தது இருபது முப்பது ஆண்டுகள் கூடுதலாகவே உயிர் வாழ்ந்திருக்கிறார்கள் ஸோமிட்ஸுக்கள் - ஒரு சில விதிவிலக்குகள் தவிர.

ஸோமிட்ஸிய சமூக வாழ்விலும், பொருளாதார அமைப்பிலும், மத நடவடிக்கைகளிலும் ஸோமிட்ஸுவின் சொல்லே அறுதியானது. மன்னரின் சொல்லை மீறுபவர்களுக்குக் காத்திருக்கும் தண்டனைகள் கடுமையானவை. கொதிக்கும் பாலில் வலதுகையை அமிழ்த்தி மூன்று

நாழிகைகள் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் குறைந்தபட்ச தண்டனை. சில விசித்திரமான தண்டனை முறைகள் பின் வருமாறு :

மண்பானைக்குள் எலியை வைத்துப் பானையின் திறந்த வாய்ப்புறம் குற்றவாளியின் வயிற்றோடு இணைந்திருக்கும்படி வைத்துக் கட்டிவிடுவது. பானையைத் தன்னிடம் கொடுக்கப்பட்ட கைவிளக்கால் சூடேற்றிக்கொண்டே இருக்க வேண்டும் குற்றவாளி.

உடல் முழுவதும் தேனைப் பூசி, கட்டெறும்புப் புற்றில் போடுவது.

மட்டக் குதிரையின் உடலில் கட்டிய கயிற்றில் பிணைத்து துங் லோவின் கரையில் குதிரையை விரட்டுவது.

இன்னும் ஏராளம் இருக்கின்றன. அவற்றைப் பற்றி விரிவாக இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். சமூக நாகரிகம் எவ்வளவு தூரம் வளர்ந்த பின்னும், மனிதப் பிரக்ஞையின் ஆழ்தளங்களில் கொஞ்சமும் அடிபிறழாமல், குகைவாழ்க்கையின் வன்முறை அம்சம் வண்டலாக மீந்திருப்பதற்கான நிதர்சனமான சான்றுகளாகவே ஸோமிட்ஸிய தண்டனை முறைகளைக் காணவேண்டும்.

இவ்வளவு கடுமையான தண்டனைகள் உள்ள அரசியல் சட்டத்தில், அத்துமீறிப் பிரவேசிக்கும் அந்நியர்களை என்ன செய்வது என்ற வழிகாட்டல் எதுவும் இல்லாதது ஆச்சரியம்தான். ஸோமிட்ஸிய எல்லைகளுடன் பூமி முடிந்து விடுகிறது என்று நினைத்திருப்பார்கள் போலும், ஸோமிட்ஸிய அரசியல் சட்டத்தை வளர்த்தெடுத்தவர்கள்.

மன்னருக்கு அடுத்த படிநிலையில் இருப்பவர் ஈனோங் எனப்படும் தலைமை நிர்வாகி. ஸோமிட்ஸுவைத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் சோதனைகளில் ஆறில் மட்டுமே தேறுபவர் ஈனோங்காக நியமிக்கப்படுகிறார். இளம் வயதிலேயே தேர்ந்தெடுக்கப்படும் ஈனோங், பிரபுக்கள் குழுவினரால் வளர்க்கப்படுவார். இருபதாம் வயதில் பொறுப்பேற்பார்.

ஈனோங்குக்கு அடுத்த படித்தரத்தில் இருப்பது பிரபுக்கள் குழு. பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாய் இருப்பவர்களும், பரம்பரைப் பணக்காரர்களும், முந்தைய பிரபுக்களின் வாரிசுகளும் பிரபுக்களாக அங்கீகரிக்கப்படுவர். அரசாங்க இலாகா ஒன்றுக்குத் தலைவராக நியமிக்கப்படுவர்.

தற்சமயம் உள்ள பிரபுக்கள் குழு இரண்டாகப் பிரிந்து கிடப்பதாகவும், கருவூலத் துறைக்குத் தலைவராக உள்ள வாங்யே பிரபுவின் கீழ் அணி சேரும் பிரபுக்கள் ஸோமிட்ஸியத் தலைமைக்கு எதிராகக் கிளம்ப இருப்பதாகவும் ஹேஷ்யங்கள் உலவுகின்றன. கூடிய சீக்கிரம் அரசியல் கொலைகள் பலவற்றை எதிர்பார்க்கலாம் என்று அரசியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். சமீபத்தில் நடந்து முடிந்த படுகொலைக்கும், ஸோமிட்ஸியாவின் உள்நாட்டு அரசியலில் பங்கு

வகிக்கும் தனிநபர் விரோதங்களுக்குமிடையில் ஏதாவது சம்பந்த முண்டா என்பதும் இந்தியப் புலனாய்வுத் துறையின் பரிசீலனையில் உள்ள கோணங்களில் ஒன்று. ஸோமிட்ஸிய உயர்மட்ட அரசியலில் உள்ள அதிகாரப் பனிப்போர் பற்றி இங்கு விரிவாகப் பேசப்போவ தில்லை. அது, ஒருவிதத்தில் தி நியூஸ் மேன் வாசகர்களின் நேரடியான அக்கறைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்குமென்பதால். உண்மையில், அந்தப் பிரச்சினை, ஸோமிட்ஸியப் பிரஜைகளுக்கும் நேரடியாகச் சம்பந்தமில்லாதது.

ஸோமிட்ஸிய மதம் சடங்குகள் நிரம்பியது. சில அம்சங்களில் பௌத்தம் போலவும், சில அம்சங்களில் இந்து மதம் போலவும் இருப்பது. கடவுளுக்குப் பயந்த ஜனங்கள். உல்லாசங்களில் வேட்கை உடையவர்கள். பெரும்பான்மை ஆண்கள் பெருங் குடியர்களாகவும், பெண்கள் கடும் உழைப்பாளிகளாகவும் இருக்கிறார்கள்.

அவரவர் குடும்பத்துக்குத் தேவையான சாராயத்தை அவரவரே வடித்துக்கொள்ளலாம் என்கிறது ஸோமிட்ஸிய அரசியல் சட்டம்.

பிரபுக்களில் ஒருபகுதி, இதுபோன்ற அரசு ரீதியான தந்திரங்களைத் தொடர்ந்து எதிர்த்து வருவதாகவும், தற்போது கொலைசெய்யப்பட்டவர் ஸோமிட்ஸிய அரசியலில் கேந்திரமான ஸ்தானத்தை வகித்தவர் என்பதால், எதிர்ப்பாளர்களின் கை தற்சமயத்துக்கு ஓங்குவதற்குப் பிரகாசமான வாய்ப்புகள் உள்ளதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது.

நடந்து முடிந்த அரசியல் கொலையின் பின்விளைவாக, ஸோமிட்ஸியாவின் உள்நாட்டு அரசியலிலும், உலக அரசியல் வரைபடத்திலும் ஏற்படவிருக்கும் மாற்றங்கள் பற்றிய ஹேஷ்யங்களை இனிப் பார்ப்போம்.

(இக் கட்டுரையின் தொடர்ச்சி... அடுத்த ஞாயிற்றுக்கிழமை வெளிவரும் விசேஷ இணைப்பில் பிரசுரமாகும்.)

*

# ஒரு கிராமம்

...வாழ்வதை விட மரணமொன்றும் அத்தனை பயங்கரமானதில்லை...

**பா**ங் டு ஒரு சின்னஞ்சிறிய மலைக்கிராமம். ஸோமிட்ஸிய மொழியில் கைதிகளின் ஊர் என்று பொருள்படும் பாங் டு, இமய மலையின் சரிவுகளில், திபெத்திய எல்லைக்கருகில் இருப்பது. தலைநகர் காமியாவிலிருந்து ஆரோக்கியமான மட்டக் குதிரையேறிப் புறப்படும் ஒரு போர்வீரன், இரண்டு பகல்களும் மூன்று இரவுகளும் இடைவிடாது பயணம் செய்தால் பாங் டுவுக்கு வந்து சேர்ந்துவிடலாம்.

முந்நூறு குடும்பங்கள் வசிக்கும் இந்த ஊரின் பிரதான தொழில்கள் கம்பளி ஆடைகளுக்காகச் செம்மறி ஆடுகள் வளர்ப்பதும், அவற்றின் ரோமங்களைத் தரித்துப் பக்குவம் செய்வதும். அமைதியான ஊர்.

காலைவேளைகளில் பரபரப்பாய் இருக்கும் கிராமம், இளவெயில் ஏறும்போது அமைதி பூண்டுவிடும். கிராமத்தின் ஆண்களில் பாதிப்பேர் செம்மறியாடுகளை மேய்க்கப் போய்விடுவார்கள். மீதியுள்ளவர்கள், சொற்பமாய் உள்ள விவசாய நிலங்களில் உழைக்கப் போவார்கள்.

ஸோமிட்ஸியாவின் தேசிய நதியான துங் லோவிலிருந்து பிரிந்து வரும் ஜீவ வாய்க்கால் ஒன்று, பாங் டு வின் புறத்தே ஓடி இறங்குகிறது. அதில் சென்று மீன் பிடிக்கவும், உணவு சமைக்கவும், கிழிந்த துணி மணி களைத் தைக்கவும், அன்றிரவுக்கான சாராயத்தை வடிக்கவும், மாலைப் பொழுதுகளில் தனது ஆண் இணைக்காகக் காத்திருப்பதுமான பணி களில் பெண்கள் ஈடுபடுவார்கள்.

குழந்தைகள், தத்தம் பாலினம் சார்ந்து தாயுடனோ தகப்பனுடனோ உழைக்கப் பழகுவார்கள்.

உழைப்புக்குப் பெயர் போன மக்கள். பாங் டுவிலும் சுற்று வட்டாரக் கிராமங்களிலும் கல்வியகங்கள் எதுவும் அமைக்கப்பட வில்லை. ஒரு முழு இரவு பிரயாணம் செய்தால் மட்டுமே கல்விக்கூடம் உள்ள கிராமத்துக்குச் சென்று சேர முடியும் என்பதாலும், கல்வியின் அவசியத்தை ஊர் மக்களுக்கு எடுத்துரைக்க யாரும் இல்லாததாலும்

ஊரின் மொத்த ஜனத்தொகையுமே படிப்பறிவு அற்றதுதான்.

ஊரில், பௌத்தர்களான மூன்றே மூன்று குடும்பங்களைத் தவிர, மற்ற அனைவருமே ஸோமிட்ஸிய மதத்தவர்கள். பௌத்தக் குடும்பங்களும் புத்தரின் சொரூபத்தை வணங்கி வந்தனவே தவிர, அவர்கள் அனுஷ்டிக்கும் சடங்குகள் அனைத்தும் ஸோமிட்ஸிய மரபைத் தழுவியவைதாம்.

ஸோமிட்ஸியாவில் தண்டனை பெற்றுச் சிறைவாசம் முடித்து வெளியேறும் பிரஜைகள், மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் பாங் டூவில் குடியமர்த்தப்படுகிறார்கள். விலக்கப்பட்ட இனம் போல ஒதுங்கிக்கிடக்கும் கிராமத்துக்கு வந்து செல்கிறவர்கள் மிகவும் குறைவு - கம்பளி ரோமங்களைக் கொள்முதல் செய்யவும் தானியங்களைப் பண்டமாற்றாக விற்கவும் வரும் வியாபாரிகள்; மாதம் ஒருமுறை தலைநகர் காமியாவிலிருந்து வந்து செல்லும் வைத்தியர் ஒருவர்; மற்றும் திபெத்திலிருந்து அவ்வப்போது வந்துபோகும் பௌத்தத் துறவி ஒருவர் ஆகியோர் மட்டுமே.

உபரியாக, கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்டதால் உண்டான ரத்தக் காயங்களுடன் நடந்து வரும் ஓரிருவரும், அவர்களை நடத்திவரும் குதிரை வீரர்களும் வருவார்கள். வீரர்களைப் பொறுத்த மட்டில் சிறைமலைக்குச் சென்று மீள்கையில், பாங் டூவில் ஓரிரவு தங்கி, விருப்பமான பொருட்களை எடுத்துக்கொண்டு, விருப்பமான பெண்களைப் புணர்ந்து திரும்புவார்கள்.

கிராமத்தின் எல்லையிலிருந்து பார்க்கும்போது, கீழே, வெகு ஆழத்தில் குட்டிக் குட்டியாய் மலையுச்சிகள் தென்படும். அவற்றில் ஒரு உச்சியில் பெரிய கட்டடம் ஒன்றிருக்கிறது. பார்வைக்கு உடனடியாகத் தெரிகிறதேயொழிய, சரிவில் இறங்கி நடந்து பின் மேலேறி அங்கே சென்று சேர்வதற்குப் பத்து நாழிகைகள் பிடிக்கும். சுண்ணாம்புக் காறையும் இரும்புக் கம்பிகளும் கொண்டு கட்டப்பட்ட கட்டடம். ஸோமிட்ஸியாவின் தண்டனைக் கைதிகளை அடைத்துவைக்கும் சிறை அது.

பாங் டூ மக்களில் பலரின் மூதாதையர் அந்தச் சிறையிலிருந்து தண்டனைக் காலம் முடிந்து வெளியேறியவர்கள். அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டதுதான் பாங் டூ கிராமம் என்றும், அதன் காரணமாகவே பாங் டூவில் வசிப்பவர்கள் தன்னிச்சையாக வெளியூர் செல்வதற்கு அனுமதி கிடையாது என்றும் சொல்வார்கள்.

சாயங்கால வேளைகளில் கிராமத்தின் குரல் உயரும். அவரவர் குடிசைகளில் வடிக்கப்பட்ட சாராயத்தை ஆண்களும் பெண்களும் அருந்தி இரவின் வருகையைக் கொண்டாடுவார்கள். நதியின் கரையில் உள்ள வெட்டவெளியில் கூடும் ஜனங்கள் முன்னிரவுப் பொழுதை

மௌனத்திலும், மிகச் சில நாட்களில், துயரம் தோய்ந்த கதைப் பாட்டு களிலும் கழிப்பார்கள்.

இரவும் போதையும் சற்று முற்றும்போது, பகலிலிருந்த உறவு முறைகள் முழுமையாக மழுங்கி, ஆண்களும் பெண்களும் விருப்பம் போல ஜதை தேர்ந்து மறைவிடம் தேடிச் செல்வார்கள். நூறாண்டு களாக ஓங்கி உயர்ந்திருக்கும் மரங்கள் திரைகளாகி உதவும். கலவியின் நறுமணத்தில் கிறங்கியதுபோல மரக் கிளைகள் அசையும்... பின்னிரவில் அவரவர் வீடுகளுக்குத் திரும்பும்போது, முன்னிரவில் இடைநீக்கம் ஆகியிருந்த உறவுகள் மீண்டும் உயிர்பெறும்.

அபூர்வமாகச் சில விடியற்காலைகளில், உறக்கத்தின் சடைவில் புரண்டு படுக்கும் கிராமத்தின் அமைதியையும் நிசப்தத்தையும் குலைப் பதுபோல ஒரு அலறல் ஒலி கீழுள்ள மலைச் சரிவிலிருந்து எழும்பி மேலேறி வரும். கிராமத்து வீடுகளின் திரைபூட்டிய உட்புறத்திலிருந்து பெருமூச்சுகள் வெளியேறி எதிர்கொள்ளும் அந்த அலறலை.

பொழுது நன்கு விடிந்த பிறகு, சிறைமலையின் உச்சியைக் கழுகுகள் வட்டமிடும். திரும்பி வரும் கழுகுகளில் ஓரிரண்டு, ஒரு விரலையோ அல்லது முழங்கை வரையிலான ஒரு முழுக் கையையோ வாய்தவறி பாங் டூவின் தெருவில் போட்டுச் செல்வதும் உண்டு.

எவ்வாறாயினும், அலறல் கேட்கும் காலைகளில், வெளிப்படை யாகப் பேசப்படாத தங்கள் விரதத்தை பாங் டூவின் மக்கள் கறாராகக் கடைப்பிடிப்பார்கள். ஆண்கள் பணிக்குச் செல்ல மாட்டார்கள். பெண்கள் சமைக்கவும், கம்பளி ரோமங்களைச் சிடுக்கு நீக்கவும், சாயங் காலப் பொழுதில் சாராயம் வடிக்கவும் மாட்டார்கள். பிறந்ததிலிருந்தே விரதம் பழகும் குழந்தைகளுக்கும் இந்த ஏற்பாட்டில் ஆட்சேபம் இல்லை.

அந்த நாட்களில் சீக்கிரமே கவிந்து விடும் பாங் டூவின் இரவில், துயரத்தின் கருமை மேலதிக அடர்த்தி பூண்டிருக்கும்.

உள்ளாடையை அணிந்து கொள்ளுமுன் தன் முலைகளைக் கையில் ஏந்தி அழகு பார்த்தாள் லேக்கி. பாங் டூவின் சராசரி முலைகளைவிடத் தன்னுடையவை அளவில் சற்றுப் பெரியவை என்பதில் மிகவும் பெருமிதம் உண்டு அவளுக்கு. சதா திறந்து கிடக்கும் முன்னங்கைகளின் பழுப்பேறிய மஞ்சள் நிறத்துக்கருகில், எந்நேரமும் மூடிக் கிடக்கும் முலைகளின் வெண்மஞ்சள் நிறம் பளீரென்றிருந்தது. இளஞ் சிவப்பு நிறச் சிறு வளையத்தின் மத்தியில் மெலிதாகப் புடைத்திருந்த காம்புகளை மெல்ல நிமிண்டிக்கொண்டாள்.

போதுமென்று தலையசைத்தவாறு, கச்சை அணியும்போது அடி

வயிற்றிலிருந்து சீறிக் கிளம்பியது ஒரு பெருமூச்சு.

வீட்டின் மூங்கில் படல் சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். தலைநகரிலிருந்து வரும் தான்ய வணிகனிடம் இரண்டு கத்தை ரோமங்கள் கொடுத்து வாங்கிய கண்ணாடி அது. எப் போதும் ஒரே பிம்பத்தைத்தான் காட்டி வருகிறது. என்றாவது ஒருநாள், அதன் பின்னால் பூசப்பட்ட ரசத்தில் நல் ஆவி ஒன்று வந்திறங்கி, தன் முகத்தின் அமைப்பைப் பழையபடி ஆக்கிக் காட்டாதா என்ற வழக்க மான ஏக்கம் இன்றும் ஊறி உயர்ந்தது. இன்னொரு பெருமூச்சு.

வலது கன்னத்தின் சதைப்பற்றில்லாத தோலையும், வெறும் பள்ளமாக மீந்துவிட்ட விழிக் குழியையும், பாதியாக உடைந்து நசுங்கி யிருந்த வலதுதாடை எலும்பையும் நுனிவிரலால் வருடினாள். இடது கண்ணிலிருந்து இறங்கிய நீர்க்கோட்டை அதே விரலால் துடைத்துக் கொண்டு கண்ணாடியை விட்டு நகர்ந்தாள்.

அன்று குடிலுக்குள் நுழைந்த புலி அவளையும் கொன்றிருக்கலாம். லேக்கிக்குப் பதினாறு வயது அப்போது. தாயையும் தந்தையையும் நிதானமாகக் கொல்லவும் குதறவும் நேரமிருந்தது அந்த மூர்க்கப் புலிக்கு. இரவும் போதையும் உறக்கமும் விரித்த திரைக்குப் பின்னால், எதிர்த்துப் போராடவும் உரத்துக் குரலெழுப்பவும்கூட அவர்களுக்குத் திராணியில் லாமல் போனது, புலிக்கு மிகுந்த வசதியாகிவிட்டது.

மூன்றாவதாக லேக்கியிடம் வரும்போது, விடியும் நேரமாகிவிட் டதும்; லேக்கிக்கு போதை இறங்கியிருந்ததும்; அவளால் அலற முடிந்ததும்; அச்சத்தின் காரணமாக இரண்டு கொலைபாதகங்களை நிகழ்த்தி முடித்திருந்த புலியின் பயத்தை அதிகரித்து விட்டது. முன்னங் காலால் முகத்தில் அறைவதுடன் திருப்தி கொண்டு, வந்த வழியே விரைந்து வெளியேறி விட்டது புலி.

ரத்தம் வழியாத இடது கண்ணால், தாயும் தந்தையும் சதைக் கூழாக மீந்திருப்பதைப் பார்த்தவாறு மயங்கி வீழ்வதற்கு முந்தைய கணத்தில், தான் சாகவில்லை என்னும் உண்மையின் ஆசுவாசத்தைச் சுவைத்தாள் லேக்கி.

ஆனால், யாரும் யாரையும் தீண்டலாம் என்னும் சுதந்திரம் கவியும் முன்னிரவுப் பொழுதிலும்கூட, ஆடவன் ஒருவனும் நெருங்க விரும்பாத முக அமைப்புடன் நாட்களைக் கழிக்கும்போது, கிராமத்தில் முக்காடிட்டு அலையும் ஒரே பெண்மணியாய் வாழ நேர்ந்தபோது, வாழ்வதை விட மரணமொன்றும் அத்தனை பயங்கரமானதில்லை என்றுதான் நம்ப வேண்டி வந்தது.

சிறைமலையிலிருந்து அவ்வப்போது வந்து ஓரிரண்டு இரவுகள் தங்கிப்போகும் காவலர்கள் கூட லேக்கியைக் கடந்து செல்லும்போது, விஷமமான புன்னகையொன்றை உதிர்த்துப் போகிறார்கள்.

எப்போதுமே, அந்திப் பொழுது, கணப்பைப் போல வெது வெதுப்புக் கொள்ளும். ஒரமாய் உட்கார்ந்து தனியே மது அருந்தி, கேளிக் கைகளை வேடிக்கை பார்க்கும்போது, ஓங்கி எரியும் தழலாய் எரிக்கும். குடிலின் கூரையில் செருகி வைத்திருக்கும் மழுமழுவென்ற மூங்கில் குழலின் நினைவு வரும். வேகமாக வீடு திரும்புவாள்.

**வீ**தியில் இறங்கினாள் லேக்கி. இன்னும் முழுவதும் இருட்டி விடவில்லை என்றாலும், வெளிறிய, பலவீனமான முழுநிலா ஆகாய வளைவில் உதயமாகியிருந்தது. நெடுங்காலமாகத் தீராத வியாதி கொண்டவனின் சருமம் போல ரத்தம் வடிந்த வெளுப்புடன் சோம்பிக் கிடந்தது ஆகாயம். முதல் மஞ்சரியின் முதல் முழுநிலா நாள்.

இந்த ஒரு இரவு மாத்திரம் வேறுவிதமாகக் கழியும். புதிதாக வந்த குடும்பத்தின் பெரியவர் ஏற்பாடு செய்யும் கேளிக்கை நிகழ்ச்சிகள் முன்னிரவை நிரப்பும். பாங் டூவின் நிரந்தர நிசப்தத்தைச் சிரிப்பொலிகள் ஊடுருவக் காரணமான நிகழ்ச்சிகள். இந்த ஒருநாளில் மாத்திரம் மது விருந்து பின்னிரவுக்கு ஒத்திப் போடப்படும். அன்று காலையிலேயே ஒவ்வொரு வீட்டிலும் தகவல் சொல்லி நினைவூட்டிச் செல்வான் கிராமத் தலைவன் திக்ஸே.

கேளிக்கைத் திடலை நோக்கி நடந்தாள்.

ஊரின் எல்லையில், நதியின் கரையையொட்டி, பெரிதாக உயர்ந்திருந்த அந்த வீடு கண்ணில் பட்டது. மூங்கில் படல்களால் பக்கச் சுவர்கள் அமைக்கப்பட்டு, காய்ந்த ஓலைகளால் வேயப்பட்ட கிராமக் குடில்களின் மத்தியில் தனியாகத் தெரிகிறது அந்த வீடு. இடுப்புயரம் வரை சுண்ணாம்புக் காறை கொண்டு எழுப்பப்பட்ட சுவர்கள். அவற்றில் பதிந்த தேவதாரு மரப் பலகைகளின் உச்சியில் கூரையாகக் கிடத்தப்பட்ட செதில் செதிலான மரப் பலகைகள். பத்து வருஷங்களில் சற்றும் மங்காத புதுக் கருக்குடன் நின்றிருந்தது.

அந்தக் குடும்பம் பாங் டூவில் வந்து குடியமரும் வரை, அந்தக் கிராமத்திலேயே செல்வச் செழிப்புள்ளவனாக இருந்தவன் திக்ஸேதான். திக்ஸேயின் தகப்பன், பழைய ஈனோாங்கின் காவல் வீரன் ஒருவனைக் கொன்ற குற்றத்துக்காகச் சிறையேறியவன். தண்டனைக்காலம் முடிந்தும் உயிர் வாழக் கிடைத்த பாக்யவான்களில் ஒருவன். சாகும்போது, தன்னு டன் வாழ்ந்த பெண்ணையும் அவள் வயிற்றில் பிறந்த சிறுவனான திக்ஸேயையும் மட்டுமே சொத்துகளாக மீத்துச் சென்றான்.

தன் உழைப்பால் முன்னேறி, நரையும் கொண்டவன் திக்ஸே. அவனிடம் இருபது ஆடுகள் இருந்தன. வனமிருகங்கள், இரண்டு வருஷத்துக்கு ஒரு முறையாவது வந்து ஆடுகளைப் பலி கொள்ளும் மர்மநோய்கள், பண்டமாற்றாகச் சிலசமயம் ஆடுகளையே கேட்கும்

தலைநகர வணிகர்கள், ஜனனம் மரணம் போன்ற பண்டிகை நாள் விருந்துகள், கைதிகளைக் கொண்டுவந்து விட்டுத் திரும்பும் காவல் வீரர்கள் போன்ற உற்பாதங்களுக்குத் தப்பி இருபது ஆடுகள் சொந்தமாக வைத்திருப்பது சாமான்யமான விஷயம் இல்லை.

ஆடுகள் போக, கிராமத்தின் தலைவனான திக்ஸேயிடம் சாராயப் பீப்பாய்கள் மூன்றும், ஒரு குதிரையும் இருந்தன. அவனுடைய குடிலில் உள்ள தானியக் குதிர் வற்றுவதேயில்லை என்று சொல்வார்கள்.

புதிய வீட்டில் குடியமர வந்த குடும்பத்தின் தலைவர், வரும்போதே இருநூறு ஆடுகளும், பத்துக் குதிரைகளும், அவற்றைப் பராமரிக்க ஏழு பணியாட்களும் கொண்டுவந்தார். கிராமத்துக்குள் நுழையும்போதே, பெரியவர் என்ற மரியாதைப் பெயரோடும் வந்து சேர்ந்தார். கிராமத்தின் கிழவர்கள் கூட அவருக்கு வந்தனம் வைக்காமல் கடந்து செல்லமாட்டார்கள். அவருடைய வசதி காரணமாக இருக்கலாம்; அல்லது, அரசாங்கத்திலிருந்து தனக்கு வந்ததாக திக்ஸே ஊர் முழுக்கச் சொன்ன நிபந்தனை காரணமாக இருக்கலாம்; மொத்தத்தில் அவர், பெரியவர்.

பெரியவருக்குப் பகலிலும் வேலை எதுவும் கிடையாது. அதிகாலையிலேயே சாராயத்தில் மூழ்குவார். அவருடைய இணையாக வந்த பெண்மணி சற்று உயர்தரக் குடும்பத்தில் பிறந்தவள் போலத் தெரிவாள். கிழிசல்களும் ஒட்டுகளும் இல்லாத உடையணிந்து, உடம்பில் அங்கங்கே அணிகலன்கள் பூண்டு நேர்த்தியாக வளையவரும் அந்தப் பெண்மணியின் கண்களில் கண்ணீர் ஊறியவாறிருப்பது ஒரு ஆச்சரியம் தான். கடந்த பல வருஷங்களாக வற்றாத கண்ணீர் அது.

இரவுகளில் நடக்கும் மது விருந்தில் கலந்துகொள்ள வரமாட்டாள் அந்தப் பெண்மணி. பெரியவர் மட்டும் வருவார். பெரும்பாலும் லோப்பாவுடன் படுத்து உருள்வார். லோப்பாவின் ஸ்தனங்கள் லேக்கியுடையதை விடச் சிறியவைதாம். மூடிய உதடுகளைத் தாண்டி வெளித்தெரியும் பற்கள். தனக்கென்று ஒரு ஆண் இல்லாதவள், லேக்கியைப்போல. என்றாலும், கிராமத்தில் உள்ள ஆண்கள் அவளைப் பராமரிக்கப் போட்டி போடுவார்கள்.

லோப்பாவிடம் அந்தக் கிழவர் கிறங்குவதைப் பார்த்துவிட்டு, அடிவயிற்றிலிருந்து பொங்கும் ஆத்திரத்துடன் தன் குடிலுக்கு லேக்கி திரும்பும்போது, வாசல் கதவு அடைத்திருக்கும் அந்தப் புது வீட்டினுள்ளிருந்து,

மகனே...

என்ற அலறல் கேட்கும் சிலநாள்.

என்னை விடு. என் மகனிடம் போகிறேன். மகனே... மகனே... என்னை விடடி . பெட்டைக் கழுதையே. மலட்டுப் பிணமே. என் மகன் வேண்டும் எனக்கு...

என்று பெரியவரின் பெண்பிள்ளை கதறும் குரலும், அவளைச் சமாதானப்படுத்த முயலும் தாதியின் அடங்கின குரலும் கேட்கும்.

வெளியூரிலிருந்து வந்திருந்தது அந்தக் குழு. பெரியவரின் ஏற்பாடு தானாம். அந்தக் கிராமத்தின் வழக்கமான கேளிக்கைகளில் நடனம்தான் பிரதான அம்சமாக இருக்கும். மையத்தில் ஆடுபவர்களுடன் பார்வையாளர்களும் எழுந்து ஆடத் தொடங்கும்வரை நிகழ்ச்சி தொடரும்.

மிக அபூர்வமாக, கதைக் கூத்துகள் நடக்கும். மாவீரர்களின் மரணம், அமரலோக மாந்தரின் வருகை, ஆதி ஸோமிட்ஸுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கருவாகக் கொண்ட கூத்துகள். இன்று, வழக்கத்திலிருந்து மாறுபட்ட ஒரு நிகழ்ச்சி நடக்கப் போவதாகச் சொன்னார்கள். இசை நிகழ்ச்சியாம்.

வந்தவர்களில் நாலுபேர் ஆடவர்கள். மூன்று பெண்கள். வழக்கமான மலை யாத்ரீகர்களை விடவும் அதிகமான சுமைகளைத் தூக்கி வந்திருந்தார்கள்.

அரை வட்டமாகச் சுற்றி அமர்ந்திருந்த கிராம ஜனங்களின் மத்தியில் அவர்கள் அமர்ந்தார்கள். தங்கள் மூட்டைகளிலிருந்து மூங்கில் குழல்கள், பித்தளைத் தகடுகள், மற்றும் குழாய்களை எடுத்தார்கள். குழுமியிருக்கும் ஜனங்களின் ஆரவார ஓசைகள் அடங்கக் காத்திருந்தார்கள்.

கடைசி இரைச்சலும் அடங்கிய பிறகு மாய நிசப்தமொன்று அந்த இடத்தில் படர்ந்து இரவின் ரகசியத்தை அதிகரித்தது. நதியோரக் கரைத் திடலில் கேட்ட முழு நிலவின் ஓசையை ஊடறுத்து இரண்டு தந்திகளின் மௌனம் ஒலிக்கத் தொடங்கியது.

நடுநாயகமாக உட்கார்ந்திருந்தவன், இடது காதின் மடலை இடது உள்ளங்கையால் லேசாக முன்புறம் மடக்கியபடி, குரல் விடுத்தான். கண்களை மூடியிருந்தான். வண்டுகளின் ரீங்காரம் போல மிதமாகவும் தொடர்ந்தும் வெளியேறிய குரல் கிளர்ச்சியூட்டுவதாய் இருந்தது.

அவன் குரல்வளையிலிருந்து வெளியேறும் சப்தம், அவனுடைய சுவாசத்தின் மணம்போல, கூடியிருக்கும் ஜனங்களின் மீது மெல்லப் படர்கிறது. அடிவயிற்றிலிருந்து அவன் எழுப்பும் ஓசை, பசித்த விலங்கு வேட்டைக்குப் பாயுமுன் கொள்ளும் ஆயத்தம் போல ரகசியமும், விசையும் கொண்டு காற்றில் பரவுகிறது. அவனுக்குள்ளிருந்து உயிரின் வாதை ஓலம் கிளம்பி ஒவ்வொரு உயிர்ப்பொருளாய் ஒவ்வொரு ஜடப்பொருளாய்த் தொட்டணைத்து, பரிவை வர்ஷிக்கிறது.

மலைச்சரிவில் தளர்வாகக் கோலூன்றி ஏறும் வயோதிகனென, நின்று நின்று நிதானித்துக் கொஞ்சம் மேலேறி, லேசாகக் கால் சறுக்கிச் சரிந்து, மீண்டும் மேலேறி, அதே இடத்தில் நிலைத்து நின்று, மீண்டும்

மேலேறி, சரசரசரவென்று சறுக்கிக் கீழிறங்கி... இழையும் அவன் குரல் நீர்ப்பரப்பில் எண்ணெய்போல நிலவின் குளிரொளியில் வெதுவெதுப் பாகப் பரவுகிறது. இணை தேடி அலைகிறது.

இந்த இடத்தில் தாளக்கருவிகள் இணைந்துகொண்டன, அவனது குரலுடன். கைகோர்த்துப் பிணையும் ஆணும் பெண்ணும்போல மனிதக் குரலும் வாத்தியங்களின் ஓசையும் ஒருங்கணைந்து உருண்டு புரண் டன. ஒரே ஆணைச் சுற்றிச் சூழும் பல பெண்கள் போலவும், பல பெண் களைத் துரத்தித் தொடரும் ஒரு ஆண் போலவும் ஓடி விளையாடின.

தோலுக்குள் அதிரும் காற்றும், ஒன்றையொன்று தாக்கும் பித்தளை வில்லைகளும், ஆகாய உயரங்களுக்கு மேலேறிவிட்ட நாயகனின் குரலும் மலைச் சரிவுகளின் எல்லாத் திசைகளிலும் மோதி வெற்றி கொண்டு திரும்பின.

பிறந்தது முதல் தனக்குள் சேகரமாகி வந்திருந்த ஞாபகங்கள் அத்தனையும் ஒவ்வொன்றாய் உதிர்ந்து, மீந்து நிற்கும் ஒரே ஒரு நினைவு தனக்குள்ளிருக்கும் மையப் புள்ளியைச் சுற்றிச் சுற்றித் தலை கிறுக்க ஆடுவதாய் உணர்ந்தாள் லேக்கி.

உடல் பரபரக்கிறது. ஜனங்களின் கூட்டத்துக்கு வெளிவிளிம்பில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்ட எண்ணெய்த் தூபங்களிலிருந்து கிளம்பும் கரும்புகையில் மூச்சுத் திணறுகிறது. துங் லோவின் ஓட்டத்திலி ருந்து தப்பிய நீர்ச் சுழி ஒன்று தன் உடலுக்குள் புகுந்து சுழற்றித் தன் தலை கிறுகிறுப்பதாகப் பட்டது லேக்கிக்கு.

ஒரு திடப்பொருள் போலக் கிடக்கும் அந்தக் குரலைத் தன் எலும்புகள் நொறுங்கத் தழுவி, தன் உடலின் ஆழத்தில் சதா நமைத்துக் கொண்டிருக்கும் தினவைச் சமாதானப்படுத்த வெறியுற்றாள் அவள்.

மதுவிருந்தின் கோலாகலங்கள் முடிந்தபோது, பாங் டுவின் இரவு மந்தமாக, கோடைக்கால நத்தையின் விசையுடன் அல்லவா நகரும், இத்தனை விரைவாகக் கடந்ததில்லையே என்று தோன்றியது லேக்கிக்கு. மாபெரும் நீர்த்தேக்கம் போலப் பரந்திருந்த பின்னிரவின் நிலவொளி யில் ஒற்றை மரமாய் அமர்ந்திருந்தாள். தன்னுள் நாவுகள் கிளைத்து உயரும் அனலின் தகிப்பில் பரவசமாய்ப் பொசுங்கியவாறு.

சற்றுத் தொலைவில் குதிரையின் சீரான தப்படி கேட்கிறது. பாதையின் வளைவில் திரும்பிய குதிரையின் மீது அமர்ந்திருந்தவன் புலப்பட்டான். குதிரையின் பித்தளைக் கண்மறைப்புகள் நிலவொளியில் மின்னின. குதிரையின் நடைக்கு இசைய, தானும் மேலும் கீழுமாகச் சலனித்தவாறு அமர்ந்து வரும் அவனைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் லேக்கி.

பாதி முகத்தை மறைத்த முக்காட்டை அனிச்சையாக நேர் செய்துகொண்டாள். இசைநிகழ்ச்சியில் ஒரு ஓரமாக நின்று, பாடகனைப் பார்க்காது, பார்வையாளர்களில் முன்வரிசையில் உட்கார்ந்து கண் செருகிக் கேட்டுக்கொண்டிருந்த பெரியவரை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த அந்த அந்நியன் போலத்தான் தெரிகிறது.

நிகழ்ச்சி முடிந்ததும் பெரியவரை அவன் தனியாக அழைத்துச் சென்று பேசியதையும், இவன் கைகளைப் பற்றிக்கொண்டு மன்றாடும் பாவனையில் பெரியவர் ஏதோ சொல்வதையும், குடுவைகளில் ஏந்திய சாராயத்தைப் பருகித் தலை வீங்கத் தொடங்கியிருந்த ஜனங்கள் யாரும் கவனித்த மாதிரித் தெரியவில்லை.

லேக்கி தங்களை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்ததையும், பெரியவரின் அருகாமையை இழந்த லோப்பாவும் தன்னைப் போலவே தனியாக நிற்பதை அவள் ரசித்துக்கொண்டிருந்ததையும், அவர்கள் மூவருமே கவனிக்கவில்லை. பெரியவரை மன்றாட வைக்கிறான் இந்த வழிப்போக்கன் என்றால், அரசாங்கத்தில் முக்கியஸ்தனாகத்தான் இருக்க வேண்டும் அவன்...

மதுவும் நினைவுகளும் தந்த கிறுகிறுப்பில் திளைத்திருந்த லேக்கி, சடாரென்று தன்மேல் ஏதோ மோதுவதை உணர்ந்தாள். அமர்ந்த நிலையிலிருந்த லேக்கியின் உடலைத் தரையில் கிடத்தி ஆக்கிரமிக்கிறது அது.

வலைக்குள் பிடிபட்ட வன விலங்கைப்போல மூச்சிறைத்தபடி, இழை இழையாய் லேக்கியின் உடலைப் பிரித்து எடுத்துவிடும் நோக்கத்துடன், லேக்கியின் உடலுக்குள் புதைந்து விடும் உத்வேகத்துடன், அல்லாடுகிறது. விரல்களும் மீசையும் மூக்கின் நுனியும் உதடுகளும் தன் முகத்தின் இடதுபுறத்திலும் துணி கிழிந்த மார்புகளிலும் தொப்புள் குழிவைச் சுற்றியும் ஆவேசமாய்ப் பதிந்தும் விலகியும் போராடுவதைப் பரவசமாய் உணர்ந்தாள்.

ஆட்படுவதின் மயக்கம் லேக்கியைப் பீடிக்கிறது. இன்னும் இன்னும் என்று விறைக்கின்றன நரம்புகள். நீருக்குள் மூழ்கியவள் போல மூச்சை அடக்கிக்கொண்டாள்.

காலங்காலமாக மூடியிருந்த கதவொன்று தனக்குள் திறக்கிறது. மதகுடைத்துப் பாயும் பெருவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிறாள். இதுவரை அறிந்திராத வலியின் ஆனந்தமும், சுகந்தமாய்ப் பரவும் நாற்றமும் தன்னை ஆட்கொள்கின்றன. உடலின் நரம்பணு ஒவ்வொன்றிலும் பரவும் பேரானந்தத்தில் நனையும்போதே, ரகசியமாக ஒரு ஏக்கமும் கிளை விட்டது லேக்கியின் மனத்தில்.

அவன் தன் வலதுமுகத்தில் ஒருதடவை கூட முத்தமிடவில்லையே.

*

# ஒரு வழிப்பறி

... நாய்கள் என்ன செய்யும் பாவம். எஜமானனின் ஆணைக்குக் கீழ்ப்படிகின்றன அவை ...

தொலைவிலேயே தெரிந்துவிட்டது, அவர்கள் வருவது. நிதானமாக நகரும் எறும்புச் சாரி போல அவர்கள் தெரிந்தார்கள். பார்வை முடியும் இடம்வரை விரிந்திருந்த சமவெளி பொதுப் பார்வைக்கு இளம் பழுப்பு நிறப் பரப்பாக இருந்தது. கண்கள் கூசுமளவு பிரகாசமாக இருந்த வெற்றுத் தரை.

குறிப்பான அவசரமொன்றும் இல்லாததால், மந்தமாக நடந்து கொண்டிருந்தார்கள் இவர்கள் இருவரும். ஆறு வருட திபெத் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் வாணங்கள் போல எழுந்து பூப் பொறிகள் சொரிந்து வீழ்வதன் லாகிரியில் தனித்தனியாக மூழ்கி நகர்ந்தார்கள். எப்போதோ ஒருமுறை தலைக்கு மேல் பறந்த பருந்துகளைப் பார்க்கத் தலையை உயர்த்தும்போது, கண்களில் வெயில் உறுத்தியது.

திபெத்தியர்கள் அளித்த அன்பளிப்புகளில் சுமக்கக் கூடியவற்றை மட்டும் மூட்டைகளாக முதுகில் ஏற்றியிருந்தார்கள். இந்தியாவை விரைந்து கடந்துவிடும் திட்டத்துக்கு இந்தச் சுமைகள் குந்தகமாக இருக்கும்தான். இந்திய எல்லைக்குள் எதிர்ப்படும் முதல் சந்தர்ப்பத்தில் எல்லாவற்றையும் விற்றுக் காசாக்கி விடலாம் என்று வெய்ஸ்முல்லர் கூறியிருந்தான். கடத்தல் பொருட்களை வாங்குவதில் தனி உற்சாகம் கொண்டவர்கள் இந்தியர்கள்.

சகல திசைகளிலும் வெளிச்சத்துக்குச் சமமாகப் பரவியிருந்த அமைதியின் நிலப்பரப்பில் சாவகாசமான நடையை ஊடறுப்பது போலத் தென்பட்டது அந்தக் காட்சி. தொலைவில், வெகுதொலைவில், திபெத்தியத் திசையிலிருந்து, மெல்லிய கானலின் நடுக்கத்தினூடாக ஒரு எறும்புவரிசை தட்டுப்பட்டது. மலைச் சரிவைத் துளைத்திருந்த குகையின் பிளந்த வாய்போலத் தென்பட்ட புற்றிலிருந்து வெளியேறி வருகிறது.

மௌனமாக நடந்துகொண்டிருந்த ஜூலியஸ் லுமும்பாவிடம் அவர்கள் வருவதைச் சுட்டினான் வெய்ஸ்முல்லர். லுமும்பா அமர்த்தலாகத் தலையசைத்துவிட்டுத் தொடர்ந்து நடந்தான். ஓரிரு கணங்களுக்குப் பிறகு, மீண்டும் திரும்பிப் பார்த்துச் சொன்னான்.

மவுண்ட் கைலாஸுக்குப் போகிற யாத்ரீகர்களாக இருக்கும்.

வெய்ஸ்முல்லர் ஆமோதிப்பாகத் தலையசைத்தவாறு மீண்டும் நோக்கினான்.

ஆனால், யாத்ரீகர்களுக்கு இவ்வளவு வேகம் தேவைப்படாதே.

லுமும்பாவும் திரும்பிப் பார்த்தான். எறும்புகள் பெரிதாகியிருந்தன இப்போது, முயல்கள் அளவு. பயண வேகம் புலப்படும் அளவு. முயல்களுக்கு முன்பாக, புதிதாகத் தென்பட்ட கட்டெறும்புகள் பாய்ந்து வருகின்றன.

நியாயம்தான். மோட்சத்துக்குப் போகிறவர்கள் மாதிரியல்லவா வேகமாய் வருகிறார்கள்.

இருவரும் நின்றுவிட்டார்கள். அவர்கள் வருவதைப் பொறுமையாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

அவர்கள் நெருங்குகிறார்கள். முன்னால் ஓடிவந்த கட்டெறும்புகள் வேட்டைநாய்களாக உருமாறுகின்றன. குதிரையின் மேல் சவாரி செய்து வரும் ஆண்கள். மார்பின் குறுக்காக ஓடும் அகலப் பட்டியில் பிணைக்கப் பட்டு முதுகின் புறத்தில் தலைமட்டும் தெரிய நீட்டிக்கொண்டிருந்த துப்பாக்கிகள். அவர்களின் தோற்றத்தில், வேகத்தில், பிசகான ஏதோ ஒன்று இருக்கிறது.

ஜூலியஸ், உன்னுடைய துப்பாக்கியைத் தயார் செய்துகொள்.

பயனில்லை நண்பனே. அவர்கள் குறைந்தது ஐம்பதுபேராவது இருப்பார்கள்.

வேட்டைநாய்கள் அருகில் நெருங்கின. முன்னால் ஓடிவரும் நாயை நோக்கித் தன் கைத்துப்பாக்கியை நீட்டிக் குறிவைத்தான் வெய்ஸ்முல்லர். ஒரு நாயைச் சுட்டுக் கொன்றுவிட்டால், மற்ற நாய்களின் வேகம் மட்டுப்படும். வருகிறவர்களுக்குத் தங்களிடமும் துப்பாக்கிகள் இருப்பதைத் தெரியப்படுத்தினதாகவும் ஆகும். வெய்ஸ்முல்லரின் நீட்டிய கையை இறுக்கிப் பிடித்து லுமும்பா சொன்னான்.

அபத்தமாக எதுவும் செய்யாதே. ஒரு தோட்டா வீணாவதுதான் மிச்சம். நாய்கள் என்ன செய்யும் பாவம். எஜமானனின் ஆணைக்குக் கீழ்ப்படிகின்றன அவை.

திபெத்தின் மேற்குப் பகுதியில் தாந்திரீகர்களான போன் - ப்போக்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதுண்டு. அவர்களாக இருக்குமோ? அல்லது, வழிப்பறிக்காரர்களாக இருக்கலாம். உரிய பருவங்களில்,

பண்ணை விவசாயத்தில் ஈடுபட்ட சாதாரணக் குடும்பஸ்தர்களாகவும், பிற சமயங்களில் வழிப்பறிக் கொள்ளையர்களாகவும் இருக்கும் கூட்டங்கள் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள் இவர்கள்.

கொள்ளையர்கள் என்றால் கவலையில்லை. சாதாரணமாக, கொல்வதில்லை அவர்கள். எதிர்க்காமல் பொருட்களைக் கொடுத்துவிட்டால் போதும். போன் - ப்போக்கள் விஷயமே வேறு. அவர்கள் மிக மிக அபாயகரமானவர்கள்; ஆயுளை நீட்டிப்பதற்கான தாந்திரீகச் செயல்பாடுகளுக்காக மனிதர்களைக் கடத்திச் செல்பவர்கள்; குறிப்பாக, கட்டுடல் கொண்ட வாலிபர்களை. ஒரு உடல் கொள்ளுமளவு குழிவு கொண்ட உலோகப் பாளங்களுக்கிடையில் இளைஞர்களைச் சிறைப்படுத்தி, பட்டினி போட்டு, உயிரோடிருக்கும்போதே அவர்களின் உடலிலிருந்து ஜீவரசம் உருக்கி எடுத்துப் புசிக்கக் கூடியவர்கள் என்றெல்லாம் ஏகப்பட்ட கதைகள் திபெத்தில் கேட்டிருக்கிறார்கள்...

**வ**ந்தவர்கள் தோலாடை உடுத்தியிருந்தார்கள். புழுதி மண்டிய ஆடைகள். ஒற்றைக் குழல் துப்பாக்கிகளை வைத்திருந்தார்கள். லூம்பா சொன்னது சரிதான். கிட்டத்தட்ட ஐம்பது பேர்.

நெருங்கி வந்த நாய்கள், குரலெழுப்பாமல் சுற்றி வந்து முகர்ந்தன இருவரையும். சிலைகள் போல நின்ற வெய்ஸ்முல்லரையும், லூம்பாவையும் அவர்கள் சூழ்ந்துகொண்டனர். அடிவயிறு குழிந்து விரிய மூச்சிழைத்தவாறு, நாயகமாகத் தென்பட்ட ஒருவனின் குதிரையைச் சுற்றிச் சுற்றி வந்தன நாய்கள். வால்களை அசாத்திய வேகத்தில் ஆட்டின. நீண்டு தொங்கிய நாக்குகளிலிருந்து உமிழ்நீர்க் கோடுகள் தரையிறங்கின.

குரல் கொடுத்து நாய்களை விலக்கி, இவர்களின் அருகில் குதிரையை நகர்த்திக்கொண்டு வந்தான் தலைவன். கொச்சையான திபெத்திய மொழியில் கேட்டான்.

எங்கிருந்து வருகிறீர்கள்?

லாஸாவிலிருந்து.

வெய்ஸ்முல்லர் அமைதியாக இருந்தான். ஜூலியஸ் லூம்பா அளவுக்குக் கச்சிதமாகப் பதில் சொல்ல வராது அவனுக்கு. சடாரென்று ரத்தம் எகிறி, துப்பாக்கி கைக்கு வந்துவிடும்.

எங்கே போகிறீர்கள்?

ஸோமிட்ஸியாவுக்கு.

அங்கே எதற்காக?

நாங்கள் யாத்ரீகர்கள்.

அரசாங்க விருந்தினர்களா?

*இல்லை.*

*உயிரை விடவும் பொருட்கள் மலினமானவை என்று தெரியும் தானே. உங்கள் சுமைகளைக் கொடுப்பதற்கு ஆட்சேபம் இல் லையே?*

லுமும்பா சிரித்துக்கொண்டே கேட்டான்:

*ஆட்சேபித்தால், கௌரவமாக அனுப்பி வைப்பீர்களோ!*

அந்த இடத்தின் இறுக்கம் சடாரென்று தளர்ந்தது. கொள்ளையர் தலை வனும் சிரித்தான்.

*எங்களுடைய ஆவணங்களை மாத்திரம் எடுத்துக் கொள்கிறோம்.*

என்று பையைத் தொட்டான் லுமும்பா. கொள்ளையனின் சிரித்த முகம் உடனடியாகக் கடுகடுத்தது. பேச்சுக் கொடுத்தவாறே பையிலிருந்து ஆயுதம் எதையும் எடுக்கிறான் என்று சந்தேகமோ என்னவோ. அடித் தொண்டையிலிருந்து உறுமினான்.

*தொடாதே.*

கையை விலக்கிக்கொண்டான் ஜூலியஸ் லுமும்பா. அவனுடைய ஆட்கள் இவர்களை நெருங்கி வந்து கால் சராய் மற்றும் சட்டைப் பைகளைச் சோதனையிட்டு, துப்பாக்கிகளையும் பணத்தையும் எடுத்துக் கொண்டார்கள். வெய்ஸ்முல்லரின் சுருட்டுகள் மட்டுமே மிஞ்சின.

*ம். திரும்பிப் பார்க்காமல் ஓடுங்கள்.*

வெய்ஸ்முல்லரின் முகம் கடுமையாகச் சிவந்திருந்தது. லுமும்பா வழக்கமான நிதானத்துடன் இருந்தான். மந்தமாக நடக்கத் தொடங்கி னார்கள் இருவரும்.

•

***நா***ம் *கொஞ்சமாவது எதிர்ப்புக் காட்டியிருக்க வேண்டும்.*

என்று சொன்னான் வெய்ஸ்முல்லர்.

*பயன் எதுவும் இருந்திருக்காது.*

என்று உடனடியாகப் பதிலளித்தான் ஜூலியஸ் லுமும்பா.

*உன்னோடு இருந்த இந்த ஆறுவருடங்களில், என்னுடைய போர்க்குணம் கணிசமாகக் குறைந்துவிட்டது மாதிரி உணர்கிறேன். இன்னும் கொஞ்சநாள் போனால், திபெத்திய புத்தத் துறவி போல ஆனாலும் ஆகிவிடுவேன்.*

சிறு புன்சிரிப்புச் சிந்திவிட்டு, விட்ட இடத்திலிருந்து லுமும்பா தொடர்ந்தான்.

*அத்தனைபேர் கொண்ட குழுவிடம் தனியாக நின்று போராடுவது வீண் வேலை.*

ஓரிருவரைக் கொன்றுவிட்டால், மற்றவர்களிடம் ஒரு அச்சத்தை உண்டாக்கலாமே.

இது மாதிரியான சந்தர்ப்பங்களில், தம்முடைய குழுவில் இத்தனை பேர்வரை பலியாக வாய்ப்பிருக்கிறது என்று அவர்களிடமும் ஒரு கணிப்பு இருக்கத்தானே செய்யும். அந்த அளவு நபர்கள் இறப்பது, திட்டமிட்ட தாக்குதலின் பகுதிதான். அதனால், அதை அவர்கள் இழப்பாகவே கருதமாட்டார்கள். அதைத் தாண்டிய எண்ணிக்கை யில் உன்னால் ஆட்களைக் கொல்ல முடியுமானால்தான் அவர் களுக்கு அச்சம் உண்டாகும்..

வாஸ்தவம்தான். நான் சிவிலியன் மாதிரிப் பேசிக்கொண்டிருக் கிறேன். நீ ராணுவ அதிகாரி போலப் பேசுகிறாய். சகவாசம் இரண்டுபேரிடமுமே தன் செல்வாக்கைப் பதித்திருக்கிறது.

இரண்டுபேரும் சிரித்தார்கள். லுமும்பா சிரிப்பு அடங்காமல் சொன்னான்.

எப்படியோ, இவ்வளவு காலம் கழித்து, இரண்டுபேரும் நிஜமாகவே சமமானவர்களாகி விட்டோம்.

என்ன சொல்கிறாய்?

இரண்டுபேரிடமுமே ஆவணங்கள் எதுவும் இல்லை இப்போது.

வெய்ஸ்முல்லர் அமைதியாக இருந்தான். பிறகு சொன்னான்.

சிரமப்படத்தான் போகிறோம்.

உன்னுடைய ஆவணங்கள் இருந்தால்தான் இன்னும் அதிகமாகச் சிரமப்பட்டிருப்பாய்.

உளறாதே.

உளறுவது நானல்ல. ஆவணமே இல்லாதிருப்பது, போலியை வைத்திருப்பதை விட உத்தமமானது.

வெய்ஸ்முல்லர் மௌனமானான்.

வெயிலின் காட்டம் குறைந்து, வெளிச்சத்தின் அழுத்தம் மட்டுமே வியாபித்திருந்த சாயங்காலப் பொழுது. மலைச்சரிவு தாமிர நிறம் கொண்டுவிட்டது. தெளிந்த ஆகாயம். சற்று முன்னதாகவே வந்துவிட்ட வெளிறிய நிலா. காற்றின் இதமான வருடல். சுற்றுவெளியில் படிந்திருந்த தியானத்தன்மையில் திளைத்து மல்லாந்து வெகுநேரமாகப் படுத்திருந்த வெய்ஸ்முல்லர் எழுந்து உட்கார்ந்தான்.

பேசாமல் லாஸாவுக்கே திரும்பியிருக்கலாம் நண்பனே.

ம்ஹூம். உளப்பூர்வமாக விடைபெற்றுவிட்டேன் லாஸாவிட மிருந்து. இனி மீண்டும் அங்கே போவது முறையாக இருக்காது. ஸோமிட்ஸிய அனுபவத்துக்கான ஆவல் நிரம்பிக் கிடக்கிறது

எனக்குள்ளே.

ம்.

திடீரென்று ஜூலியஸ் லுமும்பாவின் குரலில் அழுத்தம் கூடியது.

ஹான்ஸ், உள்ளுணர்வு பற்றி என்ன நினைக்கிறாய்?

தோள்களைக் குலுக்கி, நடுவாந்தரமாகத் தலையசைத்தான் வெய்ஸ் முல்லர்.

பௌதிக உலகத்தின் வஸ்துக்கள் பற்றி மாத்திரம்தான் நான் அபிப்பிராயம் வைத்துக்கொள்வேன்.

சரிதான். மேற்கத்திய மனம் வேறு என்ன சொல்லும்...

வெய்ஸ்முல்லர் சுருட்டு ஒன்றைக் கையிலெடுத்தான்.

...உங்களுடையது நவீன கலாசாரம். தொழில்நுட்பத்தின் குழந்தை. எங்களுடையது ஆதிவாசிக் கலாசாரம். உள்ளுணர்வுதான் அதன் மையப் புள்ளி.

எதற்காக இதெல்லாம் சொல்கிறாய் இப்போது?

என் வாழ்வின் மிக முக்கியமான தருணமொன்று ஸோமிட்ஸியாவில் நிகழவிருக்கிறது என்று என் உள்ளுணர்வு சொல்கிறது...

சுருட்டுப் புகைக் கொத்தை ஊடுருவித் தொலைதூரத்தில் பதிந்திருந்தது லுமும்பாவின் பார்வை. சற்றுநேரம் அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, வேறுபுறம் திரும்பினான் வெய்ஸ்முல்லர்.

இருள் கனத்து இறங்குவதற்காகக் காத்திருந்தார்கள் நண்பர்கள் இருவரும். இந்திய ராணுவத்தின் ரோந்துப் பகுதி இது. அடர்த்தியாக இருண்டவுடன் இந்திய எல்லைக்குள் நுழைவதாகத் திட்டம்.

*

# பகதூர் சிங்

... மனிதர்களிடமிருந்து தற்காத்துக்கொள்வதை விட, மிருகங்களின் சூழலில் வசிப்பது அத்தனை பயங்கரமானதாய் இல்லை ...

தூக்கம் கலைந்துவிட்டது. பக்கத்தில் படுத்திருக்கும் ரூப்மதியிடம் சலனமெதுவுமில்லை. உறக்கத்தின் ஆழத்தில் புதைந்திருந்த அவளை இழுத்து அணைத்துக்கொண்டான் பகதூர்சிங். வழக்கமாகச் சிறு சிணுங்கலுடன் உடன்படக்கூடியவள் அவள். இன்று அவளுடைய உடலில் சற்று விறைப்பு இருப்பதாக உணர்ந்தான். ஒருவேளை, தன்னுடைய பிரமையாகக்கூட இருக்கலாம். அதிகாலைக் குளிரில், உடம்புக்கு வெதுவெதுப்புத் தேவைப்படும்போது, பிரமைகளைப் பற்றிக் கவலைப்படலாமா? சற்று வன்மமாக ரூப்மதியைத் தன் உடலுடன் பிணைத்துக்கொண்டான்.

நிரந்தரமாக அவள் உடலில் தங்கியிருக்கும் கடுகெண்ணெய் மணத்தைப் புதிதாக நுகர்ந்தான் இப்போது. ரூப்மதி கடும் உழைப்பாளி. ரொட்டிக்கு மாவு பிசைந்து தருவது மாத்திரம்தான் பகதூரின் வேலை. கச்சிதமான வட்டத்தகடுகளாக மாவைத் தேய்ப்பது, நெருப்பில் வாட்டுவது எல்லாமே ரூப்பின் பொறுப்புதான். சப்ஜிக்கான காய்கறிகளை நறுக்கித் தந்துவிட்டு பாய்லரைத் தயார் செய்யப் போய்விடுவான் பகதூர். ரயில் பாதை போடும் வேலைக்குப் போகும் ஆட்கள் வர ஆரம்பிப்பதற்குள் சாய் ரெடி பண்ண வேண்டும். கால் நிமிஷம் பொறுக்கமாட்டார்கள் அவர்களெல்லாம்.

கடைசி ஆள் போவதற்குள், அந்தக் குடிசையைச் சுற்றிலும் சப்ஜியின் பிரமாதமான மணம் பரவி விடும். சுடச் சுட சப்ஜி நிரம்பிய அலுமினியத் தூக்கையும், ரொட்டிகளை அடுக்கிய பிரம்புக்கூடையையும் கைக்கொன்றாகச் சுமந்துகொண்டு விரைவாள் ரூப்மதி.

அவளுடைய உழைப்பும் சேராவிட்டால், இந்தக் குடிசை இருக்கும் இடத்தைச் சொந்தமாக வாங்கியிருக்க முடியாது. ஆனால், ரயில் பாதை வேலை முடிந்த பிறகு இந்த மலைப்பாதையில் மனித நடமாட்டம்

குறைந்துவிடும். ஸோமிட்ஸிய எல்லைவரை ரயில்பாதை போடத் திட்டம் இருப்பதாகவும், நிதி ஒதுக்கீடு கிடைத்துவிட்டதாகவும், இவர்கள் தயாரிக்கும் ரொட்டிகள் மற்றும் சப்ஜியின் ருசி வேலையாட்கள் எல்லாருக்குமே பிடித்துவிட்டதால் அவர்கள் வேலை தொடங்கும் இடங்களுக்கெல்லாம் பகதூர் தம்பதி கூடவே வரலாம் என்று சொல்லி யிருக்கிறான் அந்தக் கங்காணி.

இரண்டு கைகளிலும் நாலு நாலு விரல்களில் மோதிரமும், கழுத்தில் கனத்த உருட்டுச்சங்கிலியும் அணிந்து, கறைபடாத சலவை உடையுடன் ஜீப்பில் வந்திறங்கும் கங்காணி. ரூப்மதியைப் பார்த்த வாறேதான் அவன் எப்போதும் பேசுவான். பகதூருக்குப் பிடிக்கவில்லை தான் அது. வெறும் பார்வையில் என்ன ஆகிவிடப் போகிறது என்று சமாதானப்படுத்திக் கொள்வான்.

அப்படியே பார்வையைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குச் சென்று விட்டாலும், அதுபற்றி யோசிக்க என்ன இருக்கிறது? அதெல்லாம் ரூப்மதியின் சொந்த விஷயம். தவிர, பணக்காரனாவது என்று முடி வெடுத்துவிட்டால், கொஞ்சம் நீக்குப்போக்காக நடந்துகொள்ளத்தான் வேண்டும். கழுத்திலும் காதிலும் மூக்கிலும் இடுப்பிலும் தங்கநகைகளை அடுக்கிக்கொள்ளும் ஆசை இருக்கிறதா, இல்லையா? எதையுமே கொடுக்காமல் எதையாவது வாங்க முடியுமா என்ன? கூரை வீட்டுக்குள், இரண்டு பூட்டுகள் பூட்டிய பழங்கால ட்ரங்க்குப் பெட்டிக்குள், மேலும் கீழும் பாதுகாப்பாய் விரித்த துணிகளுக்கிடையில், குருவிபோலச் சேர்த்து வைத்திருக்கும் கரன்ஸி நோட்டுகளும் வெள்ளி நாணயங்களும் நினைவில் வந்தன.

அடுப்பில் இன்னொரு கைப்பிடி மலைக்கரியை அள்ளிப்போட்டு, நெருப்பைக் கிளறி விட்டான் பகதூர். உள்ளே ரூப்மதி நடமாடும் ஓசை கேட்கிறது. வீட்டின் பின்புறம் திரியும் வான்கோழிகளும், கிண்ணிக் கோழிகளும் எழுப்பும் ஒலி பெரிதாகக் கேட்கிறது. இதுகள் போடும் சத்தம் ராத்திரியில் சிக்கலை உண்டு பண்ணிவிடுகிறது. அன்றைக்கு ஏதோ கவனக்குறைவாக வாசல் படலைச் சரியாகச் சார்த்தாமல் விட்டு விட்டதில், பகதூருக்கும் ரூப்மதிக்கும் நடுவே வந்து ஒரு ஓநாய் படுத்துக் கொண்டுவிட்டது. அதிகாலையில்தான் விஷயம் தெரிந்தது.

காட்டுப்பகுதிக்குள் குடியிருப்பதில் அநேக அசௌகரியங்கள். ஆனாலும், பிணங்களைச் சுமத்தி அனுப்பிய ரயில்களில் பிணங்கள் நிரம்பி திரும்பி வந்த நாட்களில், மனிதர்கள் வசிக்க லாயக்கில்லாத இடமாக ஆகியிருந்தது பஞ்சாப். அந்தச் சமயத்தில், மனித வாடை குறைவாக இருக்கும் இந்த மலைப்பாதையில் வந்து குடியேற நேர்ந்தது. மனிதர்களிடமிருந்து தற்காத்துக்கொள்வதை விட, மிருகங்களின் சூழலில் வசிப்பது அத்தனை பயங்கரமானதாய் இல்லை.

இப்போது இரண்டு மூன்று வருஷங்களாக நிலைமை கொஞ்சம் சீராகியிருக்கிறது என்று பனார்ஸிதாஸ் போன்றவர்கள் சொல்கிறார்கள். இன்னும் கொஞ்சம் கணிசமாகப் பணம் சேர்த்துவிட்டால், மலையை விட்டு இறங்கிவிடலாம். சமவெளியில் வாழ்க்கை இவ்வளவு கடினமாய் இராது. கைவசம் போதுமான அளவு பணம் இருக்கும் பட்சத்தில், எங்குமே வாழ்க்கை கடினமில்லைதான். பணம். அதுதான் இலக்கு. எந்தத் திசையிலாவது சென்று, எவ்விதமாகவாவது போராடி, எட்ட வேண்டிய இலக்கு.

கங்காணி சொன்னதுமாதிரி, ஸோமிட்ஸிய எல்லை வரை போய்விட்டால், தொழில் பிரமாதமாக விரிந்துவிடும். அங்கிருந்து இங்கும் இந்தியாவிலிருந்து அங்கும் கடத்தல்காரர்கள் போக்குவரத்து அதிகம் அந்தப் பகுதியில். சீசாக்களில் அடைக்கப்பட்ட சீமைச் சாராயமும், பட்டுத் துணிகளும், மயிலிறகுகளும், சிகரெட்டுகளும் கோவேறு கழுதைகளின் முதுகிலேறித் திருட்டுப் பயணம் செல்கின்றன. ஸோமிட்ஸியப் பிரபுக்கள் மற்றும் பணக்காரர்கள் மத்தியில் ஏகக் கிராக்கியாம் இவற்றுக்கு.

கொஞ்ச நாள் போனதும், தானே கூடக் கடத்தல் தொழில் பண்ணலாம். முதல் அதிகம் போட வேண்டாத தொழில் அது என்கிறார்கள். முதலே போடாமலும் செய்யலாமாம். தரகு பெற்றுக்கொண்டு எல்லைதாண்டிச் சாமான்களைக் கொண்டு சேர்த்தால் போதும். கையில் பிரமாதமாகக் காசு புரளும். சிறுகச் சிறுக, நுட்பங்கள் கைவந்த பிறகு, சுயமாகவே செய்யலாம்.

தற்சமயம் ஸோமிட்ஸியாவின் கிராமப்புறங்களுக்கு மின்சாரம் கொண்டுவரும் ஏற்பாடு நடக்கிறதாம். இங்கிருந்து மின்சாரப் பொருட்கள் வெகுவாகக் கடத்தப்படப் போகின்றன கொஞ்ச நாளில். தலைநகர் காமியாவில் வானொலிநிலையம் அமைக்கப்படப் போவதாகவும் சொல்கிறார்கள். வானொலிப்பெட்டிகளைக் கடத்திச் செல்வது கடுமையான லாபத்தை வாரித் தரப் போகிறது. வானொலிப் பெட்டி இல்லாத ஸோமிட்ஸிய இல்லமே கிடையாது என்று ஆக்கிவிட வேண்டும். கேளிக்கைதான் ஜனங்களின் நப்பாசையைச் சுலபமாகத் தூண்டும் விஷயம்.

இந்த இடம் வந்ததும் ரூப்மதி சண்டைபிடிக்க ஆரம்பித்துவிடுகிறாள். வாழ்க்கையில் பணம் சம்பாதிப்பது மட்டும்தான் முக்கியமா? மனநிம்மதி முக்கியமில்லையா? ஏற்கனவே துர்சொப்பனங்கள் அதிகம் வருகின்றன. இதில், விழித்திருக்கும் நேரத்தையும் துர்சொப்பனமாகக் கழிக்க வேண்டுமா? எப்படி இருந்த பரம்பரை உங்களுடையது. நீங்கள் போய்க் கடத்தல் பண்ணுகிறேன் என்று வாயாலேயாவது சொல்லத் தகுமா? முன்னோர்களின் ஆன்மாக்கள் மன்னிக்குமா?

அசட்டுப் பெண். தொழிலில் உசத்தி என்ன, தாழ்த்தி என்ன? பன்றி விற்ற காசில் விட்டை மணம் இருக்குமா என்று பெரியவர்கள் சொல்வதில்லை? அவள் சொல்கிறாளே, முன்னோர்கள் பற்றி... அவர்களும்தான் விதவிதமான வேலைகள் பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கே ஆயுள் தொடர்ந்து இன்றைக்கு வரை இருந்திருந்தால், அவர்களும் கடத்தல் வேலை பார்த்திருப்பார்களோ என்னவோ.

முன்னோர்கள் என்ற வார்த்தையைச் சொல்லும்போது, தான் ஏதோ ராஜமாதா என்கிற மாதிரி முகத்தை வைத்துக்கொள்வாள் ரூப். எல்லாம் இந்த பனார்ஸிப் பயலால் வந்த வினை. பகதூரின் பூர்விக கிராமத்தைச் சேர்ந்தவன் அவன். நாலு இடம் போகிறவன். ஜோஸியன் என்பதால், நாலு பெரிய மனிதர்கள் தொடர்புள்ளவன். இந்த இடத்தில் கடை போட ஆலோசனை சொன்னவன் அவன்தான். நாலாயிரம் ரூபாய் பணம் சேர்த்துக் கொண்டுவா, தாத்தா கை நழுவவிட்ட பரம்பரை வீட்டைக் கிரயத்துக்கு வாங்கிவிடலாம் என்று உறுதி சொல்லியிருக்கிறான். இங்கே, மலையில் ஒரு கோப்பைச் சாயா அரையணா. இதில் செலவெல்லாம் போக, காலணா நிற்கும். எண்ணற்ற காலணாக்கள் ஒன்று சேர்ந்து நாலாயிரம் ரூபாய் ஆவதை நினைத்துப் பார்க்கவே மலைப்பாக இருக்கும் பகதூருக்கு.

அந்த பனார்ஸிதாஸ் சும்மாயிருக்க மாட்டாமல் ஒருநாள் இவளுக்கு ஜோசியம் சொல்ல வந்து சேர்ந்தான். அன்றைக்கு ரயில் பாதை வேலைக்கு விடுமுறை. பகதூரும் ரூப்மதியும் சாவகாசமாக இருந்தார்கள். தானே தயார் செய்த பீடாவை மென்றுகொண்டு பேரழகாக இருந்தாள் ரூப். பீடாவின் சேர்மானங்கள் கச்சிதமாக அமைந்துவிட்டன போலிருக்கிறது. மேலுதட்டிலும், நெற்றிப்பொட்டுகளிலும், மயிர் அடர்ந்த காதோரங்களிலும் ரம்மியமாக வியர்த்திருந்தது அவளுக்கு. அதிகாலையில் பனித்துளி ஒட்டியிருக்கும் புல் வரிசை போலப் பச்சென்று இருந்தது ரூப்பின் முகம். பனார்ஸிதாஸ் அவள் முகத்தை விட்டுக் கண்ணை அகற்றாமல் கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் ஜோசியம் சொன்னான்.

அதில் அவன் சொந்தமாக விட்ட புளுகின் சதவீதம் என்னவோ, யாருக்குத் தெரியும்?

உண்மையில், ராஜமாதாவாக இருக்கும் யோகம் படைத்தவளாம் ரூப். ஏதோ ஒரே ஒரு கிரகம் ஸ்தானம் தப்பி உட்கார்ந்துவிட்டதாம். அதனால்தான் பெரும் தனவந்தர் வீட்டில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாளாம். பகதூர் குழம்பத் தேவையில்லை. பகதூரேதான் அந்தத் தனவந்தர்.

இதை அவன் சொன்னபோது, வெட்டிவைத்த காய்கறிகளில் மொய்க்கிறதே என்று வலை மூடியை எடுத்துவந்து பக்கத்தில் வைத்துவிட்டு, ஈக்கள் கூட்டத்தை விசிறியால் விரட்டிக்கொண்டிருந்தான் பகதூர்.

பல தலைமுறைகளாக பனார்ஸிதாஸின் முன்னோர்கள் கிராமக் கர்ணமாக இருந்து வருகிறார்கள். கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பம் பற்றியும், அவர்களது பூர்விக வம்சாவளி பற்றியும் ஆதார பூர்வமான ஆவணங்கள் பனார்ஸிதாஸின் குடும்பத்திடம் உண்டு. தன்னுடைய ஜோசியத் தொழிலுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பவை அவை என்பான் பனார்ஸிதாஸ். பகதூர் சிங்கின் குடும்பப் பாரம்பரியம் பற்றிய தகவல்களை பனார்ஸிதாஸ் விபரமாக எடுத்துச் சொன்னான்.

பகதூர்சிங்கின் இனம் வீரத்துக்குப் பேர் போனது. டில்லி பாதுஷாக்களின் படையில் இருந்த வீரர்களில் முக்கால்வாசிப் பேர் ஜாட்கள்தான். பகதூரின் மூதாதை ஒருவர் அக்பர் பாதுஷாவின் சேனையில் பணியாற்றிப் பெரும் கியாதி பெற்றவர். ஆனால், பகதூரின் முத்தாத்தா ஒருவர் மாத்திரம் தன் இனத்துக்குப் பொருந்தாத வேறொரு காரியத்தில் இறங்கினார்.

டில்லி சுல்தானின் சபையில் ஆஸ்தான கலைஞராக இருந்தார் அவர். ரத்தினக் கம்பளங்கள் நெய்வதில் நிபுணர்.

பின்னர் வந்த தலைமுறைக்காரர்களுக்குக் கற்பனா சக்தியும், திறமையும் போதாததால், ஜமுக்காளம் நெய்வதில் ஈடுபட்டார்களாம்.

அடுத்த தலைமுறை, ஜமுக்காளம் நெய்வதைவிட , வாங்கி விற்பது இன்னும் சுலபமாகவும் லாபகரமாகவும் இருப்பதைக் கண்டுபிடித்தது.

இந்தச் சமயத்தில் பண்டமாற்று முறை அறுதியாக ஒழிந்து காசுப் புழக்கம் வந்து சேர்ந்தது. துணிமணிகளை விடவும் தான்யங்கள் வாங்கி விற்பதில் லாப விகிதம் தாறுமாறாக அதிகம் இருப்பதைக் கண்டறிந்தார் பகதூரின் தாத்தா. அதுவரை தன் பரம்பரை சேர்த்துவைத்த அசைகிற, அசையாச் சொத்துக்களை முற்றாக அழிப்பதற்கான ஊற்றுக் கண்ணையும் கண்டுபிடித்தார் அவர். கோதுமை கொள்முதல் செய்வதற்காக ஜலந்தருக்கு அருகிலுள்ள கிராமங்களுக்குச் செல்பவர், கிராமங்களுக்குச் செல்வதற்கு முன்பாகவே ஜலந்தரில் உள்ள வேசி ஒருத்தியிடம், கொள்முதலுக்காகக் கொண்டு சென்ற பணத்தில் முக்கால்வாசியைச் செலவிட்டுவிடுவார். கேட்டவர்களிடம், எளிமையாகச் சொல்வாராம்: சந்தோஷமாக இருப்பதற்குத்தானே சம்பாதிக்கிறோம்?

பகதூரின் தகப்பனாருக்கு மிஞ்சிய ஆஸ்தியில், தான்யங்களை வாங்கி விற்பதற்குத் தேவையான முதலீட்டுப் பணம் புரட்ட முடியாததால் சமைத்து விற்றுவிட முடிவெடுத்தார்.

அதிதிக்குச் சாப்பாட்டை விலைக்கு விற்பது கொடும் பாவம்.

என்று சொல்லிப் பார்த்தாளாம் பகதூரின் பாட்டி.

குடும்பத்தில் எல்லாரும் ஒரு வேளை ராகிக் கஞ்சியும் மற்ற வேளைகளுக்கு யமுனைத் தண்ணீரும் புசித்து வாழலாம் என்றால் சொல்,

சாப்பாட்டை விற்காமல் இருக்கிறேன்.

என்று சொல்லிவிட்டாராம் அப்பா. பாட்டி கோபித்துக்கொண்டு, மதுராவில் இருபத்துநாலு மணிநேரமும் கிருஷ்ண பஜனை செய்யும் கைம்பெண் கூட்டத்தில் சென்று சேர்ந்துகொண்டுவிட்டாள்.

ஆனால், இழந்த பெருமை, செல்வம் எல்லாமே திரும்ப வந்து சேரும் காலம் தொடங்கிவிட்டது என்றும், தாய்தேச மொழி எதுவும் அறியாத மிலேச்சர்களால் அந்தக் காரியம் கைகூடும் என்றும் சொன்னான் அந்த பனார்ஸிதாஸ். சுதேசி ராஜாங்கம் வந்துவிட்டதால், இனி எல்லாமே சுபிட்சம்தான் என்று ஊருக்குள் பேசிக்கொள்கிறார்களாம். நாலு இடம் போகிறவனில்லையா. அவன் சொன்ன ஒரே வாரத்தில் ரயில்பாதை போட ஆட்கள் வந்து சேர்ந்தார்கள்.

வெயில் அரும்பத் தொடங்கியது. குளிரின் போர்வையை மெல்ல மெல்ல விலக்கி உயர்கிறது உஷ்ணம். மரக்கிளைகளில் இருந்த பறவைகள் பணிநிமித்தம் பறந்து சென்றுவிட்டன. வாசலில் தொங்கவிட்ட கூண்டிலிருந்த மைனா திரும்பத்திரும்ப மிழற்றியது. உள்ளங்கை நிறைய அரிசி மணிகளைக் கொண்டுவந்து, கூண்டுக்குள்ளிருந்த கிண்ணத்தில் போட்டவாறு சாலையைப் பார்த்தான் பகதூர். ரயில்பாதைப் பணியாளர்களின் முதல் குழு பார்வையில் தென்பட்டது.

சுறுசுறுப்பானான். அடுத்த அரைமணிநேரத்துக்கு யந்திரம்போல, வேறெதிலும் கவனமின்றி, கரியடுப்பில் காயும் பாலில் தேயிலைத் தூளைப் போடவும், கொதித்ததும் துணியால் பிடித்திறக்கி, வலது கையைத் தலைக்கு மேல் உயர்த்தியும் இடதுகையைத் தொடைக்கும் கீழே தாழ்த்தியும் தேநீரை நீர்வீழ்ச்சி போலப் பாய்ச்சி ஆற்றியும் குவளைகளில் ஊற்றி விநியோகம் செய்துகொண்டுமிருந்தான்.

கடைசி ஆள் போன பிறகுதான் ரூப்பின் ஞாபகம் வந்தது. அவள் இன்று ஒரு முறைகூட முன்புறம் வந்து இவனுடன் ஒரு வார்த்தையும் பேசவில்லையே. சரி, வேலையாய் இருந்திருப்பாள்.

இல்லாவிட்டாலும், கடந்த ஏழெட்டு நாளாகவே அவள் முன் போலச் சிரிப்பதில்லை. சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பெருஞ் சிரிப்பாகச் சிரிக்கக்கூடியவள் ரூப்மதி. சிரிப்பின் இடத்தில் மிகத் தீவிரமான சிந்தனை ஓடிக்கொண்டிருப்பதுபோல இருக்கிறது முகம். கண்களில் ஒரு ஆழம் கூடியிருக்கிறது. நேற்று, படுக்கையறைச் சுவரில் ஒன்றின் மேலொன்று ஒட்டிக் கலவி செய்துகொண்டிருந்த மரப்பல்லிகளைக் காட்டிச் சிரித்தான் பகதூர். கடுமையாகத் தூக்கம் வருகிற மாதிரிக் கிறங்கிய கண்களுடன் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து, இவன் தூங்கி விட்டான் என்று தவறாக

நம்பிக்கொண்டு, படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, மோட்டு வளையை வெறித்தவாறிருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த நிலையில், சேலை விலகிப் பக்கவாட்டில் தெரிந்த தாமரை மொக்கு போன்ற வலது மார்பகம் பார்வையில் பட்டபோது, பகதூரின் வலது உள்ளங்கையில் நமைச்சலெடுத்தது. பிரயத்தனப்பட்டு அடக்கிக்கொண்டான். அத்து மீறினால் பிடிக்காது ரூப்மதிக்கு.

புகைவளையங்களாய்ச் சுற்றிச் சுற்றிவரும் ரூப்பின் ஞாபகத்தைக் கலைக்கிற மாதிரி, தொலைவில் யாரோ இருவர் சாலைக்கு ஏறுவது தெரிந்தது. மலைச்சரிவில் உள்ள மரங்களின் ஊடேயிருந்து ஏறிவருகிறார்கள். அந்த இடத்தில் ஒற்றையடிப்பாதை கூடக் கிடையாதே. மனித நடமாட்டமற்ற சரிவு அல்லவா அது.

அவர்கள் நிதானமாக நடந்து வந்து கடையின் வாசலில் இருந்த மர பெஞ்ச்சில் அமர்ந்தார்கள். ஒருவன் ஐரோப்பியன். தொடர்ந்து பல நாட்கள் காட்டில் திரிந்தவன் போல அவனது வெள்ளைத் தோலில் பழுப்பேறியிருந்தது. இருவரில் அவன் மட்டும்தான் சற்று அமைதியற்றுத் தென்பட்டான். உட்கார்ந்த நிலையிலேயே தொடைகளை ஒன்றுடன் ஒன்று மோதுவதுபோல வெகுவேகமாக ஆட்டியபடி, சுற்றுமுற்றும் பார்வையை அலைய விட்டுக்கொண்டிருந்தான், எதையோ தேடுபவன் போல. எதையோ எதிர்பார்ப்பவன்போல.

மற்றவன், அட்டைக் கரி நிறமாய் இருந்தான். அகலமான, விடைத்துப் படர்ந்த மூக்கு. மாபெரும் உதடுகள். ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றவை போல, கீழுதடு தனியாகத் தொங்கிக்கொண்டிருந்தது. குட்டையான சுருட்டைமுடி . கால்களை அகட்டிப்போட்டு, அழுத்தமாக அமர்ந்திருந்தான். வெகுளியான முகம். பேசும்போது, நாக்கை முன்பற்களில் தட்டிப்பேசினான், குழந்தைபோல. அழுத்தமில்லாமல் வழுக்கி விழுந்து கொண்டிருந்தன வார்த்தைகள். அவனைப் பார்த்தபோது, உள்ளுணர்வின் ஆழத்தில், ஏனோ இனம் புரியாத பரிதாப உணர்ச்சி உண்டானது பகதூருக்கு. தலையை உதறி விரட்டினான் அந்த உணர்ச்சியை.

மிலேச்சர்களால் வரவிருக்கும் அளவிறந்த செல்வத்துக்கு இவர்களே கூடத் தோற்றுவாயாய் இருக்கக்கூடும். இந்த எண்ணம் உதித்ததும், உடலெங்கும் ரோமம் சிலிர்த்துக்கொண்டது. என்றாலும், மிளகும் அரிசியும் ஒன்றாகக் கலந்ததுபோல அவர்கள் பெஞ்ச்சில் இருந்த காட்சியில் சந்தேகத்துக்குரிய அம்சம் ஏதோவொன்றிருக்கிறது என்றும் தோன்றியது பகதூருக்கு. பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போலத் தெரியவில்லை. ஆனால், உடைகளில் கடும் அழுக்கு சேர்ந்திருக்கிறது; வெகுதூரம் கடந்து வந்தவர்கள் மாதிரி. இருவரிடமும் சாமான் பைகள் எதுவும் இல்லை. மாற்று உடைகள் கூட இல்லாமல் இந்த மலைக் காட்டுப் பகுதியில் என்ன செய்கிறார்கள் இவர்கள்...

ஐரோப்பியன் இரண்டு தேநீர் போடும்படி சொன்னான். வெள்ளைக்கார உச்சரிப்புப் போலவே இருந்தது. கனத்த குரல். ஆழ்ந்த சிந்தனையின் ஒரு பகுதியாகத் தேநீருக்கு ஆணையிட்டவன் போலத் தீவிரமாய் இருந்தது முகம்.

அவர்கள் இருவரும் மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்தார்கள். கங்காணி மாதிரியான ஆட்களுடன் சகவாசம் வந்த பிறகு, அங்ரேஸி வார்த்தைகள் கிட்டத்தட்ட ஒரு நூறுவரை தெரிந்துவிட்டது. ஆனால், இவர்கள் பேசும் வேகத்தில் ஒரு சொல்லுக்கும் இன்னொரு சொல்லுக்கு மிடையில் இடைவெளியே இல்லாத மாதிரியிருந்தது.

கறுப்பனின் பேச்சில் லாஸா லாஸா என்று திரும்பத் திரும்ப அடிபட்டது. ஐரோப்பியன் காமியா காமியா என்று சொல்லிக்கொண் டிருந்தான். லேசாகப் புரிந்த மாதிரி இருந்தது பகதூர் சிங்குக்கு.

கடையின் முகப்பிலிருந்து முன்னூறு கஜ தூரம் இடதுபுறம் நடந்தால், சாலை இரண்டாகப் பிரிகிறது. அந்த இடத்தில் ஒரு ராணுவக் காவல் சாவடி முன்பு இருந்தது. பகதூர் சிங்கின் சாயாவுக்கு நல்ல மரியாதை உண்டு சாவடியில். ஆனால், சாவடியைக் கலைத்துவிட் டார்கள் இப்போது. பிரியும் சாலைகளில், இடதுபுறம் செல்வது திபெத்தை நோக்கிச் செல்கிறது. வலதுபுறச் சாலை ஸோமிட்ஸியாவை நோக்கி. இந்த இடத்திலிருந்து இரண்டு பாதைகளையும் கண்காணிப்பது வசதிக் குறைவாக இருந்ததால் சாவடியை இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு பாதையும் ஆரம்பிக்கும் இடத்திலிருந்து ஒரு மைல் தூரம் உள்ளே கொண்டுபோய் விட்டார்கள்.

கறுப்பன் லாஸாவுக்குப் போகவேண்டுமென்கிறான். வெள்ளை யன் காமியாவுக்குப் போக வேண்டுமென்கிறான். இந்தத் தாவா தீர்ந்து முடிவாக எந்தப் பக்கம் போகிறார்கள் அல்லது தனித் தனியாகப் பிரிந்து சென்றுவிடுகிறார்களா என்று காத்திருந்து பார்க்க ஆவலுற்றான் பகதூர் சிங். அவர்கள் சேர்ந்திருப்பதில் தனக்கேன் இத்தனை தொந்தரவுண்டா கிறது என்று ஒரு சிறு வியப்பும் எட்டிப் பார்த்தது. தவிர, அவர்களுக்குள் தாவா நடக்கிறது என்ற முடிவுக்குத் தான் எப்படி வந்தோம் என்று ஆச்சரியமாகவும் இருந்தது. ஓசை தெளிவாகக் கேட்டும், அர்த்தம் கொஞ்சமும் புரியாத புதுவித விடுகதைபோல அவர்களுடைய சம்பாஷணை தொடர்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மதுராவுக்குப் போய்விட்ட பாட்டி ஏகப்பட்ட விடுகதைகள் சொல்வாள்.

> அண்ணன் தம்பிகள் ஐந்துபேர். ஒரே இடத்தில் பிறந்து வளர்ந்தும் ஒருத்தருக்கொருத்தர் ஒட்டுதல் கிடையாது. மூத்தவன் மட்டும் ரொம்பவே விலகிப் போவான். உனக்குத் தெரிந்தவர்கள். உன்னோடே இருப்பவர்கள். அவர்கள் யார்?

விடுகதை முழுக்க ஞாபகம் வந்துவிட்டது. விடை ஞாபகம் வர மாட்டே னென்கிறது.

பகதூரின் கவனம் வாடிக்கையாளர்களிடமிருந்து பிறழ்ந்து, உத்தரப்பிரதேசத்தில், ஹரித்துவார் செல்லும் பாதையில் இருந்த தன் பூர்விகக் கிராமத்துக்குப் பறந்துவிட்டது. மனத்தின் ஒரு பகுதி, தன் பூர்விக வீட்டின் அறைகளுக்குள் நுழைந்து நுழைந்து வெளியேறியது. இன்னொரு பகுதி, கையில் தியான மணிகளையும், பொக்கை வாய்க்குள் சுலோகங்களையும் உருட்டியபடி, இன்னொரு கையால் தன் வெள்ளைப் புடவை மடியில் தலைமுழுக்க மண்ணோடு வந்து படுத்துக்கொள்ளும் பேரன் பகதூர்சிங்கை வருடும் பாட்டியைத் தத்ரூபமாகக் காணப் போனது. மூன்றாவது பகுதி, விடை ஞாபகம் வராத விடுகதையைத் துரத்திக்கொண்டு ஓடியது. நாலாவது பகுதி சோகையாய் இப்போதில் ஒட்டிக்கொண்டிருந்தது. ஒரு வித சுகமான அவதிக்கு ஆளானான் பகதூர் சிங்.

கடைக்கு இடதுபுறம் பள்ளமாய்ச் சரிந்திறங்கும் சாலையில் பார்வையெட்டும் தூரத்துக்கு அப்பாலிருந்து உறும் உறும் என்று ஒரு ஜீப் ஏறிவரும் ஓசை கேட்டது. சாயா குடித்து முடித்துக் கைகளில் சிக ரெட்டுகளை எடுத்திருந்த அந்நியர்கள் இருவரும் சட்டென்று எழுந்து குடிசையின் பின்பக்கம் போனார்கள். அவசரமில்லாமல் செல்வது போலத்தான் பாவனை செய்தார்கள் என்றாலும், அது பாவனைதான் என்று பகதூருக்குத் தோன்றியது.

ஜீப் பெரும் உறுமலுடன் கடந்து சென்று பார்வையிலிருந்து மறைந்த பின், இருவரும் வெளியே வந்தார்கள்.

சாயாவுக்குக் காசு கொடுத்துவிட்டு, சாலையைத் தவிர்த்து, குடிசையின் பின்புறம் சென்று மலைச் சரிவில் ஏற ஆரம்பித்தார்கள். அந்த ஐரோப்பியனின் பார்வையில் அழுத்தமான சந்தேகம் இருக்கிறது. ஒரு வேளை, ஒற்றர்களாக இருப்பார்களோ? சுதந்திரம் கிடைத்த முதல் பத்து வருடங்களில், சிசுவாய் இருக்கும் தேசத்தினுள், அந்நிய சக்திகள் மீண்டும் ஊடுருவி தேசத்தை அடிமைப்படுத்த ஒரு வாய்ப்பிருக்கிறது என்று பனார்ஸிதாஸ் சொல்லியிருக்கிறான்.

சோதனைச் சாவடி ராணுவ அதிகாரிகளிடம் போய்ச் சொல்லிவிடலாமா என்று நினைத்தான். அதற்குள், இவர்கள் இருவரும் போகிற திசையைத் தோராயமாகவாவது தெரிந்து கொள்வது நல்லதில்லையா. குடிசையின் பின்புறம் விரைந்தான். தன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை.

குடிசையின் பின்புறம் கிட்டத்தட்ட இருநூறு கஜம் உயரும் குன்று,

மறுபுறம் மடங்கி இறங்குகிறது. மிகவும் செங்குத்தான சரிவு அது. விலங்குகளே நிதானமாகத்தான் ஏறும். இந்தப் பாதகர்கள் இருவரும் ஓடிக் கடந்திருக்கிறார்கள் போல. அவர்கள் சென்றதற்கான தடயமே யில்லை.

அல்லது வேறெங்காவது ஒளிந்திருப்பார்களோ? சந்தேகமே யில்லை. ஒற்றர்களேதான். பதற்றமான நடையில் திரும்பிய பகதூர் சிங், யாரோ ஓடும் சத்தம் கேட்டு வலதுபுறம் பார்த்தான். அந்த ஆளுயரப் புதருக்குப் பின்னாலிருந்து ஓடுவது யார்? கங்காணி மாதிரியே இருக்கிறதே?

என்ன நடக்கிறது சுற்றிலும்? திறந்த வெளியாக இருக்கும் மலைச் சரிவு, பத்தே நிமிஷத்தில் மர்மப் பிரதேசமாக ஆகிவிட்டதாக உணர்ந்தான். குடிசைக்குத் திரும்பிவிட வேண்டும். ரூப் தனியாக இருப்பாள். ட்ரங்க்குப் பெட்டித் துணிமடிப்பில் ஒளித்துவைத்த ரூபாய் நோட்டுகள். சாயங்காலமே பனார்ஸிதாஸுக்குச் சொல்லியனுப்ப வேண்டும். துர்த்தேவதைகளுக்கு ஏதாவது பரிகாரம் வேண்டுமானால் செய்துவிடலாம். அல்லது மலையைவிட்டுக் குடிபெயர நேரம் வந்து விட்டதோ? அசந்தர்ப்பமாக, பாட்டியின் விடுகதைக்கான விடை இப்போது ஞாபகம் வந்தது. விரல்கள். தலையை உதறிக்கொண்டான்.

குடிசையை நோக்கித் திரும்பிக் கால்களை எட்டிப்போட்டான்.

ஒரு மரத்தின் பின்னாலிருந்து ரூப் வெளிப்பட்டாள். கைகளிரண் டையும் பின்னால் கட்டியவாறு நிதானமாக அவள் நடந்து நெருங்கு வதைப் பார்த்தபோது, பகதூரின் முதுகுத் தண்டில் சில்லிப்பு ஏறியது. முகம் ஏன் இவ்வளவு இறுக்கமாக இருக்கிறது? அவள் சேலை கலைந் திருப்பதும், அங்கங்கே மண் ஒட்டியிருப்பதும் ஏன் என்ற வியப்பு அடங்குவதற்கு முன்பாகவே, தன் அடிவயிற்றில் ஒரு பள்ளம் உருவாகி விட்டதையும், அதில் வலி நிரம்புவதையும் உணர்ந்தான் பகதூர் சிங். நிரம்பியிருந்த எடை நழுவுவது போன்ற ஒரு உணர்வு.

பிச்சுவாவை உருவி, பகதூரின் விலாவில் மீண்டும் ஏற்றினாள் ரூப்மதி. யாரோ ஓடிய திசையிலிருந்து யாரோ ஓடிவரும் சப்தம் கேட்கிறது. ரூப்... என் ரூப்பா இது?...

*

# ஒரு விருந்து

... நடந்தவையெல்லாம், வெறும் துர்க் கனவின் காட்சிகள்தாம், நனவில்லை என்று ருசுவாகுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் ...

ஒரு தேசத்தின் தலைநகரம் என்று சுலபமாகச் சொல்லிவிட முடியாத அளவு சிறிய நகரம் காமியா. ஊரின் வெளிவிளிம்பாக வரையப்படும் கோட்டில் பிறழாது நடந்தால் நான்கு மணிநேரத்தில் முழுவதுமாகச் சுற்றி வந்துவிடலாம். நகரின் மையத்திலிருந்து நாலாதிசைகளிலும் சரிந்து இறங்கிச் செல்லும் சாலைகளின் உச்சியில் கூடாரக்குமிழ் போல இருப்பது காமியா.

காமியாவின் பிரதான கடைவீதி, மாலைவேளைகளில் ஜன நடமாட்டம் அடர்ந்து இருக்கக்கூடியது. மிகுந்த சுயக் கட்டுப்பாடு உள்ள ஜனங்கள். எறும்புப் புற்று போலப் பரபரப்பாக மனித நடமாட்டம் இருக்கும் சமயங்களில்கூடக் காமியாவின் வீதிகளை நிசப்தம் மூடி இருப்பது ஹான்ஸ் வெய்ஸ்முல்லருக்கும் ஜூலியஸ் லுமும்பாவுக்கும் எப்போதுமே பெரும் ஆச்சரியம் தரும் விஷயம்.

காமியாவின் குறுக்கும் நெடுக்கும் ரத்தக் குழாய்கள் போல ஓடுபவை குறுகலான, சுகாதாரமற்ற தெருக்கள். செம்மறியாட்டின் முறிந்த கொம்புகள் முதல் விடாய்த்துணி வரை எது வேண்டுமானாலும் இறைந்து கிடக்கும் தெருக்கள். உயரமான வீடுகள். அகலம் குறைந்த, ஆனால் நீளமான வீதிகள். சரசரவென்று நடந்தவாறிருக்கும் பெண்கள். மந்தமாகப் பின்தொடரும் ஆண்கள்.

நடந்துகொண்டிருந்த லுமும்பா நின்றான். காற்சட்டையின் பக்கவாட்டுப் பையிலிருந்து சிகரெட்டுகள் வைத்திருந்த பட்டையான உலோக டப்பியை எடுத்து இரண்டாக விரித்தான். அவர்கள் நின்றிருந்த இடத்துக்கு நேர் எதிரே, எதிர்ச்சாரியில் இருந்த தானியக் கடையில் நாலைந்து பெண்கள் நின்றிருந்தனர்.

ஹான்ஸ், அன்று மிஸ்த்தர் வாங்யேவுடன் பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்னாரே, நினைவிருக்கிறதா?...

வெய்ஸ்முல்லர் சிரித்தான்.

அவர் ஏகப்பட்ட விஷயங்கள் சொன்னார். எதையென்று கேட்கிறாய்? மிஸ்டர் வாங்யே, ஸோமிட்ஸிய ஜனங்களின் அன்றாட நடைமுறையின் பகுதியாய் மது இருப்பதைத் தவறென் கிறார். இந்த அம்சத்தைத் தாங்கள் தொடர்ந்து எதிர்த்து வருவதாக வும், குடிப் பழக்கத்துக்கு ஆளான இரண்டு தலைமுறைகள் உருவாகிவிட்டதால், செல்லரித்துப் போய்விட்ட மரபுகளில் ஒன்றைக்கூட மாற்ற முடியாமலிருக்கிறது என்றும் சொல்கிறார்.

அவர் சொல்வது சரிதானே.

எனக்குச் சரியாகப் படவில்லை. குடிப்பதைத் தவறான விஷய மாகக் கருதும் கலாசாரத்தின் பார்வையை நான் சந்தேகிப்பேன். ஐரோப்பாவில், குடி பற்றி நாங்கள் பேசவே மாட்டோம். எங்கள் வாழ்முறையின் பகுதி அல்லவா அது. கிட்டத்தட்ட ஐரோப்பிய சீதோஷ்ண நிலைதானே ஸோமிட்ஸியாவிலும் நிலவுகிறது?

ஆனால், மிஸ்த்தர் வாங்யே வேறுமாதிரிச் சொல்கிறார். ஜனங்கள் குடிப்பதில் தவறில்லைதான். ஆனால், சலுகைகள் வழங்கி அரசாங்கமே குடியை ஊக்குவிப்பதற்கு வேறொரு காரணம் இருக்கிறது. ஆட்சியாளர்கள் இழைக்கும் குற்றங்கள் பற்றிய கவனத்திலிருந்து பொது மனத்தைத் திசைதிருப்புவதுதான் அது. ஜனங்களிடத்தில் இந்தச் செய்தியை நேரடியாகக் கொண்டு செல்ல முனைபவர்களை, சீனாவின் கைக்கூலி என்று அறிவித்துக் கொல்லும் வழக்கமும் உருவாகி வருகிறது என்கிறார் மிஸ்த்தர் வாங்யே.

அவர் சொல்வதில் ஒரு ஆழ்ந்த பார்வை இருக்கத்தான் செய்கிறது.

மிக்க நன்றி. மிஸ்த்தர் வாங்யே கேட்டால் அகமகிழ்ந்து போவார்...

இருவரும் சிரித்தார்கள்.

...ஆனால், நான் சொல்ல வந்தது அது அல்ல.

பிறகு?

ஸோமிட்ஸியாவின் பெரும்பான்மை, கிராமங்களில்தான் இருக்கிறது என்று மிஸ்த்தர் வாங்யே சொன்னாரில்லையா? தற்போதைய வாழ்நிலையின் மேல் ஒருவிதமான புகார் இருக்கிறது அவருக்கு. ஆனால், வேறொரு விதமாகப் பார்க்கலாம் என்று தோன்றுகிறது எனக்கு.

சொல்.

நவீனத் தொழில் நுட்பம் என்ற ஒரு சங்கதியே இந்த ஜனங்களின்

மனோபாவத்தில் இல்லாமலிருக்கிறது. நகரங்களில் மாத்திரம், அதுவும் மிகமிகக் குறைந்த அளவில் கனரக வாகனங்கள் இருக்கின்றன. மிஸ்த்தர் வாங்யேவின் கூற்றுப்படி, ஒட்டுமொத்த ஸோமிட்ஸியாவிலும் அறுபத்தைந்து லாரிகள்தான் ஓடுகின்றனவாம். இருபதாம் நூற்றாண்டு தொடங்கிப் பாதி கடந்தபிறகும், மின்சாரமும் பெற்றோலும் இவர்களது பாமர வாழ்வுக்குள் நுழையாமலிருக்கின்றன. இதன் காரணமாக, இவர்களின் பொருளாதாரம் ஆரோக்கியமாக இருப்பது; பூமியின் பகுதியாக இருந்தவாறே, பூமிக்கு அப்பால் வசிப்பவர்களாக இருப்பது இவையெல்லாம் குறிப்பிடப்பட வேண்டியவை இல்லையா?

சரிதான். ஆனால், நாம் வரும் வழியில் சந்தித்த அந்தச் சிற்றுண்டிக் கடைக்காரன் சொன்னானே, ஸோமிட்ஸியாவில் மின்சாரம் பரவலாகக் கொண்டுசெல்லப்படவிருக்கிறது என்று.

இவர்களுடைய ஆர்வத்தையும் இந்தியர்களுடைய வேகத்தையும் பார்க்கும்போது இன்னும் நூறு வருஷங்களாவது ஆகும், ஸோமிட்ஸிய கிராமத்தில் முதல் மின்விளக்கு எரிவதற்கு.

இருவரும் சிரித்தார்கள். லுமும்பா சிகரெட்டைத் தரையில் வீசிக் காலால் தேய்த்தான். அரண்மனையில், முன்னிரவில் நடக்கவிருக்கும் விருந்துக்கு அழைப்பு வந்திருக்கிறது இருவருக்கும்.

திபெத்தில் போல இல்லை இங்கே. மேற்கத்திய விருந்துக் கலாசாரம், ஸோமிட்ஸியாவின் மேல்நிலைப் பிரமுகர்களிடம் கூடத் தொற்றியிருக்கவில்லை இன்னும். இரவுக்கும், விருந்துக்கும், விடுமுறை நாளுக்கும், வேலைக்குச் செல்லவும் தனித்தனி உடைப் பாணிகள் கொண்ட மேற்கத்தியக் கலாசாரத்தின் வாசனையே ஸோமிட்ஸியாவுக்குள் இறக்குமதியாகவில்லை...

தளர்வான உடைகள் அணிந்து கிளம்பியிருந்தார்கள் இருவரும். லுமும்பா தொடர்ந்து சொன்னான்.

ஹான்ஸ், இன்னொரு விஷயம். இந்த ஜனங்களின் காம வாழ்க்கை மிக மிக மூடிய, இறுக்கமான ஒன்றாக இருப்பதையும் குறிப்பிட வேண்டும். பொது இடங்களில் ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் பார்க்காதவர்கள் போலக் கடந்து செல்கிறார்கள், ஏதோ துறவிகள் நிரம்பிய தேசம் என்கிற மாதிரி. ஆனால், ஜனத்தொகை விகிதம் ஸ்திரமாகவும், அபாயகரமான அளவிலும் அதிகரித்து வருகிறதாக மிஸ்த்தர் வாங்யே சொன்னாரில்லையா...

ஆமாம். அது ஒரு முக்கியமான விஷயம்தான். ஆனால், பிரம்மச்சாரியை அரசனாகக் கொண்ட தேசமல்லவா இது? காமத்தை ரகசியமாகத்தான் கையாளும்.

என்றான் ஹான்ஸ் வெய்ஸ்முல்லர். மறுபடியும் சிரித்தார்கள் இருவரும்.

அரண்மனைக்குத்திரும்பும் சாலையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

மரச்சுவர்களால் ஆன மிகப் பெரிய அறை அது. தரையில் ரத்தச் சிவப்பு நிறக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. விதானத்திலிருந்து தொங்கிய பச்சை நிறக் கண்ணாடிக் கூடுகளுக்குள் மலைப்பாம்பின் பருமன் கொண்ட மெழுகுவர்த்திகள் பிரகாசித்தன.

ஸோமிட்ஸிய நகர்ப்புறங்களில் மின்சார உபயோகம் இருக்கிறது. தேவையான மின்சாரத்தை திபெத்திலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அரண்மனை வளாகத்துக்குள் மின்சாரத்துக்கு அனுமதியில்லை. பிரபுக்களில் மிகச் சிலர் கார் வைத்திருக்கிறார்கள். அரண்மனைக்கென்று கார் கிடையாது.

வெண்ணிறத் தூவிகள் கொண்ட சாமரங்களை, பதமாக விசிறினார்கள் பணியாட்கள். அவற்றிலிருந்து காற்று வரவில்லையெனினும், கூடியிருப்பவர்களுக்கான ஒரு கௌரவம் போல அசைந்தவாறிருந்தன அவை. வருடம் முழுக்கவே விசிறிகள் தேவைப்படாத சீதோஷ்ணம் நிலவும் நகரம் காமியா என்கிறார்கள். தவிரவும், மூடிய சுவர்களுக்குள் இருந்தும் சற்றும் புழுக்கம் தெரியாதபடி கட்டப்பட்டிருக்கும் இந்த அரங்க அறை, ஸோமிட்ஸியக் கட்டடக்கலை நேர்த்திக்கு மிக உன்னதமான சான்று.

அழைப்பாளர்கள் எல்லாரும் தன்ரயில் மண்டியிட்டு அமர்ந்திருந்தார்கள். மிகச் சிலர் மாத்திரம் பத்மாசனமிட்டும், சிலர் கால்களைக் குறுக்காகச் சம்மணமிட்டும் இருந்தனர். விசித்திரமான அமைதிக்குள் மூழ்கிக் கிடந்தனர் அனைவரும். சீரான மூச்சொலிகளும், அவ்வப்போதைய பெருமூச்சொலிகளும் மாத்திரமே எழும்பிய அந்த இடத்துக்கு மெழுகுவர்த்திகளின் வெளிச்சம் மாயத்தன்மையேற்றியது. ஊதுபத்தி மணம் நிரம்பியிருந்தது அந்தப் பிரம்மாண்டமான அறையில்.

அவையின் முன்பகுதியில் அரியாசனம் போன்ற இருக்கை கிடந்தது. அதன் மேற்பகுதியிலும், முன்புறம் இருந்த பாதந்தாங்கியிலும் கடும் மஞ்சள் நிற வெல்வெட் பதிக்கப்பட்டிருந்தது. வெய்ஸ்முல்லர் கழுத்தை எல்லாப்புறமும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். பெரும்பாலான முகங்களில் நிதானம் குடியிருக்க, சில முகங்களில் மாத்திரம் அதிருப்தியின் சுளிப்பு தென்பட்டது.

அருகில் அமர்ந்திருந்த வாங்யே பிரபுவிடமிருந்து இதமான லாவெண்டர் மணம் வீசியது. பொதுவாகவே அவருடைய முகபாவனைகளும் உடல்மொழியும் சற்று இறுக்கமாகவும், மேற்கத்திய மணம் கொண்டவையாகவும் இருந்தன. இங்கிலாந்தில் மூன்று வருடம் படித்துத் திரும்பியவராம் அவர்.

இந்த மனிதரின் சிபாரிசு இல்லாவிட்டால், அரசாங்க விருந்தினர்களாக இங்கே வந்து உட்கார்ந்திருக்க வாய்ப்பேயில்லை. ஸோமிட்ஸியாவின் மையச் சிறை பாங் டு என்ற கிராமத்தினருகில் இருக்கிறதாம்; அங்கு அனுப்பியிருப்பார்கள், ஒருவேளை. ஒரு மாதத்தில் எவ்வளவு தலைகீழாக மாறிவிட்டது எல்லாம்.

திபெத்திலிருந்த ஆறு வருடங்கள் தொலைதூரக் கனவு போல மங்கிக் கிடக்கின்றன. வெறுங்கையுடன் வெளியேறி, ஒருவேளை உணவுக்குக் கூடக் காசில்லாமல், வனவாசிகளாகவே அலைந்து ஸோமிட்ஸியாவுக்குள் வந்து சேர்ந்த பிரயாணத்தில் குறுக்கிட்ட பாதகமான அம்சங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழுத்தம் இழந்து விட்டன.

மலைப் பிராந்தியத்தின் இதமான சீதோஷ்ணமும், பிரமாதமாக ஒத்துழைத்த உடல்நிலையும்; மனிதர்கள் தட்டுப்படும் இடங்களில் பூனைகள் போலப் பம்மி வந்ததும்; ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் சுமை தூக்கும் கூலிகளாக வேலை செய்து கொஞ்சம் இந்திய நாணயங்கள் சம்பாதித்ததும்; காட்டு மிருகங்கள் எதிர்ப்படும்போது பதுங்கிச் சமாளித்த சாகசங்களும் பிரியமான நினைவுகளாக வந்து போகின்றன, சிலவேளை. மலைத்தாவரங்களில் பசிதீர்ப்பவை எவை, உயிர் போக்குபவை எவை என்பது பற்றி ஜூலியஸுக்கு இருந்த அளப்பரிய ஞானத்தின் காரணமாகத்தான் இங்கு வந்து சேர முடிந்தது. எதற்குமே பதட்டமடையாத கனவான் அவன்.

கடும் நெருக்கடியில் சிக்கிய சந்தர்ப்பங்களை இப்போது நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. சிரிப்பு வந்துவிடுகிறது. ஸோமிட்ஸியா - இந்தியா எல்லையில் அந்த டீக்கடைக்காரனின் கண்களில் தென்பட்ட சந்தேகமும், கடையை இவர்கள் நெருங்கும் போது, கடையின் பின்புறத்திலிருந்து வெளியேறிச் சென்ற பெண்ணை மீண்டும் பார்த்ததும் ஞாபகம் வந்தது. சாம்பல் நிறப் புடவை அணிந்திருந்தாள் அவள். பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்து சென்றாள்.

கடைக்காரனின் பார்வையில் சந்தேகம் வந்து அமர்ந்துவிட்டது என்பதைக் கவனித்த மாத்திரத்தில், அவன் கடைக்குப் பின்புறம்வரை நிதானமாகச் சென்று, பின்னர் இருவரும் பாய்ந்து ஓடி மலையேறியதை நினைத்து நினைத்துச் சிரிப்பான் ஜூலியஸ். கூர்மையான பார்வை அவனுக்கு. ஓட்டத்தின் வேகத்தில் ஒரு புதருக்குப் பின்னால் உருவாக்கப்பட்ட சமதரையில் தென்பட்ட காட்சியைக் காட்டிக் குறும்பாகப் புன்முறுவல் செய்தபடியே ஓடினான்.

சாம்பல் நிறப் புடவை இடுப்புவரை உயர்ந்திருக்க, வழுவழுவெனக் கனத்த மூங்கில் தடிகளின் உச்சிக் கவையில் முகத்தை வைத்துக்

கொண்டாடிக்கொண்டிருந்தான் ஒருவன். மல்லாந்து கிடந்தவள், தன் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டிருந்தாள். மேல்துணி முழுக்க விலகி, ரவிக்கையின் பித்தான்கள் அவிழ்ந்து திறந்து கிடந்த அவளது மார்புகளின் இளஞ்சிவப்புக் காம்புகள் அதீதமான கிளர்ச்சியை ஊட்டின. நண்பர்களின் ஓடும் கால்கள் ஒரு கணம் தொய்ந்தன.

குன்றின் மறுபக்கத்தில் கிட்டத்தட்ட முன்னூறு கஜங்கள் ஓடி யிறங்கி மூச்சிறைக்க நின்றதும் சிரிக்கத் தொடங்கினான் ஜுலியஸ் லுமும்பா.

> வன வெளியில் மிருகங்கள் புணர்வதைப் பார்த்திருக்கிறேன். அபூர்வமாக இன்று கிடைத்த அற்புதக் காட்சியை நின்று ரசிக்க முடியாமல் போய்விட்டதே.

என்று சொல்லிச் சிரித்தான். வெய்ஸ்முல்லருக்குள் வேறொரு கேள்வி உருவானது. திபெத்திலிருந்த நாட்களிலும், வாய்த்த சந்தர்ப்பங்களைத் துய்ப்பானே தவிர, பெண் தேடி அலைந்ததில்லை ஜுலியஸ் லுமும்பா. ஏன்? கேட்டான். ஜுலியஸ் சிரித்தபடி சொன்னான்.

> சதுரங்க விதிகள் தெரியுமில்லையா நண்பனே. கறுப்புக் கட்டத்தில் இருக்கும் பிஷப் கறுப்புக் கட்டத்தில் மாத்திரம்தான் நகரவேண்டும். அதுமாதிரித்தான், நான் ஒரே நிறக் கட்டத்தில் நகர விதிக்கப்பட்டவன். சாப்பாடு, தூக்கம், காமம் என்கிற சமாசாரங்களெல்லாம் என்னுடைய வாழ்முறைக்கு ஆடம்பரமான வசதிகள். கிடைக்கும் போது அனுபவித்துக் கொள்ளலாம். கிடைக்காதபோது, வேறெதிலாவது கவனத்தைச் செலுத்தலாம்.

அவையில் யாரோ தும்முகிறார்கள். ஐரோப்பிய முகங்கள் சில தென்பட்டன. அறிமுகமான முதல் தினத்திலேயே, வெய்ஸ்முல்லரிடம் மனம் வெதும்பிப் பேசிய தாமஸ் மன்ரோ ஒருவன் மாத்திரம் இன்று முழு ஸுட்டில் வந்திருந்தான். இறுக்கும் உடையுடன் தரையில் உட்கார முடியாத அவஸ்தையின் நெளிவு இருந்தது அவன் முகத்தில்.

> ஸர், ஆங்கிலம் பயிற்றுவிக்கிற ஆசிரியர் தேவை என்று சொல்லித்தான் கூட்டி வந்தார்கள். இங்கு வந்த பிறகுதான் தெரிகிறது, கூட்டி வரவில்லை, கடத்தி வந்திருக்கிறார்கள் என்று. ஸோமிட்ஸியாவின் எல்லைக்குள் நுழையும் பாதைகள் எல்லாமே ஒருவழிப் பாதைகள் தாம் என்று சொல்லிச் சிரிக்கிறான் இந்தக் கிழ ஈனோங். கைவிலங்கும் சிறையும் இல்லையே தவிர, நாங்களெல்லாம் கைதிகள்தாம் இங்கே. தத்துவம் போதிக்க வந்திருக்கும் ஃப்ரான்ஸுவா மித்தரானின் நிலைமையும் இதுதான். பொறுப்பெதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள்... தப்பிச் செல்ல உத்தேசமும் மார்க்கமும் இருந்

தால், எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்...

முதல் சந்திப்பிலேயே இவ்விதம் பொழிந்த மன்ரோவை எந்த அளவு நம்பலாம் என்பது தெளிவாகவில்லை இன்னும். இவனுமே அந்தக் கிழவனின் கையாளாக இருக்கலாம். கட்டெறும்பு, சிற்றெறும்பை அனுப்பி இரையின் ருசியைச் சோதிக்கிறதோ என்னவோ.

அறைக்கு வெளிப்புறம் ஓசைகளின் சலசலப்பு கேட்கிறது. அறைக்குள் நுழைந்த முதலாமவன் விறைப்பாக நின்று அறிவித்தான்.

மேன்மை தங்கிய மன்னரும், பிரபஞ்ச ஞானத்தின் அதிபதியு மாகிய, ஆதி ஸோமிட்ஸுவின் வழித் தோன்றல், இருபத்தாறாம் ஸோமிட்ஸு வருகை தருகிறார்... வருகை தருகிறார்... வருகை தருகிறார்.

சின்னஞ் சிறு ஊர்வலம் போல ஒரு கோஷ்டி அறைக்குள் வந்தது. தரையில் அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்றார்கள். வயதான வர்களில் சிலருக்கு, நீண்ட நேரம் கால்களை மடித்து உட்கார்ந்திருந் ததால், சுரணை மரப்பு ஏற்பட்டு, நிற்க முடியாமல் தடுமாறுவது தெரிந்தது.

அலங்காரமான நாற்காலியில் உட்கார்ந்திருந்த சிறுவன் ஒருவனைத் தூக்கிவந்தார்கள். சிறுவனுக்கு நாலு வயதிருக்கலாம். ஒரு கையில் ஓலைச் சுவடியும் மறு கையில் மரத்தினால் செய்யப்பட்ட சிறு குதிரைப் பொம்மை ஒன்றையும் வைத்திருந்தான்.

பின்னாலேயே அந்தக் கிழவர் வந்தார். வேலைப்பாடுகள் செய்யப்பட்ட, கொண்டையில் வெள்ளிக் குமிழ் பூட்டிய கைத்தடி ஒன்றை இடது கையில் வைத்திருந்தார். ஊன்றி நடப்பதற்காக அல்ல, ஒரு சடங்கு போலக் கையில் வைத்திருக்கிறார் அதை என்று தோன்றியது. கைத்தடியின் உச்சியில் கோக்கப்பட்ட சலங்கைகள் அவர் நடக்கும்போது எழுப்பிய ஓசை, அறையின் நிசப்தத்தில் மிகப் பெரிதாகக் கேட்டது. அறையில் குழுமியிருந்தவர்களுக்கு ஆசி கூறுவதுபோல வலது உள்ளங்கையை உயர்த்திக் காட்டினார்.

ஸோமிட்ஸிய அரசமைப்பின் முதல் நிலை நிர்வாகி அவர். சிறுவன் பிராயம் எய்தும்வரை ராஜாங்க நடவடிக்கைகளில் அவருடைய முடிவுதான் அறுதியானது. அந்தச் சிறுவனுக்கு - மேன்மை தங்கிய மன்னர் என்றுதான் குறிப்பிட வேண்டும் அந்தப் பாலகனை- ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளும் தேகப் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் கற்றுத்தருவதற்கு வெய்ஸ்முல்லரையும்; மலையேற்றமும் பூகோள சாஸ்திரமும் வனவியலும் கற்றுத் தருவதற்கு ஜூலியஸ் லூமும்பாவை யும் நியமித்திருக்கிறார். புதிதாக வந்திருக்கும் ஆசிரியர்களையும், கடந்த

மாதங்களில் பிரபுக்களாகப் பதவியேற்றிருக்கும் புதியவர்களையும் கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்துதான் இது.

சிறுவனின் நாற்காலி தரையில் வைக்கப்பட்டதும், அவன் இறங்கி ஓடிப் பாதந்தாங்கியில் கால் வைத்து ஏறி அரியாசனத்தில் உட்கார்ந்து கொண்டான். மற்றவர்களைப் பார்த்து, அமரும்படிச் சைகை செய்தார் கிழவர்.

அவையில் பயம் கலந்த மௌனம் நிரம்பியிருந்ததாகத் தோன்றியது வெய்ஸ்முல்லருக்கு. கிழவர் பேசத் தொடங்கினார்.

> ...மேன்மை தங்கிய மன்னர் இருபத்தாறாம் ஸோமிட்ஸுவின் சந்நிதிக்கு வந்திருக்கும் பாக்யவான்கள் அனைவரையும் ஸோமிட்ஸிய ராஜாங்கத்தின் சார்பாக வரவேற்பதற்கு, பதினேழாம் ஈனோங்காகிய இந்தக் கிழவனுக்கு உத்தரவிடும்படி மேன்மைதங்கிய மன்னர் இருபத்தாறாம் ஸோமிட்ஸுவின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்...

சுவடிக்கட்டைத் தன் தொடைக்கடியில் இடுக்கி வைத்துவிட்டு, மரக் குதிரைப் பொம்மையைக் கையில் உயரத் தூக்கி, டொக டொக் ...டொக டொக்... என்று நாக்கால் நொட்டைவிட்டுக் காற்றில் விரட்டிக்கொண்டிருந்தார் மன்னர். குதிரை வலது கோடியிலிருந்து இடதுகோடிவரை மிகச் சரியாக நூற்றெண்பது டிகிரிகள் ஓடிக் கடந்து விட்டு, மின்னல் வேகத்தில், புறப்பட்ட இடத்திலிருந்தே மீண்டும் பாய்ந்தோடியது.

மன்னரின் மீது பரிவான ஒரு பார்வையை வீசிவிட்டு, புன்னகைத்தவாறே அவையை நோக்கிப் பேசினார் கிழவர்.

> ஸோமிட்ஸியாவின் பாறைகள் ஒவ்வொன்றும் ஆதி ஸோமிட்ஸுவின் பாதம் பட்ட புண்ணியம் படைத்தவை. ஸோமிட்ஸிய ஆகாயம் ஆதி ஸோமிட்ஸுவின் பார்வை பட்ட அதிர்ஷ்டம் கொண்டது. துங் லோவில் வற்றாமல் பாய்வது நீரல்ல, ஆதி ஸோமிட்ஸுவின் கருணை. இந்தத் தேசத்தின் இறையாண்மைக்கு எந்த ஒரு குந்தகமும் வராதவண்ணம் தத்தமது பணிகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் ஆதி ஸோமிட்ஸுவின் ஆசி அள்ள அள்ளக் குறையாமல் சித்திக்கும் என்று கூறி விருந்தினர் அனைவரையும் வரவேற்கும் பாக்யம் உற்றவனாகிறேன்...

முடிவற்று நீளும் ஸோமிட்ஸிய வாக்கியங்களை, மொழிபெயர்த்தான் அருகிலிருந்த குள்ளன். மீசை முளைத்த தடயமேயில்லாத மழுமழுப்புடன் இருந்த அவனது முகத்தில் கடுமையாக வியர்வையும் பயமும் அரும்பியிருந்தன.

மன்னரின் கவனம் குதிரையிடமிருந்து விலகி, ஈனோங்கின் வார்த்தைகளில் குவிந்திருந்தது இப்போது. பேச்சினூடே மூச்செடுக்க

ஈனோங் நிறுத்திய இடைவெளியில், உரத்த குரலில் ஏதோ சொன்னார் மன்னர்.

பசிக்கிறது என்கிறார்.

என்று வெய்ஸ்முல்லரின் காதில் கிசுகிசுப்பாக மொழிபெயர்த்தார் வாங்யே பிரபு. அசட்டுச் சிரிப்புடன் மன்னரிடம் திரும்பி வலதுகையை நெஞ்சில் வைத்து மடக்கி, இடுப்பை முன்னோக்கி வளைத்து,

ஆகட்டும், மேன்மை தங்கிய மன்னரே.

என்று பணிவான குரலில் பதிலளித்துவிட்டு, இருக்கை தூக்கிகளை நோக்கிச் சமிக்ஞை செய்தார் ஈனோங். அவர்கள் மன்னர் இருபத்தாறாம் ஸோமிட்ஸுவை நாற்காலியுடன் தூக்கிச் சென்றார்கள்.

திரைக்குப் பின்னால் நின்று ஈனோங்கின் முகத்தையே எட்டிப் பார்த்தபடி இருந்த பணியாளிடம் தலையசைத்தார் ஈனோங்.

விருந்தினர்களுக்காக ஒரு சிறு விருந்து ஏற்பாடாகியிருக்கிறது. குறைகளைப் பொருட்படுத்தாமல் உண்டு மகிழ்வதற்கு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

திரையின் மறுபுறம் நடத்திச் சென்றார். உணவறையில் ஒரே சமயத்தில் நானூறு பேர் அமர்ந்து உண்ணத்தக்க அளவு இடவசதியும், மர மேஜைகளும் நாற்காலிகளும் இருந்தன. சிவப்புத் துணி விரிக்கப்பட்ட மேஜைகளில் வைக்கப்பட்ட பீங்கான் தட்டுகள் மற்றும் குவளைகளில், வனப்பு மிகுந்த இளம்பெண்கள் பரிமாறினர். காரம் மிகுந்த ஸோமிட்ஸிய உணவைக் கண்ணில் நீர் தளும்ப உண்ணத் தொடங்கினான் வெய்ஸ்முல்லர். மூங்கில் குவளைகளில் உயர்தர விஸ்கி பரிமாறப்பட்டபோது வெய்ஸ்முல்லரின் பார்வையில் வியப்பு மேலோங்கியதைக் கண்ட வாங்யே பிரபு, அடங்கிய குரலில் சொன்னார்.

அரண்மனை வளாகத்தில் உள்ள ஸோமிட்ஸியா வேறு. வளாகத்துக்கு வெளியே, காமியா போன்ற நகரங்களில் உள்ள ஸோமிட்ஸியா வேறு. நகரங்களுக்கு அப்பால், மிகக் கணிசமான அளவில் நிறைந்திருக்கும் கிராமங்களில் உள்ள ஸோமிட்ஸியா மிக மிக வேறு. இந்த மூன்று இழைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று எண்ணுகிறேன் நான். சாவகாசமான பொழுதில் இதுபற்றி விரிவாக நாம் பேசுவோம். உங்கள் உதவி தேவைப்படும் போது கேட்கலாம், இல்லையா?

தாராளமாக.

ஒவ்வொரு விருந்தினரிடமும் நின்று விசாரித்து வந்த ஈனோங் வெய்ஸ்முல்லரின் மேஜையை நெருங்கினார். வாங்யே மீண்டும் மௌனம் கொண்டார்.

மிகச் சுலபமாகச் சொல்லிவிடலாம்; திருத்தமான உடல்வாகு கொண்டவள் இந்தப் பெண். பின்புறம் மரச்சுவரும், மற்ற மூன்று பக்கங்களில் துணித் திரைகளும் தொங்கவிடப்பட்ட அறைக்குள் இவளுடன் தனித்து நுழைந்தபோது, உடல் முழுக்கப் பரபரப்பு ஊறுவதை உணர்ந்தான் வெய்ஸ்முல்லர். இவனை நோக்கிக் கண்ணடித்துவிட்டு ஜூலியஸ் லுமும்பா இடதுபுற அறைக்குள் நுழைந்தான். சில கணங்களிலேயே, அவனுடன் சென்ற பெண் வாய்விட்டுச் சிரிக்கும் ஒலி கேட்டது.

பளிங்கின் பளபளப்புடன் இருந்த இவள் உடலில் கற்றாழை மணம் எழுந்தது. உடலில் மயிர் முளைத்த இடங்களையெல்லாம் துப்புரவாக மழித்திருந்தாள். பல்லாண்டு காலம் நீருக்குள் மூழ்கிக் கிடந்த கூழாங்கல்லைப் போல வழுவழுப்பாகவும் குளுமையாகவும் இருந்தாள். அரண்மனைக்கு வரும் அதிதிகளை இன்புறுத்தும் பணியில் அமர்த்தப்பட்டவளாக இருக்க வேண்டும். நாசூக்கும் நளினமும் கொண்ட அசைவுகளும், இச்சையைக் கிளர்த்தித் தூண்டும் சன்ன ஒலிகளும் இவளிடமிருந்து மிகச் சீராக வெளிப்பட்டன.

ஜூலியஸ் சொல்வது சரிதான். இது ஒரு ஆடம்பரம்தான். தப்பி ஓடும் காலங்களில் சிந்தையின் கவனிப்பாரற்ற மூலைக்குள் சென்று பதுங்கிவிடும் இச்சை, உகந்த சந்தர்ப்பத்தில் என்னமாய் விறைத்துச் சீறி எழுகிறது...

ஜூலியஸ் லுமும்பாவின் அறைக்குள்ளிருந்து கேட்ட சிரிப்புச் சப்தம் நின்றுவிட்டது. வேதனையான முனகலும், அடித் தொண்டையிலிருந்து வெளியேறும் மிருக உறுமலும் தன் வேட்கையைப் பெருக்கிப் பல மடங்கு உத்வேகமூட்டுவதை ரசித்தவாறு, இணக்கமாகத் தன் ஆளுகைக்குள் இசைந்த உயிருள்ள ரப்பர் பொம்மையை வெறியுடன் கையாளத் தொடங்கினான் வெய்ஸ்முல்லர்...

உயர்ந்தும் தணிந்தும் நெளியும் ஜ்வாலையின் உக்கிரத்தில் பொசுங்கித் தணிந்துவிடும் ஆவேசத்துடன் புலன்கள் குவிந்து ஆழப் பதிந்திருந்த தருணத்தின் தியானத்தன்மையைக் கலைக்கிறது சலங்கை ஓசை. தொலைவிலிருந்து நெருங்கி வந்துகொண்டேயிருக்கிறது, சிறு சிறு நிறுத்தங்களுடன்.

வலது பக்கத்துத் தடுப்பிலிருந்து பேச்சுக் குரல் கேட்கிறது. தற்காலிகமாக நின்றிருந்த சலங்கைச் சப்தம் தொடர்வது கவனத்தில் உறைத்த மறுகணம், தானிருந்த தடுப்பின் வாயில் திரைச்சீலை ஒருபுறமாக ஒதுங்கி விலகியதைக் கண்டான் வெய்ஸ்முல்லர். மலர்ந்த கண்களுடன் உள்ளே நுழைந்த ஈனோங் கிழவன், விகாரமான புன்னகையுடன்,

*ஏற்பாடுகள் எல்லாம் வசதியாக இருக்கிறதா!*

என்று உபசாரமாக விசாரித்துவிட்டு, பதிலை எதிர்நோக்காமல் வெளியேறினான். அவன் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் என்ற வெறியுடன் எழுந்த வெய்ஸ்முல்லர், திரையை நோக்கி நகர்வதற்கு முன் தடாரென்று பெரும் ஓசை கேட்டது.

திரையைத் தாண்டி வந்திருந்த வெய்ஸ்முல்லர், ஈனோாங் மல்லாந்து விழுந்து கிடப்பதைக் கண்டான். அந்தக் கிழவனின் கைகள் அடிவயிற்றைப் பிடித்திருந்தன. மின்னல் தாக்கிக் கருகிய மரம்போல எதிரில் நின்றிருந்த ஜூலியஸ் லுமும்பாவைக் குறி வைத்து நாலைந்து வாள் முனைகளும், இரண்டு துப்பாக்கி முனைகளும் நீண்டிருந்தன.

*...bloody voyeur... bloody voyeur....*

என்று உச்சாடனம் செய்தவண்ணமிருந்தான் லுமும்பா.

ஆத்திரத்தில் தவறிய பிரக்ஞை மீண்டபோது, அந்தத் தாழ்வாரம் நெடுகிலும் ஆண்களும் பெண்களும் முழு நிர்வாணக் கோலத்தில் பிரமை பிடித்தவர்களாக நின்றிருந்தது உறைத்தது வெய்ஸ்முல்லருக்கு. போர்க்களத்திலிருந்த நாட்களில் உடலில் தொற்றியேறுவது போன்ற உஷ்ணம் தனக்குள் உயர்வதை உணர்ந்தான்.

மெல்லத் தன் கைகளை ஊன்றி எழுந்த ஈனோங், அமர்ந்த நிலையிலேயே, மனிதர்கள் மரம் போல நின்றிருந்த தாழ்வாரத்தை நிதானமாகப் பார்த்தார். லுமும்பாவைச் சுற்றிலும் நின்றிருந்த காவல் வீரர்களை விலகிப் பின்வாங்கும்படி சமிக்ஞை செய்தார். அவர்களில் ஒருவன் பொறுக்கித் தந்த கைத்தடியை வாங்கிக்கொண்டார்.

தாழ்வாரத்திலிருந்து தரை சேர்க்கும் படிகளில் இறங்கத் தொடங்குமுன், ஜூலியஸ் லுமும்பாவை ஒருமுறை திரும்பிப் பார்த்தார். ஆழமான பார்வை. பிறகு, காவல் வீரர்கள் புடைசூழ, இறங்கி நடந்தார். லுமும்பாவை நோக்கி ஒரு தப்படி வைத்த வெய்ஸ்முல்லர், வேண்டாமென்று தீர்மானித்தவனாகத் தன் தடுப்புக்குள் மீண்டும் நுழைந்தான்.

முன்னரே சென்று, படுக்கையில் காத்திருந்த அந்தப் பெண்ணைப் புறக்கணித்துவிட்டு ஆடைகளை எடுத்து அணியத் தொடங்கினான்.

போகுமுன் லுமும்பாவை வெறித்த ஈனோங்கின் பார்வையில் பொங்கிய குரோதம், தன் வாழ்நாள் முழுக்க மறக்க முடியாததொன்றாக இருக்கும் என்று தோன்றியது. நடந்தவையெல்லாம், வெறும் துர்க்கனவின் காட்சிகள்தாம், நனவில்லை என்று ருசுவாகுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றும் ஒரு எண்ணம் துளிர்விட்டது.

*

# ஓர் உளவு

... உங்கள் உலகத்தில் துரோகங்களும் தண்டனைகளும் உண்டா? ...

**மீ**சை போல இருபுறமும் நீண்டிருந்த உணர்வுக் கம்பிகளை இடவலமாக அசைத்துக்கொண்டேயிருந்தது கரப்பான் பூச்சி. வெண்ணிறத் தரையில், அழகாகப் படர்ந்த ஒரு கறை போல, பளபளக்கும் அரக்கு நிறத்தில் தரையில் நின்றிருந்தது. முன்புறத்தைச் சற்று ஏந்தலாக உயர்த்தியிருந்த விதத்தில், அந்த அறையை, அந்த மாளிகையை, அந்த நகரத்தை, ஏன், அந்த ராஜ்யத்தையே மேற்பார்வையிட்டுப் பராமரிக்கும் பாவனை மிளிர்ந்தது.

எந்த ஒற்றனின் வருகைக்காகக் காத்திருக்கிறாய் நீ ?

என்று முனகினார் ஈனோங்.

நகருக்கு இரவு தொடங்கும்போது ஈனோங்குக்குப் பொழுது விடியும். வெளியூர்களிலிருந்து வந்து சேரும் ஒற்றர்கள் யாராவது வந்திருந்தால், மிகவும் மந்தமாக நகரும் இரவு. பகல்பொழுதுகளில் ஈனோங் மாளிகைக்கு அருகிலேயே வரக்கூடாது என்று அவர்களுக்கு நிரந்தர ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. வாங் சுக் ஒருவன் மாத்திரம் எந்த வேளையிலும் வந்து போகலாம்.

யாவரும் வந்து போன பிறகு, பின்னிரவில், ஆண்டின் எந்தப் பகுதியானாலும்சரி, ஈனோங் மாளிகைக்குள் வசந்தம் பூக்கும். மிதமான சூட்டில், புதிதாக வடித்த சாராயத்துடன் நிரூபா வந்து சேர்வாள். மாளிகையின் பின்னுள்ள தனிக் குடிலில் வசிக்கிறாள் அவள். துடிப்பாய்ப் பாயும் குதிரையின் விசையுடன் விரைந்து கழிந்துவிடும் இரவு. அதிகாலையில் உறக்கம் சுகமாகத் தொற்றிப் பரவும்.

இந்த மாளிகையிலேயே இருந்துவிடுகிறேனே.

என்று ஒவ்வொருநாளும் அவள் இறைஞ்சுவாள். ஆந்தைபோலப் பகலில் பதுங்கி, இரவில் நடமாடுவது மனத்துக்குப் பெரிய சங்கடமாக இருக்கிறதாம்.

என்னுடைய கூட்டில் நான் இருந்துகொள்ளக் கூடாதா?

என்று கேட்பாள். பதிலெதுவும் சொல்லாமல் அவளை இறுக்கி அணைத்துக்கொள்வார்.

இல்லை, பெண்ணே. இது ஈனோங்குகள் வசிக்கும் மாளிகை. நானே தற்செயலாக இங்கு வசிக்க வந்தவன்தான். தேனடையில் தேனீக்கள் மட்டும்தான் வசிக்க முடியும். மைனாக்களுக்கு இட மில்லை. ராஜ்ய காரியம் வேறு. தனி வாழ்க்கையின் விவகாரங்கள் வேறு....

என்று நினைத்துக்கொள்வார்.

அவளுடைய குடிலில் வசித்து வரும் வாங் சுக் நிரூபாவைத் தாய் மாதிரிப் பார்த்துக்கொள்கிறான். அவளை விட நாலைந்து வயதுதான் சிறியவனாக இருப்பான். ஆனாலும், ஒரு தலைமுறை மரியாதை காட்டு கிறான் என்று பெருமையாய்ச் சொல்வாள் நிரூபா. அவர்கள் இருவரும் இணைந்து வாழ்வதாகத்தான் பொதுவான தோற்றம். வாங்யேவுக்கு மட்டும் உண்மை தெரியுமோ என்று ஈனோங்குக்கு ஒரு சந்தேகம் உண்டு. தெரிந்தால் தெரியட்டுமே...

சற்று முன் கிளம்பிப் போன வாங் சுக் மீது மனம் குவிந்தது. இருக் கையை விட்டு எழுந்து முன்னும் பின்னுமாக நடக்கத் தொடங்கினார்.

வாங் சுக், சராசரி ஸோமிட்ஸியர்களை விடவும் குள்ளமானவன். கை கால்கள் ஒட்டப்பட்ட சுரைக்காய் போல இருப்பான். ஓடும் பெருச்சாளி மாதிரி விசையான நடை . அவனுடைய பார்வையில் துரப்பணம் ஒன்று இருந்து, எதிராளியைச் சதா துளைக்கிற மாதிரி இருக்கும். தந்தையே என்றுதான் அழைப்பான். பல வருஷங்களுக்கு முன்பு பாங் டூவுக்கு விஜயம் செய்தபோது, அந்த ஊர்த்தலைவன் திக்ஸே இவனைக் கொண்டுவந்து முன்னால் நிறுத்தினான்.

தாய் தகப்பன் இருவருமே கொலைக்குற்றம் புரிந்ததற்காகக் கொல்லப்பட்ட பிறகு, ஸோமிட்ஸியச் சட்டப்படி பாங் டூவுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட அந்தச் சிறுவன் எந்தக் குடும்பத்துடனும் இணைந்து வசிக்க மறுக்கிறான் என்றும், சதா அழுதுகொண்டேயிருக் கிறான் என்றும், பின்னிரவுகளில் அவனுடைய அழுகையின் ஊளை நீளும்போது கிராமத்தின் உறக்கம் கருகிவிடுகிறது என்றும் புகார் சொன்னான் திக்ஸே.

சிறுவனின் தோற்ற விசித்திரம் கருதி, தலைநகருக்குத் தன்னுடன் அழைத்து வந்தார் ஈனோங். நிரூபா கிடைத்த சமயம் அது. ஈனோங்குடன் பல வருடங்கள் இணைந்து வாழ்ந்த பிறகு, நோயால் இறந்து போனாள் நிரூபாவின் தாய். தனக்குப் பிறகு ஈனோங்கின் துணையாக, ஆதரவற்ற தன் மகளே இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தாள். மரணப் படுக்கை

யில் இருப்பவள் கேட்கும் வாக்குறுதியை மறுக்க முடியவில்லை இவரால். அவளுடன் படுக்கையைப் பகிர்ந்துகொண்ட கணங்களின் எதிரொலி போல தொனித்த அந்த வாக்குறுதியை உடனடியாக அளித் தார். வாங் சுக்குக்கு நிரூபாவுடன் ஒத்துப் போனது மிகவும் ஆறுதலான விஷயம்.

வளர்ந்த பிறகு, இல் சுங்கின் உதவியாளனாகச் சேர்த்துவிட்டார். பையன் கெட்டிக்காரன். மிக விரைவாகத் தொழில் பழகினான். பிறந்ததே ஒற்றனாய் ஆவதற்காகத்தானோ என்று வியக்குமளவு துல்லியமாக விபரங்களைச் சேகரித்து வந்து சொல்வான். இன்று இல் சுங்கையே வெற்றிகரமாக வேவு பார்த்து வருமளவு கெட்டிக்காரனாகிவிட்டான்.

சற்றுமுன் இல் சுங்கைப் பற்றி அவன் சொல்லிச் சென்ற தகவல்கள் அத்தனை உவப்பானதாக இல்லை...

வாங் சுக் என்னதான் சூட்டிகையானவனாக இருந்தாலும், இல் சுங் மாதிரி வராது. தகவல் சேகரிப்பவன் மாத்திரம் அல்ல இல் சுங். செயல் வீரன். தேசத்தில் ஒரு செய்தியை விரைவாகப் பரப்பவேண்டும், அது கிளம்பிய இடம் யாருமறியாதபடி, என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? இல் சுங்கை நாடுங்கள். இரண்டே நாளில் ஸோமிட்ஸியாவின் தாவரங் களும் வளர்ப்புப் பிராணிகளும், ஏன், பாறைகளும் கூட அந்தச் செய்தியை அறிந்து, அதை நம்பவும் ஆரம்பித்திருக்கும். நிகழ்வுகளை முன்கூட்டியே யூகிப்பதிலும் வல்லவன் இல் சுங்.

என் வாழ்க்கை என்னை ஒரு சந்தேகப் பிராணியாக வளர்த்தெடுத் திருக்கிறது தலைவரே.

என்று சிரித்துக்கொண்டே சொல்வான். அபாரமான ராஜ விசுவாசி. அவனுடைய அண்ணன் ஒருவனை ஒரு காரியத்தில் ஈடுபடுத்த வேண்டியதாகிவிட்டது. அதன் காரணமாகச் சில பின்விளைவுகள் ஏற்பட்டன. எதையுமே பொருட்படுத்தவில்லை இல் சுங். கடந்த பத்து வருடங்களில் ஸோமிட்ஸியாவில் எந்தவொரு பெரிய பிரச்னையும் கிளம்பியதில்லை என்றால், இல் சுங் போன்ற திறமையாளர்களும் அதற்கு முக்கியக் காரணம்.

ஆனால், அவனைப் பற்றி இந்த விதமாகச் சொல்லிவிட்டுப் போகிறானே வாங் சுக். இல் சுங்கின் விசுவாசத்தைச் சந்தேகிக்க முடிய வில்லை. வாங் சுக்கின் சொல் சுத்தத்தையும் சந்தேகிக்க முடியாது. ரத்த உறவுக்குச் சமமானது அது.

நடையை நிறுத்தி, இருக்கையில் தொப்பென்று உட்கார்ந்தார். விண்விண்ணென்று தெறிக்கும் தலையை இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்துக்கொண்டார்.

பணியாள் வந்து அறிவித்தான்:

தலைவரைப் பார்க்க இல் சுங் வந்திருக்கிறார்.

உள்ளே வரச் சொல்.

வந்தான்.

வணக்கம், தலைவரே.

ஈனோங் நிமிர்ந்து உட்கார்ந்தார். இல் சுங் முழந்தாளிட்டு, ஈனோங்கின் வலதுகையைத் தன் இருகைகளாலும் பற்றி, புறங்கையில் உதடுபடாத படி மெலிதாக முத்தமிட்டான்.

ஈனோங் இருக்கையில் அமர்ந்துகொண்டார். அவருக்கருகில் காலடியில் அமர்ந்தான் இல் சுங்.

எப்போது வந்தாய்?

இன்று அதிகாலையில், தலைவரே.

நேற்றிரவே நீ வந்துவிட்டதாகவல்லவா வாங் சுக் சொன்னான், என்று நினைத்துக்கொண்டார் ஈனோங். நெஞ்சுக்கூட்டில் கசப்பு மண்டியது. காலங்காலமாய் உரமிட்டு வளர்த்த செடியில் விஷமலர் பூத்திருப்பது உண்மைதான் போலிருக்கிறதே. ஆனால், இந்த முகம் பொய் சொல்கிற முகம் மாதிரித் தெரியவில்லையே

ஆகட்டும், போய் வந்த விபரங்களைச் சொல்.

அடங்கிய குரலில் நிதானமாகச் சொல்லத் தொடங்கினான் இல் சுங். வெளியில் சிறு தூறல் விழும் ஓசை சன்னமாகக் கேட்டுக்கொண்டிருக்க, அவன் விவரித்துக்கொண்டு போனபோது, தன் முதுகுத்தண்டின் உள்ளே தேள் ஒன்று கொடுக்குயர்த்தி ஊர்வது மாதிரி உணர்ந்தார் ஈனோங்.

...தலைவரே, திபெத்திய எல்லையில் காவலாக நிற்கும் சீன வீரர்களைப் பார்த்தால், மரணம் மனித உருக்கொண்டு நிற்பதுபோலத் தோன்றுகிறது. மலைத் தேன் விற்கிறவனாக நான் உள்ளே நுழைந்த போது, முதலாவது காவல் சாவடியில் இருந்த அதிகாரி என்னை ஏகப் பட்ட கேள்விகள் கேட்டுத் துளைத்தான்.

பல தலைமுறைகளாகத் தேன் வியாபாரம் செய்து வருகிறேன். என்னைப்போன்ற தலைச்சுமை வியாபாரிகள் திபெத்தில் நுழைவதற்குத் தடையிருந்ததேயில்லை. இங்கே சூழ்நிலை இவ்வளவு மாறியிருப்பது எனக்குத் தெரியாது. நான் ஸோமிட்ஸிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவன். திபெத்தியர்களுக்கு இந்தத் தேனை விற்றுப் பணமாக்காமல் திரும்பினால், என் குடும்பம் பட்டினி கிடந்துதான் சாக வேண்டும். அதிகாரியே மனமுவந்து இந்தத்

தேனை விலைக்கு வாங்கிக்கொண்டாலும் போதும். திபெத்துக்குள் நுழையாமல் இப்படியே திரும்பி விடுகிறேன்.

என்றேன்.

ராணுவ முகாமில் எறும்புகளா வளர்க்கிறோம். இவ்வளவு தேனை வைத்துக்கொண்டு என்ன செய்வது.

என்று சிரித்தான் அந்த அதிகாரி.

எங்கிருந்து வருவதாகச் சொன்னாய்?

என்று கேட்டான்.

ஸோமிட்ஸிய சாம்ராஜ்யம்.

அவனுடைய சிரிப்பு பல மடங்கு ஜாஸ்தியாகிவிட்டது. அவனும் அவனுடைய கூட்டாளிகளும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

பையா, சீனாவைத்தான் சாம்ராஜ்யம் என்று சொல்லவேண்டும். இந்த ஹிமாலயம் முழுவதுமே சீன சாம்ராஜ்யத்தின் பாதம்தான். புரிகிறதா? ஸோமிட்ஸியாவை மாகாணம் என்று சொல்லவேண் டும். எங்கே சொல்லு, ...ஸோமிட்ஸிய மாகாணத்திலிருந்து வருகிறேன்.

தொடர்ந்து சிரித்தார்கள். நான் சொன்னேன். மறுபடி சொல்லச் சொன் னார்கள். கிட்டத்தட்ட எழுபது எண்பது தடவைகள் இதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டி வந்தது. அவர்கள் அடக்க முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில், சிரிப்பின் இளக்கத்தில், அந்த அதிகாரி அனுமதி தந்தான். எழுத்துபூர்வமாக அவன் தந்த அனுமதியோடு, லாஸா வரை செல்ல முடிந்தது.

வழிநெடுகிலும் நான் பார்த்த திபெத், பழைய திபெத் இல்லை, தலைவரே. கடந்த சில வருடங்களில் திபெத்தின் ஆன்மா புரட்டிப் போடப்பட்டுவிட்டது. ஜனங்களின் முகத்தில் பயம் நிரம்பி வழிகிறது. யாரும் யாருடனும் பேசத் தயங்குகிறார்கள். பாதையெங்கும் உள்ள கிராமங்களில் சிவப்பு நிறக் கொடிகள் பறக்கின்றன. சுவர்களில் சீனத் தலைவரைப் போற்றும் வாசகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவருடைய பெயர் மாவோ என்கிறார்கள். சுவரில் ஒட்டிய தாள்களில் தவறாமல் அவருடைய முகம் இடம் பெற்றிருக்கிறது.

பௌத்தத் துறவிகளின் முகத்தில் கடுகடுப்பு ஏறியிருக்கிறது. தலாய் லாமா வெளியேறியபோதே திபெத்தின் உயிர்த்தாதுவும் வெளியேறி விட்டது என்கிறார்கள் அவர்கள். புத்தனின் பெருங் கருணையால், திபெத் தங்களுக்கு மீண்டும் கிடைத்துவிடும் என்கிறார்கள். பழங்கால நூல்களையும், பௌத்தச் சின்னங்களையும், புனிதப் பொருட்களையும் உறைபனி மலையின் உச்சியில் உள்ள ஒரு குகைக்குக் கொண்டுசேர்த்து விட்டதாகவும்; உடல், மன வலிமைக்கான கடும் பரிசோதனைகளில்

தேறிய நூற்றுக் கணக்கான துறவிகள் அந்தக் குகைக்குச் சென்றுவிட்ட தாகவும் சொல்கிறார்கள்.

ஆகாய விமானங்களோ, தட்டாரப் பூச்சி விமானங்களோ அந்த முகட்டின் அருகில் கூடச் செல்ல முடியாத அளவு பனி மூடிய குகையாம் அது. சாமான்ய மனிதர்கள் சென்றால், மூச்சுத் திணறிச் சாக வேண்டி வரு மாம். உயிர்வாயு மிகக் குறைவாயிருக்கிற இடமாம் அது.

தகவல்கள் சேகரிப்பது கடினமாக இருக்கவில்லை. ஆனால், எல்லாருமே, எந்த ஒரு விஷயத்தையுமே ரகசியமாகத்தான் பேசுகிறார் கள். அன்றாட நடைமுறை உரையாடல்கள் கூடக் கிசுகிசுப் பாகத்தான் நடக்கின்றன. கை கால்களையோ, உயிரையோ இழப்பதை விடக் குரலை இழப்பது சிரமமான விஷயமில்லை என்கிற நம்பிக்கை திபெத் முழுக்கப் பரவியிருக்கிறது. ஜனங்களிடம் இருக்கும் அச்சத்தை அதிகரிப் பதற்காகத் தொடர்ந்து ஏகப்பட்ட வேலைகள் பார்த்து வருகிறார்கள் சீனர்கள். அவர்களுடைய சித்திரவதை முறைகள் பற்றி விசேஷமாகச் சொல்கிறார்கள் தலைவரே. அவற்றை ஒருமுறை காதால் கேட்டவன் கூட, சீனாவை எதிர்க்கத் துணிய மாட்டான். அடிக்கொரு தடவை, ஜனங்களின் பயத்தை உஷ்ணம் மங்காமல் வைத்திருப்பதற்காகவோ என்னவோ, பொது இடத்தில் தங்கள் வதை விளையாட்டுகளை நிகழ்த்திக் காட்டுகிறார்கள். நானே கண்ணாரப் பார்த்தேன், ஒரு சம்பவத்தை.... அம்மணி இருக்கிறார்களா உள்ளே?...

ஃனோங்கின் முகத்தில் கடுகடுப்புப் பரவியது.

அவளைப் பற்றி உனக்கேன் கவலை? நீ சொல்ல வந்ததை மட்டும் சொல்.

இல்லை, அவர்கள் இருக்கும்போது அதைச் சொல்வது உசிதம் என்று தோன்றவில்லை.

நீ சொல்வது கேட்காத தொலைவில்தான் அவள் இருக்கிறாள். நீ சொல்.

....லாஸாவில் நான் நுழைந்ததற்கு மறுநாள், மோட்டார் வாகனத் தில் பொருத்திய ஒலிபெருக்கியில் தெருத்தெருவாக அறிவித்துக் கொண்டு போனார்கள். அன்று முற்பகலில், பொட்டாலாவுக்கு முன்னுள்ள சதுக்கத்தில் ஒரு நிகழ்ச்சி நடக்க இருப்பதாகவும், லாஸாவின் குடிமக்கள் அனைவரும் தவறாமல் வந்துசேர வேண்டும் என்றும் அறிவிப்பு. லாஸாவின் தெருக்கள் உடனடியாக மனிதத் தலைகளால் நிரம்பிவிட்டன, தலைவரே. எறும்புக் கூட்டம் கலைந்தது மாதிரிப் பரபரப்பாகப் பொட்டாலாவை நோக்கிச் சென்ற ஜனக் கூட்டத்துடன்

நானும் போனேன்.

நடுவில் ஒரு வெற்றுவெளி உண்டாக்கி, சுற்றிலும் ஜனங்களை வட்டமாக நிறுத்தியிருந்தார்கள் சீனக் காவல் வீரர்கள். தங்களுக்கு இஷ்டப்பட்ட யாரையாவது கூட்டத்திலிருந்து இழுத்துத் தரையில் போட்டுத் தாறுமாறாக உதைத்தார்கள். பெரிதாகக் குரலெழுப்பி அலறும் துர்ப்பாக்கியசாலியின் உடம்பில் துப்பாக்கிமுனைக் கத்தி நுனியால் கீறினார்கள்.

விரைந்து வந்து நின்றது ஒரு ராணுவ வண்டி. அதன் முன்புறத்தில் அமர்ந்திருந்த உயர் அதிகாரி குதித்து இறங்கினான். பின்கதவைத் திறந்து தவளைகள் மாதிரி ராணுவ வீரர்கள் குதித்தார்கள். கால்களையும் கைகளையும் பிணைத்த சங்கிலிகளால் ஒருவரோடு ஒருவர் இணைக்கப் பட்ட பௌத்தத் துறவிகள் ஐந்து பேர் கீழிறக்கப்பட்டார்கள்.

வரிசையாக மண்டியிடும்படி அந்த அதிகாரி ஆணையிட்டான். வரிசையில் முதலாவது துறவிக்கு எதிரே வந்து நின்றான். தன் அருகில் துப்பாக்கியோடு நின்றிருந்த வீரனிடம் சீன மொழியில் கட்டளையிட் டான்.

அந்த வீரன் துறவிகளின் பின்புறம் வந்து, முதலாமவனின் காதுமடலுக்குப் பின்னால் துப்பாக்கியின் நுனியைப் பதித்து, சுட்டான். மூளை தெறிக்கத் துள்ளி விழுந்தது அந்தத் துறவியின் உடல்..

சங்கிலியில் கோக்கப்பட்ட பிற துறவிகள் நிலைகுலையாது விறைத்து நிமிர்ந்திருந்தார்கள். கூடியிருந்த கூட்டத்திலிருந்து உரத்த பெருமூச்சு உயர்ந்தது. முன்வரிசையில் நிற்க வைக்கப்பட்டிருந்த பெண்களில் சிலர் மூர்ச்சை போட்டார்கள்.

நாலாவது துறவி சுட்டுக் கொல்லப்பட்டபோது, ஐந்தாமவன் உரக்கக் கத்தினான்.

புத்தனின் கருணை பொழிக...திபெத்தின் புகழ் ஓங்குக... திபெத்தின் இறையாண்மை உயர்க...

காற்றில் அம்புபோலப் பாய்ந்தது அந்த இளைஞனின் குரல்.

அதிகாரியின் முகத்தில் கடுகடுப்பு கூடிவிட்டது. தன் வீரர்களிடம் வேகமான குரலில் தொடர்ந்து ஆணைகள் பிறப்பித்தான். அவர்கள் துறவியை நோக்கி ஓடினார்கள். கால்பந்து போல அவனை உருட்டித் துவைத்தார்கள்.

இரண்டு யந்திர வாகனங்கள் கொண்டுவரப்பட்டன. துறவியின் கைகளை ஒரு வாகனத்திலும், கால்களை இன்னொரு வாகனத்திலும் கட்டினார்கள். எதிரெதிர்த் திசையில் வாகனங்களை முடுக்கி விரைவாய்ச் செலுத்தினார்கள்.

கைகளையும் கால்களையும் பிய்த்தெடுத்தவாறு பாய்ந்தன வாகனங்கள். கிளைகள் தரிக்கப்பட்ட மரம்போல ரத்தம் பெருகப் புழுதியில் கிடந்தது அந்த இளந்துறவியின் நடுஉடல்...

ஈனோங்கின் முகத்தில் கருந்திரையாகப் படர்ந்திருந்தது அச்சம். நெற்றிப் பொட்டுகளிலும், உள்ளங்கைகளிலும் ஊறிய வியர்வையைச் சிறு துவாலையால் அழுத்தித் துடைத்தவாறு கேட்டார்:

ஜனங்கள் யாருமே எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லையா?

வார்த்தைகளுக்குப் பதில் சொல்லத் தயாராகத் துப்பாக்கிக் கத்திகளும், குண்டுகளும் இருக்கும்போது...

சரி..சரி... மேலே சொல்.

கூட்டம் கலைந்தபோது, யாரும் பிறருடன் பேசிக்கொள்ளக்கூட இல்லை. மெல்லக் கூட்டத்தை விட்டு விலகி நகர்ந்த ஒரு கிழத்துறவியிடம் பேச்சுக்கொடுத்தேன். அவர் சொன்னார்.

'திபெத்தின் காற்றில் மரணத்தின் துர்வாடை நிரம்பியிருக்கிறது தம்பி. ஒரு விஷவேளையில் திபெத்திய வானத்தில் நேர்ந்த கிரகணம், இத்தனை வருடங்களுக்குப் பிறகும் தன் பிடியை எப்படி இறுக்குகிறது பார்த்தாயா?'

என்றார். எல்லாத் துறவிகளையும் அவர்கள் சித்ரவதை செய்வதில்லை போல...அந்தக் கிழத் துறவி தொடர்ந்து சொன்னார்:

'என்னை மாதிரிக் கிழவர்களுக்குப் பிரச்சினை இல்லை. அறைக்குள் அடைத்து வைத்து வகுப்பெடுப்பதோடு சரி. இளைஞர்கள்தாம் பாவம். உடலை இழக்கிறார்கள். புத்தனின் கருணைக் கண்கள் திறக்கும் வேளை இன்னும் வரவில்லை போலிருக்கிறது' என்றார்.

வேறென்ன சொன்னார் அவர்?

நான் ஸோமிட்ஸியன் என்று தெரிந்ததும், இன்னொன்றும் சொன்னார். சீனாவின் அடுத்த இலக்கு ஸோமிட்ஸிய சாம்ராஜ்யம் தானாம்...

அப்படியா சொன்னார்?

ஈனோங்கின் குரலில் அதிர்ச்சி இருந்தது. முகத்தில் கருமையின் அடர்த்தி அதிகரித்திருந்தது. சவம் போல ஆகிவிட்டதே என்று எண்ணிக் கொண்டான் இல் சுங்.

ஆனால், துருப்புகள் மத்தியில் இப்படி ஒரு பேச்சே இல்லை, தலைவரே.

அவர்கள் எப்படிச் சொல்வார்கள்... ஆனாலும், பௌத்தத்

*துறவிகள் சொல்வதை ஒதுக்கிவிட முடியாது. முக்காலமும் உணர்ந்தவர்கள் அவர்கள்... இரு, இதோ வந்து விடுகிறேன்*

என்று சொல்லி எழுந்துபோனார் ஈனோங்.

திரும்பி வந்தபோது, ஈனோங்குடைய முகம் முன்னைவிடத் தெளிவாய் இருந்தது. குரலில் சிறுகச் சிறுகச் சேர்ந்து வந்திருந்த குழைவு காணாமல் போயிருந்தது.

*சரி. வேறேதாவது தகவல் இருக்கிறதா?*

*இல்லை, தலைவரே. நான் கொண்டுவந்த செய்திகள் அவ்வளவு தான்.*

*இருக்கட்டும். எல்லாத்தகவல்களையும் வாங்யேவுடன் விவாதிக்க வேண்டும். எது வந்தாலும் நாமும் தயாராக இருக்க வேண்டு மில்லையா?*

இல் சுங்கின் முகத்தை உற்றுப் பார்த்தார். சலனமில்லாமல் நிலைத்து எரியும் சுடர்போல இருந்தது அவன் முகம்.

*தலைவரே, நான் மன்னரைப் பார்க்கவேண்டுமே.*

தனக்குள் ஏற்பட்ட அதிர்ச்சியை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொள்ள மிகவும் பிரயத்தனப்பட்டார் ஈனோங்.

*எதற்காக?*

*திபெத்துக்குள் சென்று வந்தபிறகு, மறுபிறவி எடுத்தமாதிரி உணர்கிறேன். மரணத்தின் வாய்க்குள் தலையைக் கொடுத்து மீண்ட மாதிரிப் படபடப்பாய் இருக்கிறது. மன்னரைப் பார்த்து ஆசி பெற வேண்டும் என்று விருப்பமாய் இருக்கிறது.*

*இந்த இரவில் எப்படிப் போய்ப் பார்ப்பது?*

*இன்றே என்று இல்லை. வரும் நாட்களில் ஒருமுறை...*

*அதற்கென்ன...? இன்னொரு நாள் வா. நானே கூட்டிச் செல்கிறேன்.*

இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

*சரி... நீ போகலாம்.*

என்று உத்தரவிட்டார் ஈனோங். வாசலை நோக்கி நகர்ந்தான். கதவைத் தாண்டவிருந்தபோது,

*இல் சுங்...*

என்று அழைத்தார். திரும்பி வந்து பணிவாக நின்றவனிடம் கேட்டார்,

*திபெத்திலிருந்து எந்த வழியாக வந்தாய்?*

அவன் கொஞ்சமும் தயங்காமல் சொன்னான்.

வழக்கமான மலைப்பாதையில்தான், தலைவரே.

இல்லை... பாங் டூவில் ஏதோ சிறு கலவரமாம். லேக்கி என்று ஒரு சிறு பெண் ஆற்றில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாளாம்...

இல் சுங்கின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். அவன் அமைதியாக இருந்தான். சற்று இடைவெளி விட்டு,

வேண்டுமானால், போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா தலைவரே.

வேண்டாம். வாங் சுக்கை அனுப்பியிருக்கிறேன். அதிகாலையில் கிளம்பிச் சென்றுவிடுவான். நீ போ. உனக்கு ஏதாவது தகவல் தெரியுமா என்பதற்காகக் கேட்டேன்.

நிமிர்ந்த நடையுடன் அழுத்தமாகப் பாதம் பதித்து அவன் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தார் ஈனோங். அடித்தொண்டையில் சாராயத்துக் கான ஏக்கம் நமைச்சலாக ஊறியது.

பின்னிரவுப் பொழுதின் காற்றில் குதிரைச் சாண மணம் கலந்திருந்தது. ஆழ்ந்து சுவாசித்தார் ஈனோங். குழப்பமான நேரங்களில், நறுமணம் பிடிப்பதில்லை அவருக்கு. பனிச்சுவர் போல வெண்ணிறம் கொண்டு தரைபார்த்துக் குனிந்திருந்த குதிரையின் பிடரியில் கையால் வருடினார். சிலிர்ப்புறுவதால் அதன் சருமத்தில் சுழிகள் தோன்றி ஓடுவதைக் கவனித்தார்.

உங்கள் உலகத்தில் துரோகங்களும் தண்டனைகளும் உண்டா?

என்று கேட்டபடி அதன் வயிற்றில் மெதுவாகத் தட்டினார். தலை உயர்த்தி, ஆகாயத்தை வெறித்தார். கணக்கற்ற விண்மீன்கள் எந்நாளும் பொலியும் ஸோமிட்ஸிய வானத்தில், இன்று கருமேகம் அடர்ந்திருந்தது. அவ்வப்போது வெட்டி விலகும் மின்னலைத் தொடர்ந்து அடிக்குரலில் குமுறியது ஆகாயம். திசைகெட்டுத் திமிறிப் பாய்ந்துகொண்டிருக்கிறது மனம்.

எண்ணற்ற ஸர்க்கங்கள் எழுதி, ஸோமிட்ஸிய ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் வழிமுறைகளை உபதேசித்துச் சென்ற மேதை கிஸீயாவின் வரிகள் நினைவில் வந்தன. நிர்வாக அமைப்பு சம்பந்தமான நெருக்கடிகள் உருவாகும்போதெல்லாம், வழிகாட்டி நடத்தும் வரிகள்... **உடலைக் காப்பாற்ற விரலைத் தரிப்பதால் தவறில்லை.**

ஈனோங்கின் தலை ஆமாம் என்பது போல அசைந்தது. லாயத்தின் நுழைவாயிலில் காவலுக்கு நின்றிருந்த வீரனைக் கொஞ்ச நேரம் உறுத்துப் பார்த்தார்.

கூர்ப்பகுதி ஆகாயத்தை நோக்கியிருக்கும்படி ஈட்டியை விறைப்பாகப் பிடித்தபடி சிலை போல நின்றுகொண்டிருந்தான் அவன்.

தாழ்ந்த குரலில் தனக்குத்தானே சொல்லிக்கொண்டார் ஈனோங்.

இவன் சரியான ஆள்தான்.

காலையில் எப்போது அனுப்ப வேண்டுமென்றும், உடன் யாரை அனுப்ப வேண்டும் என்றும் முடிவு செய்துகொண்டார்.

வீட்டுக்குள் நுழையும்போது, மனம் அரற்றியது.

இல் சுங்... இல் சுங்... அட கிறுக்கனே. பாங் டுவுக்குச் சென்றதை யாவது ஒப்புக்கொண்டிருக்கக் கூடாதா... மனத்துக்கு உவப்பேயில்லாத எத்தனை முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது? என்ன பிறவி என்னுடையது...

படுக்கையில், நிரூபா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அவளை வன்மையாக இழுத்து, தன் உதடுகளால் அவளது உதடுகளைப் பிரித்து, அவளது சுவாசத்தில் பெருகும் துர்வாடையின் சுகந்தத்தில் புதைந்து கொண்டார்.

*

# இல் சுங்

... அத்தனை வருஷங்களின் பகல் வெளிச்சம் மொத்தத்தையும் தொகுத்துப் பாய்ச்சினாலும் வெளிறாத இருள் அடர்ந்த இரவு ...

இல் சுங்குக்கு இரண்டு அப்பாக்கள். ஸோமிட்ஸிய நகர்ப்புறங் களில் இப்போதெல்லாம் ஒருத்திக்கு ஒருவன் என்றுதான் வாழ்கிறார் கள். இல் சுங்கின் குடும்பம் கிராமியப் பின்னணி கொண்டது. தலை நகரத்தை விரிவாக்கம் செய்யும் திட்டத்தின் பகுதியாகக் குடியேற்றப் படுவதற்கு முன், விவசாயிகளாக இருந்தவர்கள்.

ஸோமிட்ஸியாவில் குலத்தொழில் என்றோ, குடும்பத் தொழில் என்றோ வரையறைகள் எதுவும் கிடையாதாகையால், அப்பாக்கள் இருவரும் ஆளுக்கொரு வேலையில் இருந்தார்கள். மூத்த அப்பாவுக்கு, அரண்மனையில் வாங்கா ஊதும் பணி. அவையில் அரச காரியங்கள் நடக்கும்போதும், மன்னர் மாலை உலாக் கிளம்பும்போது உடன் சென்று அங்கங்கே நின்றும் வாங்கா ஊதுவது அவருடைய பணி. எத்தனாவது ஸோமிட்ஸு பதவியில் இருக்கிறாரோ, அத்தனை இடங்களில் வாங்கா ஊத வேண்டும்.

இளைய அப்பா, இறந்த உடல்களை அப்புறப்படுத்தும் பணியில் இருக்கிறார். பதினேழாவது ஸோமிட்ஸுவின் காலத்தில் உருவாக்கப் பட்டது இந்தத் தொழில். இறந்தவர்களின் உடல்களை என்ன செய்வது என்பது பற்றிய புதிய சட்டத்தை இயற்றினவர் அவர். அதுநாள்வரை, உயிர்நீத்த மனித உடல்கள், மரக்கிளைகளில் கயிற்றில் கட்டித் தொங்க விடப்பட்டு வந்தன.

நரிகளும் நாய்களும் முழங்கால் வரையிலான பகுதிகளைத் தின்னும். மரமேறக் கூடிய விலங்குகள், தலை மற்றும் புஜங்களை உண்ணும். நெஞ்சு முதல் தொடைகளின் இறுதிப் பகுதி வரை, காக்கை முதலான பறவையினங்கள் தின்று பசியாறும்.

பிறகு, வெற்று எலும்புக்கூடு பார்ப்பவர் மனங்களை வெருட்டும் வண்ணம் கிளையில் தொங்கிக்கொண்டிருக்குமாம் - வெகுகாலத்திற்கு.

எலும்புக்கூடு தொங்காத மரங்களே ஸோமிட்ஸியாவில் கிடையாது என்ற நிலைமை உருவாகியிருந்தது என்று பழைய நூல்களில் குறிப்பு இருக்கிறது.

பதினேழாம் ஸோமிட்ஸ¬ இந்த வழக்கத்தை மாற்றினார். இறந்த உடல்களுக்கு நீதி செய்தார். பூமியை வசிப்பிடமாகக் கொண்டாலும், தன் நியமங்களை ஆகாயத்திலே நிறைவேற்றும் கழுகுகள் மட்டுமே புசிக்கும் விதமாக, பிரேதத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கழுகுகளுக்கு இரையாகப் போடும்படி சட்டமியற்றினார். சில சமயங்களில் இரை போடப் போனவர்களே இரையாக நேர்ந்ததும் உண்டுதான். அது மன்னரின் தவறில்லையே. செயல்படுத்தியவர்களின் தவறு.

இந்தக் குடும்பத்தின் வரலாற்றில், ஆறாத ரணமாக இருக்கும் ஒரு சம்பவத்தில் இரண்டு தகப்பன்மாரும் பங்கேற்க நேர்ந்ததற்குப் பிறகு, அவர்கள் இருவருக்குமே சித்த சுவாதீனம் இல்லாமல் போய்விட்டது. அதன்பிறகுதான் இல் சுங் குடும்பப் பொறுப்பேற்றான். இந்த ஈனோங்கின் நம்பிக்கையைப் பெறுவதற்காக மலையெருமை போலவும், கோவேறுகழுதை போலவும் கடுமையாக உழைத்தான்.

ஈனோங்கின் நம்பிக்கையைப் பெறாமல் அவன் கதையை எப்படி முடிப்பது? ஆதி ஸோமிட்ஸ¬ இருப்பதாகச் சொல்கிறார்களே, வண்டு துளைக்க முடியாத, என்றும் அலராத, தாமரை மொட்டுக்குள்; அது மாதிரியான எஃகுக் கோட்டைக்குள் அல்லவா இருக்கிறான் அந்தச் சண்டாளன்.

பெரிய அண்ணன் கிம் பேயறைந்த முகத்துடன் வீட்டுக்குத் திரும்பிய அந்த இரவு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது.

மலைப்பகுதியின் ஆழ்பிளவுகளில் தேனடைகள் பூத்திருக்கும். உச்சியில் இருக்கும் ஏதாவது ஒரு மரத்தின் அடித்தண்டில் கட்டிய வடக் கயிற்றின் மறுநுனியில் கால்களைக் கட்டித் தலைகீழாக இறக்கப்படும் மனிதன், தலைகீழாகவே தொங்கிச் சென்று தேனடைக்குக் கீழே தீப்பந்தம் காட்டிப் புகை கிளப்புவான். பல்லாயிரம் தேனீக்கள் கொட்டும்போது, அவற்றின் கொடுக்குகள் முறிந்துவிடும் விதமாக, உடல் முழுக்க ஒருவித மெழுகைப் பூசித் தொங்கவிடுவார்கள். இதற்கென்றே வடிக்கப்பட்ட விஷமுறிவுக் கஷாயத்தையும் குடித்துவிட்டுத்தான் தொங்கச் செல்வார்கள். தேனீக்கள் விரட்டப்பட்ட பின் எஞ்சும் தேனடையை, இடுப்பில் கட்டப்பட்ட சிறு மரப் பீப்பாயில் பிழிந்து இறுக மூடி மேலே எடுத்து வருவார்கள்.

மூத்த அப்பா இந்தக் கலையில் நிபுணர். அண்ணன் கிம்முக்கும் பழக்கியிருந்தார். தேனடைக் காலம் தவிர்த்த பிற பருவங்களில் ஈனோங்

மாளிகை மற்றும் அரசாங்க விருந்தினர் மாளிகையின் கழிப்பறைகளைப் பராமரிக்கிறவனாகவும் இருந்தான் கிம்.

நெடுங்காலம் நெடும்பொழுதுகள் தொடர்ந்து தலைகீழாய்த் தொங்கிப் பயிற்சி எடுத்ததன் காரணமாக, சற்றே வீங்கினாற் போலத் தெரியும் தலையும், சராசரி ஸோமிட்ஸிய முகத்தில் இருக்கும் வெளிறிய மஞ்சள் நிறத்தில் கொஞ்சம் சிவப்பேறினது போலவும் இருக்கும் கிம்மின் முகம். குழந்தைமை வற்றாத அந்த முகம் வாடியிருந்ததைக் காண்பது சகிக்க முடியாததாக இருந்தது.

துயரத்தின் கறை படிந்த இரவு அது. பின்னர் வந்த அத்தனை வருஷங்களின் பகல் வெளிச்சம் மொத்தத்தையும் தொகுத்துப் பாய்ச்சினாலும் வெளிறாத இருள் அடர்ந்த இரவு. வீட்டின் பின்புறம் உள்ள மரத்தில் தனிப்பறவையொன்று அரற்றிக்கொண்டிருந்தது. நிலா முழுதாக மறைந்திருக்கும் நாள். அந்தத் தினத்தில் ஆதி ஸோமிட்ஸு, தான் உருவாக்கிய சாம்ராஜ்யத்தின் சந்துபொந்துகள், இண்டு இடுக்குகள் ஒன்றுவிடாமல் விஜயம் செய்து பூரிக்கும் நாள் என்று ஒரு ஐதீகம் உண்டு. அன்று இரவு முழுவதும் யாருமே வீட்டை விட்டு வெளியேறக்கூடாது என்று அரசாங்க ஆணை.

கிம்மைக் காணோமே என்று குடும்பத்தில் எல்லாரும் கவலையாய் இருந்தார்கள். அப்பாக்கள் இருவரும் வாசலில் இருக்கைகளாகப் போடப்பட்ட அடிமரத் தண்டுகளில் உட்கார்ந்து மிதமாகச் சாராயம் அருந்திக் கொண்டிருக்க, அம்மா வீட்டிற்குள்ளே, ஆதி ஸோமிட்ஸு சொரூபத்தின் முன் அமர்ந்து பிரார்த்தித்தவாறிருந்தாள். தம்பி தங்கைகள் உறங்கிவிட்டனர்.

கிம்மின் இளம் மனைவி, கைக்குழந்தையை மடியில் கிடத்தித் தாலாட்டிக்கொண்டிருந்தாள். ஸோமிட்ஸியாவின் பிரசித்தி பெற்ற தாலாட்டுப் பாடல் அது.

*இருட்டு வேளை குளக்கரைப் பக்கம்*
*போகாதே மகனே, போகாதே.*
*பனியும் அதிகம் பகைவர் அதிகம்*
*போகாதே கண்ணே, போகாதே.*
*மேகம் அடர்ந்த ராத்திரிநேரம்*
*தலைப்பிரட்டை முற்றித் தவளையாகும்.*
*தவளையை உண்ணப் பாம்பு வரும்.*
*பாம்போ பருந்தின் உணவாகும்.*
*பருந்தைக் கொல்லப் பாயும் அம்பு*
*வேடன் கையில் சரணாகும்.*
*வேடர் நிறைந்த உலகமிது,*
*தனியே மகனே போகாதே.*

*இருளும் கொடிது பனியும் கொடிது*
*போகாதே கண்ணே, போகாதே.*

பாடல் முடிந்து குழந்தையின் அரவம் அடங்கியதும், கிம்மின் இளம் மனைவி விசும்பும் ஒலி கேட்டது. பிரார்த்தனையைக் கலைத்துக் கொண்டு எழுந்த அம்மா, மருமகளின் அருகில் சென்று அவளது தலையைக் கோதினாள்.

இரவு முதிர்ந்து இரண்டு ஜாமங்கள் கழித்து வந்து சேர்ந்தான் கிம்.

அவனது மேலாடையில் ரத்தக்கறை. கைகளும் உதடுகளும் நடுங்கிக் கொண்டிருந்தன. அம்மா கேட்டாள்.

*ஏனப்பா, இத்தனை தாமதம்?*

அண்ணன் பதிலளிக்கவில்லை. தரைநோக்கிக் குனிந்த தலையோடு நின்றிருந்தான்.

*இரவுக்காவல் வீரர்கள் பார்த்தால் சிறையில் கொண்டு போட்டிருப் பார்களே மகனே?*

என்றார் மூத்த அப்பா. அவன் பதில்சொல்லாமல் உடையை மாற்றிக் கொள்ளப் போனான். பின்னிரவில், உறக்கத்தில் ஆழ்ந்திருந்த இல் சுங்கை எழுப்பினான்.

*தம்பீ, உன்னிடம் ஒன்று சொல்லவேண்டும்.*

உறக்கச் சடைவில் செருகின கண்களைக் கசக்கி விழிப்பேற்றியவாறு இல் சுங் சொன்னான்.

*சொல்லு.*

*இரண்டு முழுநிலா நாளுக்கு முந்தின முழுநிலா நாளில் காமியா வுக்குள் இரண்டு அந்நியர்கள் வந்தார்களே?*

*ஆமாம்.*

*அதில் கறுப்பாக இருந்தவனைக் கொன்றுவிட்டேன்.*

இல் சுங் பதறிவிட்டான். மாமிசத்துக்காக வளர்க்கப்படும் பிராணிகளைத் தவிர, வேறு எந்த ஜீவராசியைக் கொல்வதும் கடும் குற்றம் ஸோமிட் ஸியாவில். குறைந்தபட்ச தண்டனையே சிரச்சேதம்தான்.

*ஏன் சகோதரா?*

*ஈனோங்கின் கட்டளை.*

*எதற்காகவாம்?*

*அயலவரைக் கௌரவிக்க விருந்து நடந்ததல்லவா? அதற்கு மறுநாள் ஈனோங் என்னைக் கூப்பிட்டுப் பேசினார். அது மனிதப் பிறவி அல்ல என்றார். தீய எண்ணம் கொண்ட ஆவியால்*

பீடிக்கப்பட்ட வன மிருகம் என்றார். நான் கேட்டேன், மனிதர்கள் மாதிரி நடந்துகொள்கிறானே; பேசுகிறானே, என்று. அது எழுப்பும் ஒலியில் ஒன்றாவது ஒரு சொல்லாகப் புரிகிறதா உனக்கு என்றார். மிலேச்ச மொழியாய் இருக்கும் என்றேன். ஈனோங் சொன்னார், இல்லையில்லை. அது மிருக பாஷை. மனிதபாஷை போலவே பேசக் கற்ற மிருகம் அது. அதன் தோலைப் பார்த்தாயா, சமைக்கும் போது தீய்ந்த உணவுப் பொருள்போல. அது இங்கே தொடர்ந்து இருக்கும் பட்சத்தில், ஸோமிட்ஸியாவில் பயங்கர உற்பாதங்கள் சம்பவிக்கும் என்றார். அந்த விலங்கைக் கொல்ல என்னைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் சொன்னார். நான் தயங்கினேன். அவன் உடம்பில் ஓடுவது நம்மைப் போல சிவப்பு ரத்தம் இல்லை. கரப்பான் பூச்சிக்கு உள்ளதுபோல வெள்ளை ரத்தம். அவன் கழுத்தை வெட்டினால் உனக்கே புரியும் என்றார். பின்பும் நான் சமாதானமாகவில்லை. இறுதியில், ஆதி ஸோமிட்ஸுவின் ஆவி அவர்மேல் இறங்கிவிட்டது. தெய்வகட்டளையை நிறைவேற்றா விட்டால், நமது குடும்பமே அழிந்துவிடும் என்று சாபமிட்டது ஆதி ஸோமிட்ஸுவின் குரல்.

சரி, தெய்வசித்தத்தைத்தானே நிறைவேற்றியிருக்கிறாய். போய் நிம்மதியாகத் தூங்கு.

இல்லை தம்பி. இனி, என்னால் தூங்கவே முடியாது.

அப்படியெல்லாம் சொல்லாதே. பதற்றம் இன்னும் அடங்க வில்லை உனக்கு.

இல்லை தம்பி. உறங்கிக்கொண்டிருந்த அவன் கழுத்தை ஒரே வீச்சில் சீவியபோது பீய்ச்சிய ரத்தம் வெள்ளை நிறமாக இல்லை. சிவப்பு நிறம்தான். ஒரு மனிதனைத்தான் நான் கொன்றிருக் கிறேன்...

கிம்மின் உடலும் குரலும் நடுங்கின.

விடிந்த மறுநாள் பொழுது, வளைத்து ஒடிக்கப்பட்ட நீதியின் பொழுது. ஸோமிட்ஸிய ராஜாங்கப் பட்டத்துக் குதிரையின் தலை, இல் சுங்கின் வீட்டு வளாகத்துக்குள் கிடந்தது. அதன் விறைத்த விழிகள் ஆகாயத்தை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தன. கிம்மின் ஆடைகளி லிருந்த ரத்தக் கறை போதுமான சாட்சியமாய் இருந்தது. அரசச் சின்னங் களை அழித்த குற்றத்துக்குக் குறைந்தபட்ச தண்டனை, சிரசாக்கினை என்கிறது ஸோமிட்ஸியச் சட்டம். ஸோமிட்ஸியாவில் இழைக்கவே கூடாத குற்றங்களில் தலையாயது, அரச நிந்தனை.

ஈனோங், தீர்ப்பை வாசித்து முடித்ததும் வாங்கா ஊதவேண்டியது மூத்த அப்பாவின் பொறுப்பாக இருந்தது. தன் குடும்பக் குருத்தின் சடலத்தைத் துண்டுதுண்டாக வெட்டி கழுகுகளுக்குப் போடும் பணி

இளைய அப்பாவைச் சேர்ந்தது.

இலையுதிர் காலத்தில், சிறு காற்று ஒன்றுக்குப் பலியாகிச் சடாரென உதிர்ந்துவிடும் பழுத்த இலைகள் போல உதிர்ந்துவிட்டன குடும்பத்தின் ஆனந்தமும், நிம்மதியும்.

இப்போது இல் சுங், ஒற்றர் படையில், கேந்திரமான இடத்தில் இருக்கிறான். தற்போதைய ஸோமிட் ஸுவின் நம்பிக்கைக்குரிய ஆளாக. இந்த இடத்துக்கு வந்து சேர்வதற்கு எத்தனையோ பொய்கள் சொல்ல வேண்டியிருந்தது. ஈனோங்கின் நம்பிக்கையைப் பெறுவதற்காகப் பல நஷ்டங்களை, அவமானங்களை ஏற்க வேண்டியிருந்தது. முதுகுத் தண்டைக் கொஞ்சமும் நிமிர்த்தாது, மழுப்பலான வாழ்க்கையொன்றை வாழ வேண்டியிருந்தது.

ஸோமிட்ஸுவின் நேரடி அன்புக்குப் பாத்திரனாக ஆகிவிட்டபடியால், ஈனோங்கின் நகங்களிலிருந்து பாதுகாப்பான ஒரு தொலைவிலேயே இருக்க முடிகிறது. வாஸ்தவத்தில், ஸோமிட்ஸுவின் நம்பிக்கையைச் சம்பாதிக்க ஒரு சிறு பொய் போதுமானதாக இருந்தது. அவருடைய பெற்றோர் இருக்கும் இடம் உத்தேசமாகத் தெரியும் என்றும், ஆறே மாதத்தில் துல்லியமாகக் கண்டுபிடித்துச் சொல்கிறேன் என்றும் வாக்களிக்க வேண்டியிருந்தது. அதுசரி, சிறுவர்களை ஏமாற்றச் சிறு பொய்கள் போதும்தானே.

பின்னர் அவர்கள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்துவிட்டான். சென்ற முழுநிலா நாளன்று அந்தப் பெரியவரை நேரில் சந்திக்கவும் செய்தான். ஆனால், ஸோமிட்ஸுவிடம் சொல்ல இன்னும் நேரம் கனியவில்லை.

திபெத்துக்குச் சென்று திரும்பும் வழியில், பாங் டூவுக்குச் செல்லும் வணிகர்கள் சிலரைச் சந்தித்தான். அவர்களுடன் இரவில் கணப்புக்கு அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது, பாங் டூவில் இருக்கும் பெரியவர் ஒருவரைப்பற்றி வியந்து சொன்னார்கள். பொருட்கள் கொடுத்து எதையும் வாங்குவதில்லையாம் அவர். வெள்ளி நாணயங்கள் கொடுக்கிறாராம். பேரமும் பேசுவதில்லை. ஊர் ஜனங்களுக்கு எது தேவையென்றாலும், ஊர்த் தலைவனிடம் கேட்பதில்லையாம்; பெரியவரிடம்தான். ஒவ்வொரு வருஷத்திலும் முதல் மஞ்சரியின் முதல் முழுநிலா நாளன்று கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து ஊரை சந்தோஷப்படுத்துகிறார் என்றார்கள். வருகிற முழுநிலா நாளன்றும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறதாம்.

சுவாரசியமான கதை என்றுதான் கேட்டுக்கொண்டிருந்தான் இல் சுங். ஆனால், அந்த வணிகர் குழுவில் இருந்த வயோதிகன் ஒருவன் சொன்னதில்தான் ஒரு பொறி கிளம்பியது.

*அதெல்லாம் சரி, நண்பர்களே. தொடையிடுக்கைச் சதா வருடிக் கொடுக்கிறான் ஒருத்தன் என்றால் என்ன அர்த்தம்...?*

கேட்டுவிட்டு அமைதியாக இருந்தான் அந்தக் கிழ வணிகன். யாரும் பதில் சொல்லவில்லை.

*...அவனுக்கென்று புதிதாய் ஒரு பெண்பிள்ளை கிடைத்திருக்கிறாள் என்று அர்த்தம்.*

நமட்டுச் சிரிப்புடன் அவன் சொல்லி முடித்ததும் விழுந்து விழுந்து சிரித்தார்கள் அனைவரும். கிழவன் தொடர்ந்து சொன்னான்.

*உழைத்துச் சம்பாதித்தவனுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும். இந்தப் பெரிய மனிதனை நானும் பத்து வருஷங்களாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஊரான் தோட்டத்துப் பழத்தைக் களவாடி விருந்தாளிக்குப் படைத்துப் பெருமைப்படும் கண்ணியவானாய்த் தெரிகிறான் அவன். குடுவையில் இருக்கும் தண்ணீரைக் குடித்தால் தீரத்தானே செய்யும். இவனுடைய குடுவையானால், கிணறு போல ஊறுகிறது. சரி, ஸோமிட்ஸுவின் ஆசி முழுக்க இருக்கிறது அவனுக்கு... வேறென்ன சொல்வது?*

இல் சுங்கின் மனத்தில் பெரும் கிளர்ச்சி உண்டானது. பிறருக்குத் தெரியாமல் அதை மறைத்துக்கொள்ளப் பெரும் பிரயாசையாகிவிட்டது. அந்தக் கிழ வணிகன் மேலும் பேசமாட்டானா, ஊர்ஜிதம் செய்கிற மாதிரி மேலும் ஏதாவது தகவல் கிடைக்காதா என்று ஏக்கமாய் இருந்தது. கிழவன் ஏமாற்றவில்லை.

*ஊரையே சந்தோஷப்படுத்துகிறான் என்கிறீர்களே, அவனுடன் இருக்கும் பெண்பிள்ளையின் அழுகையை நிறுத்த முடிந்ததா அவனால்? ராத்திரிகளில் அவள் அலறுவதை உங்களில் யாராவது கேட்டிருக்கிறீர்களா? தீராத வியாதிபோலச் சாபம் பீடித்த குடும்பம் அது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.*

அனைவரும் மௌனமாக இருந்தார்கள்.

*அதுதான் போகட்டும். இத்தனை பெரிய தனவான் பாங் டூவில் வந்து குடியிருப்பதேன் என்று உங்களில் யாருக்காவது தோன்றி யிருக்கிறதா....?*

மறுபடியும் மௌனம்.

*... அதற்குத்தான் பெரியவர்கள் சொல்வார்கள், உவர் நீராக மழை பெய்கிறதாக எவனாவது சொன்னால், அதைக் காதால் கேட்காதே, நாக்கால் கேளு என்று.*

**பா**ங் டூவில் இசைநிகழ்ச்சி முடிந்ததும், அந்தக் கிழவரைத் தனியே

அழைத்துப் போனான் இல் சுங். ஈனோங்கிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறதாகச் சொன்னான். கிழவர் மடத்தனமாகக் கேட்டார்.

நீ ஈனோங்கின் ஆள் என்பதற்கு என்ன ஆதாரம்?

உங்கள் கேள்வியே போதும் எனக்கு.

என்ன உளறுகிறாய்?

சாதாரணப் பிரஜைகளுக்கு, ஈனோங் விசேஷமாகத் தகவல் அனுப்ப மாட்டார். அதிலும், பாங் டூவில் வசிக்கும் பிரஜைக்கு.

கிழவர் நடுங்கிவிட்டார். இல் சுங்கின் கைகளைப் பற்றிக்கொண்டார். தன்னுடைய அடையாளம் வெளிப்படுமானால் உடனடியாகக் கொலை செய்யப்படுவார் என்று ஈனோங் கடுமையாக எச்சரித்திருப்பதாகவும், தன்னைப் பற்றிய விபரங்கள் எது தெரிந்திருந்தாலும் மறந்துவிடும் படியும் கெஞ்சினார். என்ன வெகுமதி கேட்டாலும் தருகிறாராம்.

தேவைப்படும்போது கேட்கிறேன்.

என்று மிதப்பாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான் இல் சுங்.

இருளில் குதிரையில் செல்லும்போது, ஆகாயத்தில் பறந்து செல்வதுபோல உணர்ந்தான். அந்தப் பழிகார ஈனோங்கைக் காமியாவின் தெருக்களில் அம்மணமாக ஓட்டிச் செல்வது போன்ற ஆனந்தம் பொங்கியது. சகோதரா... கிம், அழியாமல் கனத்திருக்கும் உன் ஞாபகத்துக்கு ஒரு முத்தம். அடையாளம் தெரியாத கிழட்டு வியாபாரியே, உன் சொற்களுக்கு ஒரு முத்தம். பத்துவருடங்களாக என்னைக் கைவிடாதிருந்த பொறுமையே உனக்கொரு முத்தம். அவ்வப் போது சறுக்கினாலும் பிடி விடாது என்னை நடத்திச் செல்லும் அதிர்ஷ்டமே உனக்கொரு முத்தம். காவல் நாய் போல ஒவ்வொரு கணத்திலும் அயராது விழித்திருக்கும் இல் சுங் என்னும் கதாநாயகனே, உனக்கொரு முத்தம்.

காற்றில் முத்தங்களை வாரி வழங்கியவாறு சவாரி செய்யும் எஜமானனின் உற்சாகத்தை அவனது கால் கட்டைவிரல்களின் இதமான அழுத்தத்தால் அறிந்ததுபோல உல்லாசமாகவும் மெத்தனமாகவும் நடந்து சென்றது குதிரை.

தலைவிரிகோலமாக நின்று காற்றின் திசையில் உடலசைத்த மரத்தினடியில் நின்றிருந்த அந்தப் பெண் பார்வையில் பட்டாள். ஆகாயத்திலிருந்து இறங்கி வந்த இருட்பதுமை போலவும், மாந்திரீகப் புலத்தை நீங்கித் தரையிறங்கிய துர்தேவதை போலவும் தென்பட்டாள்.

அந்த இரவில், அந்த இடத்தில், முழுநிலாவின் வெளிச்சத்துக்கு வெளியில், மர நிழலில் ஒதுங்கி நின்றிருந்த அவளின் உடல்வாகு, இல் சுங்கின் வேட்கையைத் தூண்டியது. அவள் யாரென சரஞ்சரமாய் உதித்த கேள்விகளை மழுக்கிப் பொங்கும் இச்சைக்கு ஆட்பட்டுக் குதிரையை

விட்டு இறங்கினான். எதுவும் மறுப்பின்றி அவள் உடன்பட்டது, பேரானந்தமாக இருந்தது அவனுக்கு.

அவள் முகம் கூடத் தெரியவில்லை. ஆனால், முழுக்க முழுக்க அவள் பெண் என்பதும், முழுமையான பெண் என்பதும் மிக நன்றாகத் தெரிந்தது.

வேட்கை தணிந்து குதிரையிலேறி கிராமத்தை விட்டு விலகும் போது, துருவ நட்சத்திரம் உயர்ந்திருந்தது. கொஞ்ச தூரம் வந்த பின் இல் சுங் திரும்பிப் பார்த்தான். இருளின் பகுதிபோலச் சமைந்து, இவன் போவதைப் பார்த்தபடி நின்ற இடத்திலேயே கற்சிலை போல அவள் நின்றுகொண்டிருந்தாள்.

ஒற்றர் படையில் உள்ள எல்லாருக்கும் ஒரே ஒரு வேலைதான். கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றும் விதமாக உளவறிவது. இல் சுங்குக்கு மாத்திரம் இரண்டு வேலைகள். முதல் வேலை, அரசாங்கத்தின் சார்பில் உளவறியச் செல்வது.

இரண்டாவது வேலை, அவன் தனக்குத்தானே வழங்கிக் கொண்டது. ஈனோங்கின் நடவடிக்கைகளை வேவு பார்ப்பது. இதற்கான பின்பலமாக வாங்யே பிரபு இருக்கிறார். அண்ணன் கிம் இறந்த சில நாட்களில் இல் சுங்கைக் கூப்பிட்டுப் பேசினார் அவர். ஈனோங் கிழவனின் சொந்த விருப்புவெறுப்புகள் காரணமாகப் பெரும் இழப்பு களுக்கு ஆளான பலர் தன் பின்னால் இருப்பதாகவும், அவர்களுடன் இணைந்து ஸோமிட்ஸிய நலனுக்காகப் பணியாற்றச் சம்மதமா என்றும் கேட்டார். இல் சுங் சம்மதித்தான்.

வாங்யே பிரபு, ஸோமிட்ஸிய ஆட்சியின் உயர்மட்டப் பிரமுகர் களில் ஒருவர். கருவூலத் துறையின் தலைவர் அவர். வெளிநாடுகளில் சென்று கற்றவர். வெளிநாட்டவர் போலவே வாழ்பவர். ஈனோங்குக்கு எதிரானவர். சமயம் வாய்க்கும்போது, ஈனோங் கொல்வதற்கிருப்பவர் களில் முதலாவது நபர் இவர்தான் என்றும் காமியாவின் உளவு வட்டாரங்களில் பேச்சு கிளம்பியிருந்தது.

முந்தின ஸோமிட்ஸூவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக ஒரு பேச்சிருந்தது, அரசாங்கத்தின் உயர்மட்டத்தில். அந்தப் புதிரின் மையத் தைக் காதால் கேட்கக் கிடைத்தது இல் சுங்குக்கு, நேற்றிரவுக்கு முந்தின இரவில்.

திபெத்திய விஜயத்தின் தகவல்களைச் சொல்வதற்காக நேற்று ஈனோங் மாளிகைக்குச் செல்வதற்கு முந்தின நாள் இரவு, வாங்யே பிரபுவின் இல்லத்துக்குச் சென்றிருந்தான். காலில் கட்டெறும்புகள் கடிக்க, கம்பளி உடையின் கழுத்துப் பகுதியில் உள்ள கிழிசல் வழி பனிக்

காற்று தோலைத் துளைக்க, வெகுநேரம் காத்திருந்தான். கட்டட வளாகத்தின் பிரதான வாசல்வழி ஒருபோதும் உள்ளே நுழையக்கூடாது என்று நிரந்தர உத்தரவிருந்தது அவனுக்கு. தோட்டத்தின் வேலியைத் தாண்டும்போது முள்கம்பிகள் கீறிய இடங்களில் நெருப்பாய் எரிந்தது.

ஒரு மிடறு குடித்தாலே, உணவுப்பாதை முழுக்கத் தீப்பட்டது போலக் காந்தும் சாராயத்தை மூக்குமுட்டக் குடித்திருந்தார் வாங்யே பிரபு. சீசாவில் அடைக்கப்பட்ட சீமைச்சாராயத்தை மட்டுமே அருந்தக் கூடியவர், ஸோமிட்ஸிய நாட்டுச் சாராயத்தைக் குடித்திருந்தது இல் சுங்குக்குப் பெரும் ஆச்சரியத்தை அளித்தது.

மேலும், குடித்தபிறகும், சாதாரண வேளைகளில் தென்படுகிற கனவான் போலக்காட்சியளிக்கக் கூடியவர் வாங்யே பிரபு. அதுதான் சீமைச் சாராயத்தின் மகத்துவம் போல என்று நினைத்துக் கொள்வான் இல் சுங். இப்போது போதை முற்றியதில், விவசாயக் குடிமகன் போலத் தலையும் முகமும் மொழியும் கலைந்திருந்தார் அவர். தான் சொல்லும் தகவல்களை அக்கறையாகத்தான் கேட்கிறாரா என்ற ஐயம் உதித்தது இல் சுங்கின் மனத்தில். ஆனால், அவருடைய உற்சாகம் கூடிவருவது, மலர்ந்துகொண்டே போன முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

நின்றுகொண்டிருந்த இல் சுங்கை உட்காரச் சொன்னார். அவரது இருக்கையின் கால்களுக்கருகில் தயங்கி மண்டியிட்டான் இல் சுங்.

இருக்கையில் உட்கார், நண்பனே.

இருக்கட்டும் பிரபு.

இல் சுங், மிக நல்ல தகவல் கொண்டுவந்திருக்கிறாய். இத்தனை வருடங்களாகத் தேடியும் கண்டுபிடிக்க முடியாதிருந்த தகவல். ஸோமிட்ஸுவின் தகப்பனைக் கைதிகளின் கிராமத்தில் குடியேற்றிய ஒரு குற்றம் போதும். ஈனோஙகின் மேல் ராஜத் துரோக விசாரணைக்கு ஏற்பாடு செய்ய. ஸோமிட்ஸிய அடிவானத்தில் சூரியனை உதிக்கவைக்கக் கூடிய தகவலைக் கொண்டு வந்திருக்கிறாய் நீ.

வாங்யே பிரபு ஸோமிட்ஸியாவின் மிகச் சிறந்த அறிவாளிகளில் ஒருவராக மதிக்கப்படுபவர். அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்.

நண்பனே இல் சுங், இன்று ஏன் இவ்வளவு குடித்துவிட்டேன் தெரியுமா?

உடம்பு கெட்டுவிடாதா, ஐயா.

கெடட்டும். கெட்டுப்போனால்தான் என்ன? ஸோமிட்ஸுவின் உயிருக்கே உத்தரவாதமில்லை இந்த தேசத்தில் என்னும்போது.

என்ன சொல்கிறீர்கள்?...

என்று பதறியபடி, அமர்ந்த நிலையிலேயே விறைப்பாக உயர்ந்தான் இல் சுங். பிரபு, தொடர்ந்தும் குழறிக் குழறிப் பேசினார்.

ஈனோங்குகள், ஸோமிட்ஸிய மன்னர் பீடத்தின் மாட்சிமையையும், அரசாங்கத்தின் இறையாண்மையையும் காப்பதற்கு உயிரையும் கொடுப்பதாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டுமல்லவா? நேற்றிரவு, கடுமையான போதையில் அந்தக் கிழ ஈனோங் சொல்கிறான், ...வாங்யே, நானும் பிரமாணம் எடுத்துக் கொண்டவன்தான். உயிரைக் கொடுக்கவும் செய்தேன். முந்தின ஸோமிட்ஸுவின் உயிரை. ரொம்பத் தன்னிச்சையாகச் செயல்பட்டான் அந்த வாலிபன். போய்ச் சேர்ந்தான்... ஈனோங்கை எதிர்ப்பவர்கள் யாரானாலும் சரி, ஸோமிட்ஸுவாகவே இருந்தாலும், இதுதான் கதி... என்று சொல்லிவிட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது அந்த ஓநாய். நான் இதை வெளியில் பரப்பக் கிளம்பினால், என் மேல் ராஜத் துரோகக் குற்றம் சுமத்துவான் அந்தக் கிழவன். இல் சுங், என் நண்பனே, இதோ பார், அடங்காத ஆத்திரத்தால் என் உடம்பு இன்னமும் நடுங்கிக்கொண்டிருப்பதை...

இல் சுங்கின் உடல் சிலிர்த்தது. தன்னையறியாமலே, ஸோமிட்ஸிய அரசியலின் மையப் பகுதியை நோக்கித் தான் விரைந்து நெருங்குவதாக உணர்ந்தான். பண்ணை வீட்டை விட்டு வெளியேறும்போது, எதிர்ப்புறம் விரைந்து வேலியைத் தாண்டிய, மிக மிகக் குள்ளமான இன்னொரு உருவத்தைக் கவனிக்கவில்லை அவன்.

**வீ**ட்டிலிருந்து அரண்மனைக்குக் கிளம்பினான். சீக்கிரம் வீடு திரும்பிவிடும்படியும்; அண்ணன் கிம்மின் பதினொன்றாவது வருஷ நினைவுநாள் என்பதால், குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாயிருந்து சாயங்காலம் மது அருந்த வேண்டும் என்றும்; அண்ணன் கிம்மும் மானசீகமாக அந்தப் பொழுதில் உடன் இருக்கச் சம்மதம் தெரிவித்திருக்கிறான் நேற்றைய கனவில் வந்தபோது, என்றும் அம்மா சொன்னார். இருளடர்ந்த வீட்டுக்குள்ளிருந்து வெளியேறி, திறந்த வெளியில் வந்தபோது, வெளிச்சம் பழகுவதற்குச் சிரமப்பட்ட கண்கள் கூசின.

வீட்டின் முன்முற்றத்தில் இருந்த இருக்கைகளில் அப்பாக்கள் இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தவண்ணம் உட்கார்ந்திருந்தனர். விதிவசமான அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நாளுக்கு மறுநாளிலிருந்து இப்படித்தான். குளிக்கும்போதும், உண்ணும்போதும், மலம் கழிக்கும் போதும்கூட இருவரும் கைப்பிடியைத் தளர்த்துவதில்லை.

உண்மையில், மகனின் பிரேதத்தைச் சிறு சிறு துணுக்குகளாக வெட்டிக் கழுகுகளுக்கு இரையாகப் போட்டுவிட்டு வந்த இரவில்

இளைய அப்பா ஒரு வார்த்தையும் பேசவில்லை. யாரைப் பார்த்தாலும் அவர்களை ஊடுருவி வேறெதையோ பார்க்கிற மாதிரியான தொலைவு கூடியிருந்தது பார்வையில்.

மறுநாள் காலையில், அவர்களது வீட்டின் மரச்சுவர்களில் மாக் கட்டியால் படம் வரைய ஆரம்பித்தார். மணிக்கட்டில் வெட்டித்துண்டாக்கப்பட்ட, கூப்பி மன்றாடும் இரு கைகளின் படம். அவற்றிலிருந்து உதிரும் திரவச் சொட்டுகள். இடைவெளியில்லாமல் வரைந்துகொண்டேயிருந்தார். அன்றைய தினம் வாங்கா ஊதி விட்டு, நெஞ்சைப் பிடித்தபடி வீட்டுக்குள் நுழைந்த மூத்த அப்பா, முக்காடு சரிந்து, தலையைச் சுவரில் கிடத்தி அண்ணாந்திருக்கும் அம்மாவைப் பார்த்தார். அம்மாவின் கன்னங்களில் ஓயாது வழிந்துகொண்டிருந்த நீர்த்தாரையைத் தற்காலிகமாகத் துடைத்தார்.

சற்றுத் தாமதமாகத்தான், படங்களைப் பார்த்தார். அடிபட்ட மிருகம் போல ஓலமிட்டபடி ஓடி இளையவரின் கைகளைப் பிடித்தார். படம் வரைவதைத் தடுப்பதற்காகப் பிடித்தாரோ, தனக்குள் மிதமிஞ்சி ஊறும் பயத்தின் ஊற்றை அடைப்பதற்காகவோ, தெரியவில்லை. இன்று வரை தளரவில்லை அந்தப் பிடி....

தன் தெருவின் முனையைத் தாண்டி, இல் சுங் மெதுவாக நடந்தான். இன்று ஸோமிட்ஸ¬வைச் சந்தித்துவிட வேண்டும். ஸோமிட்ஸ¬வின் மாடத்தை அண்ட விடமாட்டான் ஈனோங். யார் தடுத்தாலும் சரி, ஸோமிட்ஸ¬வைச் சந்திக்காமல் திரும்புவதில்லை இன்று. அவரிடம் சொல்வதற்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஸோமிட்ஸியாவின் நிர்வாகத் தலைமையை மாற்றியமைக்கப் போகிற விஷயங்கள். பச்சை மரத்தின்மேல் பாயவிருக்கிற இடி போன்ற விஷயங்கள். ஈனோங், உன் ஆட்டம் முடிகிற வேளை நெருங்கிவிட்டது.

ஈனோங் கிழவனிடம் லாஸாவுக்குச் சென்று சேகரித்து வந்த உளவுத் தகவல்களைச் சொல்லி முடித்ததும், திபெத்திலிருந்து எந்தப் பாதை வழியாக வந்தாய் என்று கேட்டது அந்த ஓநாய். வழக்கம்போலப் பொய் சொன்னான் இல் சுங்.

பாங் டூ வழியாக வந்திருக்கலாமே. அங்கு ஏதோ கலவரமாம்.

என்று சொல்லிவிட்டு, இல் சுங்கின் முகத்தை ஊன்றிக் கவனித்தது. உயரும் ரத்த அழுத்தத்தின் பதிவுகள் முகத்துக்கேறாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டான் இல் சுங்.

சும்மா இல்லை கிழவா, பத்து வருடங்கள் ஒற்றனாகவே காலங் கழித்திருக்கிறேன்.

என்று கறுவிக் கொண்டான். விநயமான குரலில்,

வேண்டுமானால், நான் சென்று பார்த்துவரட்டுமா தலைவரே?

வேண்டாம். வேண்டாம். வாங் சுக்கை அனுப்பியிருக்கிறேன். விடிந்தவுடன் புறப்பட்டு விடுவான் அவன். நீ போகலாம்.

என்று வெளியேறக் கட்டளையிட்டுவிட்டான். மன்னரைப் பார்க்க வேண்டுமென்று தெரிவித்தபோது, இன்னொரு நாள் செல்லலாம் என்று தட்டிக்கழித்தது அந்தக் கிழ நரி.

ஏதோ சந்தேகம் தட்டியிருக்கிறது போல. நிதானமாக விசாரித்து அறிய வேண்டும். என்ன, இன்னும் கொஞ்சம் பொய்களும், அவற்றை நிரூபிக்க மேலதிகப் பொய்களும் சொல்லவேண்டும். அடே, இல் சுங், உனக்கும் பொய்களுக்குமான உறவு எத்தனை உறுதியானது பார்த்தாயா? என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்துக்கொண்டான் இல் சுங்.

பிசாசுகள் போல நின்ற மரங்களும், புதராக மண்டிய செடிகொடிகளும் மலிந்த சிறு தோட்டமொன்றைக் கடக்கும்போது, அவர்கள் இருவரையும் கவனித்தான்.

அந்த இருவரில் ஒருவனை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே என்று தோன்றியது. இந்த வேளையில் இந்த இடத்தில் கையில் கட்டாரிகளுடன் எதற்காக நிற்கிறான்கள்?

பரிச்சயமான முகம் கொண்டவன், அருகில் வந்து கட்டாரியை ஓங்கிய தருணத்தில், ஈனோங்கின் மெய்க்காவல் படையில் இருக்கிறவன் அவன் என்று அடையாளம் புரிந்துகொண்டான் இல் சுங்.

*

# ஃபூ தோர்ஜீ

... பார்வைக்குத் தெரிகிற மனிதனும், பழக்கத்துக்குத் தெரிகிற மனிதனும் ஒன்றாயிருப்பது அபூர்வம்தானே? ...

*பனிக்காற்றின் ஊளை கூடாரத்துக்குள் வந்து செல்கிறது. அதற்குப் பதில் சொல்கிற மாதிரி, தேநீர்க் கெட்டிலின் மூடி குதிக்கிறது. அடுப்பை அணைக்கிறேன். கூடாரத்திலிருந்து வெளியேறும் வெளிச்சத்தை ஏறக்குறையத் தோற்கடித்துவிட்ட இருட்டில் உட்கார்ந்திருக்கிறார் மேஜர் ஸாஹேப். இப்போதுதான் நடை முடிந்து வந்திருக்கிறார். நிமிர்ந்த வேகமான நடை. பொதுவாக, குடித்திருக்கிறவர்கள் அவ்வளவு வேக மாக நடந்து நான் பார்த்ததில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் இரவு உணவுக்குத்தயாராகி விடுவார். எட்டரை மணிக்கெல்லாம் ரொட்டியும் சப்ஜியும் தயாராக இருக்கவேண்டும் அவருக்கு. சாப்பாடு முடிந்தவுடன் ஒரு கோப்பை தேநீர். அவ்வளவுதான்.*

*கூடாரங்களைச் சுற்றி வந்து பாரா கொடுக்கும் கன்ஷ்யாம், ஸாஹேபிடம் வந்து ஏதோ சொல்லிவிட்டுப் போகிறான். பாதி ராத்திரியில் இவனை விடுவிக்க வரும் பிஹாரிலால் மாதிரி தேநீர்ப் பிரியன் அல்ல கன்ஷ்யாம். நாயக் கிஷன்லாலுக்குக் கறுப்புத் தேநீர் என்றால் உயிர். வயர்லெஸ் கூடாரத்தில் இரவு டூட்டி பார்க்கும் கெய்ஸிங்கின் குரல் எழுந்து எழுந்து அடங்குகிறது. கரகரப்பான குரல் அவனுக்கு. ஆங்கிலத்தில் அவ்வப்போது அரற்றிவிட்டு,*

*ஓவர்...*

*என்று முடிக்கிறான்.*

*வழக்கமாக, இரவு கவியும்போது இந்தப் புறக் காவல் நிலையத்தின் பரபரப்பும் அடங்கிவிடும். பாராக்காரர்களைத் தவிர மற்றவர்கள் யாருமே சுறுசுறுப்பாக இருக்கமாட்டார்கள். இந்த ஸாஹேப் அப்படி யில்லை. இவர் எப்போது தூங்குவார், எப்போது விழித்திருப்பார் என்று யாராலுமே சொல்ல முடியாது. அதனால், இவர் வந்த பிறகு முகாமின்*

சுறுசுறுப்பு கூடிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

மேஜர் ஸாஹேப் மிகவும் கெட்டிக்காரர். பாக்கிஸ்தான் யுத்தத்தில் பெரிய சாகசமெல்லாம் செய்தவர் என்று சொல்வார்கள். நெஞ்சை நிமிர்த்திப் பேசும்போது, சீருடையில் குத்தப்பட்டிருக்கும் பதக்கங்கள் பளபளக்கும். ஏற்கனவே முறுக்கியிருக்கும் மீசையை மேலும் முறுக்கியபடி ஸாஹேப் பேசும்போது, யாருக்குமே அச்சம் உண்டாகும்.

ஸாஹேப் ஒரு மிடறு தேநீரை அருந்திவிட்டு, என்னைப் பார்த்துக் கண்களை உயர்த்தினார்.

அச்சா.

நான் சிரித்தேன். க்ருஷ் ஸாஹேபின் கண்கள் கடுமையாகச் சிவந்திருந்தன. சாயங்காலம் முட்டக் குடித்த ரம், வெட்டவெளியில் நடந்துவிட்டுத்திரும்பியிருந்தது எல்லாம்தான் காரணம். சுபாவமாகவே ஸாஹேபுக்குச் சற்றுச் சிவப்போடிய கண்கள்தாம். பார்ப்பதற்குத்தான் பயமுறுத்துகிற மாதிரி இருக்கிறாரே தவிர, குணத்தில் தங்கமானவர் ஸாஹேப்...

வந்த அன்றைக்கு மறுநாளே என்னைப் பாடச் சொல்லிக் கேட்டார். நான் பாடக்கூடியவன் என்று ஸாஹேபுக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியமாக இருந்தது எனக்கு. ஒருவேளை, வயர்லெஸ் ஆப்பரேட்டர் கெய்ஸிங் சொல்லியிருப்பான். நல்லவிதமாகவோ, கெட்டவிதமாகவோ ஒரு நாளைக்கு ஒரு கோளாவது சொல்லாவிட்டால் அவனால் தூங்க முடியாது, பாவம்.

எங்கள் பிரதேச நாட்டுப் பாடல்கள் ஏழெட்டைப் பாடிக் காட்டினேன். ஒரு வார்த்தை கூடப் புரியாத போதும், ரசித்துக் கேட்டார் ஸாஹேப். பாட்டில் துயரம் ஜாஸ்தியாகும் இடங்களில், ஸாஹேபின் நெற்றிப் பொட்டுகளில் வியர்வை பூத்தது. வரவிருக்கும் நாட்களில் எங்கள் மொழி இலக்கியம் பற்றியும் அவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

எங்கள் பகுதியினர் எல்லாம் காட்டுமிராண்டிகள் என்பது மாதிரியான நம்பிக்கைதான் பாரதம் முழுவதும் இருக்கிறது. வியாசருக்கும் காளிதாசனுக்கும் சமமான மஹாகவிஞன் பிக்யாலிங்கின் கதைப் பாடல்களை இவருக்கு வாசித்துக் காட்டவேண்டும். அதன் மூலம், ருசியான தேநீர் தயாரிப்பதற்கும் வாய்விட்டு உரத்துப் பாடுவதற்கும் மாத்திரமல்ல, கவிதைகளை ரசிக்கவும் இந்த ஃபூ தோர்ஜீக்குத் தெரியும் என்று ஸாஹேபுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஸாஹேபும் தெரிந்துகொள்ளக் கூடியவர்தாம். இங்கே வந்த பத்து நாட்களிலேயே புரிந்துவிட்டது அவரது போக்கு. வெறும் சப்ராஸிதானே இவன் என்று எண்ணக் கூடியவரல்ல. அன்னாசிப் பழத்தின் ருசி அதன் தோலில் இருப்பதில்லை என்று ஒரு பழமொழி உண்டு எங்கள்

பிராந்தியத்தில். பார்வைக்குத் தெரிகிற மனிதனும், பழக்கத்துக்குத் தெரிகிற மனிதனும் ஒன்றாயிருப்பது அபூர்வம்தானே? எப்படியா னாலும், பல வருஷங்கள் முன்னால் இங்கிருந்த அரோரா ஸாஹேபை விட இவர் எவ்வளவோ நல்லவர். திறமையிலும் கூடியவர். இவருக்குத் தெரியாமல் முகாமில் ஒரு குண்டூசி கூட உள்ளே நுழையவோ வெளியேறவோ முடியாது.

அரோரா ஸாஹேபைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். அவருடைய மனோபாவத்தைப் பற்றி. என்னை விட அதிகமாய்ச் சொல்லும், என் வலதுகையில் இருக்கும் இந்த நீண்ட சூட்டுத் தழும்பு. சலவைக்கார சுக்ராஜுக்கு இடதுகால் குதிரைச் சதையில் பயனெட் வெட்டி ஆறின நீளக் கோடு இன்னும் அதிகமாய்ச் சொல்லும். அவருடைய காலத்தில் தான், கீழே சாலையில் தேநீர்க் கடை வைத்திருந்த பகதூர் சிங்கைக் கொன்று விட்டார்கள். வயிற்றிலும் விலாவிலும் பிச்சுவாக் கத்தியால் குத்திக் கொன்றிருந்தார்கள் அவனை. தலையைத் துண்டித்து எடுத்திருந் தார்கள். இந்தப் பிரதேசம் முழுவதும் பல வாரங்கள் தேடியும் தலை கிடைக்கவில்லை.

அந்தச் சமயத்தில், உள்ளூர்க் காவல் அதிகாரிகளுக்கும் அரோரா ஸாஹேபுக்கும் அன்றாடம் வாய்ச் சண்டைகள் நடக்கும். வருகிறவன் எவ்வளவு பெரிய அதிகாரியாய் இருந்தாலும் பொருட்படுத்த மாட்டார் அரோரா ஸாஹேப். குரைத்துத் தள்ளிவிடுவார்... பகதூர் சிங்கின் மனைவி பேரழகி. எண்ணெய் ஊற்றிப் பிசைந்து அளவாக உருட்டித் திரட்டிய மைதாமாவு போல இருப்பாள். மறுவற்ற முகம். மெலிதாகப் பச்சை பூத்த அவளது மேலுதட்டைக் கவ்வி ருசிக்க யாருமே ஆசைப் படத்தான் செய்வார்கள். பாவம், அவளும் போன இடம் தெரியவில்லை.

மேஜர் ஸாஹேப் கொடுத்த காலிக்கோப்பையைக் கொண்டுவந்து கூடாரத்தில் வைத்துவிட்டு, கெய்ஸிங்குக்குத் தேநீர் கொண்டு கொடுத் தேன். தலைமையகத்திலிருந்து செய்தி வந்த தகவலை ஸாஹேபிடம் தெரிவிக்கச் சொன்னான் கெய்ஸிங்.

அவ்வளவுதான். முகாமே பரபரப்பாக ஆகிவிட்டது. ஆணைகள் பிறப்பித்துக்கொண்டும், அருகில் உள்ள முகாம்களுடன் தொடர்பு கொண்டும் கரகரவென இயங்கத் தொடங்கிவிட்டார் ஸாஹேப்.

இரவு முழுவதும் முகாமின் நாடி படுவேகமாகத் துடித்துக் கொண்டி ருந்தது.

மறுநாள் காலைவரை தொடர்ந்தது அந்தத் துடிப்பு. முகாமில் எப்போதுமே மந்தமாகக் கழியும் பகல் பொழுது விசேஷமான காத்திருப் புடன், வழக்கத்தைவிட மெதுவாக நகர்ந்தது.

சாயங்காலம் மூன்று மணி சுமாருக்கு ஒரு ஊளை கேட்டது. மிருகத்தின் அலறல் போலில்லை அது. மனிதத் தொண்டையிலிருந்து வெளியேறிய குரல். முகாமைச் சுற்றிலுமிருந்த வெட்டவெளியில் பரவியிருந்த பிற்பகல் நிசப்தம், ஊளையின் எதிரொலியில் சடாரென்று அமானுஷ்யம் பூண்டது. மேஜர் என்னுடைய முகத்தைப் பார்த்தார். நான் ஆமாமென்று தலையசைத்தேன். பின்தொடர்ந்து எதிர்ப்புறச் சரிவில் வெகு ஆழத்திலிருந்து மற்றொரு ஊளை கேட்டது. மலைச் சரிவில் ஏதோ ரகசிய இயக்கம் உயிர்கொள்வது மாதிரி, தொடர்ந்து ஊளைகளும் எதிரொலிகளும் கேட்டவாறிருந்தன சற்று நேரத்துக்கு.

முதல் ஆள் வந்து சேர்ந்தான். பல நிறத் துணிகள் கொண்டு ஒட்டுப்போட்டது போன்ற உடையை அணிந்திருந்தான். இரண்டாள் சுமக்கக் கூடிய சுமையை முதுகில் சுமந்து வந்தான். நாலைந்து நாள் தொடர்ந்து தண்ணீரில் ஊறிக் கிடந்தால்தான் அசல் நிறம் வெளியாகும் என்கிற அளவு அழுக்குச் சேர்ந்திருந்தது. சப்பட்டையான முகம்.

பொதுவாக எங்கள் பிரதேசத்தில் உள்ள எல்லாருக்குமே மூக்கு கொஞ்சம் சப்பட்டையாகத்தான் இருக்கும். மேலுதடும் மோவாய்க் கட்டையும் ஆலுவைப் போல மழுமழுவென்று இருக்கும். அதற்குக் காரணம் என்ன என்பதாக ஒரு புராணக் கதை இருக்கிறது. அதை அப்புறம் சொல்கிறேன்.

வந்தவனுடைய முகம் எங்களதை விடவும் அதிகத் தட்டையாக இருந்தது. மோவாய்க்கட்டையில் பல நாட்களாக மழிக்காது விட்ட முள் தாடி . தூண்கள் போல இருபுறமும் இறங்கித் தொங்கிய மீசைக்கு அடியில் அழுத்தமாக மடிந்த உதடுகள். சருமத்தில் மஞ்சள் நிறத்தின் சாயை அதிகமாக இருந்தது. சராசரி உயரத்தைவிட மிகவும் குள்ளமாக இருந்தான்.

அவனிடம் பேசுவதற்கு ஸாஹேப் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை. நாயக் கிஷன்லால் கண்டுபிடித்தான், வந்தவன் வாய்பேச முடியாதவன் என்று. சைகையில் கேட்டு எவ்வளவு விப ரங்கள்தாம் வாங்க முடியும்? வந்தவன் எல்லாக் கேள்விக்கும் ஒரே சைகையில் பதில் வைத்திருந்தான்.

...பின்னால் ஆள் வருகிறது. அவர்கள் சொல்வார்கள்...

அரைமணி நேரத்துக்கொருவராக அடுத்தடுத்த ஆட்கள் வந்து சேர்ந்தபோது, எங்களுடைய குழப்பம் பலமடங்கு கூடியிருந்தது. வந்தவர்கள் ஆறுபேருமே பேசச் சக்தியற்றவர்கள். நடிக்கிறார்களோ என்ற ஐயம் வரத்தான் செய்தது. ஸாஹேபின் ஆணைப்படி, வருகிறவர்களை ஒரே இடத்தில் அமர வைத்துக் காவலிருந்தோம். ஒருவருக்கொருவர் முதுகொட்டி அமரும்படி செய்திருந்தோம்.

ஏழாவதாக வந்தவன் ஒரு சிறுவன். பதினாறு பதினேழு வயதிருக்கலாம். அழுத்தமான அரக்கு நிறத்தில் ஒற்றை வஸ்திரம் அணிந்திருந்தான். இடுப்பையும் நெஞ்சையும் மூடி முதுகின் வழி இறங்கின ஆடை, எங்கே தொடங்கி எங்கே முடிகிறது என்பதை நிர்ணயிக்க முடியாமல் இருந்தது. கால்களில் வெள்ளிக் குமிழ் பதித்த மரக் குறடுகள் அணிந்திருந்தான். சுத்தமாக மழிக்கப்பட்ட தலையில் ஓரிரு வார ரோமம் வளர்ந்திருந்தது. இடதுகையில் ஒரு சுவடிக் கட்டும், கோலி அளவு பருமனுள்ள மணிகள் கோர்த்த சரமும் இருந்தன. வலதுகையில் மலையேறிகள் பயன்படுத்தும் கழி இருந்தது. அதன் கீழ் முனை கவட்டையாய் விரிந்திருந்தது.

முகத்தில் தெரிந்த சோர்வையும் வேதனையையும் மீறி, அவனுடைய பிரகாசமான கண்களிலிருந்து ஆவல் தெறித்தது. புதிய இடத்தை ஒரு இடுக்கு விடாமல் பார்த்துக்கொண்டிருந்தான். பேச முடிந்தது அவனுக்கு. மேஜர் ஸாஹேபின் கேள்விகளுக்குச் சுருக்கமாக பதிலளித்தான்.

> ஸோமிட்ஸியாவிலிருந்து வருகிறோம். ஈனோங் வந்துவிடட்டும். பிறகு விரிவாகப் பேசலாம். குடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா முதலில். முன்னதாக வந்தவர்களுக்கும் கொடுங்கள் தயவு செய்து.

தயவு என்கிற சொல்லைப் பயன்படுத்தினாலும், அவன் குரலில் ஆணையிடும் தொனி இருந்தது. மெல்ல ஆண் தன்மையேறிக்கொண்டிருக்கும் இளம் குரல். கறுப்பு அடர்ந்துவரும் பச்சை போர்த்திய மேலுதடு.

அரைமணிநேரத்தில் அவன் சொன்ன ஈனோங் வந்துவிட்டார். பிறந்ததிலிருந்து வெட்டப்படாதது போலத் தோன்றிய தலைமுடியைப் பெண்கள் போலப் பின்னலாக்கியிருந்தார். படகு மாதிரி முன்புறம் ஏந்தியிருந்த தோல்செருப்பு. வியர்வை பளபளத்த முகம். மூக்கின் நுனி, பறவையின் அலகு போல வளைந்திறங்கியது. கோடுகள் போல இடுங்கித் தென்பட்ட கண்களில் நிரந்தரமான சந்தேகம் குடியிருந்தது.

வந்து சேர்ந்தவுடன், சிறுவனைத் தரையளவு தாழ்ந்து வந்தனம் செய்தார். விசாரிக்க நெருங்கிய மேஜர் ஸாஹேபிடம், கம்பீரமாக உயர்ந்த குரலில் சொன்னார். ஸாஹேபின் கட்டளைப்படி கெய்ஸிங் சரளமாக மொழிபெயர்த்தான்.

> மாட்சிமை தங்கிய மன்னர், இருபத்தாறாம் ஸோமிட்ஸுவின் சந்நிதானத்திலிருக்கும் பாக்கியம் உங்களுக்கு வாய்த்திருக்கிறது. அவருடைய நல்வரவை அறிவிப்பவன் ஸோமிட்ஸியப் பேரரசின் பதினேழாவது ஈனோங்.

அவருடைய குரல் அடங்குவதற்கு முன்பே, அடுத்த நபர் வந்துவிட்டான். எங்களுக்கு அதிர்ச்சி. வந்தவன் ஒரு ஐரோப்பியன். கச்சிதமான சதுர

முகம். வரிக்கோடுகளாகச் சுருக்கங்கள் பாய்ந்த நெற்றி. முதுகின் மேல் அவன் சுமந்து வந்த மூட்டை மற்றவர்கள் கொண்டுவந்தவற்றை விட மிகவும் பெரியது. தீவிரமாக யோசித்துக்கொண்டிருப்பவன்போலத் தென்பட்டான். ஆங்கிலத்தில்,

என் பெயர் ஹான்ஸ் வெய்ஸ்முல்லர்.

என்று அறிமுகம் செய்துகொண்டவாறு ஸாஹேபுடன் கைகுலுக்கினான்.

அடுத்து வந்து சேர்ந்தது ஒரு பெண். வாலிபத்தின் முன்அந்திப் பொழுதில் இருப்பவள். திருத்தமான உடல்வாகு. இன்னொரு தடவை பார்க்கச் சொல்லும் உடலசைவு. துணி விலகித் தெரியும், சற்றே கனத்துத் தொய்ந்த மார்புகள் பற்றிக் கவலையற்றவளாய் இருந்தாள். பருமனான வெள்ளித்தண்டை அணிந்த கால்கள் சுத்தமாக மழிக்கப் பட்ட வெண்ணிற மூங்கில் கழிகள் போலிருந்தன. அவற்றின் மஞ்சள் ஓடிய வெள்ளை நிறத்தில் காட்டுச் செடிகள் கீறிய ரத்தக் கோடுகள் உலர்ந்து பொருக்குத் தட்டியிருந்தன. துணிகளை அடித்துத் துவைக்க உதவும் உருட்டுக் கட்டையை கர்லாக்கட்டை போலத் தோளில் சார்த்தி யிருந்தாள். தரையில் அமர்ந்தபோது, தன் இடுப்பின் முன்புறத்திலிருந்து குறுங்கத்தி ஒன்றை உருவி அருகில் வைத்தாள்.

கடைசியாக வந்தவர்கள் இரண்டிரண்டு பேராக வந்தார்கள். காவடிபோலத் தோளில் சுமந்த பருத்த கழியின் மத்தியில் தொங்கவிடப் பட்ட சாமான் மூட்டையுடன். அந்தப் பெண் உள்ளிட்ட இந்த ஐந்து பேரும்கூட பேச இயலாதவர்கள்தாம்.

அவள் வந்ததும், அனைவரும் வட்டமாகக் கூடினார்கள். முழந் தாளிட்டு, இறைஞ்சுவது போல ஏந்திய கரங்களுடன் பிரார்த்தனை செய்தார்கள். ஓரிருவர் கண்களிலிருந்து தாரையாகக் கண்ணீர் சொரிந் தது.

வழியில் இறந்துவிட்ட கூட்டாளியின் ஆன்மா சாந்தியடைவதற் கான கூட்டுப் பிரார்த்தனை நடக்கிறது.

என்று எடுத்துச் சொன்னான் கெய்ஸிங். வந்தவர்கள் அனைவருக்கும் சூடாகத் தேநீர் தயாரித்துத் தரும்படி என்னிடம் உத்தரவிட்டார் மேஜர் ஸாஹேப்.

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கூடாரத்தில் தாங்களே சமைத்துக் கொண்டனர். ஜவ்வரிசி மாதிரி இருந்த ஒருவகைத் தானியத்திலிருந்து வடித்தெடுத்த மது நிரம்பிய கோப்பைகளுடன் கூடாரத்தின் வெளியில் வந்து அமர்ந்தனர். சிறுவன் ஒரு நாற்காலியிலும், அவன் பாதத்தினடியில் அந்தக் கிழவரும். சற்றுத் தள்ளி ஒரு பாறையில் குத்துக்காலிட்டு அந்த ஐரோப்பியன்.

மற்றவர்கள், இவர்களுடைய பேச்சு கேட்காத தொலைவில் இருந்தபடி, மேல் வஸ்திரத்தால் மூடிய கோப்பைகளிலிருந்து மிடறு மிடறாக மதுவை உள்ளிறக்கினார்கள். எங்கள் முகாமின் சலவைத் தொழிலாளியான சுக்ராஜூம் ஒரு கிண்ணம் வாங்கி அருந்தினான். நான் ஒரு மிடறு குடித்துப் பார்த்தேன். நெருப்புப் பிழம்பை நேரடியாக விழுங்குவதுபோல எரிந்தது உணவுப்பாதை. தலை உடனடியாகக் கிறுகிறுத்தது.

அவர்களுடைய பேச்சொலி திருத்தமாகக் கேட்கும் தொலைவில் நாற்காலியில் இருந்தார் மேஜர் ஸாஹேப். அருகில் துப்பாக்கிகளுடன் கன்ஷ்யாமும் பிஹாரிலாலும். கொஞ்சநேரம் அமர்வதும், கொஞ்சநேரம் நடப்பதும் என கூண்டில் அடைபட்ட காட்டு மிருகங்கள் மாதிரி இலக்கில்லாமல் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள்.

சிடுக்கான பிரயோகங்களையும், புரியாத சொற்களையும் கொண்ட அவர்களது உரையாடலை ஸாஹேபுக்குப் பெயர்த்துக்கொண்டிருந்தான் கெய்ஸிங்.

அடர்த்தியான படுதா போல இறங்கியிருந்த இருளில் கரும் உருவங்களாக இருந்த மரங்களும், மனிதர்களும்; கூடாரங்களுக்குள் எரியும் மங்கல் விளக்குகளால் ஒளிர்ந்த கூடாரத் துணிகளின் வெளிப் புறமும்; அடங்கிய குரலில் எழுந்தெழுந்து அடங்கிய பேச்சொலிகளும்; சுருட்டு, சிகரெட், வெட்டவெளியில் கொளுத்திய கணப்பு ஆகியவற் றிலிருந்து கிளம்பிய புகையும் அந்த இரவை மறக்கமுடியாத ஒன்றாக மாற்றிக்கொண்டிருந்தன. தேர்ந்த கூத்துக்காரன் ஒருவன் உருவாக்கிய கூத்துக்களம் போல ஆகியிருந்தது அந்த இரவு. பலமுறை பார்த்துத் தேர்ந்த ஒத்திகையின் பிரகாரம் நடந்து கொள்கிறவர்கள் போலத் தென் பட்டனர் யாவரும்.

கண்ணுக்குத் தெரியாத கயிற்று முனைகளில் கைகளும் கால்களும் தலையும் இடுப்பும் கட்டப்பட்டுத் தொங்குகிறார்கள். கயிறுகளின் மறுமுனைகளைத் தன் விரல்களில் பிணைத்த கைகளின் தன்னிச்சை யான அசைவுகளுக்கு இசைய நடனமாடுகிறார்கள். மலைக்காற்று ஓஓஓ ஓஓ....ஷ்.....ஷ்... என்ற ஒற்றைப் பாடலை வெவ்வேறு சுருதிகளில் பின்னணியாக இசைத்தவண்ணமிருக்கிறது.

இந்திய - திபெத் - நேபாள முக்கோணத்துக்கு மத்தியில் மலைப் பகுதியில் அமைந்த தனி நாடு ஸோமிட்ஸியா. ரகசியங்களின் நாடு. அங்குள்ள பெண்களெல்லாம் பளபளவென்று அழகாக இருப்பார்கள் என்று சொல்கிறார்கள். பெண்களைவிட ஆண்கள் அதிகமாம் அங்கே. சாப்பாடு சுலபமாகக் கிடைக்கும், பெண்கள் கிடைப்பது அரிது என்பார்கள். மலைப் பிரதேசத்து வாளிப்பு மிகுந்த பெண்கள் என்று

வேறு சொல்கிறார்கள். ஒருதடவை அங்கே சென்று, ஒரு பெண்ணை யாவது முழுசாகப் பார்த்து விடவேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை இருந்தது.

சுதந்திரம் வந்து கெடுத்துவிட்டது காரியத்தை. கடந்த பதினேழு பதினெட்டு வருடங்களில், எல்லையைக் கடந்து சென்று வருகிறவர்கள் ஆயிரம் பேருக்குக் குறையாமல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதி லும், சீன யுத்தத்துக்குப் பிறகு, ஸோமிட்ஸிய எல்லையில் கடுமையான பாதுகாப்பு போட்டிருக்கிறார்கள்.

வயர்லெஸ் ஆப்பரேட்டர் கெய்ஸிங் ஸோமிட்ஸியாவுக்குள் அடிக்கடி சென்று வந்த அனுபவம் உள்ளவன். அவர்களின் மொழியில் தேர்ச்சி உள்ளவன். ஸோமிட்ஸிய மொழியில் புழங்கும் காமச் சொற் களில் பாண்டித்தியம் உள்ளவன். ஒரு இரவு முழுக்கக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம், அவன் போய் வந்த அனுபவங்களை. நாங்க ளெல்லாம் சுற்றி உட்கார்ந்து ஆசையாய்க் கேட்டுக் கொண்டிருப்போம். அவனும், ஒளிக்காமல் சகலத்தையும் சொல்வான்.

வடகிழக்குப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்தவன்தான் நானும் என்பதால், இந்தப் பிரதேசத்தில் பேசப்படும் மொழிகள் எல்லாவற் றிலுமே குறைந்தபட்சப் பரிச்சயம் எனக்கும் இருந்தது. பேசினால் புரியும் என்கிற அளவுக்கு. இப்போது வந்திருப்பவர்கள் பேசுவதும் நன்றாகவே புரிகிறது. ஆனால், கெய்ஸிங் அளவுக்குச் சரளமாக என்னால் பதில் பேசவோ, எடுத்துச் சொல்லவோ முடியாது. பிறவி யிலே எனக்கு வாய் சற்றுத் திக்கும் என்பதும் ஒரு காரணம்.

> சுத்த சந்தேகப் பிராணியாக இருக்கிறான், லேசில் நம்பமாட்டே னெகிறான் நாம் சொல்கிற எதையும்.

என்று என் அம்மா குறைப்பட்டுக் கொள்வாள், பார்ப்பவரிடமெல்லாம். அதற்குக் காரணம் திக்குவாய்தான் என்று கண்டுபிடித்துச் சொன்னார் எங்கள் கிராமத்து வைத்தியர். மஹாகவி பிக்யாலிங்கின் வாக்கு வேறு விதமாகச் சொல்கிறது.

*சந்தேகம் என்பது தாயார்.*

*யோசிக்கும் மனமே தகப்பன்.*

*சந்தேகமும் யோசனையும் கலவிகொண்டு*

*பெற்றெடுக்கும் கேள்விகளால் நிரம்பிவிடு மானிடனே.*

*கேள்விக்கு விடைதேடும் வேட்கை இல்லையேல்*

*நீ இருப்பதைக் கூட*

*நீ அறிவதெங்ஙனம்*

*எலும்பால் நிமிர்ந்த சதைக் கூழே.*

என்று வரும், பிக்யாலிங்கின் ஒரு கதைப் பாடலில்.

என்னுடைய சந்தேகங்கள் ஊற்றெடுப்பது உள்ளுணர்வின் சுனையில். இதைச் சொன்னால் யார் நம்புவார்கள்? கழிவறையில் இருக்கும்போது, அடுப்பைத் தணிக்காமல் வந்துவிட்டோமோ என்று சந்தேகம் வரும். அவசரமாய் வந்து பார்த்தால், அடுப்பு திகுதிகுவென்று எரிந்துகொண்டிருக்கும். அரோரா ஸாஹேப் இங்கு வந்த முதல் நாளிலேயே சந்தேகம் வந்துவிட்டது. இவர் ரொம்ப நாள் இங்கு இருக்கமாட்டார் போலிருக்கிறதே... ஒரு வருடத்துக்குள்ளேயே மாற்றலாகிப் போய்விட்டார். வெயில்தான் இருக்கிறதே, காயவைத்த கோதுமை மாவை ஏன் திரட்டி எடுக்கிறாய் என்று கேட்பார்கள் மற்றவர்கள். அடுத்த கால்மணிநேரத்தில் மழைபெய்து நான் செய்ததை நியாயம் என்று அவர்களை அறிய வைத்துவிடும்...

மனத்தின் ஒரு இடுக்கு பாக்கியில்லாமல் சந்தேகங்கள் நிறையும் இரவு இது. அந்தக் கிழவனின் வார்த்தைகளில் சந்தேகம். அந்த ஊமைப் பெண்மணியின் பாவனைகளில் சந்தேகம். அவள் அந்தக் கிழவனுடனும், குள்ளனுடனும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவரிடம் கண்களால் பேசிக்கொண்டேயிருக்கிறாளோ என்று சந்தேகம். அவர்களின் உதவியாட்கள் அனைவரும் உண்மையிலேயே ஊமைகள்தாமா என்று சந்தேகம். அவர்களில் ஒருவனின் சைகை கூட, பிறவி ஊமையர்களின் சைகையிலிருக்கும் வெகுளித்தனத்துடன் இல்லையே என்று சந்தேகம். தொண்டை நரம்புகள் புடைக்காமல், தவிப்பாய்ச் சிதறி வெளியேறும் குரல் துணுக்குகள் இல்லாமல், கவனமாய்ப் பயிற்சி எடுத்தவர்கள் மாதிரிச் சைகை மொழியில் பேசுகிறார்களே என்று சந்தேகம். அந்த ஐரோப்பியனுக்கு வேறேதோ உள்நோக்கம் இருப்பதால்தான் இந்தக் கும்பலுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறானோ என்று சந்தேகம். அந்தச் சிறுவனுக்கு விலாப் புறங்களில் இறக்கை முளைத்து விடுமோ என்று சந்தேகம். இத்தனை அந்நியர்கள் வந்தது இந்த முகாமுக்கு நல்லதில்லையோ என்று சந்தேகம். தங்கமான மனிதரும், கம்பீரமாகத் தனது ஸர்வீஸைக் கழித்து வந்திருப்பவருமான மேஜர் ஸாஹேபுக்கு திருஷ்டி ஏதும் பட்டிருக்குமோ என்று சந்தேகம்....

நடக்கச் சென்றிருந்த மேஜர் ஸாஹேபும் அந்த ஐரோப்பியனும் முகாமுக்குத் திரும்பி வரும் பேச்சொலி கேட்கிறது. ஸாஹேபுக்காகச் சூடேற்றிவைத்திருந்த தேநீரில் சர்க்கரை கலந்து ஆயத்தப்படுத்தினேன். ஒரு மிடறு வாயில் ஊற்றிக்கொண்டு ருசி பார்த்தேன். சந்தேகத்தின் தித்திப்பு இருந்தது அதில்.

*

# ஒரு தகராறு

... கிரந்தங்களை விடவும் நிஜமானது என்னுடைய உடம்பு ...

*சிறுவன் ஒரு நாற்காலியிலும், அவன் பாதத்தடியில் கிழவரும் இருக்க, சற்றுத் தள்ளி ஒரு பாறையில் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தான் அந்த ஐரோப்பியன்.*

*மற்றவர்கள், இவர்களுடைய பேச்சு கேட்காத தொலைவில் இருந்தபடி, மேல் வஸ்திரத்தால் மூடிய கோப்பைகளிலிருந்து மிடறு மிடறாக மதுவை இறக்கினார்கள். முகாமின் சலவைத் தொழிலாளி சுக்ராஜ் அநாவசியமாகச் சிரித்துக்கொண்டிருந்தான். வந்தவர்களை மேற்பார்வையிடுமாறு கன்ஷ்யாமிடமும் நாயக் கிஷன்லாலிடமும் உத்தரவிட்டுவிட்டு, வயர்லெஸ் கூடாரத்துக்குள் சென்றிருந்தார் மேஜர் க்ருஷ். வானிலை காரணமாகவோ என்னவோ, சாயங்காலத்திலிருந்து தலைமையகத் தொடர்பு கிடைக்கவில்லை. இயல்பான வம்பு கேட்கும் சுபாவத்தால் அந்தக் கூட்டத்தில் வந்து அமர்ந்திருந்தான் ஃபூ தோர்ஜீ.*

மேன்மை தங்கிய மன்னரே...

*வினயமாக ஆரம்பித்தார் கிழவர்.*

*அப்படி என்னை அழைக்க வேண்டாம் என்று எத்தனை முறை சொல்லியாகிவிட்டது. அதெல்லாம் ஸோமிட்ஸிய எல்லைக்குள் தான்.*

*ஸோமிட்ஸிய மன்னரின் அடிமை நான். வேறெப்படி அழைப்பது மேன்மை தங்கிய மன்னரே.*

*ஈனோங், உண்மையைச் சொல்லும். நிஜமான அடிமை யார்? நீரா? நானா?*

*கிழவர் தன் அகலமான வலதுகையால் வாயையும் தட்டையான*

மூக்கையும் சேர்த்து மூடிக்கொண்டார். அவருடைய உடல்மொழியில் கொஞ்சம் பாசாங்கு கலந்திருந்த மாதிரிப் பட்டது தோர்ஜீக்கு.

*ஈனோங், எனக்கு எதுவும் வேண்டாம். என்னைப் போக விடும்.*

*நான் யார் உங்களைத் தடுக்க மேன்மை தங்கிய மன்னரே. கம்பளிக் கயிறு கடவுளைக் கட்ட நினைக்குமா?*

*இந்தக் கதையெல்லாம் வேண்டாம். என்னைச் சுற்றி நீர் எழுப்பும் மதில்சுவர் பற்றி எனக்குத் தெரியாது என்று நினைக்கிறீர். இல் சுங்கைக் கொன்றுவிட்டால், மேற்கொண்டு தகவல்கள் எதுவும் என்னை வந்து சேராது என்று நினைத்தீரோ?*

*அந்தக் கயவன் பற்றிய பேச்சு இப்போது எதற்கு, மேன்மை தங்கிய மன்னரே?*

*இல் சுங் எப்படி இறந்தான் ஈனோங்? இப்போதாவது உண்மையைச் சொல்லும்.*

*தெரியாது, மேன்மை தங்கிய மன்னரே.*

ஐரோப்பியன் வாய்திறந்தான்.

*நண்பன் ஜூலியஸ் லுமும்பாவைக் கொன்ற பன்றி எது?*

ஈனோங் அவனை எரித்துவிடுகிற மாதிரி வெறித்தார்.

*மேன்மை தங்கிய மன்னரே, இதற்குத்தான் மற்றவர்கள் முன்னிலையில் தங்களுடன் நான் விவாதிப்பதில்லை. உங்களுக்கு மாத்திரம்தான் என்னைக் கேள்வி கேட்க அதிகாரம் உண்டு. தெருவில் வருகிற நாய்கள் குரைப்பதற்கெல்லாம் பதில் சொல்வதற்காக நான் ஈனோங்காக இருக்கவில்லை, கடந்த அறுபத்தேழு வருடங்களாக.*

*அதுசரி, விஷயத்தை விட்டு விலகாதேயும். இல் சுங்கை ஏன் கொன்றீர்?*

*அந்தக் கயவனை விரட்டியடித்தது நான்தான். அதை ஒத்துக் கொள்கிறேன். அரண்மனைப் பக்கம் இனி உன்னைப் பார்க்கக் கூடாது என்று சொல்லித் துரத்தினேன். ஆனால் கொலை செய்தேன் என்று சொல்வது அபாண்டம், மேன்மை தங்கிய மன்னரே.*

*அவன் மீது இவ்வளவு வெறுப்பு உமக்கு உண்டாகக் காரணம்?...*

*மன்னரின் சமூகத்திற்குத் தகாதவற்றைக் கொண்டுவந்து சேர்க்கிறான் அவன் என்பது என் காதுக்கு வந்தது. போர் மேகங்கள் சூழ்ந்த இந்த அபாயகரமான வேளையில், நச்சுத் தாவரத்தை எடுத்து உணவு மூட்டையில் கட்டிக்கொள்ளலாமா?*

*அபத்தமாக உதாரணம் சொல்கிறீர். சமாதான காலங்களில் மட்டும் நஞ்சு உணவாகி விடுமா என்ன?*

*ஆஹா. என்ன மேதைமை. என்ன மேதைமை. ஸோமிட்ஸிய*

மன்னருக்கு ஈடு உண்டா? ஞான சூரியனல்லவா அவர்?

முகஸ்துதியை நிறுத்தும். இல் சுங் என்னுடைய நண்பன், நலம் விரும்பி என்றறிந்தும் இப்படிச் செய்திருக்கிறீர். அதுபோக, உடன் வந்த அத்தனை பேரையும் ஊமைகளாகத் தேர்வு செய்திருக்கிறீர். அதாவது, உம்மைத் தவிர வேறு யாருடனும் நான் பேசிவிடக் கூடாது. அதுதானே உமது உத்தேசம்? இப்படி உம்முடைய சிறையில் இருப்பதைவிடவும் சீனர்களின் பிடியில் சிக்குவது எவ்வளவோ மேல்.

கிரந்தங்கள் அப்படிச் சொல்லவில்லையே, மேன்மை தங்கிய மன்னரே. தூமகேதுவின் வால் தேயத் தொடங்கிவிட்டதே. ஸோமிட்ஸிய சாம்ராஜ்யத்தின் கீழ் அடிமைப்படுவதற்கு ஐந்நூற்று நாற்பத்தேழு தேசங்கள் காத்திருக்கின்றனவே.

போதும். புளுகுவதை நிறுத்தும்.

பிறர் முன்னிலையில் இந்த உரையாடல் தொடர்வதை விரும்பாதவர் போல ஈனோங் அவஸ்தைப்படுவது வெளிப்படையாகத் தெரிந்தது. உடலை நெளித்தும், புருவங்களை நெரித்தும்; நெஞ்சோடு மடக்கிய இடது கையும், பாவனையாய் வாயை மூடிய வலதுகையும் நிம்மதியற்று நடுங்கவும் என்று அவரது சலனங்கள் வேடிக்கையாக இருந்தன.

ஈனோங், ஆசிரியர் ஹான்ஸ் சொல்வது சரிதான். கிரந்தங்களை விடவும் நிஜமானது என்னுடைய உடம்பு. அதைப் போஷிக்க விரும்புகிறேன். அதன் கொண்டாட்டத்துக்கு எதிராக எதுவும், சாம்ராஜ்யத் தலைமையோ, ஞான மார்க்கத்தின் உச்ச பீடமோ எதுவும் எனக்கு வேண்டியதில்லை. இதோ பாரும், இந்த நில வொளியும், பதமான மதுவும் எனக்குள் ஏற்படுத்தும் கிளர்ச்சியின் தன்மையே வேறு. உம்மிடம் அதைப் பற்றி விவாதிக்க விரும்ப வில்லை நான். என் உரையாடலை என் உடலின் அந்தரங்கத்துடன் தொடர விரும்புகிறேன்.

ஆஹா. பதினோராம் ஸோமிட்ஸு சொன்ன அதே வாக்கியங்கள். அற்புதம். அற்புதம். கிரந்தம் பொய்க்குமா. பெண் உடல் ஒரு திறந்த வெளி என்றும், ஆண் உடல் மழைத் தாதுக்களைச் சுமந்த கார்மேகம் என்றும் கண்டு சொன்ன அவரது வாக்கியங்கள் அப்படியே தங்களிடமிருந்தும் பொழிகின்றனவே. அவருடைய காலத்தில்தான் ஸோமிட்ஸியாவில் முதன்முதலாக மக்கட் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தியாவின் மீது பாரசீகம் மற்றும் காந்தாரத்தை ஆண்ட மொகலாய மன்னர்களின் படையெடுப்பு தொடர்ந்து நிகழ்ந்து வந்தபடியாலும், புதியதொரு தூமகேது ஆகாய வெளியில் பிரவேசித்தபடியாலும், தேசத்துக்குள் அந்நியர்களது வருகை அதிகரித்தது. மன்னர் பதினோராம்

ஸோமிட்ஸு ஆணைப்படி, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளின் எண்ணிக்கை தொகுக்கப்பட்டது.

மனனம் செய்து ஒப்பிப்பதை நிறுத்தும். இதையெல்லாம் நானும் படித்திருக்கிறேன்... அது சரி, இவ்வளவு பொறுப்புடனும், ஸோமிட்ஸியாவின் மேல் அடங்காத விசுவாசத்துடனும் இருக்கிறீரே. பேசாமல் ஸோமிட்ஸியாவின் மன்னனாக நீரே இருந்துவிடுமேன்?

அபவாதம். அபவாதம். மேன்மை தங்கிய மன்னருக்கு எல்லாமே விளையாட்டுத்தான். ஆறு சோதனைகளில் மட்டுமே தேறிய அபாக்யவானுக்கு ஸோமிட்ஸுவாகும் தகுதி ஏது, மேன்மை தங்கிய மன்னரே?

இந்த இடத்தில், அந்த ஐரோப்பியன் - அவன் குரலில் குறும்பு கூத்தாடியது - வாயைத் திறந்தான்.

கைவிட்டுப் போய்விட்ட தேசத்துக்கு மன்னனாக யார் இருந்தால் என்ன?

சொல்லிவிட்டு ஏளனமாகச் சிரித்தான். ஈனோங் காட்டமாகப் பாய்ந்தார் - சிறுவனிடம் காட்ட இயலாத சுயரூபத்தை வெளிப்படுத்துகிறவர் மாதிரி.

வாயை மூடு. மிலேச்சப் பிணமே. நீ வந்ததிலிருந்துதான் துர் ஆவிகளின் பீடிப்பு அதிகமாகிவிட்டது. உன் எகத்தாளத்தையெல்லாம் உன்னுடைய வெண்குஷ்டச் சுடுகாட்டில் வைத்துக் கொள்.

என்மேல் உள்ள கோபத்தை ஆசிரியரிடம் ஏன் காட்டுகிறீர்?

மன்னியுங்கள் மேன்மை தங்கிய மன்னரே. ஆங்கிலம் படிப்பிப்பதும், உடற்பயிற்சிகள் பயிற்றுவிப்பதும் மட்டுமே இவனது வேலை, ராஜரீக விவகாரங்களில் தலையிடுவது அல்ல. மேன்மை தங்கிய மன்னருக்குத் தவறான ஆலோசனைகள் தருகிறவர்களில் இவன் முதலாமவனோ என்ற சந்தேகம் என் கனவுகளில் வியாபித்துக் கிடக்கிறது. இவனை நியமித்த பிழையை எண்ணியெண்ணி அனுதினமும் வெட்கப்படுகிறேன்.

இதுமாதிரி நீளநீளமான பொய்ப்பணிவு வாக்கியங்கள் பேசாதீர் என்று எத்தனைமுறை சொல்லிவிட்டேன் ஈனோங்? இருபது நாட்கள் செங்குத்தாக மலையேறினதை விடவும் உம்முடைய பேச்சைக் கேட்பது மிகுந்த அலுப்பைத் தருகிறது.

அடடா. இனிப் பேசவில்லை. மேன்மை தங்கிய மன்னரின் நலனில் அக்கறை இருக்கிறபடியால்...

போதும் ஈனோங். என்னுடைய சிறுவயதில் ஒரு கதை சொல்வீர்

ஞாபகமிருக்கிறதா? பறவைகளுடனும் சேரமுடியாமல், விலங்குகளுடனும் சேர முடியாமல் தனிமைப்படுத்தப்பட்டுத் தலைகீழாய்த் தொங்கின வவ்வாலின் கதை... என் நலனில் நீர் தொடர்ந்து காட்டிவரும் அக்கறையால், நான் கடவுளும் இல்லாமல், மனிதனும் இல்லாமல் ஆகிவிட்டேன்.

சிறுவன் முகத்தை மூடிக்கொண்டான். உடல் சீராகக் குலுங்கிக் குலுங்கி அடங்கியது. ஐரோப்பியன் பாறையை விட்டு எழுந்து சிறுவனின் அருகில் வந்தான். கருகருவென்று தட்டைக் குச்சங்களாக இளமயிர் நிரம்பிய தலையைப் பரிவாக வருடினான்.

இந்த உரையாடலின் நடுவில், வயர்லெஸ் ஆப்பரேட்டர் கெய்ஸிங் பின்தொடரத்திரும்பி வந்திருந்த மேஜர் க்ருஷ், தான் தலையிடவேண்டிய வேளை வந்துவிட்டதென்று முடிவெடுத்தவர் போல, ஈனோங்கிடம் சொன்னார்.

ஐயா, இவரைச் சற்று விசாரிக்க வேண்டும். தனியாக அழைத்துச் செல்லலாமா.

ஈனோங் மறுப்பாகத் தலையாட்டியபடியே நிமிர்ந்தவர் கன்ஷ்யாமின் கண்களில் தென்பட்ட உறுதியைப் பார்த்ததோடு கெய்ஸிங் சொன்னதையும் கேட்டதும் தலைகுனிந்து ஆமோதித்தார். கெய்ஸிங் சொன்னான்:

கிழவரே, மேஜர் ஸாஹேபின் கட்டுப்பாட்டில்தான் நீங்கள் அனைவருமே இப்போது இருக்கிறீர்கள். ஒரு உபசாரத்துக்குத்தான் கேட்கிறார். நீர் மறுப்பதற்காக அல்ல, புரிகிறதா.

நான் மறுக்கவில்லையே. ஸோமிட்ஸியாவின் இறையாண்மைக்குக் குந்தகம் வராத வகையில் எது செய்தாலும் சரிதான். நான் வேண்டுமானால் எழுந்து செல்லட்டுமா?

வேண்டாம். நான் இவரைக் கூடாரத்துக்குள் அழைத்துச் செல்லப் போகிறேன். கன்ஷ்யாம், கூடாரத்தின் அருகில் யாரையும் நெருங்க அனுமதிக்காதே.

சிறுவனின் தோளைப் பற்றி மேஜர் அழைத்துச் செல்வதை, கையாலாகாதவராகப் பார்த்துக்கொண்டிருந்தார் கிழவர்.

*

# இரண்டு பெண்கள்

... இருளால் ஆன பறவை என்பதால், பகலில் நடமாட முடியாது அதற்கு ...

## I

*கடந்த மூன்று மலர்களாகக் காமியா காமியாபோலவே இல்லை என்று வாங் சுக் சொல்கிறான். ஸோமிட்ஸுவின் வனப் பிரவேசத்துக்கு ஏற்பாடாகியிருக்கிறது. பிராயம் எய்துவதற்கு முன்னால், வனத்தில் சில காலம் வசிக்கவேண்டும் ஸோமிட்ஸுக்கள் என்று கிரந்தம் சொல்கிறதாம்.*

*ஸோமிட்ஸுவின் புறப்பாடு பற்றிப் பாமர ஜனங்களுக்கு மூன்று மலர்களுக்கு முன்புதான் அறிவிக்கப்பட்டது. தலைநகரத்தின் பல்வேறு மட்டங்களில் பல்வேறு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தலை நகரத்தின் பரபரப்புக்கு ஒரு சிறு உதாரணம் மாதிரி ஆகியிருக்கிறது ஈனோங் மாளிகை. ஈனோங்கைப் பார்க்க சதா ஆட்கள் வந்த வண்ண மிருக்கிறார்கள். சிலரை அவரே ஆளனுப்பி வரவழைக்கிறார். நிருபாவை ஈனோங் மாளிகையில் பகலிலும் வந்து தங்க அனுமதித் திருக்கிறார். மொத்தத்தில், சீக்கு வந்தவன் போலச் சுணங்கிக் கிடக்கும் ஈனோங் மாளிகை, தேனடை போல ஆகிவிட்டது.*

*ஆனால், பாவம், வாங் சுக் இடிந்து போயிருக்கிறான். அவனுடைய ஆசான் இல் சுங்கைக் கொன்றுவிட்டார்கள். அந்தச் செய்தி வந்ததி லிருந்தே எதிலும் ஆர்வமில்லாமல் இருக்கிறான் இவன். மரக்கட்டை போல விறைப்பாக இருக்கிறான்.*

*ஒற்றர் வட்டாரத்தில், ஈனோங் மாளிகைக் காவலர்களால்தான் இல் சுங் கொல்லப்பட்டான் என்று ஒரு பேச்சிருக்கிறதாம். கண்களிலிருந்து வழியும் தாரையைக் கட்டுப்படுத்த மிகவும் சிரமப்படுகிறான் வாங் சுக். ஈனோங்கின் எதிரில் செல்ல வேண்டிய சமயங்களில் கவனமாகத் துடைத்துக்கொள்கிறான். ஈனோங்கும் அவனை அடிக்கடி அழைக்கிறார்.*

அவர் இந்த மாளிகையை விட்டு வெளியேறவேயில்லை. பகல் முழுவதும் யாருடனாவது பேசிக்கொண்டேயிருக்கிறார்.

ஐந்தாறு மலர்களுக்கு முன்பு வாங்யே பிரபு வந்திருந்தார். மரச்சுவருக்கு மறுபுறம் கிழவரும் பிரபுவும் நெடுநேரம் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்ததை நிரூபா கேட்டாள். ஏதோ ராஜீய விவகாரங்கள் போலிருக்கிறது. சரியாகப் புரியவில்லை.

அவர்களுடைய பேச்சில் இல் சுங்கின் பெயர் திரும்பத் திரும்ப அடிபட்டது. வாங்யேவின் குரல் இவ்வளவு உயர்ந்து யாரும் கேட்டிருக்க மாட்டார்கள். கிழவர் வழக்கத்தை விடவும் நிதானமான குரலில் பேசினார், வாங்யேவுக்கு சமாதானம் சொல்கிறவர் மாதிரி. வாங் யேவின் கை ஓங்கியிருக்கிற மாதிரிதான் பட்டது. கிழவர் மேல் அனுதாபம் உண்டானது நிரூபாவுக்குள்.

இரவுகளில் தனித்திருக்கும்போது அவருடைய மிருகவெறி கூடிவிடுகிறதே தவிர, பகற்பொழுதுகளில் மிகவும் இதமாக இருக்கக் கூடியவர் கிழவர். அவர் சம்பந்தமாக ஒரே ஒரு விஷயத்தில்தான் அதிருப்தி இருக்கிறது. அதுசரி, கூழாங்கல்லைப்போல மழுமழுவென்று இருக்க முடியுமா அன்னாசிப்பழம்?... தவிர அந்த ஒரு அதிருப்தியையும் தீர்த்துக்கொள்ளத்தான் ஒரு வழி உண்டாகிவிட்டதே. அது வேறு விஷயம்.

மற்றபடி, நிரூபாவைப் போன்று, கவனிப்பாரற்ற அனாதைப் பெண்ணுக்கு இப்படி ஒரு காப்பாளர் இல்லையென்றால், வாழ்வதற் கான மார்க்கம் ஏது? குறையேதும் இல்லாதபடி, பல வருஷங்களாகத் தன்னைப் பராமரித்து வரும் கிழவரின் மீது சட்டென்று ஒரு பிரியம் உண்டானது.

பாவம். இவர் பிராயத்தை ஒத்தவர்களெல்லாம் வாழும் நிம்மதியான வாழ்க்கைக்கு நேர் எதிராய், எந்நேரமும் பதட்டமாய் வாழ வேண்டியவராய் இருக்கிறார். ஸோமிட்ஸியாவில் உள்ள எல்லா விரல்களும் ஒரே நேரத்தில் இவரை நோக்கி நீள்கிற மாதிரி ஒரு சித்திரம் உண்டானது. பாவம். தேசபக்தி மிகுந்த கிழவர். அந்தரங்கமான நேரங் களில் கூட, தேசம் பற்றியேதான் பேசுவார். அடிக்கடி,

மூன்று ஸோமிட்ஸுகளைப் பார்த்தவன் நான்.

என்பார். அபார ராஜ விசுவாசி. கிரந்தத்தின் நடமாடும் காவலர். பாவம் கிழவர். வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் ஸோமிட்ஸுவை அனுப்பிவிடலாமே. இந்த வயோதிகப் பிராயத்தில், தானே அழைத்துச் செல்லவிருக்கிறார். ராஜீய விஷயங்களில் அவருடைய அக்கறை அப்படிப்பட்டது.

வனப் பிரவேசத்துக்கு நானும் வருகிறேன் என்று நிருபா வேண்டியபோது, உடனடியாகச் சம்மதித்துவிட்டார். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. வாய்திறந்து ஒரு சொல் கூடப் பேசக்கூடாது. பிறவி ஊமை போல நடந்துகொள்ள வேண்டும். வனப் பிரவேச காலத்தில் ஈனோங்கின் குரலைத் தவிர வேறு மனிதக் குரல் எதுவும் ஸோமிட்ஸுவின் செவிகளில் விழக்கூடாதாம்.

கிழவருக்குத் தன்மேல் இவ்வளவு நம்பிக்கை இருக்கிறதென்பதே ஆச்சரியமான சங்கதிதான் என்று நினைத்துக்கொண்டாள் நிருபா. ஒரு வேளை, உடன் வரவிருக்கும் வேறு யாரையும்விட இவளை நம்பலாம் என்று எண்ணுகிறாரோ என்னவோ.

நிருபா பக்குவம் செய்த இரவு உணவை ஒருவேளையும் தனியாக உண்ண மாட்டார் கிழவர். வாங் சுக் இருக்கும் நாட்களில் அவனோடு சேர்ந்துதான் உண்பார். அவனும் இல்லாத நாட்களில், மெய்க்காவல் வீரர்களில் எவனையாவது சேர்ந்து உண்ண அழைப்பார். அது விகல்ப மாய்ப் படாமல்தான் வெகுகாலம் இருந்தது நிருபாவுக்கு.

யாரும் இல்லாது போன ஒரு முன்னிரவில், மாளிகைக்குள் வளையவரும் பூனைக்கு உணவைக் கொஞ்சம் அளித்து, அது உண்ட பிறகே தான் உண்டார் என்பதைப் பார்த்த பிறகுதான் புரிந்தது, உயிர் பயம் அவரைத் துரத்துவது. தனது ஒவ்வொரு தப்படியையும் மரண பயத்தை முன்னிட்டே எடுத்து வைக்கிறார் கிழவர்...

கவிந்துகொண்டிருக்கும் இரவு, மனத்தில் கனமாகப் படர்கிறது. இருளின் ஆதிக்கத்தில் வஸ்துக்கள் காட்சியிலிருந்து மறைய ஆரம்பித்து விட்டன. இறக்கைக்குள் அலகு செருகிக் கோதிக்கொள்ளும் பறவை யைப் போலத் தன்னில் அமிழ்ந்து புதைந்துகொள்கிற மனம், கிளறிக் கிளறித் தோண்டியெடுக்கும் யாவுமே அச்சமூட்டுவதாக இருக்கின்றன.

அம்மாவின் உடல்நிலை கடுமையாகச் சீர்கெட்டிருந்த நாட்களிலும் இப்படித்தான் இருந்தது. அடிமனத்தில் எந்நேரமும் பயத்தின் துடிப்பு கனன்றுகொண்டிருக்கும். ஏதோ தீங்கு நேர்வதற்காகக் காத்திருப்பது மாதிரி. நிருபா ஆழ்ந்து மூச்சிழுத்தாள். சாராயம் பதநிலைக்கு வந்து விட்ட மணம் பரவுகிறது அறையெங்கும்.

இந்த ஒரு இரவுதான். நாளை பொழுது விடியும்போது காமியாவை விட்டு நீங்கியிருக்கும் இவர்கள் குழு. கிழவர் சற்றுப் பதட்டமாகத்தான் இருக்கிறார். அவர் பதட்டமாய் இருக்கும் நாட்களில், நிருபாவின் இரவு நரகமாகத்தான் கழியும். கிழவரின் இயலாமை முள்போர்வை போல இவள் மீது கவிந்து வதைக்கும். ஆனால், தொடர்ந்து வரவிருக்கும் நாட்களில், தனிமையும் பஞ்சுமெத்தையும் கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவுதான் என்பதால், கிழவரின் நகங்கள் மற்றும் பற்களிடமிருந்து தற்காலிகமாகவாவது விடுதலை கிடைக்கலாம்.

அது சரி, ஆண்களுக்கு மாத்திரம் அந்தச் சுனை வற்றுவதே யில்லையே, ஏன்? நிச்சயம் சிருஷ்டியின் பாரபட்சம்தான் அது. தன்னால் ஈடுகொடுக்க முடியவில்லை என்ற ஆதங்கம்தான் அம்மாவை அந்த முடிவை நோக்கித் தள்ளியிருக்க வேண்டும். நச்சு விதைகளை அரைத்துக் குடித்த பிறகு எவ்வளவு பொங்கிப் பொங்கி அழுதாள் அவள்...

ஆனால், அம்மா, உன்னுடைய காலம் வேறு. ஈனோங் கிழவர் அப்போது கிழவராக இல்லை என்பது முக்கியமான ஒரு வித்தியாசம். மரணத் தருணத்தில், நீ என்ன கேட்டாயோ, இந்தக் கிழவர் என்ன வாக்குக் கொடுத்தாரோ, நான் சிக்கிக்கொண்டேன் நடுவில்.

எனக்குப் போதவில்லை. கொஞ்சமும் போதவில்லை. உடம்பின் ஆழத்தில் அந்தக் கழுகு துடித்தவாறிருக்கிறது. வாங் சுக் என்ற இரை மாத்திரம் கிடைக்காது போயிருந்தால், யாரையெல்லாம் எப்படியெல் லாம் குதறியிருக்கும் என்று யூகிப்பதற்கில்லை.

அந்தக் கழுகின் முதல் குறி, இந்தக் கிழவராகவும் இருந்திருக்கலாம்.

நல்லவேளை, இந்தப் பயணத்தில் வாங் சுக்கும் வருகிறான். அளவற்று விரிந்திருக்கும் ஆகாயத்தில் தனியாய்த் திரியும் இரண்டு பறவைகள் மாதிரி, வாங் சுக்கோடு தனியாக வசிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? ம்ஹூம்... அதற்கெல்லாம் வாய்ப்பேயில்லை.

நிரூபா சிறுமியாய் இருக்கும்போது, அம்மா நிறையக் கதைகள் சொல்வாள். ஸோமிட்ஸூ புராணத்தில் வந்த ஒரு பறவையின் கதை நிரூபாவுக்கு மிகவும் பிடித்த ஒன்று...

சர்வ வியாபி சிருஷ்டித் தொழிலைத் தொடங்கி நடத்தி வருகிறார். வெளிச்சமும் இருளும் சமமாய்க் கலந்த, அன்றன்று பிசைந்த, கலவையை அன்றன்று காலி செய்துவிடவேண்டும். பறவைகளும் விலங்குகளும் செடிகொடிகளும் பாறைகளும் மேகங்களும் வனையப் பட்டு வர்ணம் பூசப்பட்டு உலவ விடப்படும். சிலவற்றுக்கு உயிரூட்டு வார். சிலவற்றுக்குக் கிடையாது.

பதினேழாவது நாள், கடைசிக் கைப்பிடியை உருட்டிக் கொண்டிருக் கிறார். உள்ளங்கையில் நிரடுகிறது ஒரு சிறு இருள் துண்டம். அதை ஒரு பறவையாக்கிப் பூமியின் பரப்பில் செலுத்தினார் சர்வ வியாபி. இருளால் ஆன பறவை என்பதால், பகலில் நடமாட முடியாது அதற்கு. ஏதேனும் ஒரு பாறையினடியில், அல்லது வாசல் மூடிய குகைகளுக்குள், அல்லது வனாந்தரத்தின் புதர்க் குத்துக்குள் சென்று வசிக்கும். இரவு கனியும்போது வெளிவரும். இருளின் பகுதியாகப் பறந்து அலையும் இருட்பறவையை யாரும் பார்க்கமுடியாது, சக பறவைகள் கூட. வெளிச்சம் தெரியும் இடம் நோக்கி ஆசையாய்ப் பாய்ந்து தன் சிறகின் தூவிகளைக் கணிசமாக இழந்து மீண்டும் தன் ஒளிவிடத்தில் புதைந்துகொள்ளும்.

ஆதி ஸோமிட்ஸு வானுலகம் சென்ற நாளில், அவரைத் தொடர்ந்து பின்சென்ற ஜீவராசிகளோடு இந்தப் பறவையும் போய் விட்டது என்று கதை முடியும்.

அந்தப் பறவைதான் நான் என்று நினைத்துக்கொண்டாள் நிரூபா.

*II*

காமியாவிலிருந்து வந்த வைத்தியர் அந்த அம்மாளின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். சீராகத்தான் இருக்கிறது. வேதனை இப்போதுதான் அடங்கத் தொடங்கியிருக்கிறது போல.

நல்லவேளையாக, வைத்தியர் பாங் டூவுக்கு மாதாந்தர விஜயம் செய்யும் தினத்தின் முற்பகலில் நிகழ்ந்தது அந்த அசம்பாவிதம்...

காமியாவிலிருந்து வந்த களைப்பு தீரக் குளித்துவிட்டு, வீட்டின் முகப்பில் உட்கார்ந்து வைத்தியரும் பெரியவரும் பேசிக்கொண்டிருந் தார்கள். கிராமத் தலைவன் திக்ஸே அருகில் பணிவாக நின்று கொண்டி ருந்தான். ஆச்சரியம் தோய்ந்த குரலில் பெரியவர் கேட்டார்.

அப்படியா சொல்கிறீர்கள்?

ஆமாம். கிரந்தத்தில் தெளிவாகவே சொல்லப்பட்டிருக்கிறதாம். ஸோமிட்ஸுவானவர் வன வாழ்க்கையின் சாரத்தை அறிந்து கொள்வதற்காக வனப்பிரவேசம் செய்ய வேண்டுமென்று.

இதுவரை நானும் இரண்டு ஸோமிட்ஸுகளைப் பார்த்திருக் கிறேன். வனத்தில் வசிக்கச் சென்றதில்லை அவர்கள். இந்த ஸோமிட்ஸுதான் புதிய வழக்கத்தை ஆரம்பித்து வைக்கிறார் என்று தோன்றுகிறது.

அப்படியில்லை திக்ஸே. முந்தின ஸோமிட்ஸுகள் பிரஜை களுக்குத் தெரியாமல் போய் வந்திருப்பார்கள். இப்போதையவர், ஜனங்களுக்குத் தெரியப்படுத்திவிட்டுப் போகிறார். நீ சொன்ன இரண்டு ஸோமிட்ஸுகளையும் பார்த்தவர்தானே நமது ஈனோங்? கிரந்தத்தின் ஒரு சொல்லுக்காவது விரோதமாக நடக்கச் சம்மதிப்பாரா அவர்? சொல்லு...

திக்ஸே வேகமாகத் தலையசைத்தான். பெரியவர் கேட்டார்.

மொத்தப் பரிவாரங்களும் உடன் போயிருக்கிறதோ?

வைத்தியர் சிரித்துவிட்டார்.

ஏது, அரண்மனையை நகர்த்திக் கொண்டுபோயிருக்கிறார்களா என்று கேட்பீர்கள் போலிருக்கிறதே? பரிவாரங்களோடு

வனப்பிரவேசம் செய்தால், வனம் காமியாவாகி விடாதா?... சும்மா ஏழெட்டுப் பேர் போயிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த வயதில் ஈனோாங்கும் உடன் சென்றிருக்கிறார். நடந்துதான் செல் கிறார்கள். இரண்டு மஞ்சரிகள் வரை வனத்தில் இருப்பார்கள் போல...

கிறீச்சென்ற ஒலியோடு, கனத்த வஸ்துவொன்று தட் டென்று மரத் தரையில் வீழும் ஓசை கேட்டது. மரச் சுவரின் மேல் சாய்ந்து நின்று இவர்கள் உரையாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த அம்மாள் மூர்ச்சையுற்று விழுந்திருந்தாள். பேசிக்கொண்டிருந்த மூவரும் வேகமாக அவளை நெருங்கினர். காற்று பிடுங்கிச் சாய்த்த மரம் போலக் கிடந்த அவளது கடைவாயிலிருந்து ரத்தம் ஒழுகியது. இறுகக் கிட்டித்திருந்த அவளது வாயைப் பிரயாசைப்பட்டுத் திறந்து பார்த்தார் வைத்தியர்.

நுனி நாக்குத் துண்டிக்கப்பட்டிருந்தது...

கிஸீயாவுடைய சூத்திரங்களின் மகிமைதான். பச்சிலைகள் தோற்கவில்லை. அயர்ந்து தூங்குகிறாள். கடந்த நான்கு இரவுகளும் பகல்களும் அவளுடன் கடுமையாகப் போராட வேண்டியதாகிவிட்டது. வைத்தியத்தின் அடுத்த நிலைக்குப் போகவேண்டி வருமோ என்று யோசிக்க ஆரம்பித்திருந்தார் வைத்தியர். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் ஆடுசதையில், தேவைப்பட்டால் நடு முதுகில், சூடு இழுக்க வேண்டும். சுவாதீனம் பிறழ்ந்தவர்களை உடனடியாகக் கட்டுக்குள் கொண்டு வர அது ஒரு முறை. ஆனால், புண் ஆறுவதற்கு வெகுகாலம் பிடிக்கும்.

நல்லவேளை, உறங்கிவிட்டாள்.

இயற்கை நியதிபோல அவள் மீது அழுத்திப் பரவியிருந்தது உறக்கத்தின் சுமை. கண்ணயர்ந்தவள் மறுபுறம் புரண்டு படுக்கும்போது அந்தக் காட்சிப்புலம் உயிர்கொள்கிறது.

திறப்பு எதுவுமற்ற நீர்க்கோளத்துக்குள் தன்னிச்சையாக வளைய வருகிறது ஒரு மலைப் பாம்புக் குட்டி . கோளத்தின் பக்கச் சுவர்களில் தலைப்பகுதியால் முட்டுகிறது. வால் பகுதியால் ஓங்கி உதைக்கிறது.

கோளம் வெறும் காட்சியல்ல. சதையும் ரத்தமுமான தானேதான். உதைபடும்போதெல்லாம், சன்னமான கிளுகிளுப்பு ஊறுகிறது.

காட்சியின் நிலப்பரப்பில் வெளிச்சத்தின் தன்மை மாறுகிறது. வேறொரு இடம். வேறொரு வேதனை. வேறொரு அனுபவம். சுமையிறங்கி நொய்ந்த வயிற்றின் மேல் மழமழவெனக் கிடக்கிறது மலைப் பாம்புக் குட்டி .

ஸ்தனங்களில் உதடுகளைப் பதித்து ஆவேசமாய் உறிஞ்சுகிறது.

சரீரத்துக்குள் உடைப்பெடுத்த மதகிலிருந்து சுகமாகப் பெருகிப் பாய்கிறது வெண்ணிற வெள்ளம்.

காட்சி மாறுகிறது. மலைப்பாம்பு இயல்பு நிலைக்கு எதிர் நிலையாய்ப் புரண்டு தலை தூக்குகிறது. நாகப்பாம்போ என மனத்தில் ஒரு மயக்கம். இல்லை...நாகப்பாம்பு இல்லை. மனிதக் குழந்தை அது. என் குழந்தை.. நான் பெற்ற குழந்தை...

மீண்டும் மாற்றமுறும் காட்சியில் ஒரு தெரு விரிகிறது. முற்பகல் வெளிச்சமும் தூசியும் தலை முழுக்கப் படிய தெருவில் உளைகிறான் என் குழந்தை. கோதிச் சீவிக் கொத்தாகத் தலைமுடியைக் கட்டக் கம்பளிக் கயிற்றுடன் நான் துரத்த, என்னை ஏமாற்றி ஓடுகிறான் அவன்.

இப்போது, இன்னொரு காட்சி. ராட்சசர்கள் வருகிறார்கள். என்னை அணைத்து உறங்கும் குழந்தையின் பிஞ்சுக் கைகளைப் பறித் தெடுக்கிறார்கள். புதிதாக மழிக்கப்பட்ட தலையின் பச்சைப் பரப்பில் முகத்தை அப்பிக்கொண்டு, விட மறுக்கிறேன். அவர்கள் பலவந்தமாகப் பிடுங்குகிறார்கள்.

பல்லக்கின் மெத்தையில் அவனைக் கிடத்துகிறார்கள்.

பல்லக்கு நகரும் திசைக்கு எதிர்த்திசையில் நான் இருக்கிறேன்... நானிருப்பது தரையல்ல. எதிர்ப் பல்லக்கு.

பல்லக்குகள் ஒன்றுக்கொன்று மறைந்துபோகின்றன.. ஐயோ... மகனே...

இன்னும் மாறும் காட்சியில், அவன் மிக வளர்ந்த சிறுவனாகியிருக் கிறான். மீசை அரும்பத் தொடங்கியிருக்கும் முகத்தில் பெண்மைக் களை வெகுவாகக் குறைந்துவிட்டது. ஆனாலும், தாயின் சாயல் நெற்றியிலும், கன்னக் கதுப்புகளிலும், உதட்டு மடிப்பிலும், கண்களிலும் அழுத்தமாய் எஞ்சியிருக்கிறது.

ஆனால், என்ன இது... வழக்கமாகத் தென்படுகிற மாதிரி, பல்லக் கில் இல்லையே அவன்... ஏதோ வனாந்தரத்தில் அல்லவா நடந்துகொண் டிருக்கிறான்? தனியாக வேறு இருக்கிறான். என் கண்ணே, வேளா வேளைக்கு உணவு தர யாராவது இருக்கிறார்களா? செம்மறியாட்டைப் போஷித்து வளர்த்து, இறைச்சிக்காக வெட்டித் தள்ளுகிற மாதிரி உன்னை வனத்துக்குள் அனுப்பிவிட்டது யார்? அந்த வஞ்சகக் கிழவன்தானா.... அவனை நம்பாதே. அவன் பார்வை சரியில்லை.

நேர்ப் பார்வையுடன் நடந்துகொண்டிருக்கும் சிறுவனின் பின்னால் அரவமில்லாமல் தொடர்கிறது ஒரு கரடி. நீண்ட கூர் நகங்கள் கொண்ட இரண்டு முன்னங்கால்களையும் அரவணைக்க நீளும் கைகள் போல நீட்டியபடி அவனை நெருங்குகிறது... இன்னும் இரண்டு தப்படிகள்தாம் பாக்கி. கரடி பாய்கிறது...

ஐயோ மகனே... ஐயோ... என் மகனே...

தாதியின் இறுக்கமான பிடிக்குள் மீண்டும் விழிக்கிறாள்.

என்னை விடு. என் மகனிடம் போகிறேன். மகனே... மகனே... என்னை விடடி . பெட்டைக் கழுதையே. மலட்டுப் பிணமே. என் மகன் வேண்டும் எனக்கு...

வெளியேறிப் புரள நாவு கிடைக்காத சொற்கள் தொண்டைக்குழிக்குள் சுருண்டு அடங்குகின்றன. தீனமான அரற்றல் மட்டும் மிரட்சியுற்ற மிருகத்தின் குழறல் போல வெளியேறுகிறது.

*

# வாங்யே பிரபு

... காய்களை வெட்டாமலும், வெட்டுக் கொடுக்காமலும் சதுரங்கம் ஆடுவது எப்படி...? ...

*வா*ருங்கள், மிஸ்டர் ஹான்ஸ். அமருங்கள்.

என்றவாறு, ஐரோப்பியர்கள் போல அழுத்தமாகப் பிடித்துக் கைகுலுக்கினார் வாங்யே பிரபு. எதிரிலிருந்த மெத்தை தைத்த நாற்காலியைக் கை காட்டினார்.

முதன்முதல் அறிமுகத்தில் இளைஞர் போலத் தோற்றமளித்த வாங்யே பிரபு தனக்கு ஐம்பத்தைந்து வயது என்று சொன்னபோது தன்னால் நம்பமுடியாதிருந்தது நினைவு வந்தது வெய்ஸ்முல்லருக்கு. இப்போது, பத்து வருடங்கள் ஓடிக் கடந்த பின்னரும், வெய்ஸ்முல்லரின் சமவயதினர் போல, ஐம்பத்தைந்து வயதிலேயே நிலைத்திருந்தார் வாங்யே என்று தோன்றியது. நாள் தவறாமல் விளையாடும் டென்னிஸின் மகிமை. ஆட்டக் களத்தில் யாராலும் அவரை சுலபமாக ஜெயித்துவிட முடியாது.

பொதுவாகவே, ஸோமிட்ஸியப் பாமர ஜனங்களின் சராசரி ஆயுட்காலம் மிகக் குறைவாகவும் உயர் நிலைப் பிரஜைகளின் ஆயுள் மிக மிக நீண்டதாகவும் இளமையின் உறுதி கொண்டதாகவும்தான் இருக்கின்றன.

வாங்யே பிரபு தன்னுடைய ஹுக்காவில் புகையிலைத் துகளைக் கெட்டித்து முடித்தார். நாசூக்காக நெருப்பேற்றி, உறிஞ்சிய முழுப்புகையையும் வாயாலேயே வெளியேற்றினார். முன்னாலிருந்த சிற்றுணவுக் குட்டி மேஜையின் அடியில் விரலைக் கொண்டுசென்று அழுத்தினார். உள்ளே, வெகு தொலைவில் கேட்பதுபோல அழைப்பு மணி ஒலித்தது.

உங்களை வெகு முக்கியமான ஒரு விஷயம் பேசுவதற்காகத்தான் வரவழைத்தேன், மிஸ்டர் ஹான்ஸ்.

சொல்லுங்கள், ஸர்.

பொருத்தமான வார்த்தைகளைத் தனக்குள் தேடுபவர்போலக் கண்களை மூடி அமைதி காத்தார் வாங்யே. அந்த அறையின் வசீகரம் வெய்ஸ் முல்லரை ஈர்த்தது. இந்தப் பத்து வருடங்களில் இங்கே வருவது இது மூன்றாவது முறை. முந்தின இரண்டு முறைகளிலும் ஜூலியஸ் லுமும்பா உடன் வந்தான்.

முதல்முறை வந்தபோது உட்காரச் சொல்லவில்லை வாங்யே பிரபு. ஈனோங்கின் ஆணைப்படி, அந்நியர்கள் இருவரையும் விசாரிப்பதற்காக அழைத்திருந்தார். சிறையில் இல்லாதபோதும், சுதந்திரமாக நடமாட இயலாத அளவு பாதுகாப்பு வளையத்துக்குள்ளேயே இருந்தவர்களை ஏகப்பட்ட குறுக்குக் கேள்விகள் கேட்டார்.

இவருடைய சிபாரிசும் அந்தப் பருவத்தில் ஈனோங்கின் நல்லுணர்வு மேலோங்கியிருந்ததும்தான் இன்று வரை தடங்கலில்லாமல் வாழ்க்கை ஓடியதற்குக் காரணங்கள். இல்லாவிட்டால், இந்தியாவிலோ சீனாவிலோ ஏதாவது ஒரு சிறையில் வாழ்நாள் கழிந்திருக்கும். அடையாளச் சான்றுகள் எதுவுமே கொண்டிராத மனிதர்களை எந்த அரசாங்கம்தான் நம்பும்.

> சான்றுகள் அல்ல, நீங்கள் இருவரும் இங்கே இருக்கும்போது நடந்துகொள்ளும் விதம்தான் முக்கியம்.

என்று சொன்னார் வாங்யே பிரபு.

ஆனால், அப்போதே இருவரையும் வலுக்கட்டாயமாக வெளியேற்றியிருக்கலாம். நண்பன் ஜூலியஸ் உயிருடனாவது இருந்திருப்பான். இரண்டாம் முறையும் அவனுடன்தான் வர நேர்ந்தது. மிகுந்த நட்புடன் இவர்கள் இருவரும் உபசரிக்கப்பட்டார்கள். ஒரு கோப்பை தேநீர் குடித்துவிட்டு, பொதுவான திசைகளில் கொஞ்சநேரம் உரையாடிவிட்டுப் பிரிந்தார்கள். பின் வந்த நாட்களில் இங்கு வருவது பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம் எதிர்மறையாகவே பதிலளிப்பார் வாங்யே பிரபு.

> என்னுடைய இல்லத்துக்கு வருவது உங்களுக்கு நன்மை பயக்காது நண்பர்களே.

என்பார்.

பத்து வருஷங்கள் கழிந்ததற்கான தடயமேயின்றி, புதுக் கருக்குடன் இருந்தது அந்த வரவேற்பறை. பொருட்கள் எதுவும் இடம் கூட மாறவில்லை. இளஞ்சிவப்பில் சின்னஞ்சிறு வெள்ளைப் புள்ளிகள் அச்சிட்ட திரைச் சீலைகள். உயர்தரமான செம்மர மேஜை. அதன் மேல் வெண் பளிங்கினாலான சிறிய அளவு வீனஸ் சிலை. வெள்ளைக் கொண்டையுள்ள மேஜை விளக்கு. அழுத்தமான சிவப்பு நிறத்தில் உறை மாட்டப்பட்ட இருக்கைகள். சுவரோரத்தில் இருந்த பெரிய அலமாரி முழுக்கப்

புத்தகங்கள். பெரும்பாலும் ஆங்கிலப் புத்தகங்கள். மேஜையின் மேல் பிளேட்டோவின் தி ரிபப்ளிக் இருந்தது, பக்க அடையாளத்துக்காகச் செருகப்பட்ட பித்தளைத் தகடுடன். பக்கத்தில் தம்மபதம் ஆங்கில மொழிபெயர்ப்பு.

திரைச்சீலையை விலக்கிக்கொண்டு அந்த அறைக்குள் வந்த இளம் பெண்ணின் கையிலிருந்த வெள்ளித் தட்டில், அணில் வால் போல உயர்ந்த மூக்கில் துளையிட்ட சீனப் பீங்கான் குவளைகள் இரண்டும் பீங்கான் கோப்பைகளும் மூடிய சிறு குப்பியொன்றும் இருந்தன. பணிவாக மேஜையில் வைத்துவிட்டு பின்புறமாகவே நடந்து வெளியேறினாள் அவள். அவளுடைய கால்களுக்குக் குறுக்கும் மறுக்குமாய் ஓடிவந்த பாமரேனியன் நாய்க்குட்டி, சற்றுப் பின்தங்கி நின்று வெய்ஸ்முல்லரை உறுத்துப் பார்த்தது. பிறகு தன் உடலை ஒருமுறை சிலுப்பி விட்டு உள்ளே ஓடியது.

வாயிலிருந்து வெளியேறிய புகைக் கொத்தைக் கையால் கலைத்துவிட்டு, கடைவாய் இடுக்கில் புகைக் குழாயைப் பற்றிய பற்களுக்கூடே இதமான குரலில் கேட்டார்.

*உங்களுக்கு அவசர வேலையொன்றுமில்லையே.*

இல்லை. சொல்லுங்கள்.

*பிரயாணத்துக்கான சாமான்களையெல்லாம் கட்டியாகி விட்டதோ?*

மலைச் சரிவுகளில் நூற்றுக்கணக்கான மைல்கள் நடந்தே கடக்க வேண்டும் என்னும்போது, சுமை அதிகம் எடுத்துச் செல்ல முடியுமா என்ன?

என்று சொல்லிச் சிரித்த வெய்ஸ்முல்லரை உற்றுப் பார்த்துவிட்டு, பீங்கான் குவளையிலிருந்து தேநீரையும் மற்றொரு குவளையிலிருந்து பாலையும் இரண்டு கோப்பைகளிலும் ஊற்றிக் கலக்கினார். சர்க்கரையைச் சிறு கரண்டியில் அள்ளி, சைகையால் வெய்ஸ்முல்லருக்குத் தேவைப்படும் அளவைக் கேட்டார். பொதுவாகவே அவருடைய நடவடிக்கைகள் மிகவும் மெத்தனமாகவும், சொற்கள் பொருத்தமாகவும் சிக்கனமாகவும் இருக்கும்.

*நீங்கள் தீர்மானமாக இருக்கிறீர்களோ?*

எது பற்றி?

*ஸோமிட்ஸியாவை விட்டுக் கிளம்புவது பற்றித்தான்.*

அதில் என்ன சந்தேகம்?

*அதுபற்றிப் பேசத்தான் உங்களை வரவழைத்தேன். உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்ய முடியுமா என்று கேட்க.*

குட்டி மேஜையின் இழுப்பறையைத் திறந்து, சிறு இரும்புக் கம்பி ஒன்றையெடுத்தார். புகையிலைக் குழாயின் திறந்த குழிக்குள் கம்பியால் கிளறினார். அவருடைய நிதானமும், பேச்சின் வேகக் குறைவும் வெய்ஸ் முல்லருக்குள் லேசான பதட்டத்தை உண்டாக்கின. நீண்ட பேச்சுக்குத் தயாராவது போன்று தொண்டையைச் செருமிக்கொண்டார் வாங்யே பிரபு.

மிஸ்டர் ஹான்ஸ், நீங்கள் எங்களுடன் தங்கிவிடவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மறுப்பதுபோல் லேசாய் இடவலமாக வெய்ஸ்முல்லர் தலையசைப் பதைப் பொருட்படுத்தாதவர் போலத் தொடர்ந்தார்.

உங்களுடைய சேவை எங்களுக்கு மிகவும் தேவைப்படும் கால கட்டம் இது. ஸோமிட்ஸிய அரசில் முக்கியமான இலாகாவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுவீர்கள்...

வெய்ஸ்முல்லரின் தலை வேகமாக அசைந்தது.

நான் செல்வது என்று முடிவெடுத்துவிட்டேன். ஐரோப்பாவுக்குத் திரும்பவேண்டும் என்று தோன்றிவிட்டது எனக்கு.

... நான் சொல்வதை முழுக்கக் கேட்டுவிட்டு உங்கள் விருப்பப்படி நடக்கலாம். ஆனால், உங்கள் முடிவில் உறுதியாக இருக்கும் பட்சத்தில், இந்த அறையில் பேசுகிற எல்லாவற்றையும் இந்த அறையின் நிலைவாசலைத் தாண்டும்போதே மறந்துவிட வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். சம்மதமா?

சம்மதம் கேட்கும் குரலின் அடியோட்டமாக ஒரு ஆணையும் மிரட்டலும் இருந்ததை வெய்ஸ்முல்லரால் புரிந்துகொள்ள முடிந்தது. போகட்டும். இவர்கள் எக்கேடும் கெடட்டும். இன்னும் ஒரு இரவு. ஒரே ஒரு இரவு.

ஆகட்டும்.

... **நா**ளைக்குத் தன் வளர்ப்புப் பிராணியை அழைத்துக்கொண்டு ஈனோங் கிழவன் வெளியேறி விடுவான்... என்ன, புருவத்தை உயர்த்துகிறீர்கள்? அந்தப் பையனை ஒரு ஆட்சியாளன் என்று என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. இந்தக் கிழவனும் இவர்கள் கோஷ்டியும் வெளியேறிய பிறகு, ஸோமிட் ஸிய மண்ணைப் புதுப்பிக்கும் வேலை தொடங்கிவிடும். இவர்கள் சொல்கிற ஆதி ஸோமிட்ஸுவிலிருந்து தொடங்கி, இந்த நாட்டைப் பற்றிய உண்மையான தரிசனத்துடன் ஆளும் ஒருவர் இன்றுவரை கிடைக்கவில்லை.

நான் இங்கிலாந்தைப் பார்த்திருக்கிறேன். இந்தியாவில்

*இருந்திருக்கிறேன். திபெத்துக்கும் சீனாவுக்கும் சென்று வந்திருக்கிறேன். அவர்களோடெல்லாம் ஒப்பிட்டால், ஸோமிட்ஸியா பல நூற்றாண்டுகள் பின்தங்கியிருக்கிறது. இந்த தேசத்தைக் காலத்தில் முன்னெடுத்துச் செல்வது சாதாரண காரியமில்லை. அதற்குத்தான் உங்களைப் போன்றவர்களின் உதவி தேவைப்படுகிறது.*

*கிரந்தத்தின் நிபந்தனை, வனப் பிரவேசம் என்றெல்லாம் புளுகுகிறானே தவிர, வாஸ்தவத்தில், பயந்து போய்த்தான் இந்தக் கிழவன் ஓடுகிறான். திபெத்துக்கு அடுத்ததாக, சீனாவின் இலக்கு ஸோமிட்ஸியாதான் என்று பயம். சீனா ஒருபோதும் அந்தத் தவறைச் செய்யாது. பாங் டூ கிராமத்திலிருந்து நூற்றியிருபது மைல்கள் கடந்ததும் கடுமையான உறைபனிப் படலம் தொடங்கிவிடுகிறது. துருப்புகளை அனுப்புவதும், நிர்வாக அமைப்பை இங்கே உருவாக்கித் தொடர்ந்து கண்காணிப்பதும் மிகச் சிரமமான காரியமாக ஆகிவிடும். மாறாக, ஒரு தனி அரசாக எங்களை முன் நிறுத்தி, ஒரு கேடயம் போலப் பயன்படுத்தத்தான் சீனா விரும்பும். எனக்குக் கிடைக்கும் உளவுத் தகவல்களும் இதை உறுதி செய்கின்றன. இந்தியா திபெத்தை நோக்கி முன்னேறுமானால், அதைப் பிடித்து நிறுத்த ஒரு பொறி போல ஸோமிட்ஸியாவை உபயோகிக்கும் சீனா.*

*அப்படி ஒரு சூழ்நிலையில், இங்கே ஒரு பொம்மை மன்னன் ஆட்சியில் இருப்பதுதான் சீனாவுக்கு வசதி. அந்த வசதியை மறுக்கப் போகிறோம். முதல்வேலையாக, ஸோமிட்ஸியாவை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தவிருக்கிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாலான ஆட்சியமைப்பை உருவாக்கிவிடுவோம். பின்னர், ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினர் உரிமை கோருவோம்.*

*இந்த அரசியல் அமைப்புக்கு முட்டுக்கொடுக்க ஒரு ராணுவ அமைப்பு தேவை. ஸோமிட்ஸியாவின் இப்போதைய காவல் வீரர்களை உள்நாட்டுச் சட்ட ஒழுங்குப் பராமரிப்பில் ஈடுபடுத்திவிட்டு, புதிய இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து ராணுவத்தை உருவாக்க நீங்கள் உதவ முடியும்...*

வெகுநேரம் உறிஞ்சாமலிருந்ததால் அணைந்துபோயிருந்த புகைக்குழாயின் சாம்பலை மேஜைமீது இருந்த கிண்ணத்தில் தட்டிக் காலி செய்தார் வாங்யே பிரபு. புதிய புகையிலைத்துகளைப் பொறுமையாகக் கெட்டிக்க ஆரம்பித்தார். சடாரென்று நினைவு வந்தவராக, குட்டி மேஜையின் இழுப்பறையை விசையுடன் திறந்தார். சுருட்டுப் பாக்கெட் ஒன்றை எடுத்து வெய்ஸ்முல்லரிடம் நீட்டினார்.

*நீங்கள் சுருட்டுப் பிரியர் என்பதால் வரவழைத்து வைத்திருந்தேன். இதை உங்கள் இருப்பிடம் போலப் பாவித்துக்கொள்ளலாம். தாராளமாகப் புகையுங்கள்.*

புகை மண்டலம் இரண்டு மடங்காக அதிகரித்தபோது, அந்த அறையின் வசீகரம் வெகுவாகக் கூடியது.

*... உங்களை ராணுவ அமைச்சராக நியமிக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த தேசத்தைப் பிசாசு போலப் பீடித்திருந்த ஈனோங் கிழவன் நீங்கியதும் வரவிருக்கும் சுபிட்சத்துக்காக உழைத்தவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் சேரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஈனோங் கிழவனின் அபிலாஷை களுக்கிணங்க அந்த மடையன் தாமஸ் மன்ரோ மொழிபெயர்த் திருக்கும் ஆதி கிரந்தப் புளுகுமூட்டை போலின்றி, ஸோமிட்ஸியா வின் நவீன கிரந்தம் பூமிப் பரப்பு முழுவதும் வியப்புக் குறிகளை விதைக்கப் போகிறது.*

*எங்கள் ஜனங்கள் கடும் உழைப்பாளிகள் என்று உங்களுக்கே தெரியும். உணவுப் பொருட்களை மாத்திரமே விளைவிக்கும் வெறும் சாப்பாட்டுப் பிண்டங்களாக உருவமைக்கப்பட்டிருக் கிறார்கள் அவர்கள். ஸோமிட்ஸிய விளைநிலங்களில் பெரிய அளவில் பணப்பயிர்கள் பயிரிடுவதற்கான திட்டம் இருக்கிறது. இந்தியாவில் உள்ளது போன்ற தேயிலைப் பண்ணைகளை நிறுவுவோம். பதப்படுத்தத் தகுதியான தரிசு நிலங்கள் ஏகப்பட்டவை உள்ளன. அவற்றில் ஸோமிட்ஸிய உழைப்பாளி களின் ரத்தம் ஜீவநதியாகப் பாயும். உணவுத் தன்னிறைவு மாத்திரமல்ல, பொருளாதாரத் தன்னிறைவும் எய்துவதுதான் நவீன ஸோமிட்ஸியாவின் இலக்கு.*

*பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் விதமாக, சிறு சிறு தொழிற்சாலைகள் கட்ட உத்தேசித்திருக்கிறோம். திபெத்திய எல்லைக்கருகில் பாக்ஸைட் கிடைக்கலாம் என்கிறார்கள். பார்க்க வேண்டும். துங் லோவின் மீது ஒரு அணை கட்டவும், மின்சாரம் தயாரிக்கவும் இந்தியத் தொழிலதிபர்களுடன் ரகசியப் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட்டுவிட்டன; சீனர்களை நம்புவதை விடவும், இந்தியர்களை நம்புவதில் அபாயங்கள் குறைவு என்று நாங்கள் எண்ணுவதால்.*

*இந்திய அரசாங்கத்துக்கு இது தெரியும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், எங்கள் பாதையில் இந்தியா குறுக்கிடாது. நேருவின் மறைவுக்குப் பிறகு இந்தியாவின் தலைமைப் பீடத்தில் ஒரு வெற்றிடம் உருவாகியிருக்கிறது.*

தவிரவும், ஜனநாயகத்தின் காவலன் என்று உலக அரங்கில் தனக்கு உருவாகியிருக்கும் பிம்பத்தைக் கெடுத்துக்கொள்ள இந்தியா முனையாது. சீனாவின் ஆசைக்கு விரோதமாகவே நாங்கள் உயர்வோம் என்பதால், எதிரியின் எதிரியை நண்பனாகப் பாவித்து ஸோவியத் யூனியனும் உதவக்கூடும். ருஷ்யாவின் அந்தரங்க நண்பனான இந்தியாவே இது விஷயத்தில் சிபாரிசு செய்யலாம்...

அழைப்பு மணியை அழுத்தினார். உள்ளேயிருந்து அந்த இளம் பெண் வந்தாள். குளித்துவிட்டு வந்திருந்தாள் போலிருக்கிறது. உடை மாற்றியிருந்தாள். புத்துணர்வுடன் தென்பட்டாள். அவளிடம் குடிநீர் கொண்டுவரும்படி உத்தரவிட்டார் வாங்யே பிரபு. திரும்பிச் செல்ல விருந்தவளைக் கையமர்த்தி நிறுத்திவிட்டு,

மிஸ்டர் ஹான்ஸ், இரவுணவை என்னுடன் அருந்தலாமில்லையா? என்று கேட்டார்.

ஓ. அது ஒன்றும் பிரச்சினையில்லை.

...நாலாயிரம் வருடங்கள் ஓடிவிட்டன ஸோமிட்ஸியா உருவாகி, என்கிறது கிரந்தம். நான் அப்படி நம்பவில்லை. என்றாலும், உலகின் மிகப் புராதனமான நாகரிகங்களில் ஒன்று ஸோமிட்ஸிய நாகரிகம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. பல நூற்றாண்டு காலப் பழமையின் சுமையை இறக்கிவைப்பது அத்தனை சுலபமல்ல.

தேசத்தின் கல்வியறிவு நிலையைத் துரிதமாக அதிகரித்தாக வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் கல்வியகங்கள் திறக்க வேண்டும். ஸோமிட்ஸியாவின் சாயங்காலங்கள் மதுவில் மூழ்கித் தள்ளாடுகின்றன. புதிய தலைமுறைக்கு மதுவிடமிருந்து விடுதலை பெற்றுத் தரவேண்டும். அரசாங்கமே மது உற்பத்தியில் இறங்கி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரேஷன் அளவுகளில் மது வழங்கும் திட்டம் இருக்கிறது. மதுப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் இதன் மூலம். சமூக வாழ்வின் பல்வேறு அங்கங்களைச் சீர்திருத்த வேண்டியிருக்கிறது. காட்டுமிராண்டித்தனமான சடங்குகள் பலவற்றைத் தடைசெய்ய வேண்டும். சொத்துடைமை மீது ஜனங்களுக்கு ஆசை உண்டாக்க வேண்டும். திருமணப் பதிவுமுறையை அறிமுகப்படுத்தி, குடும்பங்களும் அவர்களுக்கு சொத்துகளும் உண்டாகும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

சீனா, ருஷ்யா போன்ற நாடுகளில் இருக்கும் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நேர் எதிரானவையாகத் தோன்று

கின்றனவோ மேற்சொன்ன திட்டங்கள்? வேறு வழியில்லை. அவர்களது சமுதாயங்களின் பரிணாம முறை வேறு. டார்வினின் விதி செயல்பட்டு முடிந்த அடுத்த கணத்தை விட்டே இன்னும் நகரவில்லை, இப்போதைய ஸோமிட்ஸியா....

**வா**ங்யேவின் பார்வை, சுவரில் மாட்டியிருந்த அலங்காரத் துணி மீதும், விதானத்திலிருந்து தொங்கிய பிரம்மாண்டமான கண்ணாடி ஷாண்டலியர் மீதும் மாறி மாறிப் பதிந்தது. பிறகு, திறந்திருந்த ஜன்னலின் வழி தெரிந்த நிர்மலமான ஆகாயத்தின் மெல்லிருள் படிந்த நீலத்தில் நிலைத்தது. ஜன்னலை ஒட்டி அமைந்திருந்த டென்னிஸ் கோர்ட்டின் செம்மண் வெளியில் நடமாடும் சூட்சும பிம்பங்களை உறுத்துப் பார்க்கிறவர்போல வெகுநேரம் உறைந்திருந்தார்.

எதிரில் வெய்ஸ்முல்லர் உட்கார்ந்திருப்பதுவோ, பணிப்பெண் குடிநீர்க் குடுவையைக் கொண்டு வைத்துவிட்டுத் திரும்பிப் போனதுவோ பிரக்ஞையில் உறைக்காதவர் போலச் சமைந்திருந்தார். வலது கையின் விரல்கள் மாத்திரம் சொகுசு நாற்காலியின் கைதாங்கியில் சீராகத் தட்டிக்கொண்டிருந்தன. தியானம் கலைந்து தனக்குத்தானே பேசிக்கொள்கிறவர் போல,

...ஆனால், அந்த சுபிட்சம் பூரணமடைவதைப் பார்க்க நான் இருக்க மாட்டேன். இப்போது முளைவிடும் விதை, முழு விருட்சமாவதற்குக் குறைந்தது முப்பது நாற்பது வருடங்களாவது பிடிக்கும். போகிறது. தான் பாய்ந்த நிலம் தழைத்து விளைவதைப் பார்க்க துங் லோ ஆசைப்பட முடியுமா என்ன? ...

என்று கூறியபடி நீண்ட பெருமூச்சு விட்டார்.

சமநிலைக்கு வந்தவர், வெய்ஸ்முல்லரிடம் இதமாகச் சொன்னார்.

ஸாரி. சற்று நிலை பிறழ்ந்துவிட்டேன். தவறாகக் கொள்ள வேண்டாம். எதுவும் உளறினேனோ?

அவர் முகத்தில் கூச்சம் நிரம்பியிருந்தது. எப்போதும் இரும்பாக விறைத்திருக்கும் அவரது முகத்தில், உணர்ச்சி ததும்பிய காட்சி, வெய்ஸ்முல்லரிடம் ஒருவித ஆசுவாசத்தையும் சுவாதீனத்தையும் விளைவித்தது. வாங்யே பிரபு தானே பேசினார் மீண்டும்.

இவ்வளவு தாமதமாக ஆரம்பிப்பது ஏன்? என்று நீங்கள் கேட்கலாம். ஈனோங்கின் பலம் உங்களுக்குத் தெரியாது. ஜனங்கள் அந்தக் கிழவனிடம் வசியம் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தலைமுறை மயக்கம் அது. ஆதி ஸோமிட்ஸுவுக்கு அடுத்த

இடத்தை அந்தக் கிழவனுக்குக் கொடுத்திருக்கிறார்கள் ஜனங்கள். உங்கள் நண்பர் ஜூலியஸ் லுமும்பாவைக் கொல்ல ஏற்பாடு செய்தது ஈனோங்தான் என்று பிரபுக்களிலேயே பலரை நம்பச் செய்ய முடியவில்லை என்னால். பிறகு, இந்த தேசத்தின் கடைசிக் குடிமகனை எப்படி நம்ப வைப்பது? இப்போதுதான் காலம் கனிகிறது. எங்கள் முயற்சிகளை மேலெடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது...

நான் குறுக்கிடலாமா?...

தயக்கமென்ன?

நாங்கள் என்று சொல்லி வருகிறீர்கள், ஆரம்பத்திலிருந்தே...

உங்கள் ஐயம் சரிதான். நான் தனியாக இல்லை. பிரபுக்கள் பலரும், ஒற்றர்கள் சிலரும் எனக்கு ஒத்தாசையாக இருக்கிறார்கள். இனி வெளிப்படையாக முன்வருவார்கள்... எதிர்ப்புணர்வு கொண்டவர்களை, அதிலும் நம்பகமானவர்களை இனம் கண்டு ஒரு கூட்டமாகத் தொகுப்பதிலும், அவர்களை ஒரு இயக்கமாக முடுக்குவதிலும் உள்ள சிரமங்கள் நீங்கள் அறியாததல்ல. அடிமைத்தனத்தின் ஆனந்தத்தில் ஊறிய சமூகம் எங்களது. தனிஒருவனாக, பல்லாண்டுகள் தவம் போல உழைத்து நான் உருவாக்கியிருக்கும் புதிய தொகுப்புக்கு முழுநேரப் பணியாளனாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நிரந்தரமான குடும்பம் எதையும் நிறுவிக் கொள்ளவில்லை நான்.

வாங்யே பிரபு நீண்ட பெருமூச்சொன்றை வெளியேற்றினார்.

தவறில்லையென்றால், ஒன்று கேட்கலாமா?

உபசாரமெதற்கு? கேளுங்கள்.

ஈனோங்குக்கு இதெல்லாம் தெரிந்திருக்காது என்று நிஜமாகவே நம்புகிறீர்களா?

வாங்யே பிரபு மனம் விட்டுச் சிரித்தார்.

நான் என்ன ஸோமிட்ஸுவா...

தொடர்ந்து சிரித்தார். சிரிப்பு மெல்ல அடங்கி முகம் தீவிரம் கொள்வதை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்த வெய்ஸ்முல்லரின் முகத்தில் பார்வையை அழுத்தமாகப் பதித்து, தொடர்ந்தார்.

தன் கைமீறி எதுவும் போய்விடாது என்றுதான் எங்களை விட்டு வைத்திருந்தான் கிழவன். இப்போதும், அவன் என்னிடம் அதிகாரத்தைக் கொடுத்துச் செல்லவில்லையே. தன் அடிவருடி ஒருத்தனிடம்தானே ஒப்படைத்துச் செல்கிறான். ஸோமிட்ஸியக் குடியரசின் முதல் தூக்குத் தண்டனைக் கைதியிடம்...

வன்மமாகச் சிரித்தார் வாங்யே பிரபு.

*...கொலைவெறி பிடித்தவன் என்று நினைக்காதீர்கள் என்னை. காய்களை வெட்டாமலும், வெட்டுக் கொடுக்காமலும் சதுரங்கம் ஆடுவது எப்படி...? ஈனோங் கிழவன் எங்கள் ஆட்கள் எவ்வளவு பேரைச் சத்தமில்லாமல் தீர்த்துக் கட்டியிருக்கிறான் தெரியுமா? சென்றவாரம் கூட எங்கள் ஆதரவாளன் ஒருத்தனைக் கொன்று விட்டான். இல் சுங் என்று பெயர். ஒற்றனாக இருந்தவன். அரண் மனையின் உட்புறம் வரை எங்கள் சார்பாகச் சென்றுவந்தவன். ஸோமிட்ஸுவுடன் உறவு உருவாக்கிக்கொண்டு அவன் நம்பிக் கையைச் சம்பாதித்து வைத்திருந்தான். அவன் உயிருடன் இருந்திருந் தான் என்றால், இந்தக் கோஷ்டியுடன் அவனை அனுப்பிவைப்ப தாக இருந்தோம். கிழட்டு நாய் மோப்பம் பிடித்துவிட்டது. இப்போது வேறு இருவரைத் தயார் செய்திருக்கிறோம். எங்கள் முயற்சிக்கு அந்நிய மண்ணில் இருந்தவாறே தடங்கல் செய்தா னென்றால் ஈனோங் பரிதாபமான முடிவைச் சந்திப்பான்...*

*அதுசரி, ஈனோங்குக்கும் இது தெரிந்திருக்கும் பட்சத்தில், கடைசி நேரத்தில் தன் பயணத்திட்டத்தை ரத்து செய்துவிட்டால்?...*

*ஸோமிட்ஸிய மண்ணிலேயே அந்தக் கிழவனின் தலை உருளும்...*

மூர்க்கமாகச் சொன்னார் வாங்யே பிரபு. தன் உயரத்திலிருந்து மெல்ல மெல்ல இறங்கிக்கொண்டிருக்கிறார் அவர் என்று தோன்றியது வெய்ஸ் முல்லருக்கு.

...போகிறார்கள். எப்படி வேண்டுமானாலும் அடித்துக்கொண்டு சாகட்டும். நான் கிளம்பி விடுவேன். அது சரி, இந்த மனிதர் சதுரங்க உதாரணம் சொன்னாரே, ஜூலியஸும் ஒருமுறை சதுரங்கத்தை உதாரணம் சொன்னான். எந்தச் சந்தர்ப்பத்தில்?... என்ன உதாரணம் அது?...

ஞாபகத்தின் தொடர்ச்சியை இடைவெட்டி அறுப்பதுபோல சுவர்க்கடிகாரத்தில் காத்திரமான மணியோசை கிளம்பியது. ஒன்பது தடவை அது ஒலித்து ஓய்ந்த பிறகு நிதானமாகத் தொடர்ந்தது வாங்யே பிரபுவின் கனத்த குரல்.

*நான் பேசிக்கொண்டே போகிறேனே. நேரமாகிறது. உங்கள் பதிலைச் சொல்லவில்லையே.*

வெய்ஸ்முல்லரின் முகத்தில் அசாதாரணமான அமைதி நிலவியது. கவனமாகச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும். தேச எல்லையைக் கடக்கும்வரை, இந்த இரவைக் கடக்கும்வரை, கவனம் சிதறாமல் பேச வேண்டும்.

ஸர்... என்னை மன்னித்துவிடுங்கள். உங்களுக்குச் சாதகமான பதிலை வழங்கமுடியவில்லையே என்று ஆதங்கமாகத்தான் இருக்கிறது எனக்கும். ஆனால், ஒன்றைத் தெரிவித்தாக வேண்டும். நீங்கள் ஸோமிட்ஸியாவின் எதிர்காலத்தைக் கனவு காணுகிறீர்கள். உன்னதமான கனவு அது. உங்களுக்குத் திராணியையும் உறுதியையும் தரக்கூடியது. ஆனால், என்னுடைய பார்வையில் நிரம்பியிருப்பது என் பால்ய காலம். கிட்டத்தட்ட இருபது வருடங்களாக வளர்ந்து வந்திருக்கும் ஏக்கம் அது. கடும் சுமையாக அழுத்துகிறது இப்போது. ஐரோப்பாவுக்குத் திரும்பிவிட விரும்புகிறேன். எனது இறுதி மிச்சங்கள் என் தந்தை மண்ணில் புதைக்கப்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

ஏமாற்றமளிக்கிறீர்கள் எனக்கு. உடன்படுவீர்கள் என்று வெகுவாக எதிர்பார்த்தேன்.... என் தோழர்களும் அப்படித்தான் நம்பினார்கள். ஒரு குறுகிய காலத்துக்காவது எங்களுடன் இருந்து உதவுவீர்கள் என்று நினைத்தோம்...

இந்தப் பதின்மூன்று வருடங்களில் ஸோமிட்ஸியா என்மீது காட்டிய பரிவுக்கும், ஆதரவுக்கும் வெறும் வார்த்தைகளால் நன்றி சொல்லிவிட முடியாது என்பதையும் அறிந்தேயிருக்கிறேன்.

உபசார வார்த்தைகள் தேவையில்லை, நண்பரே. இந்த ஏமாற்றத்தின் காரணமாக, ஸோமிட்ஸியா உங்கள் மேல் காட்டிய அன்பு கொஞ்சமும் குறையாது என்று மட்டும் கூறிக் கொள்வேன்...

என் நண்பன் ஜூலியஸ் லுமும்பாவைக் கொன்றது இந்த ஈனோங்தான் என்பது தெரிந்தும் கையாலாகாதவனாக இத்தனை காலமும் இருந்தேன். அந்தக் கணக்கை இந்திய மண்ணில் நேர் செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். ஸோமிட்ஸியர்களுக்கு நான் செய்யும் பிரதியுபகாரமாக அது இருக்கட்டும்.

அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.... நான் சொன்னதை மறந்துவிடாதீர்கள். நாம் இங்கு பேசிய சகலத்தையும் மறந்துவிட்டுத்தான் உங்கள் பயணத்தை நீங்கள் தொடங்குவீர்களில்லையா? அது தானே நம் அனைவருக்கும் நல்லது...

வாங்யே பிரபுவின் வார்த்தைகள் வெகு நாசூக்காக வெளிப்பட்ட போதிலும் அதிலிருந்த எச்சரிக்கையும் மிரட்டலும் மிகவும் வெளிப்படையாகவும் உரத்தும் இருந்தன.

உணவறையில் தனக்காக நேர்த்தியான ஐரோப்பிய உணவு காத்திருந்த விதம் பேராச்சரியமாக இருந்தது வெய்ஸ்முல்லருக்கு.

*

## பூர்வ கிரந்தம் 6

... அண்ட பேரண்ட மாமிசத்தில் ஒரு குறு உறுப்பின் பரப்பில் நடமாடக் கிடைத்தது மனித குலத்துக்கு ...

*உயிர்ப் பொருட்களின் கூட்டத்தில் ஒரு உறுப்பு, தாவரங்கள்.*

*தாவரக் கூட்டத்தின் ஒரு உறுப்பு, மரங்கள்.*

*மரத் தொகுதியின் ஒரு உறுப்பு, தேவதாரு.*

*தேவதாரு மர வரிசையில் ஒரு மரத்தினடியில் நீ அமர்ந்திருப்பது போல,*

*அண்ட பேரண்ட மாமிசத்தில் ஒரு குறு உறுப்பின் பரப்பில் நடமாடக் கிடைத்தது மனித குலத்துக்கு.*

*குறு உறுப்போ ஐந்து தளங்களாலானது.*

*உச்சியில் ஆகாயவெளி.*

*அடுத்ததாகக் காற்றுத் தலம்.*

*நடு மையமாகத் தரைவெளி.*

*கீழே, மறைபுலமாய் நீர் வெளி.*

*இன்னும் கீழே உறைகிறது ஆதி நெருப்பு.*

*நெருப்பை வணங்குவாயாக.*

*மரங்களில் பாறைகளில் ஓடும் உஷ்ணத்தின் ரேகைகளில் வரலாறு உருவாகிறது.*

*உயிரின் கதகதப்பாய் உடல்களில் நிறைவதும், பனியை உருக்கி நதியை விளைவிப்பதும்,*

*பொன்னைப் புதுக்கி வடிவமைப்பதும் நெருப்பே.*

உலோகங்களின் ஆதாரத்தை இளக்குவதும், இணைப்பதும், பிரிப்பதும் நெருப்பின் விளையாட்டே.

காமத்தின் வெதுவெதுப்பாய், வியாதியின் அறிகுறியாய், சாப் பாட்டின் பக்குவமாய் நெருப்பை உணர்வாயாக.

நெருப்பில்லையேல் ருதுக்கள் இல்லை. பூக்கள் மலர்வதில்லை. பால் தயிராவதில்லை. ஜீவராசிகள் புணர்வதில்லை.

பூமியின் கர்ப்பத்தில் தாதுவாய் உறைகிறது நெருப்பு.

நெருப்பின் வீரியத்தை வணங்குவாயாக.

நீரை வணங்குவாயாக.

நீரே உயிரின் சாரம். நீரின் அலைகளில் வாழ்வின் தாளம்.

கனியில் ருசியாய், மலரில் மணமாய், ஞாபகத்தின் நெகிழ்வாய், காமத்தின் நதியாய்...

நீரை அறிவாயாக.

வடிவம் அற்று, வடிவம் கொள்ள இசைவுடன் ஆயத்தமாய் இருக்கும் நீரின் வாஞ்சையைப் பருகுவாயாக.

ஏழுகடல் ஏழுமலை தாண்டிப் பரந்திருக்கும் மணற்கடலில் இரட்டைத் திமில் உயிரிகள் நீரைச் சுமந்து செல்கின்றன, தம் வயிற்றுக் குள்.

நீரின் தீராக் குழந்தைமையை வணங்குவாயாக.

நிலத்தை வணங்குவாயாக.

இறக்கையற்ற ஜீவன்களைத் தாங்கும் தாய் அவள்.

மரங்களும் நதிகளும் சமுத்திரமும் நெருப்பு வழியும் குன்றுகளும் பனியில் உறைந்த பாறைகளும் உருள்வதும் புரள்வதும் அவளது உடலிலே.

ஞானிகளின் பாதத்துக்கு மிருதுவாகவும், வஞ்சத்தின் கால்களுக்கு முட்புதராகவும், வாழும் உயிர்களுக்கு உறைவிடமாகவும் நிலமே இருக்கிறது.

காட்சிகள் சலனம் கொள்வதும், சலனம் உறைந்த கணங்கள் சாந்நித்தியம் கொள்வதும் தரையின் பரப்பிலே.

சகல லோகங்களிலும் உயிர்ப்பொருட்களும் ஜடப்பொருட்களும் குழந்தைகளாய்த் தவழ்வது நிலத்தின் மடியிலே.

நிலத்தின் பொறுமையை வணங்குவாயாக.

காற்றை வணங்குவாயாக.

கால்கள் அற்ற தாவரங்கள் இணையைப் புணர உதவுவது காற்று.

உயிரின் இருப்பை அறிவிப்பது காற்று. உயிரை வளர்ப்பது காற்று. உயிராய் இருப்பது காற்று.

வருடி ஆறுதல் சொல்லவும், சீறிக் கண்டனம் காட்டவும்,

நீரையும் நிலத்தையும் நெருப்பையும் இணைக்கவும் பிரிக்கவும்,

நகர்வது காற்று.

மேகங்களை நகர்த்திப் பொழியவைக்கவும் பொழியாது விரட்டவும் வல்லது காற்று.

திசைகள்தோறும் நகரும் சுதந்திரமும், சிசுவின் உடலுள்ளும் ஒடுங்கும் கீழ்ப்படிதலும் ஒருங்கே கொண்ட மாயாவி காற்று.

காற்றின் வியாபகத்தை வணங்குவாயாக.

ஆகாயத்தை வணங்குவாயாக.

நிறங்கள் சலனங் கொள்ளும் பிரபஞ்சக் கூரை அது.

பறவைகளும் மேகங்களும் வசிக்கும் மௌனவெளி.

ஆழத்தில் கோள்களும் இன்னும் ஆழத்தில் விண்மீன்களும் யாரும் ஆணையிடாமலே கடமை தவறாமல் சுழன்று நீந்திக் களிக்கும் மகாசமுத்திரம்.

புவியில் நிகழ்பவற்றின் நகல்களைப் பாதுகாக்கும் மாயக் காட்சியகம்.

கற்பனாதீதங்களின் சுனையாக, காலாதீதப் பெரும்புலமாக, மனித இறைஞ்சலின் சரணாலயமாக, ரகசியங்களின் கிடங்காக இருப்பது ஆகாயம்.

வரங்களும் சாபங்களும் உயிர்த்தாதுவும் வர்ஷிக்கும் வள்ளற் களம்.

ஆகாயத்தின் பெருந்தன்மையை வணங்குவாயாக.

*

# ஓர் உரையாடல்

... முட்டையிலிருந்து வெளிவரும் பறவைக் குஞ்சுக்கும் மனிதக் குழந்தைக்கும் வித்தியாசம் எதுவும் இருக்கிறதா ...

*சிறுவனின் கண்கள் சிவந்திருந்தன. துயரம் காரணமா, உறக்கச் சடைவு காரணமா, அலுப்பு காரணமா என்று யூகிக்க முடியவில்லை. தொங்கும் விளக்கு காற்றிலாடுவதற்கேற்ப, கூடாரத் துணிச் சுவரில் அவன் நிழலும் அலைபாய்ந்தது.*

*தன் உள்ளங்கைகளை விரித்து உறுத்துப் பார்த்துக் கொண்டிருந் தான். தனரேகையும், ஆயுள் ரேகையும் ஸோமிட்ஸியக் கலாசாரத்தில் பிறந்து வளர்ந்த மனிதர்களின் கைகளிலும் ஓடுமா என்று நினைத்துக் கொண்டார் மேஜர் க்ருஷ்.*

*உடல் செழுமையாக வளர்ந்திருந்ததே தவிர, சிறுவன்தான். மேலுதட்டில் பூனை ரோமங்கள் பூசியிருந்தன. மூக்கு நுனி வியர்த் திருந்தது. நெற்றியில் சிறு சுருக்கங்கள். வெல்வெட் துணிபோலக் கறுத்து அடர்ந்த குறுமுடித் தலை.*

*சடாரென்று தலைநிமிர்ந்தான். மௌனத்தைக் கலைத்துவிட முடிவெடுத்துவிட்டது போல உறுதியேற்றிருந்தது முகம்.*

*நீங்கள் என்னைத் தனியே அழைப்பீர்கள் என்று நானே எதிர்பார்த் தேன்...*

*ஹிந்தியில் பேசத் தொடங்கினான். இத்தனை சரளமாக ஹிந்தியில் பேசுவான் என்று மேஜர் க்ருஷ் எதிர்பார்த்திருக்கவில்லை. தன் ஆச்சரி யத்தை அவனிடம் சொன்னார்.*

*பதினாறு மொழிகள் தெரியுமாம் அவனுக்கு. வெய்ஸ்முல்லர் வந்த பிறகு ஜெர்மன் கற்றுக்கொண்டதாகச் சொன்னான். ஆங்கிலம் அதற்கு முன்பே தெரியுமாம்.*

சொல்லு. என்னதான் உன் பிரச்னை?

...ஜீ, கடந்த பன்னிரண்டு வருஷங்களாக நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று நினைக்கிறீர்கள்? ஒரு பகல் பொழுதைப் பதிநாலு பிரிவுகளாகப் பகுத்து, பாடம் நடத்திக் கொண்டே யிருந்தார்கள். தத்துவம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், வான சாஸ்திரம், பல்வேறு பாஷைகள், போர்முறைகள், கலைகள், வைத்தியம், இன்னும் என்னவெல்லாம் உண்டோ, அத்தனையும். வதைக்கப்படும் செல்லப் பிராணி மாதிரி, நாள் முழுவதும் உழுது தள்ளும் கலப்பை மாதிரி.

தாமரைக் கிழமைப் பிற்பகல் மட்டும் உற்சாகமாகக் கழியும். அன்று தான் பிரஜைகளுக்கு மன்னரின் சமூகத்திற்கு வர அனுமதி. பரிசுப் பொருட்களோடு கும்பல் கும்பலாக வந்து முழந்தாளிடுவார்கள் என் முன். அந்த ஒரு நாளில் பெண்களும் ஸோமிட்ஸுவின் முன் னால் வர அனுமதி உண்டு. சுவாரசியமாகப் பொழுது போகும். ஆனால், இப்போது யோசிக்கையில், பிரஜைகள் என்ற பெயரில் வந்தவர்கள் எல்லாருமே இந்தக் கிழவரின் தயாரிப்புகளோ என்று தோன்றுகிறது. பரிசுப் பொருட்களுக்கான செலவையும் அரசாங்கக் கருவூலமே ஈடு செய்திருக்கலாம், ஒருவேளை...

ஒரு சந்தேகம்.

என்றார் மேஜர். க்ருஷ்.

சொல்லுங்கள்.

ஏதோ ஒரு கிழமையின் பெயர் சொன்ன மாதிரியிருந்தது...

தாமரைக் கிழமை.

அப்படியென்றால்?

ஒரு இரவும் ஒரு பகலும் கொண்ட ஜதை ஒரு மலர். ஸோமிட்ஸியாவின் கொச்சைவழக்கில் மலர் என்றும் நகர்ப்புறப் பேச்சில் நாள் என்றும் குறிப்பிடுவார்கள். தொண்ணூற்றொரு மலர்கள் கொண்டது ஒரு மஞ்சரி. ஒரு வருஷத்துக்கு நான்கு மஞ்சரிகள். நான்காவது மஞ்சரிக்கு மாத்திரம் தொண்ணூற்றிரண்டு மலர்கள் உண்டு. வருஷத்தின் கடைசி மஞ்சரி அது. நான்காவது மஞ்சரியில் கடும் உறைபனியும், மற்ற மஞ்சரிகளில் மிதமான பனியும் குளிரும் கொண்ட எங்கள் தேசத்தின் காலப்பகுப்புமுறை ரோமானிய நாட்காட்டியிலிருந்து சற்று மாறுபட்டது. எங்களுடைய வருஷங்கள் எண்களாலானவை அல்ல; பறவைகள் மற்றும் மிருகங்களின் பெயர்கள் கொண்டவை. அவை உங்களுடையவை

*போல மாதங்களாலானவை அல்ல, பருவங்களாலானவை. வனத்தின் ஜ்வாலை என்றழைக்கப்படும் செங்கொன்றை மரங்கள் பூத்துச் சொரியும் நாளில் ஸோமிட்ஸிய வருஷம் தொடங்குகிறது. எழுபது வருஷங்கள் கொண்டது ஒரு சக்கரம். முதல் வருஷத்தின் பெயர்தான் எழுபத்தோராவது வருஷத்துக்கும்.*

*பிற நாடுகளுடன் தொடர்பு கொள்வதில் சிரமமிருக்காதா?*

*ஏன் இருக்கப் போகிறது? உண்மையில், எங்கள் பஞ்சாங்கம் உலகப் பிரசித்தி பெற்றது. வரவிருக்கும் வருடத்தின் நிகழ்வுகளை மிகமிகத்துல்லியமாகக் கணிக்கும் ஸோமிட்ஸியப் பஞ்சாங்கத்தின் வெளியீட்டுக்காக ஐரோப்பிய அகிலம் உட்பட உலகம் முழுவதுமே ஆவலுடன் காத்திருக்கும். கேளுங்கள், வரிக்குதிரை வருஷத்து - அது உங்கள் கணக்கில் 1945 - பஞ்சாங்கத்தின் கணிப்புகளில் ஒன்று சொல்கிறது... கடந்த சில வருஷங்களாக பூவுலகைக் கிளறித் தலைகீழாய்ப் புரட்டிவரும் உற்பாதம் இந்த ஆண்டில் முடிவுக்கு வரும். வானளாவ உயரும் இரண்டு நாய்க் காளான் குடைகளின் கீழ் பெருகும் நெருப்பு வெள்ளத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கருகித் தீய, சுடுகாட்டுச் சாம்பலென அமைதியும் சமாதானமும் பூமியின் தரைமீது போர்வை போலக் கவியும்...*

*அந்தப் பையனின் மனன சக்தி ஆச்சரியமூட்டுவதாக இருந்தது. மேஜர் க்ருஷ் அதை வாய்விட்டுச் சொல்லவும் செய்தார். அவன் சிரித்தான்.*

*ஒவ்வொரு நாளும் இதையேதானே செய்துகொண்டிருந்தேன். ஈனோங் இன்னும் பல மடங்கு அதிகமாக நெட்டுருப் போட்டிருக்கிறார். நிறுத்தாமல் பல நூறு நாழிகைகள் பொழிய முடியும் அவரால். ஆனால், பஞ்சாங்கத்தின் வரிகளையும், பூர்வ கிரந்தத்தின் வரிகளையும் வியாக்கியானம் செய்வதில்தான் இருவருக்கும் தகராறு வரும்...*

*பெருமூச்சு விட்டான்.*

*...நல்ல மனிதராய் இருப்பதும், சிறந்த ராஜதந்திரியாய் இருப்பதும் வேறு வேறு விஷயங்கள். ஈனோங் மிகச்சிறந்த ராஜதந்திரி. அதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் தன்னை நல்ல மனிதர் என்று சொல்லிக்கொள்வதில்தான் பிரச்னை ஆரம்பிக்கிறது. ஸோமிட்ஸிய அரண்மனைக்குள் நான் நுழைந்த நாளிலிருந்தே ஆரம்பித்து விட்டது...*

*கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான். பிறகு ஏதோ எண்ணத்தை உதறுபவன் போலத் தலையைச் சிலுப்பிக்கொண்டான்.*

*...சொல்ல வந்ததை விட்டுவிட்டு வேறெங்கோ போய்விட்டேன்...*

இவர்கள் என்னை அழைத்துச் செல்ல வந்தபோது எனக்கு இரண்டரை வயது என்று சொல்வார்கள். மிகச் சில விஷயங்கள் நினைவிருக்கின்றன.

வந்தவர்கள் என்னை அடையாளம் கண்டு, உறுதிப்படுத்திக் கொண்டு, அரண்மனைக்கு அழைத்துச் செல்வதற்கு முன் நடத்திய பரிசோதனைகள் பலவும் நினைவிருக்கிறது எனக்கு.

அந்தப் பரிசோதனைகளை விளையாட்டாய்த்தான் எதிர் கொண்டேன். உள்ளுணர்வின் சரளமான உந்துதலுக்கு ஆட்பட்டு நான் செய்த ஒவ்வொரு செயலும் தெய்வ சித்தத்தை நிகழ்த்தியதாக அவர்கள் புல்லரித்ததும் நினைவிருக்கிறது. குழந்தைமையின் தெய்வீகம்தான் அன்று செயல்பட்டிருக்க வேண்டும். எனக்குப் பிடித்தவற்றை நான் தேர்ந்தெடுத்தேன். என் இஷ்டம் போலச் செயல்பட்டேன்.

சிலகாலம் வெற்றிடமாய் இருந்த ஸோமிட்ஸிய ராஜாங்கத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரிக்க ஒரு வாகான பொம்மை கிடைத்துவிட்டது அவர்களுக்கு.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நாலாயிரம் ஆண்டுப் பழமையான ஸோமிட்ஸிய தேசத்தின் மன்னனாகவும், தலைமை ஞானியாகவும் முடிசூட்டப்பட்டேன்.

உறக்கத்தில் அமிழ்ந்திருந்த என்னைப் பல்லக்கில் சுமந்து கொண்டு போய்விட்டார்கள். மறுநாளிலிருந்து பொம்மைகளும், தின் பண்டங்களும் கேட்கும்போதெல்லாம் கிடைத்து என் பெற்றோர் பற்றிய நினைவுகளை மழுக்கவாரம்பித்தன. ஏக்கம் மிகுந்து நான் அடம் பிடிக்கும் சந்தர்ப்பங்களில் மிரட்டலைப் பதிலாகப் பெற்றேன்.

என் பெற்றோர் எங்கு சென்றார்கள் என்று இன்றுவரை தெரியாது. ஸோமிட்ஸுவுக்குத் தெரியக்கூடாது. இயற்கையான அனாதைகள் ஸோமிட்ஸுவாகக் கிடைக்கமுடியாத அளவு கலாசாரம் மாற்ற முற்றுவிட்ட காலகட்டத்தில், ரத்தபந்தங்களிடமிருந்து பிரித்து அனாதையாக்கித்தான் ஸோமிட்ஸுவை உருவாக்க வேண்டும், இல்லையா...

என் தகப்பனார் அரண்மனை ஊழியராக இருந்தார். அவருடைய அலுவல்கள் எளிமையானவை. பூர்வ கிரந்தத்தின் அடுத்த கட்டமாக ஒவ்வொரு குருவும் உருவாக்கும் அத்தியாயத்தையும் சேர்த்து, புதிய கிரந்தத்தைச் சுவடியில் சித்திர எழுத்துக்களால் எழுதுவது அவருடைய பணிகளில் ஒன்று. அதற்காகச் சுவடிகளைத் தேர்ந்து பக்குவப்படுத்தும் பரம்பரையில் வந்தவர். முந்தின ஆச்சார்யர்களின் கிரந்தங்களில் ஒரு பிரதியைப் பூச்சிகள்,

கறையான்கள் அரித்துவிடாமல் பராமரிப்பதும் இந்தப் பரம்பரையின் கடமைகளில் ஒன்று. இந்த வேலையைச் செய்வதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் மானியத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார்.

தேசம் முழுக்கப் பல்வேறு இடங்களில் இந்தப் பணியைச் செய்கிற ஊழியர்கள் குடியமர்த்தப்படுவார்கள். எல்லையில் இருந்த ஒரு கிராமத்தில் இருந்தவாறே இந்தப் பணியைச் செய்து வந்தவர் என் தகப்பனார்.

அத்தனை காலம் என் அப்பாவாக இருந்தவர் ஒரு நாழிகை நேரத்தில் என் பிரஜையாகிவிட்டார்.

என்னைப் பெற்றவர்களை நான் கடைசியாகப் பார்த்தது அன்று தான். எங்கிருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்கிற தகவல் எதுவும் இன்றுவரை தெரியாது. நான் துறவியாம். பாரபட்சமற்ற மன்னனாக விளங்க வேண்டியவனாம். ரத்த சம்பந்தங்களை முற்றாகத் துறந்துவிடவேண்டும் என்று கிரந்தம் சொல்கிறதாம். ஈனோங் சொல்கிறார்.

கிரந்தத்தின் எந்த ஒரு இடத்திலும் இது பற்றிக் குறிப்பே கிடையாது. புளுகர். கேட்டால், கிரந்தத்தின் சில பகுதிகள் என்னிடம் காட்டப் படவில்லையாம். என்னுடைய இருபதாவது பிறந்த நாளில் அரசவையைக் கூட்டி, சபையின் முன்னால் அவற்றை நான் வாசித்தறிய வேண்டும் என்கிறார். இன்னும் நான்கு வருஷங்கள் இருக்கின்றன. அதற்குள் தேவையான அளவு சுவடிகளைத் தயாரித்து விடுவார். அவ்வளவு கெட்டிக்காரர் இந்த ஈனோங்.

இவர் வியாக்கியானம் கொடுக்கக் கொடுக்க, கிரந்தத்தின் மேல் சந்தேகமும் அவமதிப்பும் அதிகரித்துக்கொண்டே போகிறது எனக்கு. பாமரர்களால் சாதாரணமாக வாசித்துப் புரிந்துகொள்ள முடியாத மொழியில் எழுதப்பட்டது என்பதால், எல்லாப் புறங்களிலும் திறந்து கிடக்கிறது அது. அவரவர் தேவைக்கேற்ப அர்த்தம் கொள்கிற மாதிரி.

ஜீ, முட்டையிலிருந்து வெளிவரும் பறவைக்குஞ்சுக்கும் மனிதக் குழந்தைக்கும் வித்தியாசம் எதுவும் இருக்கிறதா சொல்லுங்கள். அளவற்று விரிந்திருக்கும் சமூகம் என்னும் ஆகாயத்தில் பறந்து ஜீவிக்கப் பயிற்றுவிக்கிற இருபக்க இறக்கைகள் இல்லையா தந்தையும் தாயும். இயற்கையான இறக்கைகளை வெட்டிவிட்டு மூங்கில் பிளாச்சுகளைக் கோத்துக் கட்டி, பற பற என்று படுத்துகிறார் இந்தக் கிழவர்.

இல் சுங் என் பெற்றோரைத் தேடித் தருகிறேன் என்று வாக்களித்திருந்தான். மகா தீரன் அவன். அவனையும் இந்தக் கிழவர்

கொன்றுவிட்டார் என்று கேள்விப்படுகிறேன்...

சிறுவனின் உடல் ஒருமுறை விதிர்த்துக்கொண்டது. கண்களை மூடி இறுக்கமாக அமர்ந்திருந்தான். இமைகளின் கீழ் ஒரு சொட்டு கன்னத்தில் இறங்கியது.

...அம்மாவின் முகம் ஞாபகமில்லை. ஆனால், அவள் ஒரு பிம்பமாக எனக்குள் இருந்தாள். நடு வயதுப் பெண்ணின் பிம்பம். மிருதுவான, ஆதரவான அணைப்பாக. ஆட்டுப்பால் மணமாக. பச்சிலைகளை அரைத்த கைகளின் பச்சை மணமாக. தலை முடியைப் பிணைக்கக் கம்பளி நூல் கொண்டுவரும் கைகளாக. ஈரம் உலராத உடையின் கசகசப்பாக. வெள்ளிச் சலங்கை அணிந்த கால்களாக.

ஆனால், என்னுடைய வயது ஏற ஏற, அம்மாவின் பிம்பம் வயது குறைந்துகொண்டே வந்தது. ஏன் என்று விளங்கவில்லை.

அந்த பிம்பம் முற்றிலுமாக மாறிவிட்டது ஒருநாள். அந்த நாளை மறப்பதற்கில்லை. ரகசியமாக ஊற்றெடுத்து வந்த நதியொன்று எனக்குள் ஓடுகிறது என்று நான் அறிந்த நாள். அன்று முழுவதும் கேட்ட ஓசைகள் எல்லாமே ரம்மியமாய் இருந்தன. பகல்பொழு தின் வெளிச்சத்தில் ஒளிர்வு கூடியிருந்தது. காற்று வருடும்போது தேகம் சிலிர்த்தது. உடலின் ஒவ்வொரு அணுவிலும் புளகம் ஊறியது. இந்த மாற்றங்கள் அத்தனைக்கும் அடியோட்டமாக மெல்லிய துயரம் ஒன்று ரீங்கரித்தவாறிருந்தது.

அன்றுதான், நான் இந்த ஈனோங்கின் பிடியில் சிக்கியிருக்கிறேன் என்ற உண்மையும் தெரியவந்தது. எல்லாவற்றையும் உதறிவிட்டுப் பறந்துவிட வேண்டும் என்பதும் எனக்குள் உதயமானது. நீங்கள் எனக்கு உதவுவீர்களா ஜீ...

மேஜர் க்ருஷ் தர்மசங்கடமான அமைதி காத்தார்.

இப்போதைய சூழ்நிலையில் நான் வாக்கு எதுவும் அளிக்க முடியாது, பையா. நிலைமை நாளை மாறலாம். ராஜீய உறவு களுக்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் இந்திய அரசாங்கம் ஏதாவது ஒரு முடிவெடுக்கலாம். அந்த முடிவு உனக்குச் சாதகமாக இருக்கும் பட்சத்தில் கட்டாயம் நான் உனக்கு உதவுவேன்.

அளந்தும், விவேகமாகவும் பேசுகிறீர்கள், ஜீ. உங்கள் ஸ்தானத்துக் குப் பொருத்தமானவர்தான் நீங்கள். ஆனால், இந்திய அரசாங்கத் தின் முடிவு எனக்குச் சாதகமாக இருக்கும் பட்சத்தில் யாருடைய உதவியுமே எனக்குத் தேவைப்படாதே.

நீ சொல்வது சரிதான். இருந்தாலும்...

பரவாயில்லை. உங்களுடைய சூழ்நிலைக்கு நீங்கள் கைதி. என்னுடைய நிலையை விட மேம்பட்டதொன்றும் இல்லை உங்களுடையது...

கசப்பு உதிரச் சிரித்தான். கன்னத்தில் அறை வாங்கின மாதிரி உணர்ந்தார் க்ருஷ். அருகில் இருந்த சிறு மேஜையிலிருந்து நீர் நிரம்பிய குடுவையை எடுத்தான். உயரத் தூக்கி, நன்கு திறந்த வாய்க்குள் நீரைச் சரித்துக் கொண்டான். களகளவென்ற ஓசையுடன் நீர் தொண்டைக்குள் இறங்குவதையும் அவனது குரல்வளைப் புடைப்பு ஏறித்தாழ்வதையும் பார்த்துக் கொண்டிருந்தார் மேஜர் க்ருஷ். அவன் தொடர்ந்தான்.

...ஆனால், சாதகமான முடிவு எடுக்காதபடி பார்த்துக்கொள்வார் இந்த ஈனோங் கிழவர். காய்களை நகர்த்துவதில் கெட்டிக்காரர். இவரைப் பற்றி நீங்கள் இல் சுங்கிடம் கேட்க வேண்டும். கதை கதையாய்ச் சொல்வான். பாவி, இவர்தான் கொன்றுவிட்டாரே அவனை.

உள்ளிருக்கும் தகிப்பை வெளியேற்றுகிற மாதிரி ஆழ்ந்த பெருமூச்சொன்றை விடுத்தான். சற்று நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள் இருவரும். அருகிலிருந்த மரம் ஏதோவொன்றிலிருந்து, நிம்மதிகெட்ட ஆந்தையின் கதறல் விட்டுவிட்டுக் கேட்டது. மேஜர் க்ருஷ் சிலிர்த்துக் கொண்டார். எச்சிலைக் கூட்டி விழுங்கிவிட்டு, நிதானமாகச் சொன்னார்.

பாதியில் நிறுத்திவிட்டாய்.

ஆமாம். தொடர்ந்து சொல்லத்தான் வேண்டும். எனக்கும் யாரிடமாவது கொட்டிவிட்டால் தேவலை என்றுதான் இருக்கிறது. தொடர்ந்து இருபது நாட்கள் மலைகளில் திரிந்ததில் கிடைத்த தனிமை, எனக்குள் புதிய சுதந்திர உணர்வைக் கிளர்த்தியிருக்கிறது. ஸோமிட்ஸியத் தலைமைப் பீடத்தின் தளைகள் இனி என்னைக் கட்டுப்படுத்தாது. விநயமும் கம்பீரமும் தந்திரமும் மாறி மாறிப் பொலியும் சொற்கூட்டம் இனித் தேவையில்லை எனக்கு... மனத்தில் தோன்றுகிறவற்றை அதே விதமாகச் சொல்லப் போகிறேன்... திசைகள் என்னை இறுக்குகின்றன. மூச்சுத் திணறுகிறது எனக்கு.

என்ன?... என்ன சொன்னாய்?

ஆமாம், ஜீ. திசைகளும் ஆகாயமும் என் மேல் கவிழ்ந்து இறுக்குவதில் எனக்குச் சுவாசம் தப்பிவிடுமோ என்று அஞ்சுகிறேன். அரச வாழ்க்கை எனக்கு வேண்டாம். அதன் பெருமைகளுக்கும் சிறுமைகளுக்கும் நான் உகந்தவன் அல்ல. பிறவி யானையை எறும்புதின்னியாக வாழச் சொல்கிறார் இந்த ஈனோங். நான் மாட்டேன். என் வழியில் செல்லப் போகிறேன். மறுபடியும் ஸோமிட்ஸியாவுக்கும், இருளின் முடைநாற்றம்

அடர்ந்த அந்த அரண்மனைக்கும் திரும்ப மாட்டேன். வெளியேறும் வழியில் குறுக்கிடும் யாரையும் உயிர் தரிக்க விடமாட்டேன்...

அவனுடைய குரல் நடுங்கியது. உடல் நடுங்கியது. அவனது நிழலும்கூட நடுங்குவதாகப் பிரமை தட்டியது மேஜர் க்ருஷ்ஷுக்கு. சிறுவன் தனது உள்ளங்கைகள் இரண்டையும் ஒன்றோடொன்று பிணைத்து இறுக்கிக் கொண்டான். கீழுதட்டை வாய்க்குள் இழுத்துக் கடித்துக்கொண்டான், விசும்பிவிடாமல் தற்காத்துக்கொள்பவன்போல.

பதட்டமாக இருக்கிறாய். நான் வெளியில் போகட்டுமா? சற்று நேரம் கழித்துப் பேசலாம் நாம். அல்லது, பேச்சை நிறுத்திக் கொள்ளலாம் என்று நீ எண்ணினாலும் தவறில்லை...

சடாரென்று தன்னைச் சேகரித்துக்கொண்டு, மேஜரை கண்ணுக்குக் கண் பார்த்த அவனுடைய முகத்தில் வேதனை வெகுவாகக் குறைந்திருந்தது.

நீங்கள் வெளியில் போய்விட்டாலும், எனக்குள் ஆரம்பித்த சலனம் அடங்கவேண்டுமே. மழையை வரவழைக்கவும் நிறுத்தவும் வல்ல வரான வித்தகர் என்று ஆதி ஸோமிட்ஸுவை கிரந்தம் வர்ணிக் கிறது. ஆனால், நான் சாமானியன். ஸோமிட்ஸு அல்ல. மாயங் களை நிகழ்த்தத் தெரியாதவன். அதற்கான விருப்பமும் இல்லாத வன். அதனால்தான் இந்த வாழ்க்கை வேண்டாம் என்கிறேன்....

நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினான்.

...இந்திய மண்ணில், எங்கேனும் ஒரு மூலையில் ஒண்டிக்கொள்ள இடம் கிடைத்தாலும் போதும். சராசரி மனிதனின் வாழ்க்கையை ஆனந்தமாகத் தொடங்கிவிடுவேன். ஒரு விவசாயியாக, பாம்புப் பிடாரனாக, மிருக வைத்தியனாக, செருப்புத் தைப்பவனாக, தோட்டக்காரனாக என் காலத்தைக் கழிப்பேன். இந்தப் பன்னிரண்டு வருடங்களில் நான் கற்காத கலை என்று எதுவுமே மிச்சமில்லை. எனக்கே எனக்கென்று ஒரு பெண்துணை தேடிக் கொண்டு, குழந்தைகள் பெற்றுக்கொண்டு, சாயங்காலங்களில் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு... போதும். கிரந்தத்தைக் கொளுத்திவிட வேண்டியதுதான்...

குரல் மீண்டும் உடையும் பதத்துக்குக் கனிந்தது. ஈரமான குரலில் தொடர்ந்தான்.

ஜீ, சமுத்திரம் என்று ஒன்று இருக்கிறதாமே. மலைவாசியான எனக்குச் சுவடிகளிலும், கற்பனையிலும் மட்டுமே வாய்த்த அந்த அகண்டாகாரம், அலைபொங்கும் நீரால் நிரம்பியது என்று சொல்கிறார்கள். ரகசியமான அந்தரங்கத் துடிப்புகளை மேலோட்டமான சலனங்களின் வழி தெரிவித்தவண்ணமிருக்கு மாமே அது. எனக்கு சமுத்திரத்தைப் பார்க்க வேண்டும். படைப்

> பின் அற்புதங்களாக, ஸோமிட்ஸியாவின் பௌதிக எல்லைகளுக்கு வெளியில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் அனைத்தையும் பார்க்க வேண்டும். குறிப்பாக, என் கனவுகளுக்குள் ஊர்ந்து புகுந்திருக்கும் அந்தப் பெண் பிம்பத்துடன் நேரில் ஐக்கியப்பட வேண்டும். இந்தக் கிழவரின் பிடியிலிருந்து வெளியேறும்போது இதெல்லாமும் சாத்தியமாகிவிடும். சொல்லுங்கள் ஜீ, உதவுவீர்களா எனக்கு?...

விசித்தான். மெல்ல எழுந்து அருகில் சென்று, வெல்வெட் போலத் தலையில் படர்ந்திருந்த மயிர்க் குச்சங்களை வருடினார் மேஜர் க்ருஷ். அவருடைய வயிற்றில் முகத்தைப் பதித்துக்கொண்டு தேம்பினான் ஸோமிட்ஸியாவின் மன்னன். மலையின் கீழ்ப்பகுதியிலிருந்து அவலமாக மேலேறி வந்தது நரியின் ஊளை.

*

# பதினேழாம் ஈனோங்

... அம்பு தைத்த காயத்தில் ரத்தம் வழிய, பாய்ச்சல் தூரத்தில் நிற்கிறது அந்தப் புலி ...

மேஜர் க்ருஷ் கிழவரை நெருங்கினார். இருளைத் துளைப்பது போன்ற கூர்மையான பார்வை, நெரித்த புருவங்கள், இறுகிய தாடை என, நெருங்க ஆவலூட்டாத விதத்தில் அமர்ந்திருந்தார் கிழவர். சீரான இடைவெளியில் சாராய மிடறுகள் உள்ளிறங்கின. தோள்கள் சரிந்து, இடதுகை தொய்ந்து, கால்கள் துவண்டு, திடீரென்று அனாதையாகி விட்டவர் போலப் பரிதாபமாகத் தென்பட்ட ஈனோங்கின் அருகிலிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்தார் மேஜர் க்ருஷ். கிழவரே பேசத் தொடங்கினார்.

*மேன்மை தங்கிய மன்னர், என் மீது ஏகப்பட்ட குற்றங்கள் சுமத்தியிருப்பாரே.*

*கிழவரின் இந்தி உச்சரிப்பு அந்தப் பையனுடையதை விடவும் இலக்கண சுத்தமாக இருந்தது. மேஜர் க்ருஷ் சும்மாயிருந்தார்.*

*...வயதுதான் காரணம். அந்த வயதைத் தாண்டி வந்தவன்தான் நானும். முடிவெடுக்கும் வலு கூடியிராத, ஆனால் முடிவெடுத்தே தீர வேண்டிய வயது அது. உங்கள் முன் காத்திருக்கிற பட்டியல் மிகவும் எளிமையானது. இரண்டே ஷரத்துகள்தாம். உங்கள் தேசத்தின் பௌதிக வெளியையும் ஞான வெளியையும் ஆள்கிற பொறுப்பும் பெருமையும் முக்கியமா, அல்லது உங்கள் சரீரத்தின் துடிப்புகளுக்கும் அந்தத் துடிப்புகள் விளைவிக்கும் மனச் சலனங்களுக்கும் அடிமைப்பட்டுக் கிடப்பது சௌகரியமா?*

*முந்தின ஸோமிட்ஸுவுக்கும் இதே சிக்கல்தான். அவரால் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாமல் போனது. இருபத்தாறாம் பிராயத்துக்குள் மேக நோய் கண்டுவிட்டது. சாதாரண ஈனோங்;*

நான் என்ன செய்து விட முடியும். மன்னரின் ஆணை, தினத்துக்கு ஒரு பெண் கொண்டு வருவது என்றால், தேசம் முழுவதையும் வேசிமடமாக்குவதுதானே என் கடமை. அதையும் செய்து கொடுத்தேன். கடைசியில், ஸோமிட்ஸியாவுக்குப் பட்டத்து அரசி ஒருத்தியை நியமிப்பேன்; கிரந்தத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்று ஆரம்பித்தார். வேசி ஒருத்தியிடம் காதல் வெறியில் கொடுத்த வாக்கால் உண்டான பிரச்னை அது.

இருபது வயதுவரை நான் பொத்திப் பொத்திப் பாதுகாத்த சிறுவன் அவன். ஐயா, நீங்கள் ஒரு புனுகுப் பூனை வளர்க்கிறீர்கள். எதற்காக? அதன் மலத்தின் சுகந்தத்துக்காக. பூனைக்குத்தான் அது மலம். உங்களுக்கு நறுமணப் பொருள். இந்த உண்மை தெரிந்ததனால்தானே வளர்க்கிறீர்கள்? அது வளர்ந்து வருகிறது. நீங்கள் காத்திருக்கிறீர்கள். வேளாவேளைக்கு உணவு. தண்ணீர். காற்றோட்டமான கூண்டு. சகல வசதிகளும் செய்து தருகிறீர்கள்.

பூனை என்ன செய்கிறது, புனுகுக்குப் பதிலாக நெருப்பைக் கழிகிறது. நெருப்பின் வலிமை உங்களுக்குத் தெரியாதா என்ன? அது கூண்டை எரிக்கும். உங்கள் கூரையை எரிக்கும். உங்கள் ஊரை எரிக்கும். உங்கள் தேசத்தையே எரிக்கும்.

புனுகுப் பூனை வளர்த்து ஏமாந்தவன் நான்.

அந்த வேசியைப் பூவுலகிலிருந்தே அகற்ற வேண்டியதாகிவிட்டது. மிகவும் வெளிப்படையாக ரகளை செய்யத் தொடங்கிவிட்ட ஸோமிட்ஸாவுக்கும் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியதாகிவிட்டது. மிகுந்த மனச் சஞ்சலத்தோடுதான் அதைச் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், வேறு வழி இல்லை. தனி நபர்களை விடவும் தேசம் முக்கியம். தேசத்தை விடவும் கிரந்தம் பவித்திரமானது.

ஸோமிட்ஸிய மருத்துவ மேதை கிஸீயாவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? உங்கள் தன்வந்திரிக்குச் சமமானவர் அவர். ஸோமிட்ஸிய வனப்பகுதியில் கிடைக்கும் ஒவ்வொரு பச்சிலையையும், ஒவ்வொரு மூலிகையையும் தானே உட்கொண்டு பார்த்து வியாதிகளுக்கான முறிவுகளைக் கண்டறிந்த தியாக சீலர். ஜனங்களுக்கு நல்லது செய்வதென்றால் சாதாரண விஷயமில்லை. தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்யச் சித்தமாய் இருக்க வேண்டும். பொருளைக் கொடுப்பது சுலபம். அது உங்கள் சரீரத்தின் அங்கமல்ல.

ஜனங்களின் ஆரோக்கியத்தைப் பெருக்குவதற்காகத் தன் உடலையே பணயம் வைத்தவர் கிஸீயா. அவர் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா? உடலைக் காப்பாற்ற விரலைத் தரிப்பதால் தவறில்லை.

இப்போது, முந்தைய விரலின் பாதையில் போவேன் என்கிறது இந்தச் சுண்டுவிரல்... நான் தனி ஒருத்தனாக இருந்து என்னதான் செய்வேன் சொல்லுங்கள்?.. இந்தப் பீடத்தைப் பீடித்த பித்து அது. கடுமையான பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்கச் சொல்கிற கிரந்தங்கள்; அவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாத பலவீன மனிதர்கள். பாருங்களேன், இவர் இருபத்தாறாவது ஸோமிட்ஸு. நான் பதினேழாவது ஈனோங். என்ன தெரிகிறது. மன்னர்களை விடவும் ஈனோங்குகள் அதிக ஆயுளுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தானே. பீடத்தின் கோளாறு.

ஐயா, ஸோமிட்ஸிய ராஜாங்கம் தோன்றியதே ஒரு பெரும் கதை. ஒரு நாளில், ஒரு இரவில் தோன்றி விடவில்லை அது. பூர்வ கிரந்தத்தின் பல்லாயிரம் பக்கங்களில் ஆகாயம் போல விரிந்து கிடக்கும் வரலாறு அது. ஆயிரத்து முன்னூற்றுச் சொச்சம் வருஷங்களுக்கு முன்னால் வாழ்ந்து மறைந்த மஹாகவி கோமிங் டோவின் பொன் எழுத்துக்களில் பொலிவது.

கோமிங் டோ அதை எழுதிவந்த நாட்களில், மசி தீர்ந்துவிட்டதாம் ஒருநாள். தன்னுடைய மனைவியின் கையை மணிக்கட்டருகில் வெட்டி, பீறிய ரத்தத்தால் சில பகுதிகளை எழுதியதாக ஒரு தொல் கதை உண்டு. எதற்குச் சொல்கிறேன், ஒரு சாம்ராஜ்யம் உருவாவது அத்தனை சாமான்யமானதல்ல. ஆனால், அழிப்பது வெகு சுலபம். ஒரு நாழிகையில் செய்து முடித்துவிடலாம். போன் ப்போவான காங் ரிம்ப்போச்சேவும் மிலரேப்பாவும் போட்டி போட்டுக் கட்டி உருவாக்கின திபெத்தின் நிலையைப் பார்த்தீர்களல்லவா? சீனக் கிடுக்கியில் வாலைக் கொடுத்த குரங்குபோலத் தவிக்கிறது...

சந்நதம் வந்தவர் போல, கிரந்தத்தின் பகுதிகளை ஒப்பிக்கத் தொடங்கினார் கிழவர். வறண்ட குரலில், தமக்குத் தாமே தைரியம் சொல்லிக்கொள்கிறவர் மாதிரி, மழைக்கால இரவின் ஈர அமைதியைக் கீறும் தவளைச் சப்தம்போல, பத்தி பத்தியாகப் போய்க் கொண்டிருந்தார்.

சுவாசப் பயிற்சி செய்வதற்கான பகுதிபோல இருந்தது அது. ஆழ்ந்து மூச்சிழுத்து, இடையில் அறுபடாதவண்ணம் ஓடிய பத்திகள். கடைசிச் சொல்லை அவர் விடுக்கும்போது, ஓசை வெகுவாகக் குறைந்திருக்கும். ஸோமிட்ஸிய மொழியின் உச்சாடனத்தில் மெல்லினத் தாக்கமும், ஸ ஒலியின் செல்வாக்கும் அழுத்தமாய்த் தெரிந்தன.

ஒருவேளை, தன்னுடன் பேசப்பிடிக்காமல்தான் பாராயணம் செய்கிறாரோ என்று மேஜர் க்ருஷ் சந்தேகம் கொள்ளத் தொடங்கிய தருணத்தில், சடாரென்று நிறுத்தினார் ஈனோங்.

...மேன்மை தங்கிய மன்னருக்கு இளம் வயதுதானே. பாலகர் தானே அவர். அவரை இந்தக் கிழவன் வதைக்கிறானே என்று உங்களுக்குத் தோன்றலாம்.

ஒரு சிறு குழந்தையைப் பெற்றோரிடமிருந்து பிரித்துக் கொண்டு வருவது எளிதான செயலா? நான் ஒன்றும் கிராதகனல்ல. மிகுந்த மனவருத்தத்தோடுதான் அந்தப் பணியைச் செய்து முடித்தேன். என்ன செய்வது. கிரந்தம் சொல்கிறபடிதானே நடந்தாக வேண்டும்? எல்லாப் பரிசோதனையிலும் தேறிவிட்டவரை, ஆதி ஸோமிட்ஸுவின் மறு அவதாரத்தைப் பீடத்தில் அமர்த்துவது என் கடமையல்லவா?

தன்னுடைய பெற்றோரை இனிப் பார்க்க முடியாது என்றாகிவிட்ட குழந்தை அது. தேசத்தின் ஒட்டு மொத்தப் பிரஜைகளையும் ரத்த உறவுகளாகப் பார்க்கவேண்டிய ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்துவிட்ட குழந்தை. அந்த ஸ்தானத்தின் மகத்துவம் தெரியாத வயது.

ஏன், அந்தத் தகப்பனுக்கே தெரியவில்லையே. தன்னுடைய பீஜத்தின் வழியாக ஸோமிட்ஸுவின் பிறவிக் கால்வாய் ஓடுகிறது என்பது எவ்வளவு பெரிய பாக்கியம் என்று புரியவில்லையே; குழந்தையைத் தர மாட்டேன் என்று அடம் பிடித்த மனைவியைச் சமாளிக்கத் தெரியவில்லையே. அவளுக்கு, ஸோமிட்ஸு சில காலம் தங்கியிருக்க வயிறு கொடுத்த பெருமை முக்கியமில்லை யாம். என் குழந்தை விவசாயியாக வளரட்டும், அவன் என்னோடு இருந்தால் போதும் என்றாள் அவள்.

அந்தத் தகப்பனைக் கரைக்கப் பெரும் பாடு பட்டேன். அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தேன். கருவூலத்திலிருந்து வருஷம் தோறும் கணிசமான தொகை அவர்களுக்குச் செல்வதற்கு ஏற் பாடாகியிருக்கிறது. ஆனால், என்ன செய்து என்ன, இந்தக் குழந்தையைச் சமாதானம் செய்ய முடியவில்லையே. தாயைப் போல உணர்ச்சி மிகுந்தவராக இருக்கிறார். மன்னர் அப்படியிருக் கலாமா. ஜனங்கள் என்ன ஆவார்கள்? தலை போகும் திசையில் தான் வாலும் போகும் இல்லையா?

நாம் எல்லாருமே பால்யத்தைக் கடந்து வந்தவர்கள்தாமே. மேன்மை தங்கிய மன்னர் தற்போது கடந்துகொண்டிருப்பது சலனங்களும் சஞ்சலங்களும் நிரம்பிய பிராயம். மேன்மை தங்கிய மன்னருடைய விழிகளின் வெண்ணிறம் மங்கவில்லை பார்த்தீர் களா? லௌகீகமான கவலைகள் சூழும்போதுதான் கண்களில் செவ்வரியோடும் என்பது கிஸீயாவின் வாக்கு.

தவிர, மேன்மை தங்கிய மன்னரின் பிரச்சினைகள் லௌகீகமான வையோ, உள்ளுணர்வு சார்ந்தவையோ அல்ல. வெறும் சகவாசக்

*கோளாறு. உள்ளூர்ப் பிசாசு ஒன்று இருந்தது, இல் சுங் என்று பெயர். உகந்த ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தாயிற்று அதற்கு. கோமிங் போவின் வாக்கு சொல்கிறது:*

*பூமியில் இருந்து பாவம் செய்கிறவனைக் காப்பாற்ற ஒரே வழிதான் உண்டு. அவனைப் பூமியை விட்டு வெளியேற்றுவது.*

*கோமிங் போ மேலும் எழுதுகிறார்:*

*பிரபஞ்சத்தின் உடம்பிலிருந்து ஒரு மணல் துகளை அகற்றிவிட்டாலும் போதும், பிறகு அது பழைய பிரபஞ்சமில்லை.*

*இன்னும் மிலேச்சப் பிசாசு ஒன்று பாக்கியிருக்கிறது. எங்களுடன் வந்திருக்கிறதே, அதைத்தான் சொல்கிறேன். நாமெல்லாம் தேசத்தைத் தாய் என்றுதானே சொல்வோம்? பெற்றெடுத்த தேசத்துடன் தொப்புள் கொடி உறவு இருக்கிறபடியால் அப்படிச் சொல்கிறோம். அந்த மிலேச்சன், தந்தை நாடென்றுதான் சொல்வான். அறிவு விருத்தியாகி, சுயமான சம்பாத்தியம் அமைந்த பிறகு தந்தையின் நிழலில் இருப்பானா, எந்த மகனாவது?...*

ஈனோங் மௌனமானார். அவருடைய சுவாசம் ஏறித் தாழும் ஓசை, பேரிரைச்சலாய்க் கேட்டது. வலது கை விரல்களை நீட்டியும் மடக்கியும் ஏதோ எண்ணிக்கை கூட்டினார். ஆமாம் என்பது மாதிரியும் இல்லை என்பது மாதிரியும் ஆகட்டும் என்கிற மாதிரியும் பலவிதங்களில் ஆடிக்கொண்டிருந்தது அவரது தலை. வயது எண்பத்தேழு என்கிறார். தோலில் சுருக்கங்களில்லை. தசைகளில் தளர்வு இல்லை. பற்கள் உதிரவில்லை. சொல் பிறழவில்லை. முதுகின்மீது பின்னலாய்க் கிடக்கும் தலைமுடியில் நரையில்லை. அதன் அடர்த்தியும் குறையவில்லை. தாந்திரீகம் பயின்ற சூனியக்காரன் முன்னால் உட்கார்ந்திருக்கிறோமோ என்று லேசான அச்சம் உண்டானது மேஜர் க்ருஷ்ஷின் மனத்தில்.

தேவையில்லாத வேலை பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவர்கள் ஒவ்வொருவருடனும் உரையாடும்படி ஆணையிடப்படவில்லை எனக்கு. கண்காணிக்கவும், தேவையான சௌகரியங்கள் செய்து கொடுக்கவும்தான் உத்தரவு. அது சரி, சௌகரியம் என்பது உடலுக்கானது மட்டும்தானா? என்னிடம் பேசும் ஒவ்வொருவருமே கொஞ்சமாவது ஆசுவாசம் அடைகிறார்கள்தானே?

தன்னுடைய செயல் சரிதான் என்பதுபோல ஆமோதிப்பாய்த் தலையசைத்துக்கெண்டார் மேஜர் க்ருஷ். ஈனோங் திடீரென்று தொடங்கினார்.

...உங்களுடைய மேலதிகாரிகளுடன் பிரச்னை வந்தால் என்ன செய்வீர்கள். சட்டவிதிகளடங்கிய புத்தகத்தை நாடுவீர்கள் இல்லையா? அதையேதான் நான் செய்கிறேன். மேன்மை தங்கிய மன்னரின் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்ய கிரந்தம் இடமளிக் கிறதா என்று பார்ப்பேன். அவருடைய இப்போதைய ஆசையைப் பூர்த்தி செய்வதென்றால், இன்னும் குறைந்தது நாலு வருஷங்கள் போக வேண்டும்.

ஸோமிட்ஸியாவின் ஞானகுருவாகவும் மன்னராகவும் இருப்பது சாமான்யமான விஷயமல்ல. கேவலம், ஈனோங்காக இருக்கும் நானே எத்தனை தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது? என் வயதையொத்தவர்கள் பேரக் குழந்தைகளைக் கொஞ்சும் முன்னிரவுகளில், கிரந்தத்தின் ஒவ்வொரு வாசகத்தையும் வாசித் துணர்ந்து கொண்டிருக்கிறேன் - ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும் புதிது புதிதாக அர்த்தங்கள் உற்பத்தியாகும் கிரந்தத்தை. அல்லது, ஒற்றர்கள் கொண்டுவரும் தகவல்களைச் சீர்பிரித்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி யோசித்துக்கொண்டிருக் கிறேன். நிம்மதியான உறக்கம் என்பது எனக்கு எப்போதுமே வாய்த்ததில்லை. ஈனோங் என்னும் பதவி அப்படிப்பட்டது. உங்களிடம் இருந்த ஒரே அம்பைச் செலுத்திவிட்டீர்கள். அம்பு தைத்த காயத்தில் ரத்தம் வழிய, பாய்ச்சல் தூரத்தில் நிற்கிறது அந்தப் புலி. எதிரில் வெறுங்கையுடன் நீங்கள். கொஞ்சமாவது ஆசுவாசம் கொள்ள முடியுமா சொல்லுங்கள்.

ஸோமிட்ஸா என்னும் ஸ்தானம், இன்னும் உக்கிரமானது. முழுக்க ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்று; அல்லது மகா மோசமாகச் சபிக்கப் பட்டது. எதுவாயிருந்தாலும், முழங்கால் மாதிரியானது அது. முன்புறம் மடக்க முடியாது...

தொடர்ந்து சுலோகங்கள் பாயத் தொடங்கின. பித்தளைத் தகடு வேய்ந்த கூரையில் ஆலங்கட்டி மழை பொழிவது போல மெல்லினச் சொற்களின் ரீங்கரிப்பு மிகுந்த சப்தத்தில் ஆவேசமாய்ப் பாய்ந்தது கிழவரின் குரல். ஓசையின் ஏற்றத்தாழ்வுகளுக்கேற்ப கிழவரின் முகபாவமும் விதவிதமாய் மாறிக்கொண்டு வந்தது.

பையன் சொன்னது சரிதான். மனப்பாடம் செய்துதான் ஒப்பிக் கிறார். வயோதிகமும் அதன் பலனான மந்தத்தன்மையும் அவர் கால் களில் விலங்கிட்டிருக்கிறது. ஒரே இடத்தைத்தான் சுற்றிச் சுற்றி வர முடியும் அவரால். ஆனால், வெகுதூரம் பிரயாணம் செய்கிறமாதிரி பாவனை செய்கிறார். இவரோடு இருப்பதைப் பையன் வெறுப்பதில் நியாயம் இருக்கிறது. மேஜர் க்ருஷ் தொண்டையைச் செருமிக் கொண்டார். குறிப்புணர்ந்த ஈனோங், தன் உச்சாடனத்தில் இடைவெளி விட்டார்.

*...அது சரி, இந்தப் பையனுக்கு இதிலெல்லாம் ஆர்வமில்லை போலத் தெரிகிறதே.*

*பையன் என்று சொன்னதைத் தாங்கள் திரும்பப்பெற்றாக வேண்டும், ஐயா. ஸோமிட்ஸிய அரசியல் சாசன விதி அறுநூற்று முப்பத்தெட்டு இதை ராஜத்துரோகக் குற்றம் என்கிறது. சிரசாக்கினை கிடைக்கும்...*

சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு சொன்னார் மேஜர் க்ருஷ்.

*தவறுதான். மன்னித்துவிடுங்கள். மன்னருக்கு...*

*மேன்மை தங்கிய மன்னர்...*

*ம். மேன்மை தங்கிய மன்னர்தான் அரசாள விருப்பம் இல்லை என்கிறாரே. அவரை அவர் போக்கில் விட்டுவிடலாமே.*

ஈனோங் தோள்களைக் குலுக்கிக்கொண்டார். கொஞ்சநேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார். ஒரு முடிவுக்கு வந்தவர் போலச் சடாரென்று எழுந்தார்.

*ஸோமிட்ஸியாவின் ராஜாங்கக் காரியங்களில் அந்நியர் பிரவேசிப்பதை அனுமதிக்க முடியாது.*

குரல் வன்மமாகக் கனத்திருந்தது. எட்டி நடந்தார்.

*

# ஹான்ஸ் வெய்ஸ்முல்லர்

... இப்போது வரையிலான எல்லாத் தருணங்களையும் இழந்து இழந்துதான் இந்தத் தருணத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறேன் ...

*... ஸர், நான் ஒரு சுருட்டுப் புகைத்தால் ஆட்சேபிக்க மாட்டீர்களே?*

மேஜர் க்ருஷ் தலையசைத்தார். சுருட்டுப்பற்ற வைக்க அவனுக்கு நாலைந்து தீக்குச்சிகள் செலவாயின. கைகளில் இருந்த லேசான நடுக்கம் வெளிப்படையாய்த் தெரிந்தது.

*மிஸ்டர். ஹான்ஸ், இது அதிகாரபூர்வ விசாரணை அல்ல; நட்பு ரீதியான உரையாடல். அவ்வளவுதான். என்னிடம் நீங்கள் உதிர்க்கிற எந்த ஒரு சொல்லும் இந்திய அரசாங்கத்திடம் என் வழியாகப் போய்ச் சேராது என்று நம்பலாம்.*

அவன் ஒன்றும் பேசவில்லை. கன்னங்கள் குழிய, புகையை ஆழ இழுத்தான். நடந்தவாறே பக்கவாட்டில் வெய்ஸ்முல்லரைக் கூர்ந்து பார்த்தார் மேஜர் க்ருஷ். தன்னுடைய வயது அறுபது என்கிறான். பார்வைக்கு நம்ப முடியவில்லை. மிகவும் திடமான உடற்கட்டு. சட்டைக்குள் மதர்த்துத் திமிறித் தெரியும் புஜங்கள். தட்டையாய் ஒட்டிய அடிவயிறு. விரிந்த தோள்கள். முகச் சருமத்தில் சுருக்கங்கள் இல்லை... அந்தச் சிறுவனுக்கு இவனிடம் அசாத்தியப் பிரியம் இருக்கிறதுபோல. சந்துருவுக்கு என்னிடம் இருப்பது மாதிரி. ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்வதிலேயே தெரிகிறது.

இருளைத் துளைப்பதுபோலப் பார்த்தவாறு மௌனமாக நடந்து கொண்டிருந்தவன், சடாரென்று நின்றான். மெல்லிய குரலில் கேட்டான்.

*எதற்காக என்னைத் தனியாக அழைத்து விசாரிக்கிறீர்கள்?*

*நான்தான் சொன்னேனே. விசாரிப்பதற்காக அழைக்கவில்லை. உங்களோடு வந்திருப்பவர்களுடன் உரையாட மொழி தடையாக இருக்கிறது. ஆங்கிலத்திலும் என் தாய்மொழியிலும் உரையாடும் அளவு இயல்பாக அவர்களுடன் என்னால் பேச முடியவில்லை.*

தொடர்ந்து பேசுவதற்கு அலுப்பாக இருந்தது. நீங்கள் ஐரோப்பியர் என்பதால், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசி விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான். உங்களுக்கு விருப்பமில்லாத பட்சத்தில், ஒரு சொல்லும் பகிராமலே முகாமுக்கு நாம் திரும்பிச் செல்லலாம்.

ஸர், என்னுடைய தயக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட வேண்டாம். இத்தனை வருடங்கள் கழித்து, ஒரு ராணுவ முகாமில் இருக்க நேர்ந்திருக்கிறது எனக்கு. வாலிப நினைவுகள் என்னைப் பீடித்திருக்கின்றன ...

அவன் மீண்டும் அமைதியானான். மரங்களின் கரும்பச்சை இருளுக்குள் உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

... என் வாழ்வின் அந்திம காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறேன். இதுவரை காப்பாற்றி வந்த ரகசியங்களெல்லாம் அவற்றின் தீவிரத் தன்மை வெளிறி அபத்தமாகத் தெரிகின்றன... இதோ, உங்களை ஏன் நம்பக்கூடாது என்று தோன்றுகிறது. இந்தக் கணத்தில், இந்த இருளில், இந்த நிசப்தத்தில், என் ரகசியங்களைக் காலி செய்து விட்டு கனமற்ற வஸ்துவாகிவிடவேண்டும் என்று ஆவல் மீறுகிறது. தவிர, உங்கள் கண்கள்... அவற்றில் என் நம்பிக்கையைக் கோரும் ஏதோவொன்று இருக்கிறது. ஆமாம். நிச்சயமாக இருக்கிறது. என் வாழ்நாளில் நான் கடந்துவந்த எல்லாவற்றையும் உங்களுக்குக் காட்சிகளாகத் தந்துவிட விரும்புகிறேன், மேஜர். உங்களை என் நண்பர் என்றே கருதுகிறேன்.

இறுகப் பற்றிக் கையைக் குலுக்கினான். வியர்வை பிசுபிசுத்த கைக்குள் சிக்கிய தன்னுடைய கையிலும் மெலிதான நடுக்கம் தொற்றுவதை உணர்ந்தார் மேஜர் க்ருஷ்.

பறவையொன்றின் கூர்மையான குரல், இரவைத் துளைக்கிறது... யூரேஷியன் ஸ்கைலார்க்... என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டார் மேஜர் க்ருஷ். சுருட்டுப் புகை மணக்கும் சொற்கள் உதிர, ஹான்ஸ் வெய்ஸ்முல்லர் பேசத் தொடங்கினான்.

...நிலவறைக்குள் வெடித்த துப்பாக்கிக் குண்டின் ஓசை பெர்லின் நகரத் தெருக்களிலும், ஜெர்மனியின் நாடுநகரங்களிலும் பரவி, எங்கள் காதுகளுக்கு வந்துசேருவதற்கு வெகுகாலம் முன்னமே, நாங்கள் முடிவெடுக்க வேண்டியதாகிவிட்டது. ஆனால், என் பொறுப்பில் இருந்த தளவாடங்களையும், வீரர்களையும் என்ன செய்வதென்று தெளிவாகப் புரியவில்லை. ஜெர்மானிய ராணுவம் முழுக்கவே பரவிவிட்ட பீதி, தொற்று வியாதி போல எங்கள்

*மனங்களில் நிரவியிருந்தது...*

*என்ன...? என்ன சொல்கிறீர்கள்?*

அவசரமான குரலில் கேட்டார் மேஜர் க்ருஷ். தனக்குள் ரத்த அழுத்தம் சடாரென்று எகிறுவதை உணர்ந்தார். உடலுக்குள் வெதுவெதுப்புப் பரவியது.

*ஆமாம், மேஜர். ஜெர்மானிய ராணுவத்தில் இடைநிலை அதிகாரியாக இருந்தவன்தான் நான். இரண்டாவது மகாயுத்தத்தில் ருஷ்ய முனையில் பணிபுரிந்தேன்...*

தனக்குள் மேலிடும் தர்மசங்கட உணர்வையும், பதட்டத்தையும் சமனப்படுத்திக்கொள்ளப் பிரயாசைப்பட்டார் மேஜர் க்ருஷ். அந்த இடத்தில் வெளிச்சம் இல்லாதிருப்பதை மிகவும் ஆறுதலாக உணர்ந்தார். உலக அரசியலின் பார்வையில், தேடப்படும் குற்றவாளி ஒருவனுடன் நடந்துகொண்டிருக்கிறோமோ என்ற சந்தேகம் அழுத்தமாகத் தொற்றியது. குற்றவாளிக்கு உடன்படுவதும் குற்றம்தான். ஆனால், ஆனால்... அவசரப்படாதே மனமே, என்று சொல்லிக்கொண்டார்.

*...ஸர். உங்கள் நிலையை நான் உணர்கிறேன். உங்கள் சிந்தனை ஓடக்கூடிய திசையை என்னால் யூகிக்க முடிகிறது. நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் எனக்கு சம்மதமே. ஆனால், இப்போது திறந்துவிட்ட மதகை இனி அடைப்பதற்கில்லை. முழுமையான அர்ப்பண உணர்வுடன்தான் பேசத் தொடங்கினேன். அந்த உணர்வு சற்றும் குறையாமலே உங்கள் மௌனத்தை எதிர்கொள்கிறேன். ஒன்றை மட்டும் முதலிலேயே உறுதியாய்க் கூறிவிட வேண்டும். உங்களைப் போன்று இருந்தவன்தான் நானும். பொறுப்புள்ள, தலைமையகக் கட்டளையின்படி போர்முனைக்குச் சென்ற, தந்தை நாட்டின் சேவையில் எதிரிப் படையைச் சேதப்படுத்த முனைந்த, ராணுவ அதிகாரியாய் இருந்தேனேயொழிய, வதைமுகாமின் அதிகாரியாக இருந்தவனல்ல. ஆனால், வரலாறு இந்தமாதிரியான நுட்பங்களைக் கணக்கிலெடுக்குமா, அல்லது என் மீதும் கறையைப் பூசிக் காறி உமிழுமா என்று தெரியவில்லை. உண்மையில், வதைமுகாம்கள் பற்றி வெளியான தகவல்கள் எல்லாமே மனிதகுலத்தின் துர்க்கனவுகள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயமும்... நான் தொடர்ந்து பேசலாமா?*

தன்னை முழுக்கச் சேகரித்துக் கொண்டு விட்ட மேஜர் க்ருஷ், நிதானமாகச் சொன்னார்.

*தொடருங்கள்.*

*...அழிவுப்பாதையில் ஜெர்மானியப் பிரஜைகளைப் படு*

உற்சாகமாக நடத்திச் சென்ற ஃப்யூரருக்கு ஒரே ஒரு துப்பாக்கிக் குண்டு போதுமானதாய் இருந்தது. என்னைப் போன்று, அவருடைய ராணுவத்தை நடத்திச் சென்றவர்களுக்கு, எங்களுக்காகக் காத்திருந்த உலகம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட புதிர் நிலமாக மாறி விட்டிருந்தது.

பின்வாங்கும்படி எங்களுக்கு உத்தரவு வந்தது. எளிதாகப் பின்வாங்கிவிட முடியாத அளவு தூரம் ருஷ்யாவுக்குள் சென்று விட்டிருந்தது எங்கள் அணி. நாங்கள் பின்வாங்கிச் செல்லும் வழியில் கட்டாயம் ருஷ்யத் துருப்புகளிடம் சிக்கிக்கொள்வோம் என்று ஃபிஷ்சன்ஹாம்மர் அபிப்பிராயப்பட்டான். பிற்பாடு, அவன் சிக்கியதையும், சுட்டுக் கொல்லப்பட்டதையும் கேள்விப் பட்டபோது அவனுடைய சந்தேகமும் அச்சமும் என் ஞாபகத்தில் வந்தன.

உடனடியாகச் சுட்டுக் கொன்றுவிட்டார்களென்றால், பரவாயில்லை. ஆனால், மாட்டார்கள். தங்கள் தரப்பு பதிலை அவர்கள் வழங்க வேண்டாமா? எங்களிடம் பிடிபட்ட துருப்புகளை நாங்கள் நடத்திய விதம் அந்த அளவு பிரசித்தி பெற்ற ஒன்று. எதிரிகளின் மனங்களில் அச்சம் ஊறும்படியாக நாங்களே அதை வதந்திகளின் ரூபத்தில் பிரச்சாரம் செய்திருந்தோம். ஜெர்மானியச் சித்ரவதை முறைகளைப் பற்றித்தான் உங்களுக்கே தெரிந்திருக்குமே...

மேஜர் க்ருஷ் தலையசைத்தார். நானாவதி சொன்னது நினைவு வந்தது.

க்ருஷ், கால்கள் இரண்டையும் இழந்து ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடக்கும்போது தோன்றுகிறது, மரணம் அற்புதமானதாகத்தான் இருக்க வேண்டும். அதற்குப் பின்னர் என்ன நேரும் என்று தெரியாததால்தானே, எல்லாருக்கும் மரணம் பற்றிப் பயம் இருக்கிறது? இப்போது படும் வாதையை விடவும் மரணம் மேலானதாகத்தான் இருக்க வேண்டும் க்ருஷ்.

சிகரெட் பற்றவைத்துக்கொண்டார். இப்போது தன்னுடைய கைகள் லேசாக நடுங்குகிற மாதிரிப் பிரமை தட்டியது. ஹான்ஸ் தொடர்ந்தான்.

...கூட்டாகப் பின்வாங்குவதற்குப் பதிலாக அணியைக் கலைத்து விடலாமா என்று விவாதித்தோம். தலைமையகக் கட்டளையை மீறலாமா என்று சிலர் ஆட்சேபித்தார்கள். தனித்தனியாகப் பிரிந்து சென்று சாவதற்குப் பதில் கூட்டாகச் செத்துப் போகலாமே என்றார்கள். வேறு சிலர், தலைமை என்ற ஒன்றே செயல்படாத சந்தர்ப்பத்தில், கட்டுப்படுவது என்பதும் கிடையாது என்று சொன்

னார்கள். தனியாகச் சென்று சாவதையே விரும்புகிறேன் என்று நான் அறிவித்தேன்.

ஆனால், எல்லோர் மனத்தையுமே மரணம் என்ற ஒற்றைச் சொல் ஆக்கிரமித்திருந்ததை இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாய் இருக்கிறது.

ஸர், நதியோட்டத்துடன் செல்லும்வரை, பயணம் சுகமாக இருக்கும். மிதக்கக் கூடச் செய்யலாம். நதியை எதிர்த்துச் செல்ல நேரும்போது வாழ்க்கையின் அர்த்தம் முழுக்க வேறாகத் தெரிய வருகிறது. அதிகாரத்தை இழந்த மறுகணமே, உங்கள் காலடியில் சாஸ்வதம்போலத் தாங்கிய தரை கொழகொழத்துவிடும். உங்கள் புலன்கள் அசாத்தியக் கூர்மையுற்று, உங்கள் சிந்தனையின், நம்பிக்கைகளின் கதி முழுக்க முழுக்க மாறிவிடுகிறது.

அனைவரின் முகங்களிலும் தெரிந்த தீவிரமும், பயமும், மிகத் தவறான சமயத்தில் வாழ்க்கை பற்றிய மறுபரிசீலனையைத் தொடங்கியிருக்கிறார்கள் அவர்கள் என்று தெரிவித்தன.

இறுதியில், ஜெர்மானியப் பிரஜைகளிடமிருந்து பல காலம் ஃப்யூரர் பறித்துவைத்திருந்த ஜனநாயகத்தை எங்கள் கூடாரத்துக்குள் நாங்கள் திரும்ப அமல்படுத்தினோம். அணியாகச் செல்பவர்கள் செல்லலாம்; தனியாகச் செல்ல விரும்புகிறவர்கள் அவரவர் வழியில் செல்லலாம்; ஒருவரைப் பற்றிய தகவல்களை மற்றவர் ஒருபோதும் வெளிப்படுத்துவதில்லை என்று பிரமாணம் எடுத்துக் கொண்டு கலைந்தோம். அவரவர் செல்ல வேண்டிய திசைகளைச் சீட்டுக் குலுக்கிப் போட்டு முடிவெடுத்தோம்.

அணியாகச் சென்றவர்கள், முட்டாள்தனமாக ஒரு ட்ரக்கில் ஏறிக் கிளம்பினார்கள். குறுகிய காலத்தில் அதிக தூரத்தைக் கடக்கிறார் களாம். வெகுசீக்கிரமே, உச்சபட்ச தூரத்தைக் கடந்துவிட்டார்கள்...

அவர்கள் எங்கள் பார்வையிலிருந்து நீங்கிய கொஞ்ச நேரத்தில், தலைக்கு மேலே ஒரு ருஷ்ய ஹெலிகாப்டர் கடந்து சென்றது; அவர்கள் போன திசையில். பயங்கர வெடிச்சத்தத்தைக் கேட்டேன்...

**மீ**ண்டும் அமைதியாகிவிட்டான். சுருட்டுப் புகைக்கற்றையைக் கொத்தாக வெளியேற்றினான்.

...போரின் மிகக் கொடூரமான தருணம், கண்முன்னே நண்பர்களைப் பறிகொடுப்பதுதான். ராணுவத்தில் சேர்ந்த பிறகு, அதிலும் போர்முனையில் நிற்கும்போது, உங்கள் குடும்பத்தின் உறுப்பினர் எண்ணிக்கை பல்கிப் பெருகி விடுகிறது. அந்தக்

குடும்பத்தின் அடிப்படை, ரத்த பந்தம் இல்லை. மரண பயமும், கொலைவெறியும்தான். அன்று கேட்ட அந்த வெடிச்சத்தம், இதோ இப்போதும் எனக்குள் பத்திரமாய் இருக்கிறது.

அகந்தையும் திமிருமாய் முன்னேறிச் சென்றுகொண்டிருந்த ஒரு ராணுவ அதிகாரிக்குள் ரகசியமாக ஒளிந்து வளர்ந்து வந்திருந்த பயந்தாங்கொள்ளிச் சிறுவன் வெளிவருவதற்குக் காரணமான தருணம் அது.... எனக்கு ஒரு கோப்பை டீ கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது...

கூடாரத்துக்கு வேண்டுமானால் திரும்பலாமா?

...வேண்டாம்.வேண்டாம்... திறந்த வெளியில் நடக்கும்போது மனமும் திறந்துகொள்கிறது இல்லையா. ஏனோ இன்று பேசிக் கொண்டேயிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இத்தனை காலத்துக்குப் பிறகு, எழுதப்படாத அந்த நாட்குறிப்பை வாய்விட்டு வாசிக்கும் சப்தம் என்னை இதமாகவும் மிருதுவாகவும் உணர வைக்கிறது. கடைசியாக, என் நண்பன் ஜூலியஸ் லுமும்பாவுடன் பேசியதுதான். அதன் பிறகு மௌனம் பூண்டுவிட்டேன். நண் பனின் மரணம் என்ற நிகழ்வு சண்டைக்காலத்தில் கொள்ளும் அர்த்தம் வேறு. அதுவே சமாதான காலத்தில் நிகழுமானால் உண்டாகும் அதிர்வலைகள் வேறு...

ஆழம் நிரம்பிய குரலில்,

சரிதான்.

என்றார் மேஜர். க்ருஷ்.

...மெல்ல மெல்லப் பின்வாங்கி, ருஷ்யாவை விட்டு வெளியேறினேன். ஹோ சி மின்னின் கொரில்லாப் படையைச் சமாளிக்க ஃப்ரான்ஸ் சிரமப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அது. ஜெர்மானிய ராணுவத்தில் அதிகாரிகளாகப் பணிபுரிந்தவர்களைக் கூலிப் படையாக அமர்த்திக்கொண்டது ஃப்ரான்ஸ். சம்பளப்பட்டியலில் எந்த நிலையிலும் இவர்கள் பெயர் இருக்காது. ஆனால், ஃப்ரெஞ்ச் அதிகாரிகளுக்குச் சமமான ஊதியமும் மரியாதையும் இருக்கும். சமன்பாடுகள் எவ்வளவு வேகமாக மாற்றுருக் கொள்கின்றன பாருங்கள்.

ராணுவ வாழ்க்கையை இனித்துறக்க முடியாது என்று நம்பிய, என் சகாக்கள் பலர் சென்றார்கள். எனக்கும் அப்படி ஒரு வாய்ப்பு இருந்தது. நான் போகவில்லை. நான் பிறந்து வளரக் கிடைத்த ஐரோப்பாவின் சித்திரம், மூடி திறந்த மாபெரும் எலிப் பொறியாக மாறிவிட்டிருந்தது எனக்குள்.

ஆசியாவை நோக்கித் திரும்பியது என் கவனம்.

ஃப்ரெஞ்ச் ஏஜெண்ட்டுகள் மூலமாகப் பெற்ற போலி ஆவணங்களில் நான் இசைக் கலைஞனானேன். ஆஃப்கானிஸ் தானுக்குள் நுழைந்து, பாக்கிஸ்தான் வழியாக - அப்போது பாக்கிஸ்தான் ஏது? - இந்தியாவுக்குள் வந்து சேர்ந்தேன். உலகப் போரில் இங்கிலாந்துக்கு எதிராக இருந்த தேசங்களின் பிரஜைகளை, பாதுகாப்புக் காரணங்களுக்காகக் காவல் முகாம்களில் வைத்திருந்தது பிரிட்டிஷ் அரசாங்கம். இந்தியாவுக்குள் நுழைந்த மாத்திரத்தில் நானும் கைது செய்யப்பட்டேன். காவல் முகாமில் என்போன்ற நூற்றுக் கணக்கான ஐரோப்பியர்களுடன் சிறை வைக்கப்பட்டேன்.

சிறகுகள் முளைத்து சரளமாகப் பறந்துகொண்டிருந்த பூச்சி திடீரென்று கூட்டுப்புழுவாகி விட்ட மாதிரி நடந்துவிட்டது. முகாமின் அன்றாட நியமங்களுக்குள் சிக்கி, பகல் பொழுதுகளை வெட்டியாய்க் கழிக்க நேர்ந்தபோது, எனக்குள் தத்துவ விசாரத்தின் தினவு பூத்தது.

பறிக்கப்படும்போதுதான், சுதந்திரம் என்பது வெறும் சொல் அல்ல, முழுமையான ஒரு அந்தரங்க உணர்வு என்பது தெரியவருகிறது.

பிரிட்டிஷ் முகாமிலிருந்து தப்பி என் சுதந்திரத்தை நோக்கி ஓடினேன். என்னுடன் தப்பி வந்த இத்தாலியன், பாதி வழியில் குண்டடிபட்டுச் சிக்கினான். நான் தொடர்ந்து ஓடினேன். திசையறியாத ஓட்டத்தில் திபெத்தை நோக்கித்தான் சென்றிருந்திருக்கிறேன்.

வழியில் நண்பன் ஜூலியஸ் லுமும்பாவைச் சந்தித்தேன். அவன் ஆப்பிரிக்கக் கறுப்பன். ஸயரைச் சேர்ந்தவன். வெகுளியான மனிதன். வாஞ்சையே உருவானவன். வன்மமும் தந்திரமும் வன்முறையும் சுமந்து உலகைச் சுற்றியவனான எனக்கு நேரெதிரான மறு பாதி போல இருந்தான். இருக்கும் இடத்தில் பொருந்த முடியாமல், பூமியெங்கும் நடந்தே அலைந்துகொண்டிருந்த நாடோடிப் பிறவி. என்ன, என்னுடைய கடந்த காலம் கவனமாக மறைக்கப்படவேண்டிய ஒன்று. அவனுடைய வாழ்க்கை, திறந்த புத்தகம்...

வெய்ஸ்முல்லரிடமிருந்து கடுமையான வியர்வை நெடி கிளம்பியது. குப்குப்பென்று சுருட்டுப் புகையை வெளியேற்றினான். கலவையான நாற்றத்திலிருந்து விடுபட, தன் கால்சட்டைப் பைக்குள்ளிருந்து கைக்குட்டையை எடுத்தார் மேஜர் க்ருஷ். அதில் சாயங்காலம் தெளித்து வைத்திருந்த யூ டி கொலோன் மணம் நாசியில் ஏறுவது, உள்ளூறத் தொற்றியேறும் ஒவ்வாமையை ஓரளவு மட்டுப்படுத்தியது. ஹான்ஸ் வெய்ஸ்முல்லர் சடாரென்று பேச்சை நிறுத்தினான்.

...ஸர். மன்னித்துக்கொள்ளுங்கள்.

என்றபடி இருளின் புறமாகத் திரும்பினான். கால்சராயின் பித்தான்களை அவிழ்த்து சிறுநீர் பெய்யும் ஓசை இரவின் மாய அடர்த்தியில் மனிதார்த் தமாக ஊடுருவியது. முடித்துவிட்டு, நடக்கலாம் என்பதுபோலத் தலை யாட்டியபடி அவன் அருகில் வருவதைப் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தார் மேஜர் க்ருஷ்.

திடீரென்று வேறொரு எண்ணம் தலைதூக்கியது. என்னவொரு நம்பிக்கை அவனுக்கு. ஐரோப்பாவின் பல மூலைகளிலும் திடீர் திடீரென்று முன்னாள் நாஜிகள் பிடிபடுவதும், நடைபெற்ற அராஜ கங்கள் பற்றிப் புதுப்புது வாக்குமூலங்கள் பெறப்படுவதும் இன்னமும் நடந்துகொண்டிருக்கும் நாட்களில், தன் அடையாளத்தைக் கொஞ்சமும் மறைக்காமல் தன்னிடம் வெளிக்காட்டுகிறானே இவன்... நானாவதி சொல்வான்:

உன் கண்களில் ஒரு உத்தரவாதம் இருக்கிறது க்ருஷ். கொலை செய்ததைக் கூட உன்னிடம் தயங்காமல் சொல்லலாம். விஷயம் வெளியில் போகாது.

அம்மா வேறுமாதிரிச் சொல்வாள்.

கல்லுளி மங்கன்டா கிருஷ்ணா. எத்தனை தடவை கேட்டேன், சொன்னியோ. ஒலக்கை ஒலக்கை.

என்று செல்லமாய்க் கடிந்து கொள்வாள்.

வெய்ஸ்முல்லர் தொடர்ந்தான்.

...ஒரே சந்திப்பில் அத்தியந்த நண்பர்களாகிவிட்டோம் ஜூலியஸூம் நானும். முந்தின வருடங்களில், என்னால் நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியாது, ஒரு கறுப்பனுடன் நான் நட்புக் கொள்வேன் என்று. ஆனால், இப்போதோ, வாழ்வின் தற்செயல் முனைகளில் மோதுண்டு மோதுண்டு, சக்கரத்தின் சுழற்சியை வெறும் பார்வையாளனாக எதிர்கொள்ளப் பழகியிருந் தேன்.

குழந்தைப்பருவம் முடிந்ததாகத் தோன்றிய சமயத்தில் தலைமறைவு வாழ்க்கைக்குள் சென்றுவிட்ட அந்தக் கோழைச் சிறுவன் என்னுள் மீண்டும் துடிப்பாக உயிர்க்கச் செய்தது ஜூலியஸின் நட்பு. வண்ணத்துப்பூச்சிகளையும் மதிப்பெண்களை யும் துரத்திக்கொண்டு திரிந்த; பியானோவின் கறுப்புவெள்ளைக் கட்டைகளோடு உறவாடிக் கிடந்த; இரவில் பயமும் பகலில் உற்சாக மும் கொண்டு திரிந்த அந்தச் சிறுவனை மீண்டும் நிலவுலகில் உற்சாகமாக நடமாட ஊக்கியது ஜூலியஸின் வாஞ்சையும்

நெருக்கமும்தான்.

ஸர், என்னுடைய இளம் வயது விருப்பங்கள் இரண்டு. ஒன்று, பியானோ கலைஞனாவது. கை விரல்களால் கட்டைகளைத் தட்டும்போது உண்டாகும் பீங்கான் ஓசை கிறக்கமூட்டுவதாக இருக்கும். உங்கள் ரகசியங்கள் உங்களுக்கு உவப்பான விதத்தில் வெளியேறுவதான பிரமை உண்டாகும். ஓசையின் புலத்தில், நீட்டிய துப்பாக்கியுடன் பாசறையை விட்டு வெளியேறும் வீரர்கள் போல ஒலித்துளிகள் முன்னேறுவது நூதனமான கிளர்ச்சியை உண்டாக்கும்.

மற்றது, தையல்காரனாவது. உருளைக் கட்டையின் மேல் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் நீள் துணியிலிருந்து விதவிதமான ஆடைகளை வெளிக் கொணர்வது, ஒரு மந்திரவாதியின் வேலை மாதிரித்தானே. வெற்றுத் தொப்பிக்குள்ளிருந்து புறாக்களையும் முயல்களையும் வெளியில் எடுப்பது மாதிரி. தையல்காரனுடைய தொழில் எவ்வளவு சிருஷ்டிகரமானது. நீங்கள் துணியாகப் பார்க்கிற ஒன்று அவன் கண்ணுக்கு ஆடையாகத் தெரிகிறது.

நான் என்ன செய்து வந்திருந்தேன், அத்தனை காலமும்? சாமான்யக் கண்களுக்கு உயிருள்ள மனிதனாகத் தெரியும் உருவங் களை, என் துப்பாக்கிக் குண்டின் நடமாடும் இலக்குகளாகப் பார்த்து வந்திருக்கிறேன். போதும். போதும். அழிவின் பாதை யிலிருந்து விலகி, சிருஷ்டியின் பாதையில் நகர்ந்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்....

நாங்கள் இருவருமே சமூகத்தைவிட்டு விலகியவர்கள் என்பது எங்களுக்குள்ளான நட்பைப் பலப்படுத்தியது. தன் இனத்துடன் பொருந்தி வாழவோ, ஐரோப்பிய வாழ்முறையுடன் சமரசம் செய்து கொண்டு வாழவோ இயலாத மனச் சஞ்சலத்துடன், நாடோ டியாகத் திரிந்து ஹிமாலயத்துக்கு வந்து சேர்ந்தவன் ஜூலியஸ். இந்தோ - இரானிய, கறுப்பர் நாகரிகங்களுக்கு வெளியே, மங்கோலிய இனத்தின் பிராந்தியத்தில் வசிக்கும் விருப்பத்துடன், பல வருஷங்களை நடந்தே கழித்துவிட்டு வந்து சேர்ந்திருந்தான்.

இரண்டாவது உலகப் போர் தொடங்குவதற்கு வெகு முன்னமே புறப்பட்டு, போர் முடிந்த சமயத்தில் வந்து சேர்ந்தான். கிட்டத் தட்டப் பதினேழு வருஷங்கள் தனியாகவே வாழ்ந்துவிட்டு, அதாவது மனித நாகரிகத்துக்கு வெளியில் வாழ்ந்துவிட்டு வந்தி ருந்த அவன் முழுக்கக் கனிந்த ஒரு ஆப்பிள் போல இருந்தான். காற்றின் விருப்பத்துக்கு இசைந்து சுலபமாக மிதந்து போகும் சருகு போல ஆகியிருந்தான்.

லாஸாவுக்குப் போவது அவன் உத்தேசம். போனோம். ஆறே வருடங்களில் திபெத் அலுத்துவிட்டது. அலைந்து பழகிய அவனது கால்களுக்கு வேர் பிடித்து நிற்க மனமில்லை. தவிர, ஜூலியஸ் லுமும்பாவின் ஊழ், என் வடிவில் காத்திருந்திருக்க வேண்டும். ஹிமாலயத்தின் அந்தரங்கங்களில் ஒன்றாக ஆகி, வாழ்நாளின் எஞ்சிய பகுதியை இங்கேயே கழித்துவிடுவதுதான் அவனது விருப்பம். தனிமையை உணவாக, உறக்கமாக, வாழ்முறையாகப் பயின்ற அவனுக்கு அது சாத்தியம்தான்.

எனக்கோ, மனிதர்கள் வேண்டும். அவர்களின் உறவும் விரோதமும் வேண்டும். சதுரங்கம் விளையாடுவதுபோல, பகலும் இரவும் உறவுமுறைகளின் கட்டங்களில் நகர்ந்து நகர்ந்து வெல்லவும் தோற்கவும் வேண்டும்.

ஸோமிட்ஸியா செல்லலாம் என்று வற்புறுத்தினேன் அவனிடம். நண்பனல்லவா, இணங்கினான். அவன் கொஞ்சம் அழுத்தமாக மறுத்திருக்கலாமே என்று இப்போது தோன்றுகிறது.

இந்திய எல்லைக்குள் மறுபடி நுழைந்தோம். புதிய சுதேசி அரசாங்கம் நலவாழ்வுப் பணிகளை முடுக்கிவிட்டிருந்தது. ஸோமிட்ஸிய எல்லைவரை ரயில்பாதை போடும் வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது. மனித நடமாட்டம் அதிகரித்திருந்த மலைப் பகுதிகளில் ஓணான்கள் போல ரகசியமாய் நகர்ந்து ஸோமிட்ஸியாவுக்குள் நுழைந்தோம்.

ஸோமிட்ஸியாவில் நுழைந்து இரண்டு மாதங்கள் மட்டுமே உயிரோடிருந்தான் ஜூலியஸ். ஸயரின் வெம்மையில் பிறந்து வளர்ந்த என் நண்பனின் தேக உஷ்ணம், ஸோமிட்ஸியாவின் குளிர் வெளியில் மௌனமாக அடங்கியது...

நடப்பதை நிறுத்தினான். முகத்தைத் தன் கைக்குட்டையால் மூடிக் கொண்டான். மேஜர் க்ருஷ் ஒரு சிகரெட் பற்ற வைக்க முனைந்தார். சிகரெட் முனை கனல்வதற்கு முன்பே அணைந்துவிட்ட தீக்குச்சியின் வெளிச்சத்தில், வெய்ஸ்முல்லரின் முன்னங்கைகளிலும் புறங்கைகளிலும் நரம்புகள் புடைத்திருக்கக் கண்டார். அவன் உடல் சீராகக் குலுங்கியது. மூடிய முகத்தை அவன் திரை விலக்கிய பிறகு, மேஜர் க்ருஷ் கேட்டார்.

மிஸ்டர் ஹான்ஸ், ஆர் யூ ஆல்ரைட்?

இரண்டாவது தீக்குச்சியின் வெளிச்சத்தில் அவன் முகத்தை நோக்கினார். ரத்தம் வடிந்து வெளிறியிருந்தது வெய்ஸ்முல்லரின் முகம். பிரேதத்தின் முகத்தைப்போல. கண்களில் மட்டும் மிஞ்சியிருந்த உயிர்க் களையில்

கொஞ்சம் வன்மமும் கலந்திருந்ததாகப் பட்டது மேஜர் க்ருஷ்ஷுக்கு.

பொருட்கள் யாவும் அழிந்த சூனிய வெளியைப் பார்க்கிறவன் போல வெறித்த பார்வையுடன் தென்பட்டான் அந்த ஒரு கணத்தில். சற்று நேரம் மௌனமாக நின்றிருந்தான். ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அடிவயிற்றிலிருந்து வெளியேறியது. தொண்டையைச் செருமிக் குரலைச் சரி செய்துகொண்டு, தொடர்ந்தான்.

...இந்தக் கிழவன்தான் காரணம். இவனிடம் தீர்த்துக்கொள்ள வேண்டிய கணக்கு ஒன்றிருக்கிறது எனக்கு. தந்திரமாய்க் கொல்லப் பட்டு, அகாலமாய் மரித்த முப்பத்தேழு வயதுக் குழந்தை ஜூலியஸ் லுமும்பா சம்பந்தப்பட்டது அது. மன்னனே தேசத்தை விட்டு வெளியேறிய பிறகும் என் போக்கில் போகாமல், இவர்களைப் பின்தொடர்ந்து நான் வந்துகொண்டிருப்பதன் நோக்கம் அதுதான்.

கிழவன் சாமர்த்தியசாலி. மொழிப் பிரச்சினை வரும் இடங்களில் நான் உதவுவேன் என்ற காரணத்தால்தான், தப்பி ஓடும் இந்தக் கோஷ்டியில் என்னையும் சேர்த்துக்கொண்டிருக்கிறான். மற்றபடி, என்னை அவன் நம்புகிறான் என்று நான் நம்பவில்லை. மழை ஓய்ந்த பிறகுதான் தெரியும், குடையை யார் முதலில் மடக்கு கிறார்கள் என்று.

ஸோமிட்ஸிய எல்லையில் நானும் ஜூலியஸ் லுமும்பாவும் கைது செய்யப்பட்டோம். தலைநகர் காமியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டு, இந்தக் கிழவனின் முன்னிலையில் நிறுத்தப்பட்டோம். கிழவனின் கண்களில் பேராசையின் ஒளி கடுமையாகப் பிரகாசித்ததைக் கண்டேன். என் கண்களிலும் அதே ஒளி வெளிப் படையாக இருந்திருக்க வேண்டும். சுலபமாக அவனுடைய நம்பிக்கையைப் பெறமுடிந்தது. இந்தக் கிழவனின் எதிர்த்தரப்புப் பிரமுகர் விசாரணை நடத்திச் சான்று வழங்கியதை இந்தக் கிழவன் நம்புகிற அளவு.

ஸோமிட்ஸிய சாம்ராஜ்யத்தின் அரசியல் மற்றும் ஆன்மிகத் தலைவரான இருபத்தாறாம் ஸோமிட்ஸுவுக்கு ஆங்கிலம், ஜெர்மன் மொழிகளும் உடற்பயிற்சியும் கற்றுத்தருவது என் பொறுப்பு. மலையேற்றமும் பூகோள சாஸ்திரமும் வனவியலும் கற்றுத் தருவது ஜூலியஸ் லுமும்பாவின் பொறுப்பு. அப்போது மன்னரின் வயதென்ன என்று நினைக்கிறீர்கள்? நாலரை. வெறும் நாலரை வயது மன்னர். ஸோமிட்ஸிய சாம்ராஜ்யத்தின் அதிபதி...

வெய்ஸ்முல்லர் தனக்குத்தானே சிரித்துக்கொண்டான். தொழிற் சாலைப் புகைபோக்கிபோல அடர்த்தியான புகையை அவனது வாய்

வெளியேற்றியது. மூச்சிழுக்கும்போதெல்லாம் தன் குடலை யாரோ பிடுங்கி எடுப்பதுபோல உணர்ந்தார் மேஜர் க்ருஷ். அவன் சிரிப்பு மங்காமல் சொன்னான்.

*...சாம்ராஜ்யம். வெறும் எழுபத்தெட்டாயிரத்துச் சொச்சம் சதுரமைல் பரப்புள்ள நிலத் துண்டை சாம்ராஜ்யம் என்றுதான் சொல்லும் இந்தக் கிழட்டு ஓநாய். இத்தனை தேசங்கள் சுற்றியதில், இந்த ஓநாய்க்கு உள்ள அளவு மண்ணாசையை இன்னொரு மனித னிடத்தில் பார்த்ததில்லை நான்.*

*ஒரு சிறு பையனைப் பொம்மை அரசனாக அமர்த்திவிட்டு, நாடாளும் பொறுப்பை முழுக்க முழுக்கத் தன் கையில் வைத்துக் கொள்வதுதான் அவனது நோக்கம். இந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டுவிட்டான் என்பதால், முந்தின ஸோமிட்ஸுவை விஷமிட்டுக் கொன்றுவிட்டான் என்று ஒரு பேச்சிருக்கிறது. ஸோமிட்ஸியாவில் வாய்விட்டு யாரும் கூறாத, ஆனால் பலருக்கும் தெரிந்த ரகசியம் இது.*

*இளம் குருத்தாக இருந்த இந்தச் சிறுவனை நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். சதா மனிதர்களைக் கொன்றுகொண்டும், கொல்வ தற்கான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக்கொண்டும், அவற்றை உருவாக்கிக் கொண்டும் பலவருடங்கள் இருந்திருக்கிறேன். அதற்குப் பிராயச்சித்தம் மாதிரி அமைந்தது என்னுடைய இந்தப் பணி.*

*ஒரு உயிரை அறிவின் பாதையில் வளர்க்கும் பணி. ஊட்டமாக வளரும் தாவரம் போல அவன் செறிவுறுவதை அருகில் இருந்து பார்த்துவந்தேன்.*

*சாதாரண ஐரோப்பியனின் வாழ்க்கை எனக்கு வாய்த்திருந்தால், இந்த ஸோமிட்ஸுவின் வயதுள்ள ஒரு சிறுவனுக்குத் தகப்பனாய் இருந்திருப்பேன்தானே?*

*பையன் அசாத்திய கெட்டிக்காரன். ஒருமுறை சொன்னால் பற்றிக்கொண்டுவிடுவான். இன்றைய தேதிக்கு, கீழைத் தேசங் களின் தத்துவங்களையும், மேலை நாடுகளின் விஞ்ஞானபூர்வ அணுகுமுறையையும் பற்றி அவனுக்கு இருக்கும் நுணுக்கமான அறிவு, உலகில் வேறெந்தக் குழந்தைக்கும் இருக்க வாய்ப் பில்லை என்று அடித்துச் சொல்வேன்.*

*சமீப மாதங்களாக, பெண்கள் பற்றித் தனக்குள் ஊறும் கிளர்ச்சி பற்றி சதா விசாரித்துக் கொண்டேயிருக்கிறான். எங்கள் கலாசாரத் தில் காமத்தை மூடி மறைப்பதில்லை நாங்கள். உணவு கொள்வதில், உறங்குவதில் தேவைப்படாத ஒளிவுமறைவு காமம் நுகர்வதில் மட்டும் ஏன் இருக்க வேண்டும்? என் மகனுக்குச் சொல்லித்*

*தந்திருக்கக் கூடியவற்றை இவனுக்கும் தயங்காமல் சொல்லித் தருவதாக இருந்தேன்.*

*கிழட்டு ஓநாய்க்கு அபார மோப்ப சக்தி. எங்கள் பேச்சு நகர்ந்து வரும் திசையை யூகித்து விட்டான் போல. கொஞ்ச நாளாகவே என்னைக் கரித்துக்கொட்டுகிறான். ஆனால் பையன் விடமாட்டான். பெண்சேர்க்கை என்றால் என்னவென்று அறியாமல் ஓய மாட்டான். என்ன, இன்னும் கொஞ்ச காலம் இந்தத் தாவா தொடரும் போல இருக்கிறது...*

*தலாய் லாமா இந்தியாவுக்குள் இடம் பெயர்ந்திராவிட்டால், இவர்களும் நகர்ந்திருக்க மாட்டார்கள். நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். ருஷ்யக் கம்யூனிஸ்ட்டுகளைச் சமாளித்த அனுபவம் இருக்கிறது எனக்கு; சீனக் கம்யூனிஸ்ட்டுகளையும் ஒரு கை பார்க்கலாமென்று. அல்லது பாதகமில்லாத ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்றேன்.*

*கிழவன் கேட்பதாயில்லை. ஸோமிட்ஸியா முழுவதும், இப்போதிருக்கும் விதமாகவே அவனுக்கு வேண்டுமாம். ஆசை. அவ்வளவு ஆசை. தலைமை நிர்வாகிக்கு மண்ணாசை. மன்னனுக்குப் பெண்ணாசை. விசித்திரமான ஆட்சி...*

வெய்ஸ்முல்லர் சிரித்தான். மேஜர் க்ருஷ் நடப்பதை நிறுத்தி அவன் புறமாக உறுத்துப் பார்த்தார்.

*...என்ன பார்க்கிறீர்கள்? எனக்கு என்ன ஆசை என்றுதானே? பணத்தாசை. நிறையப் பணம் சேர்க்க வேண்டும். ஐரோப்பாவுக்குத் திரும்பப் போக வேண்டும். இரண்டாம் உலகப்போரின் எதிரொலிகள் ஓரளவு அடங்கிவிட்டன. ஸோமிட்ஸியாவில் நான் நுழைந்த காலகட்டத்தில் நடந்த அளவு இப்போது நடக்கவில்லை, போர்க் குற்றவாளிகளைப் பிடிக்கும் வேட்டை. கடந்த தசாப்தங்களில், அகிலத்தின் ஞாபகம் கணிசமான அளவு அழிந்திருக்கும். போர்க்குற்றங்களின் பெருந் தலைகள் பிடிபட்டுத் தண்டனையடைந்த பிறகு, என் போன்ற குட்டிப் பிசாசுகளை யாரும் நினைவில் வைத்திருக்க வாய்ப்புக் குறைவு.*

*போதுமானதை விடக் கொஞ்சம் அதிகமாகவே பணம் சேர்த்துக் கொண்டு, ஏதேனும் ஒரு ஐரோப்பிய கிராமத்தில், தனி அடையாளம் எதுவுமற்ற, பணக்கார ஐரோப்பியக் கனவானாக வாழ்க்கையின் மிச்சத்தைக் கழித்து முடிக்கவேண்டும். இந்தப் பையன் ஸோமிட்ஸூவாகத் தொடரும்வரை எனக்கான வாய்ப்புகள் பிரகாசமாகவே இருந்தன. இனி இவர்களுடன் தொடர்வதால்*

*பிரயோசனமில்லை. என் வழியைப் பார்த்துக்கொண்டு போக வேண்டியதுதான்.*

*இந்தப் பையனைப் பிரிய வேண்டுமே, அநாதரவாக இந்தக் கிழ ஓநாயிடம் விட்டுப் போகிறேனே என்று வருத்தமாகத்தான் இருக்கிறது.*

*என்ன செய்வது, என் வாழ்க்கை முழுவதும் இழப்பதிலேயே கழிந் திருக்கிறது. என் தந்தை நாட்டை இழந்தேன். உற்றார் சுற்றத்தை இழந்தேன். உயிரையும் நம்பிக்கையையும் தவிர, மற்ற எல்லா வற்றையும் இழந்துதான் உங்களுடன் இந்த மலைப்பாதையில் நின்றிருக்கிறேன். இப்போது வரையிலான எல்லாத் தருணங்களை யும் இழந்து இழந்துதான் இந்தத் தருணத்துக்கு வந்து சேர்ந்திருக் கிறேன் ...*

சுருட்டின் காட்டமான மணம் நிறைந்த ஆழப் பெருமூச்சொன்றை வெளியேற்றினான் ஹான்ஸ் வெய்ஸ்முல்லர்.

*

# பூர்வ கிரந்தம் 7

... எதை அறுதியான அனுபவம் என்று கொள்ள? ...

இயற்கையின் இயல்பில் சலனமும் இல்லை நிச்சலனமும் இல்லை. துங் லோவின் பார்வைக்கு, கரை மரம் ஸ்திரமானது. கரை மரத்தின் பார்வைக்கு, துங் லோ நகர்வது. துங் லோவின் நோக்கில், தனது நிலை **இருப்பது** மாத்திரமே; நகர்வது அல்ல.

இட வலமாகக் கால்சுற்றுச் சுற்று. நீளமும் அகலமும் இரு வேறு அலகுகள் அல்ல என்று உணர்வாய். நீளமும் அகலமே. அகலமும் நீளமே. கிளையில் பூத்த மலர், முள்ளம்பன்றியின் பார்வைக்கு உயரத்தில் இருக்கிறது. ஆகாய வீதியில் பறக்கும் கழுகின் பார்வைக்கு, ஆழத்தில் இருக்கிறது. நத்தையின் பார்வையில், உயரமும் நீளமே.

நீள அகல உயரங்கள் தவிர்த்த மற்றொரு தளமும் இருக்கிறது. ரகசியமான பூடக உணர்வாக நிலைபெற்றிருக்கும் இந்தத் தளத்தில், செம்மறியாடுகள் சினையுறுகின்றன. பருவ ரோமம் நரையுறுகிறது. இருந்தவை இல்லாமல் போவதும், இல்லாதிருந்தவை உதயமாவதும் நிகழ்கிறது.

உறைபனி நீராய் உருகுவதும்,
ஓடும் நீர் உறைபதம் கொள்வதும்,
துங் லோவின் நீர்ப்பரப்பில் அலையலையாய் ஆவி உயர்வதும்,
ஆவி நீராய்ப் பொழிந்து உயிர்ப்புலம் பாலிப்பதும்
நாலாவது தளத் திரையில் நிகழும் நிழல் சித்திர அசைவுகளே.

நாலாவது தளத்தை அளக்க அளவைகள் இல்லை. **முன்பு, தற்போது, இனிமேல்** என்னும் உணர்வு நிலைகளின் வழி உண்டாகும் பகுப்புகளில் இதற்கான சூட்சுமத்தை மனிதப் பிரக்ஞை கட்டி வைத்திருக்கிறது. இந்த முக்கோணத்துக்கு வெளியில் எதுவும் நடந்துவிடாதபடி பாஷை பார்த்துக்கொள்கிறது.

துங் லோவின் ஜன்மஸ்தானத்தில் நான் ஒரு மரத் தண்டை வெட்டிப் போடுகிறேன், பாங் டூவில் உள்ள என் சகா ஒருத்தன் எடுத்துக் கொள்ளும் விதமாக. நீரோட்டத்தில் நகர்ந்து மறையும் மரத் துண்டு, என்னுடைய அனுபவத்தில் **முன்பு** இருந்தது. பாங் டூ சகாவுக்கு **இனிமேல்** இருக்கிறது. துங் லோவின் நீர்த்துளிகளுக்குத் **தற்போதில்** இருக்கிறது. இதில் எதை அறுதியான அனுபவம் என்று கொள்ள?

துங் லோவில் மிதந்து செல்லும் மரத்துண்டு தனது அனுபவத்தில் எப்போதும் தற்போதில் இருக்கிறது. வஸ்துக்கள் யாவும் தன்னுடனே இருப்பவை. தற்போதில் மட்டுமே இருப்பவை. முன்பு, தற்போது, இனிமேல் எனும் மூன்று கருக்களையும் தன்னுள் கொண்ட **தற்சமயம்** என்னும் விநோத முட்டைக்குள் பிரபஞ்ச உயிர்த்தாது ஜீவிக்கிறது.

துங் லோவின் நீர்ப்பரப்புக்கு வெகு உயரத்தில் பறக்கும் மீன்கொத்தியின் பார்வைக்கு, வெளிச்சத்தில் பளபளக்கும் மீன் **தற்போதில்** இருக்கிறது. கொத்தித் தூக்கிச் செல்வதற்கு, பல நூறு கஜத் தொலைவில், **இனிமேலில்** இருக்கிறது.

இணையுடன் இருக்கும்போது பகல் பொழுது விரைந்து கரைகிறது. வியாதியஸ்தனின் பகல் பொழுது நீண்டுகொண்டே போகிறது. சம்போகம் மலிந்த இரவுப் பொழுது சடுதியில் விடிகிறது. தண்டனைக்குக் காத்திருப்பவனின் இரவுப் பொழுது நீண்டுகொண்டே செல்வது. உண்மையில், பகலும் இரவும் தோற்றங்களே. தோன்றுதலும் மறைதலும் பார்வையாளனின் அனுபவங்களே.

உறக்கத்தின் ஆழத்தில் பரந்து விரிகிறது சூட்சுமப் பிரபஞ்சம். வாசனைகளும் வடிவங்களும் பயமும் பரவசமும் மண்டிய உலகம் அது. விழிப்பின் பொழுதில் நிறைந்திருக்கும் சகலமும் தன்னுள் கொண்டது. ஆறுகளும் மலைகளும், மரங்களும் விலங்குகளும், பறவைகளும்

ஆகாயமும், தன் முனைப்பும் எதிர் உயிரும் நிறைந்து இருப்பது. ஆனால், திருஷ்டி முழுக்க முழுக்கத் திறந்தும், ஸ்பரிஸம் முழுக்க முழுக்க மூடியும் இருப்பது.

திருஷ்டியும் ஸ்பரிஸமும் ஒன்றுக்கொன்று உடனடியானவை அல்ல. திருஷ்டியால் திருப்தியுறாது சரீரம். சர்வ லோக வியாபியின் சிருஷ்டியில் முதலாவதாக உருவானது சரீரம். கடைசியாய் உருவானது கண்கள். சரீரவெளியின் ஜன்னல் போன்றது திருஷ்டி.

ஓசைகளும் வெளிச்சமும் வாசனையும் ஸ்பரிஸத்தைச் சார்ந்தவை அல்ல. ருசியும் ஸ்பரிஸமும் அளிக்கும் சரீர அனுபவம் போன்றவை அல்ல. செவிகளும் விழிகளும் நாசியும் தரமுடியாத அனுபவத்தைக் கொடுக்கும் சருமம் என்னும் திறப்பால் முழுமையாக மூடப்பட்டது சரீரம்.

காண் பிரபஞ்சம் விழிகளின் வீச்சினளவு விரிந்திருக்கிறது. உடனடிப் பிரபஞ்சமோ, தொடுகையின் எல்லைக்குள் மாத்திரமே அடங்கி விடுவது. உடனடிப் பிரபஞ்சத்தின் எல்லைகளைக் கடக்க, சிந்தையின் குதிரையைச் சொடுக்கி விரட்டு.

புலன் வாசல்கள் வழி உள்ளேறும் தகவல்கள் தொகுக்கப்படும் இடத்தைப் பிரக்ஞை என்று அழைக்கிறோம். பிரக்ஞை தன்னை உணர்வு கொள்ள, புறத் தகவல் எதுவுமே தேவையில்லை என்பதை உணர்வாயாக.

ஆண்நிலையென்றும் பெண்நிலையென்றும் சமமாய்ப் பிளந்த அரைக்கோளங்களாய் விரவிக் கிடக்கிறது இயற்கை. இடைவெளியற்ற முழுக் கோளமாய் ஆகிவிடும் இச்சையுடன் சதா ஆகர்ஷித்துக் கொண் டிருக்கும் இவ்விரு அரைக்கோளங்களின் சம்பாஷணையில் உருவாகிறது உயிர்த் தலம்.

ஜனனம் போலவே இயல்பானது கொல்லும் தொழில். மிருக ராசிகள் கொலைத் தொழில் பழகுவது தமது குருதியின் ஓட்டத் திலிருந்தே. உணவுக்காகவும், தற்காத்துக் கொள்ளவும் பூமிப் பரப்பில் கொலைத் தொழில் நிகழாத பொழுதேயில்லை. ஆயினும், வன்மம் கருதிக் கொலைத் தொழில் பழகுவது, மனித ராசி மாத்திரமே.

உயிர் பெருக்கம் வலியினால் ஆவது.
உயிர் குறுக்கம் வலியினால் ஆவது.
உயிர்த்திருத்தல் என்பதே வலியென்றுணர்க.

உயிர் பெருக்கம் ஆனந்தமானது.
உயிர் குறுக்கம் ஆனந்தமானது.
உயிர்த்திருத்தல் என்பதே ஆனந்தமென்றுணர்க.

சரீரமற்ற உயிருக்கு வலி இல்லை.
சரீரமற்ற உயிருக்கு ஆனந்தம் இல்லை.
உயிர் என்பது சமனநிலை என்றுணர்க.

நகர்தல் நதியின் தியானம். வளர்தல் செடியின் தியானம். சும்மாயிருத்தல் பாறையின் தியானம். நீரையும் நதியையும் பிரித்தறிதல் இயலாது. இயற்கையையும் தியானத்தையும் பிரித்தறிதல் இயலாது. தியான மௌனத்தில் சலனமுறும் சுவாசமே உயிர்ப்புலம் என்றறிக.

துழாவித் தேடும் தீவிரப் பார்வை விண்நோக்கிச் சாடும்போது, பார்வை தொடர்ந்து செல்ல விண்மீன்கள் விலகி வழிவிடும்.

*

# சந்திரசேகரன்

... அதிகாரத்தின் ஒவ்வொரு சொட்டுலேயும் அதீதமான ஒரு ருசி இருக்கு ...

புதிய அண்ணா மன்றத்தின் வாசலில் ஏகப்பட்ட கூட்டம் நின்றிருந்தது. இளைஞர்களும் சிறுவர்களும் அதிகம் கொண்ட கூட்டம். ஊருக்குள் இப்போது இரண்டு அண்ணா மன்றங்கள். பழைய அண்ணா மன்றம் களையிழந்து கிடக்கிறது.

எம் ஜீ யார் கட்சியை விட்டு நீக்கப்பட்ட பிறகு வந்திருக்கும் முதல் இடைத்தேர்தல் என்பதால், இந்தத் தேர்தல் அகில இந்திய அளவில் கவனத்துக்குள்ளாகியிருக்கிறது. திண்டுக்கல் தொகுதிக்குள் வருகிறது பறவைநத்தம். பிரபலங்களின் வருகை திடீரென அதிகரித்துவிட்டது. நாட்டாமைக்காரரின் இரண்டாவது மகன் வீரணனுக்கு ர னா வராது. அவனைச் சொல்லச் சொல்லி எல்லாரும் கேட்டுச் சிரிப்பார்கள்.

வீரணா, நம்மூருக்கு யாரெல்லாம் வந்தாகடா?

அதுவா... கஹுணாநிதி, காமஹாசு, எமூஞ்சியாஹூ....

எம் ஜீ யாரின் பேரைச் சொல்லும்போது அவன் முகம் பெரிதாக மலர்ந்துவிடும். இதுபோக, சிவாஜி கணேசனும் வந்துவிட்டுப் போனார். பறவைநத்தம் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இளமாறன், முதல் ஆளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் போய்விட்டார். அவரது வீட்டின் வராந்தா முகப்பில் மாட்டப்பட்டிருந்த படத்தைத்தான் புதிய அண்ணா மன்றத்தில் மாட்டியிருக்கிறது. எம் ஜீ யாரும் அண்ணாவும் சேர்ந்திருக்கிற படம் அது. தங்கநிறச் சட்டமிட்டது. என் எஸ் வி சித்தனுக்குத் தொகுதிக்குள் மிகவும் நல்ல பெயர் இருந்தாலும், மாயத்தேவரின் வெற்றி ஏற்கனவே உறுதியாகிவிட்டது என்றுதான் பேசிக்கொள்கிறார்கள் ஊருக்குள். காலங்காலமாகக் காங்கிரஸை ஆதரிப்பவரான அப்பா கூட அப்படித்தான் சொல்கிறார்...

மன்றத்துக்கு எதிர்ப்புறம் பார்வையை ஓட்டி பஸ் வருகிறதா என்று

பார்த்துக்கொண்டான் சந்திரசேகரன். தேர்தல் வந்தபிறகு, பஸ் போக்கு வரத்தில் கடும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. காலை ஏழரை மணிக்கு வரும் ராமராஜ் ட்ரான்ஸ்போர்ட்டை விட்டால், கீழக்குண்டு செல்வ தற்குச் சாயங்காலம் நாலு மணிக்குத்தான் அடுத்த வண்டி.

ஊரனாற்றில் நீர் வரத்து நின்றுவிட்ட சமயம். தேங்கிக் கிடக்கும் நீர்ப்பரப்பில், தோரணமாயிருந்து கிழிபட்ட கட்சிக்கொடிகளும் அச்சடிக் கப்பட்ட காகிதங்களும் மிதக்கின்றன. வேப்பங்குச்சியால் பல் துலக்கி விட்டு, தண்ணீரில் இறங்குவதற்காக உடைகளைக் கழற்றத் தொடங்கிய போது, வீட்டில் கூப்பிடுகிறார்கள், ஏதோ தந்தி வந்திருக்கிறதாம் என்று தகவல் கொண்டுவந்தான் பிச்சை.

சந்திரசேகரனைப் பார்த்த அம்மா உடனடியாக அழ ஆரம்பித்தாள். சுவாமி படத்துக்கு அருகில் இருந்தது தந்தி. எடுத்துப் பிரித்து வாசித்தான் சந்திரசேகரன்.

KIRUSHNAMOORTHY ARRIVED HOME.

SEETHA

கிச்சா, வந்துட்டியாடா செல்லமே. உன்னைப் பாக்காம இத்தனை நாளும் இருந்தேனேடா இந்தச் சண்டாளி.

என்று வாய்விட்டுப் புலம்பினாள் அம்மா. கீழக்குண்டுவுக்கு இப் போதே புறப்பட வேண்டும் என்றாள். அப்பா சொன்னார்,

மங்களம், இப்பொப் போறது உசிதமில்லே. ஊர் முழுக்கக் களேபரமா இருக்கு. நம்மூர்லேயே இப்பிடின்னா, வத்தலக்குண்டு நிலக்கோட்டையெல்லாம் இன்னும் பரபரப்பா இருக்கும். சந்துருவை இன்னிக்கிப் போய்ப் பாத்துட்டு வரச் சொல்லலாம். சனிக்கிழமைக் காலம்பறக் காருக்கு நாம ரெண்டு பேருமே போலாம். சரியா?

ஆலோசனை சொல்லும் குரலில்தான் இதைச் சொன்னார். என்றாலும், அதனுள் பொதிந்த கட்டளையை அம்மா வாங்கிக்கொண்டாள்.

பஸ் புறப்பட்டு, மொட்டை ஆலமரத்தைத் தாண்டும்போதே மாமாவின் ஞாபகம் அழுத்தமாக வந்து படிந்தது.

கிச்சா மாமா வருஷத்துக்கு ஒருமுறை வருவார். பெரும்பாலும் மே மாதத் தொடக்கத்தில்தான் வருவார். லீவுக்கு வந்து, பாட்டி வீட்டின் பட்டகசாலையில் கோணாமாணாவென்று படுத்திருக்கும் பேரக்குழந் தைகளை உரத்த குரலில் எழுப்புவாள் பாட்டி.

பசங்களா, எழுந்திருந்து ஓடுங்கோடா. பாரிவள்ளல் வந்தாச்சு.

குழந்தைகள் ஓடிச் சென்று மாமாவின் கால்களைக் கட்டிக்கொள்

வார்கள். சின்ன மாமா ராமானுஜத்தின் பையன் விச்சுவும், மற்ற குழந்தைகளைப் பார்த்து, தன் பெரியப்பாவை மாமா என்றுதான் அழைப்பான். கொடைரோடு நிலையத்தில் ரயிலில் வந்து இறங்கி, அங்கிருந்து வாடகைக் காரில் வந்திருப்பார் மாமா. மிகப் பெரிய ஹோல்டால் ஒன்றும் அலுமினிய நிற ட்ரங்க்குப் பெட்டியும் டிக்கியிலிருந்து இறங்கும். ஆப்பிள்கள் நிரம்பிய ஜாதிக்காப் பெட்டியும், கமலா ஆரஞ்சுகள் நிரம்பிய ஓலைக் கூடையும் இறங்கும். போதாததற்கு கொடைரோடிலிருந்து ப்ளம்ஸும் பேரிக்காயும் வாங்கி வந்திருப்பார்.

இதெல்லாவற்றையும் விட , அந்த ட்ரங்க்குப் பெட்டி திறக்கப் படும் பொன்னான தருணத்துக்காகத்தான் குழந்தைகள் காத்திருப்பார் கள். புராணக் கதைகளில் வரும் அட்சயபாத்திரம் போல, ஆளுக்கொரு ஐட்டமாக வெளியில் வந்துகொண்டேயிருக்கும் அதிலிருந்து. சலிக்கா மல் எடுத்துக் கொடுப்பார் மாமா.

ஆனால், பெட்டியைத் திறப்பதற்குச் சாயங்காலம் ஆகிவிடும். காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் நுழைந்ததும் பாட்டியின் காலில் போய் விழுவார். உடனடியாக எழுந்து அவளை உடம்போடு சேர்த்துக் கட்டிக் கொள்வார். விசித்து விசித்து இருவரும் அழுவார்கள். ஒரு கையால் மாமாவை அணைத்துக்கொண்டு, மறுகையால் நார்மடிப் புடவையின் தலைப்பை எடுத்து மாமாவின் கண்ணையும் தன் கண்ணையும் மாறி மாறித் துடைப்பாள் பாட்டி . முக்காடு விலகிய வெண்ணிற வெல்வெட் தலையைப் பார்க்கப் பரிதாபமாகவும் விகாரமாகவும் இருக்கும்.

கொஞ்சம் வெயில் ஏறினதும் முகக்ஷவரம் செய்துகொள்வார் மாமா. நாவிதர்கள் பயன்படுத்தும் மடக்குக் கத்தியால் முகத்தை மழிப் பதற்கு முன்னால், எராஸ்மிக் என்று போட்டிருக்கும் வட்ட டப்பியில் ப்ரஷ்ஷைச் சுழட்டிச் சுழட்டித் தேய்ப்பார். எழும்பும் நுரையை, சுற்றி உட்கார்ந்திருக்கும் குழந்தைகளின் கன்னத்தில் ஈஷிவிடுவார். சிரிப்புச் சத்தம் எழும்.

மாமா என்றாலே நறுமணம்தான். மைசூர் ஸாண்டல் சோப்பு... வருஷம் முழுக்க லைஃப்பாய் சோப்பின் ஆஸ்பத்திரி மணத்தில் குளித்த குழந்தைகள் கெஞ்சுவார்கள்.

சரி, ஆளுக்கு ஒரு நாள். சரியா? நான்தான் தேய்ச்சுவிடுவேன். உங்கள்ட்டெ குடுத்தாத் தண்ணியிலே போட்டுக் கரைச்சுடுவேள்.

குளித்துவிட்டு வந்ததும், குட்டிக்கூரா பவுடர். ரெமி பவுடர் மணத்துக்குப் பழகிய குழந்தைகளுக்கு உள்ளங்கையில் கொட்டி அப்பிவிடுவார்.

சாப்பிட்ட பிறகு வீட்டை விட்டு வெளியேறி கோவில் தெருவின் மறுமுனையில் இருக்கும் சாமிக் கோனார் தோப்புக்குள் போவார். விச்சு ஒருமுறை அவருக்குத் தெரியாமல் பின்தொடர்ந்து சென்று உளவறிந்து வந்தான்.

தோப்புக்குள்ளே போயி, மாமா ரகசியமாச் சிகரெட்டுப் பிடிக்கறார்.

சாயங்காலம் வாசலில் வந்து உட்கார்வார் மாமா. சுற்றிலும் சூழ்ந்து கொள்வார்கள் லீவுக்கு வந்திருக்கும் குழந்தைகள். வாசலில் விற்று வரும் எதுவாயிருந்தாலும் குழந்தைகளுக்கு வாங்கித் தருவார். பர்ஸிலிருந்து பத்து ரூபாய்த்தாள்கள் பறக்கும். அம்மாவோ, யாராவது ஒரு சித்தியோ,

ஏண்டா கிச்சா, இப்பிடித் துட்டைப் போட்டு வீணாக்கறே?

என்று கேட்பார்கள்.

போறது விடு. இதுகளுக்காகத்தானே நான் சம்பாதிக்கறேன்.

மாதம் ஒருமுறை மணியார்டர்த்தாளில் கைநாட்டு வைத்துவிட்டு, தபால் காரப் பரமேஸ்வரன் சாட்சிக் கையெழுத்துப் போட்டு, ஒரு தம்ளர் நீர்மோரும், இரண்டு ரூபாய்த் தாளொன்றும் சன்மானமாக வாங்கிக் கொண்டு போன பிறகு, ஞாபகமாய் அழுவாள் பாட்டி.

தியாகசீலன்னா என் பிள்ளை.

என்று சொல்லிச்சொல்லி உருகுவாள்.

பட்டாளத்துக் கதைகள் சொல்வார் கிச்சா மாமா. விளக்கேற்றிய பிறகு, உள்ளூர் நண்பர்கள் நாலைந்து பேர் வருவார்கள். வாசலில் திண்ணைபோலக் கிடக்கும் கல்பலகையில் செதுக்கப்பட்ட தாயக் கட்டம், ஆடுபுலி ஆட்டத்துக்கான கட்டம் இவற்றைச் சுற்றிக் கூடுவார்கள். வெற்றிலை பாக்கும் வசவுகளும் சில்லறைக் காசுகளும் சரளமாகப் புழங்கும். ஆடுகள், புலிகளின் பரம்பரையிலுள்ள பெண்கள் அத்தனை பேரும் மானாங்காணியாய்ச் சோரம் போவார்கள். வசவு வார்த்தை களைக் கேட்கும் கிளுகிளுப்புடன் சிறுவர்கள் வேடிக்கை பார்ப்பார்கள்.

1964 மே மாதத்தோடு அதெல்லாம் நின்று போனது, மாமாவின் வருகை நின்றுபோனதால். பாக்கிஸ்தான் யுத்தத்துக்குப் பிறகு, பதவி உயர்வு கிடைத்திருக்கிறது என்று மாமாவிடமிருந்து வந்த தபால்தான் கடைசி. செல்லச்சாமி வாத்தியாருக்கும் அதே விஷயத்தை எழுதியிருந் தார். இடமாற்றல் வரும் என்றும் எழுதியிருந்தார்...

கீழக்குண்டுவின் கோவில் தெருவுக்கு வந்து சேர்ந்தபோது, விளக்குக் கம்பத்தில் சிறுநீர் கழிப்பதற்காகப் பின்னங்காலைத் தூக்கிய தெருநாய் மிரண்டு ஓடியது. ஊமைவெயிலின் காட்டம் சட்டைக்குள் வியர்வையாய் வழிந்தது. முற்பகலின் நிசப்தத்தில் முடங்கிக் கிடந்தது தெரு. மூடிக் கிடந்த விறகுக்கடை முன்னாலிருந்த மரத் தடிகளின் அடுக்கில் முன்னங்கால்களை உயர்த்தி அமர்ந்திருந்த அணில், சீராகத் தான் கொடுக்கும் குரலுக்கேற்ப வால் தட்டிக்கொண்டிருந்தது. காமாட்சியம்மன் கோவில் நடை சாத்திவிட்டு, அழுக்கு ஈரத் துணியால்

மூடிய பிரசாதப் பாத்திரத்துடன் எதிரில் வந்த குருக்கள்,

தோப்பனார் சௌக்கியமா அம்பீ..?

என்று கேட்டுவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் நடந்து கடந்தார். அவர் கடந்து சென்றபிறகும், அழுத்தமாய் நாசியைக் கீறியது அவர் உடலில் புகைந்த வியர்வை நாற்றம்.

வாசல் கதவில் உள்தாழ்ப்பாள் போட்டிருந்தது. கம்பிவலையில் செய்திருந்த துளையின் வழி கையை நுழைத்து, துருவேறிய தாழ்ப்பாளை விலக்கியபோது, பெரிதாக ஓசையெழுப்பியது. எதிர்ச்சாரியில், பாட்டி வீட்டுக்கு நேர் எதிரே, புதிதாக வந்திருந்த டெய்லர் கடையில், மடியில் புதுத் துணியைக் கிடத்திக் காஜா எடுத்துக்கொண்டிருந்தவர்,

யாருங்க அது?

என்று குரல் கொடுத்தார்.

இந்த வீட்டு ஆள்தான்.

என்று சொல்லிச் சிரித்தான் சந்திரசேகரன்.

சப்தம் கேட்டு, பட்டகசாலையிலிருந்து ஓணான் போல எட்டிப் பார்த்த சீதாச் சித்தி,

வாடா.

என்றாள் வறண்ட குரலில்.

எப்பிடி சித்தி இருக்கே.

என்று கேட்டுக்கொண்டே ரேழியில் செருப்பைக் கழற்றிவிட்டுப் பட்டகசாலைக்குப் படியேறினான். மடியில் கிடத்திய சாய்பலகையில் கைநிறையக் கடுகை அள்ளி உருட்டித் தடவிக்கொண்டிருந்தாள் சித்தி. உருண்ட கடுகுகள் பலகையின் அடியிலிருந்த சுளகிலும், உருளாத கற்களும் தூசிக் காம்புகளும் கையிலும் சேகரமாகின. ஊஞ்சலில் சென்று அமர்ந்து, லேசாகக் காலால் உந்தினான் சந்திரசேகரன்.

தந்தி வந்தவொடனே ங்கொம்மா என்ன செய்ஞ்சா? மயக்கம் போட்டு விழுந்தாளா?

குரலில் வறட்சி மங்காமலே, புன்சிரித்தாள் சித்தி. ஆள் தளர்ந்துவிட்டாள். பாட்டி போனதுக்கப்புறமே, சித்தியின் முகத்தில் களை மங்கிவிட்டது...

ஆச்சு, ஆம்படையானைத் தூக்கிவிட்டேன். பெத்த பிள்ளையை வைசூரிக்குத் தூக்கிக் குடுத்தேன். அறுத்து வந்ததுமே, பெத்த அப்பனைத் தூக்கிவிட்டேன். அடுத்து அம்மாவைப் பார்சல் அனுப்பியாச்சு. இன்னும் எத்தனை பேருக்கு அரிசி போடப் போறேனோ.

என்று உணர்ச்சியற்ற குரலில் சொல்வாள் சீதாச் சித்தி.

பொதுவாகவே, ஒரு பத்துப் பதினைந்து வசனங்கள் வைத்திருக் கிறாள். ஏதாவது சாக்கில், அவற்றைத்தான் திரும்பத் திரும்பப் பேசுவாள். வெவ்வேறு பாவங்களில், ஏற்ற இறக்கங்களில்...

*மாமா எங்கே சித்தி.*

*காமரா ரூம்லே தூங்கறான்.*

*எப்பிடி இருக்கார்?*

*இருக்கான் போ. பொண்டாட்டியைப் பறிகுடுத்தவன்மாதிரி, மோட்டுவளையைப் பாத்துண்டே உக்காந்திருக்கான். ஏண்டா கிச்சா ஒரு கடுதாசி கூடப் போடலை, இத்தனை வருஷமா என்ன பண்ணினாய், எங்கே இருந்தாய், உத்யோகம் என்னாச்சு... எதுக்கும் பதில் சொல்ல மாட்டேங்கறான். ரொம்ப அழுத்திக் கேட்டா, ஏண்டி சீதே, கேள்வியாக் கேட்டுத் தள்ளறே. நான் வந்தது பிடிக் கலையா ஒனக்கு ன்னு அழறான்.*

*பதில் சொல்லத் தெரியாமல் உட்கார்ந்திருந்தான் சந்திரசேகரன். தன்னிச் சையாகக் கால்கள் தரையை உந்தி உந்தி ஊஞ்சலை ஆட்டின. புழக்கடை யில் பாத்திரங்கள் உருளும் சப்தம் கேட்டது.*

*கொல்லைலே யாரு சித்தி?*

*ராமாஞ்சு ஆம்படையா. பாத்திரம் தேய்க்கறா.*

*விச்சு என்ன பண்றான்?*

*கோப்ரட்டிலே கணக்கெழுதற உத்யோகம். மாசமானா, சொளையா முப்பத்தஞ்சு ரூபா கொண்ணந்து குடுக்கறான். அவன் சம்பாத்தியம்தான் இப்பொ மெயின்.*

*ஏன், சின்ன மாமா?*

*அவனா, என்னிக்கி எம்புட்டுக் கொண்டுவருவான்னு பகவானுக் குத்தானே தெரியும். நேத்தி ராத்திரி என்னாச்சு தெரியுமோ? கிச்சா கிட்டே ராமாஞ்சு வாயைக் குடுத்துக் குண்டியைப் புண்ணாக் கிண்டான். இவன் வழக்கம்போலத் தமாஷ் பண்ணினான். அந்தத் திருவாழத்தானுக்கு ருத்ரம் வந்துடுத்து.*

*சின்ன மாமா என்ன சொன்னார் அப்பிடி?*

*வேலையை விட்டுட்டு வந்தா என்னடா கிச்சா. நாங்கள்ளாம் இல் லையா? எனக்கு பிராமணார்த்தத்துக்குக் கூட்டிண்டு போறதுக்கு ஒரு கை கொறையறதேன்னு பாத்துண்டிருந்தேன். நல்லவேளை, நீ வந்துட்டாய் ன்னான்.*

*சின்னமாமா ஏதுக்கு அப்பிடிச் சொல்லணும்.*

*வாக்குச் சனிதான். அவன் ஆட்டமா ஆடிட்டான். மயிராண்டி தயிராண்டின்னு ஒரே கூப்பாடு. மேலாத்துச் சங்கரன்தான் வந்து*

*வெளியிலே கூட்டிண்டு போனான்... யாரை? ராமாஞ்சுவை.*

*சித்தி சிரித்தாள்.*

*அவன் போனபப்பறம் இவன் ஒரே அழுகை. ஒர்த்தன் செத்த துனாலேதானே என் வாழ்க்கையே வீணாப் போச்சுடி சீதா. ஊர்லெ செத்தவனுக்கெல்லாம் தெவசம் போடக் கூப்பிடறானேடி. பெத்த தாயாருக்குக் கொள்ளிபோட பாக்யமில்லாத பாவியாயிட் டேனேன்னு எம்புட்டுப் புழுங்கிண்டிருக்கேன் நானு. இவனுக் கெல்லாம் எம்புட்டுச் செஞ்சிருப்பேன்? இப்பிடி நாக்கிலே நரம்பில்லாமே கேலி பண்றானேடி ன்னு பொலம்பித் தள்ளி னான்.*

*பாவம் சித்தி, கிச்சா மாமா.*

*பாவம்தான். யாருதான் பாவமில்லே. வாழற வயசிலே அறுத்துட்டு வந்து நின்னேனே, நான் பாவமில்லையா? ரேஷன் அரிசிக்கும் ரெண்டு வாழைக்காய்க்கும் ஒருவேளை மிளகுச் சாப்பாட்டுக்கும் உபாத்யாயம் பண்ணிண்டு அலையறானே ராமாஞ்சு, அவன் பாவமில்லையா. அதை விடு, ஒரு சண்டைன்னு வந்தவொடனே, வீட்டை வித்துருவோம். சொத்தைப் பிரிச்சுனுடுவோம் னு இந்தத் தடியன்கள் கத்தறான்களே. சரி, பிள்ளையாப் பொறந்துட்டேள். துட்டை எடுத்து மடிலே கட்டினுடுவேள். அறுத்துட்டு வந்த முண்டைகள் ரெண்டுபேர் இருக்கோமே. எந்த ஆமக்கன்ட்டப் போய் நிப்போம்? சொல்லு...*

*லட்சுமிச் சித்தி எங்கே.*

*மேலாத்துலே அப்பளாம் இடக் கூப்பிட்டா ன்னு போயிருக்கா. ஒங்க மாமனைப் பாவம்ங்கிறியே, லட்சுமி பாவமில்லே? என்னைக் காட்டிலும் எட்டு வயசு சின்னவ. அவளுக்கு இந்தக் கதி வரணுமா சொல்லு. அவ்வளவு ஏன், ங்கொம்மா பாவமில்லையா. பிசாசுக்கு வாக்கப்பட்டு இத்தனை வருஷமாப் புளியமரம் ஏறிண்டுதானே இருக்கா? இன்னிக்கு நீங்கள்ளாம் தலையெடுத்த துக்கப்பறம்தானே கொஞ்சம் மூச்சு விடறா. ஒங்க சித்தப்பா ஒரு தடவை அடிக்கவே போயிட்டார் ங்கொப்பாவை. கூசாமெக் கேட்டானே அந்த மனுஷன். ஓய், இவ எம் பொண்டாட்டியா, ஒம்ம பொண்டாட்டியா?...*

ஆயிரத்தெட்டாவது தடவையாக இந்த வசனத்தைச் சொல்கிறாள் சித்தி. முதன்முதலாகச் சொல்லும் அதே பாவத்துடன் சொல்வாள் ஒவ்வொரு தடவையும். சின்னமனூர் பஸ் ஸ்டாண்டில் போய் இறங்கியவுடனே அம்மாவை அப்பா கன்னத்தில் அறைந்ததிலிருந்து கதை இப்போது ஆரம்பமாகிவிடும் அபாயம் இருக்கிறது. சந்திரசேகரன் அவசரமாகக் கேட்டான்.

*யாரோ செத்துப்போனதா மாமா சொன்னார்ன்னியே. யாராம்?*

*கேட்டேனே. ஒடனே ஊமைப்பிசாசு வாயை மூடிண்டுடுத்து. இரு, இதோ வரேன். வெய்யில்லே வந்த பிள்ளையை வெறுமனே உக்காத்திப் பேசிண்டிருக்கேனே. நான் ஒரு சண்டாளி. இரு. ரெண்டு அப்பளாத்தைச் சுடறேன். வத்தக்கொழம்பு போறுமா, ரசம் வெக்கட்டுமாடா?..*

*இருக்கறதெப் போடு சித்தி.*

*சித்தி அடுக்களைக்குள் போனாள். கும்மட்டி அடுப்பில் கரித்துண்டுகள் விழும் இரும்போசை கேட்டது. பாத்திரங்கள் உராயும் சப்தம். திடீரென்று வெளியே வந்தவள்,*

*நீ வருவியோ ன்னு கேட்டான் ஒங்க மாமன். சந்துரு என்ன பண்ணிண்டிருக்கான் னு கேட்டான். ஆமா..., நீ என்னதாண்டா அம்பி பண்ணிண்டிருக்கே?*

*மிளகுப்பட்டிப் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ்லே டெம்ப்பரரி க்ளார்க்காப் போயிண்டிருக்கேன் சித்தி. எல். ஐ. ஸி. யிலே இன்ட்டர்வ்யூ போயிட்டு வந்தேன்.*

*அனுகூலமாப் பண்ணியிருக்கையோ?*

*நன்னாப் பண்ணியிருக்கேன்.*

*என்னமோடாப்பா, நீங்கள்ளாம் தலையெடுத்துத்தான் ங்கொம்மாவுக்கு விடியணும்.*

**ரா**மானுஜம் மாமா, கிச்சாமாமாவுக்கு இளையவர். ஆறாவது ஃபாரம் இறுதித் தேர்வில் தோற்று, பெரிய மாமா வீட்டை விட்டு ஓடியதும், தாத்தா ராமானுஜம் மாமாவை வேத அத்யயனம் செய்யக் கும்பகோணத்துக்கு அனுப்பிவிட்டாராம். புரோகிதம் செய்வதைவிட மாந்திரீகம் செய்வதில் ஆர்வம் அதிகம் மாமாவுக்கு. தெருவில் மந்திர வித்தை காட்ட வரும் கம்பளத்துக்காரர்களுடன் நெருங்கின நட்பு உண்டு. சூனியம் வைப்பது, எடுப்பது என்று ரொம்ப சுறுசுறுப்பாக இருப்பார்.

ஏதோ ஒரு வேரின் பெயரைச் சொல்லி, அது இருந்தால் போதும், ஐசுவரியம் தேடி வந்து குவியும் என்பார். ஒரு முழுத் தேங்காயை எடுத்துக்கொள்ள வேண்டியது. அதன் உச்சியில் இருக்கும் ஒரு கண்ணில் மட்டும் துளையிட வேண்டியது. தண்ணீரை வெளியேற்றிவிட வேண்டும். தயாராகப் பிடித்து வைத்திருக்கும் பச்சைப் பாம்புக்குட்டியை உயிருடன் தேங்காய்க்குள் செலுத்தி, துளையிட்ட கண்ணை அடைத்துவிட வேண்டியது. தேங்காயை உரியில் கட்டித் தொங்க விட வேண்டும். நாற்பத்தெட்டு நாள் கழித்துத் தேங்காயை ஆற்று நீரில் விட்டுவிட

வேண்டும். அதற்கடுத்த பதினோராம் நாள் எதிரி குடும்பத்தோடு அழிந்துவிடுவான். அந்த ஐம்பத்தொன்பது நாட்களும் விரதம் இருக்க வேண்டும். அசைவம் சாப்பிடக்கூடாது. அகப்பத்தியம் காக்க வேண்டும். ஆயிரம் ரூபாய் தட்சணை கொடுத்துவிட வேண்டும்...

பணம் சேர்ப்பதே குறியாக இருந்தார் மாமா. அதனால்தானோ என்னவோ, அது சேர மறுத்தது; பிடிவாதமாக.

ராமானுஜம் மாமா வரும்போது, மத்தியானம் மூன்று மணியாகி விட்டது. உதிரிப் பூக்களைத் தரையில் கொட்டித் தொடுத்துக் கொண்டிருந்த லட்சுமிச் சித்தியின் அருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான் சந்திரசேகரன்.

*வாடா, தொங்கப்பா. நீ எப்பொ வந்தே.*

*கார்த்தாலேக் காருக்கு மாமா.*

*ங்கொம்மா ங்கொப்பா எல்லாம் எப்பிடி இருக்கா?*

*சௌரியமா இருக்கா மாமா.*

*கீழக்குண்டுவுக்கு வந்துடுங்கோ, இங்கே ஒரு ஒட்டல் போட்டாக் கோடீசுவரனாயிடலாம்னாக் கேக்க மாட்டேங்கறார் ங்கொப்பா. வித்தை இருந்தாப் போறுமா? அதைக் காசாக்கத் தெரிய வேண்டாமா? பைத்தியக்கார மனுஷன்.*

காமிரா உள்ளில் தொண்டையைச் செருமும் சப்தம் கேட்டது.

*இந்தோ, புதுப் பைத்தியம் முழிச்சுண்டாச்சு. லக்ஷ்மீ, ஒரு வாய் காஃபி குடுடி. குடிச்சுட்டு வெளீலே போயிர்றேன். யாரைப் பிடுங்குவோம்னு அலையறது அந்தப் பாம்பு.*

*ஏன் மாமா அப்பிடியெல்லாம் சொல்லறேள்.*

*ஒனக்குத் தெரியாதுடா தொங்கு. சரி. ஒங்க செல்ல மாமனைச் சொன்னா ஒனக்கு ஆகுமா. போ, போய் அவன் கழுத்தைக் கட்டிண்டு தொங்கு.*

கையில் கரண்டியுடன் பட்டகசாலைக்கு வந்த சீதாச் சித்தி,

*ஏண்டா ராமாஞ்சு, இப்பொ இவன் குசுவைக் குடிக்கறே?*

என்றாள்.

ஈரத்துணியின் புழுக்க நெடி எப்போதும் நிரம்பியிருக்கும் காமிரா உள்ளின் மங்கலான இருட்டில், கட்டிலில் சாய்வாகப் படுத்திருந்தார் கிச்சா மாமா. வற்றலாக ஒடுங்கியிருந்த தேகம் சற்று அகலமான கோடு போலக் கிடந்தது.

*யாரு? அம்பியா. வாடா கொழந்தே.*

என்றவாறு கட்டிலைத் தட்டிக் காட்டினார். குரலில் பழைய வீரிய மில்லை.

சொல்லு. என்ன பண்றாய்?

சொன்னான்.

அம்மா அப்பால்லாம் எப்பிடி இருக்கா?... விசாலிக்குக் கல்யாண மாயிடுத்தாமேடா?

தலையாட்டினான்.

எப்பொ உபகாரம் பண்ணணுமோ, அப்பொ உதவாத பாவியா யிட்டேன். அக்கா எத்தனை கஷ்டப்பட்டிருப்பா...

மாமாவின் குரல் நடுங்கியது.

...அக்காவும் அத்திம்பேரும் வல்லையா? நான் அங்கே வந்து இறங் கலேன்னு கோவிச்சுண்டிருப்பார் அத்திம்பேர்.

அதெல்லாம் இல்லே, மாமா. சனிக்கிழமைக் காருக்கு வரேன் னிருக்கா.

மாமா மௌனமாக இருந்தார். கையை உயர்த்தி, சந்திரசேகரனின் தலையை வருடினார். இருவருக்கும் காஃபி கொண்டு வைத்த லட்சுமிச் சித்தி,

கிச்சாண்ணா, ஒம் மருமான் எம்புட்டுப் பெரிய ஆளாயிட்டான் பாத்தியா. மீசையெல்லாம் முளைச்சாச்சு.

என்றவாறே விளக்கின் சுவிட்சைத் தட்டிவிட்டுப் போனாள். விளக்கின் ஒளி பாய்ந்ததும் துலக்கமாகிய மாமாவின் முகத்தில் சடாரென்று ஏகப்பட்ட வருஷங்கள் கூடிவிட்டதாக உணர்ந்தான் சந்திரசேகரன். கண்களைச் சுற்றிக் கருவளையமும், விழியோரங்களில் கோழிக்கால் அடையாளமும். உடல் கறுத்திருந்தது. முறுக்கப்படாமல் தொங்கிய மீசை முழுக்க நரைத்திருந்தது. மூங்கில் குச்சிகள் போலச் சதை வற்றி ஒடுங்கி விறைத்திருந்த முன்னங்கைகள். மாமா அணிந்திருந்த முண்டா பனியனில் அங்கங்கே துவாரங்கள் பொட்டுவிட்டிருந்தன.

ஒங்களையெல்லாம் திரும்பப் பாப்பேனான்னு ஆயிருத்துடா அம்பி.

ஏன் மாமா. என்னதான் நடந்தது?

சொல்றேன். அப்பறமாச் சொல்றேன். எனக்கும் யார்ட்டெயாவது சொல்லித்தானே ஆத்திக்கணும்.

சாமிக்கோனாருடைய தென்னந்தோப்பில் மரங்கள் விறைத்து நின்றிருக்க, மெல்ல அந்தி இறங்கிக்கொண்டிருந்தது. தென்னை மர

வரிசைக்கிடையில் உயர்ந்திருந்த சிறு செடிகளில் வண்ணத்துப் பூச்சிகளும் தட்டாரப் பூச்சிகளும் அமர்ந்தெழுந்து திரிந்தன. வேலிக்கு மறுபுறமிருந்து எழுந்த தாழம்பூ மணம் காற்றின் அலை மாற்றத்துக்கேற்ப வந்து வந்து கலைந்தது. சற்றுத் தொலைவில் மாதுள மரத்தின் பூக்கள் ரத்த நிறத்தில் சிதறலாகப் பூத்திருந்தன. அருகில் ஒட்டி நின்றிருந்த எலுமிச் சையில் சிறுசிறு பச்சைப் பந்துகள் திரண்டிருந்தன.

மாமா சிகரெட்டைத் தரையில் அழுத்தித் தேய்த்தார். கடந்த ஒரு மணி நேரமாகச் சொல்லி வந்திருந்த கதையின் இறுதிப்பகுதி நெருங்கிய சமயத்தில் அவர் அமைதியாகிவிட்டது பாடாய்ப் படுத்தியது சந்திரசேக ரனை. அவரைச் சொல்லத் தூண்டவும் தயக்கமாக இருந்தது. அணில் ஒன்று தென்னை மரத்தில் ஏறியும் இறங்கியும் விளையாடுவதை வேடிக்கை பார்த்தவாறிருந்தான்.

மாமா தொண்டையைக் கனைத்துக்கொண்டார்.

...இப்போத் தோணறதுடா அம்பி. ஸோமிட்ஸியாவின் உயர்மட்ட அரசியல்லே மிக முக்கியமான பங்கெடுத்துக்கற ஆளாகிட்டேன்னு ஒரு பெருமை எனக்குள்ளே உண்டாயிருக்கணும் அன்னிக்கி ராத்திரி. இல்லாட்டா, எனக்குச் சம்பந்தமில்லாத அந்த விவகாரத் திலே தலை குடுத்திருக்கவே மாட்டேன். வெள்ளைக்காரன் காலத் திலேருந்து எனக்குள்ளே படிஞ்சிருந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் சிதறினதுக்குக் காரணம் என்னன்னு யோசிச்சா, ஒரு தர்க்கத்துக்கும் பிடிபடமாட்டேங்கறது. என்ன, நான் சொல்றதைத் தட்டமுடியாத இக்கட்டிலே இருந்தாரில்லையா அந்த ஈனோாங் கிழவர், அதுதான் என் தலைக்கேறியிருந்திருக்கணும். அதிகாரத்தின் ஒவ்வொரு சொட்டுலேயும் அதீதமான ஒரு ருசி இருக்குடா அம்பி.

மாமா இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தார். அவருக்குப் பிடிக்குமேயென்று,

ப்ளேயர்ஸ் ஒரு பாக்கெட் குடுங்க.

என்று கடைக்கார முத்தையாவிடம் சந்திரசேகரன் பணத்தை நீட்டிய போது,

அதெல்லாம் வெலை ஜாஸ்திடா அம்பி. பாஸிங் ஷோ வாங்கு போறும்.

என்றார் மாமா.

இருக்கட்டும் மாமா. ஒங்களுக்கு ப்ளேயர்ஸ்தானே பிடிக்கும்.

என்று வாங்கிக்கொண்டு வந்தான். மாமா அவனைப் பிரியமாகப் பார்த் தார்.

பெரிய பயலாயிட்டியேடா கொழந்தே. ஒனக்கு நான் வாங்கிக் குடுத்த காலம் போயி, ஒங்கிட்டெ நான் வாங்கிக்கறேன் இப்போ.

குரல் கனிந்திருந்தது. சிறுவயதில் மாமா மிகவும் உயரமானவராகத் தெரிவார். இப்போது, சந்திரசேகரனின் உயரம்தான் இருந்தார். அதனாலேதானோ என்னவோ, அவரிடம் தனக்குப் பிரியம் அதிகமாகி விட்டதாகத் தோன்றியது சந்திரசேகரனுக்கு. தன்னைச் சரிசமமாக மாமா நடத்துவதில் பெருமையாகவும் இருந்தது.

தோப்பில் வந்து மணல் குவியலில் உட்கார்ந்து முதல் சிகரெட் பற்றவைத்துக்கொள்வதற்கு முன்னால்,

ஒனக்கு அக்னிஹோத்ரம் உண்டோ அம்பி.

என்று சிரித்துக்கொண்டே கேட்டார் மாமா.

இல்லே மாமா.

சந்திரசேகரன் கூச்சத்துடன் சிரித்தான்.

நல்லதுதான். இந்தச் சனியனைப் பழகாமெ இருக்கறதுதான் நல்லது. பாரேன், பென்ஷன் பணத்திலே சிகரெட்டுக்கு இம்புட்டுச் செலவாறதேன்னு மனசுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா. ஆனா, விட முடியலே.

...ஆச்சா, அந்த ஜெர்மானியனோட நடக்கப் போயிட்டு கூடாரத்துக்குத் திரும்பினப்போ அந்த ஸோமிட்ஸியன்களோட கூடாரங்கள் மேல இருட்டு அடைஞ்சுடுத்து. ஸோமிட்ஸுவோட கூடாரத்திலெ மட்டும் விளக்கெரிஞ்சது. அந்தப் பையனுக்கு ராத்திரியிலெ ரொம்பநேரம் படிக்கிற பழக்கம் உண்டுன்னு வெய்ஸ் முல்லர் சொன்னான். எங்க ரெண்டுபேருக்கும் லங்கர் நாயக் தோர்ஜீ சாயா கொண்டு வந்து குடுத்தான். நானும் வெய்ஸ் முல்லரும் நடக்கப் போனதுக்கப்பறம், ஸோமிட்ஸியாக்காரங் களுக்குள்ளே பலமான வாய்த் தாவா நடந்ததுன்னு சொன்னான். சரின்னு கேட்டுண்டேன்.

வெய்ஸ்முல்லர் குட்நைட் சொல்லிப் பிரியறப்போ, நாயக் கிஷன் லால் என்கிட்டெ வந்து, ஸோமிட்ஸியக் கூடாரங்களுக்கு இரவுக் காவல் பாரா எப்படின்னு அஸ்ஸாமியில் கேட்டான். அவாளோ, நிராதரவான அரசியல் அனாதைகள். ஆயுதமும் இல்லை. அவன் களைத் தாக்கத் தேடி வருவாரும் இல்லை. அப்பறம் என்னத்துக்கு விசேஷக் காவல்?

வழக்கம் போல இருக்கட்டும். உபரியாக ஒன்றும் வேண்டாம்ன் னேன்.

என் ஸர்வீஸில் நான் செய்ஞ்ச மிகப் பெரிய பிசகு அதுதாண்டா அம்பி. ஸர்வீஸ் ரெக்கார்டில் கறுப்புப் புள்ளி விழக் காரணமான முடிவு அது. அன்னிக்கி ராத்திரி மட்டும் ஒவ்வொரு கூடாரத்துக்கும்

இரண்டிரண்டு ஸென்ட்ரி போட்டிருந்தால், யார் கண்டது, மிக உசத்தியான போஸ்ட்டில் இருந்து ரிட்டயர் ஆகியிருப்பேனோ என்னவோ? இந்த மாதிரி மன்னிப்புக் கடுதாசி குடுத்துட்டு, விருப்ப ஓய்வு வாங்கிண்டு, பென்ஷன் வாங்கற பரிதாபக் கிழவனா இருந்திருக்க மாட்டேன். எத்தனை விசாரணை. எத்தனை கேள்வி. எத்தனை மனப் புழுக்கம்.

என் சிநேகிதன் நானாவதியோட தாய்மாமா பிரிகேடியர் ஷிவ்லால் ஷிண்டேதான் இந்தக் கேஸுக்கு விசாரணை அதிகாரியா வந்தார். எவ்வளவோ எடுத்துச் சொன்னார். இது ஸிவிலியன் மர்டர் மாதிரித்தான். மிலிட்டரி ரூல்ஸ் பிரகாரம் நடவடிக்கை எடுக்கற துக்கு ஒண்ணுமேயில்லை. மிஞ்சிப் போனா, ஒரு வார்னிங் லெட்டர் குடுப்பாங்க. இதுக்காக நீங்க ஸர்வீஸெ விட்டுப் போகணுங்கிறதில்லே...ன்னு பன்னிப் பன்னிச் சொன்னார். நான் கேக்க மாட்டேனுட்டேன். அது அவ்வளவுதான். அந்தச் சம்பவத் தோட, ஒரு மிலிட்டரி ஆஃபீஸர்னு எனக்குள்ளெ இருந்த கம்பீரம் நொறுங்கிப் போயிடுத்துன்னு தோணினது...

கிஷன்லால் ஸல்யூட் வெச்சுட்டுப் போனானா, அப்புறம் நான் படுத்துக்கப் போய்ட்டேன். ஒரு ராத்திரி ஆரமிச்சதிலேயிருந்து, நாலு மணிநேரத்தில் எவ்வளவு தகவல்கள் மண்டைக்குள்ளெ ஏறிடுத்து. என் தலை கனத்திருந்தது. தூக்கத்தில் கண் சொருகும் சமயத்திலே பழம்பாடல் வரி ஒண்ணு எனக்குள்ளே ஓடித்து.

ஆற்றங்கரை மரமும் அரசிருந்த வாழ்வும் வீழுமன்றே...

நீண்ட பெருமூச்சு விட்டார் மாமா. திடீரென்று ஞாபகம் வந்ததுபோல, அவசரமாய்க் கேட்டார்:

ஒன்னோட வாத்தியார் எப்பிடிடா இருக்கான்?

யாரு மாமா, செல்லச்சாமி வாத்தியாரா?

அவன்தான். இன்னமும் தக்ளி நூக்கறானா?

அவர் போய்ச் சேந்துட்டார் மாமா...

என்னடா சொல்றே?

கொஞ்சம் சித்த சுவாதீனமில்லாமெ இருந்தார். ஒரு நாள் ஸூஸைட் பண்ணினுட்டார்.

அட தெய்வமே... எப்பிடிரா...?

பாலிடாலைக் குடிச்சுட்டார்.

எப்போ?

ரெண்டுவருஷம் ஆயிடுத்து மாமா. விசாலி அக்கா கல்யாணத்துக்கு மறுமாசம்.

எவ்வளவு ஜலம் ஓடிடுத்துடா அம்பி. பழைய ஞாபகங்களுக்கும் இப்பொப் பாக்கற விஷயங்களுக்கும், ரெண்டுலேயும் நான் இருக்கேன்ங்கற ஒரு சம்பந்தம் மட்டும்தான் இருக்கு. எல்லாமே தலைகீழாயிடுத்தே...

தனக்குள் கிறங்கி மூழ்கினார் மாமா.

கூடு திரும்பும் பறவைகளின் கெச்சட்டத்துடன் இருள் பூத்துத் தனியாக நின்றிருந்த மாமரத்தின் மேல் சந்திரசேகரனின் கவனம் குவிந்தது. பழம் அபூர்வ ருசியுடன் இருக்கும். அந்த மரத்துப் பழங்களை மட்டும் விலைக்கு விற்பதில்லை கோனார். வேண்டியவர்களுக்கு இனாமாகக் கொடுப்பார்.

நம்ம தோப்புலெ விளையிற பழங்களுக்கு வேணும்னா நாம சொந்தக்காரங்களா இருக்கலாம். ஆனா, அமிர்தம் எல்லாருக்கும் சொந்தமில்லையா. பூமி மனசு கனிஞ்சு குடுக்குறதைக் கிரயத்துக்கு விக்யலாமா?

என்பார்... மாமா திரும்பவும் பேசத் தொடங்கினார்:

அதிகாலம்பற வயர்லெஸ் ஆப்பரேட்டர் கெய்ஸிங் வந்து எழுப்பினான். ஹெட் க்வாட்டர்ஸிலேர்ந்து விசேஷச் செய்தி வந்திருந்தது.

'வந்தவர்களை அவர்கள் போக்கில் போக விடுங்கள். ஐம்பது மைல் கடக்கும்வரை அவர்களறியாமல் கண்காணித்தால் போதுமானது. ஐம்பதாவது மைலில் வேறொரு அதிகாரி பொறுப்பெடுத்துக் கொள்வார்.'

ன்னது அந்தச் செய்தி. அவாளோட கூடாரத்துக்குப் போனேன். அங்கே என்ன நடந்திருந்தது என்கிறாய் அம்பி? அந்தக் கிழவன் ஈனோங் அலங்கோலமாக் கிடந்தான். ஆடு அறுக்கற மாதிரி அவனோட கழுத்தை அறுத்திருந்தது. கடுமையா ரத்தம் வெளியேறியிருந்தது. தொட்டுப் பாத்துட்டு, ஃபூ தோர்ஜீ உதட்டைப் பிதுக்கினான். கிழவனோட கோஷ்டியைச் சேர்ந்த எல்லாருக்குமே எங்கள் அளவுக்கு அதிர்ச்சிதான். சைகையிலே தங்களோட பயத்தைப் பகிர்ந்துண்டான்க. ஸோமிட்ஸுப் பையனைக் காணலே. அந்தப் பொம்மனாட்டியும் ஊமையன்கள்ளே ரெண்டு பேரும் காணாமப் போயிருந்தான்க. அதிலே அந்தக் குள்ளனும் ஒருத்தன். ஜெர்மானியன் வெய்ஸ்முல்லரையும் காணோம்.

உடனடியா ஆட்களை அனுப்பினேன் தேடறதுக்கு. வெய்ஸ்முல்லர் மட்டும் பிடிபட்டான், இருபத்தைஞ்சாவது மைலில். தனக்கு ஒண்ணும் தெரியாதுன்னும், நடப்புச் சூழ்நிலையில் வெறுப்பானது

னாலே, தனியாகவே தப்பிப் போயிண்டிருந்ததாகவும் சொன்னான்.

நேத்தி ராத்திரிக் கனவுலே கூட அவன் வந்தாண்டா அம்பி. என்னைக் காட்டிக் குடுத்துடாதே. என் பூர்விகம் தெரிஞ்ச ஒரே ஆள் நீ. நான் உங்கிட்டெச் சொன்னதெல்லாம் யார்ட்டெயும் சொல்லிடாதே ன்னு மன்னாடற மாதிரி ஒரு பார்வையோட அவன் கண்கள் ரெண்டும் என்னோடெ இருந்துண்டேயிருக்கு இத்தனை வருஷமா... ஆயிரந்தான் தப்பானவனா இருக்கட்டுமே, அபயம்னு ஒருத்தன் கேட்டுட்டான்னா அவனைக் காட்டிக் குடுக்கறது மனுஷ தர்மமாகுமா?... அப்பறமா அவனை நாடுகடத்திட்டா ன்னு கேள்விப்பட்டேன்.

அந்தப் பையனைத்தான் கண்டுபிடிக்க முடியலை. நானாவதியோட அட்ரஸைப் பென்ஷன் விலாசமாய்க் குடுத்துட்டு ஊர் ஊராய்த் தேட ஆரமிச்சேன் அவனை. அவனைப் பாத்த மொதல் நிமிஷம் எனக்கு என்ன தோணித்து தெரியுமாடா அம்பீ? நம்ம சந்துரு வயசு இருக்குமா இவனுக்கு ன்னுதான். ஒருதடவை சந்திச்சதிலேயே என் மனசு முழுக்க வந்து உக்காந்துட்ட அந்தப் படவாவை எப்பிடியாவது தேடிப் பிடிச்சுப் பாத்துடணும்னு கிறுக்குத்தனமா ஒரு வெறி. அவன் நெனைச்ச மாதிரி சுதந்திரமா வாழறானா, சந்தோஷமா இருக்கானா ன்னு பாக்கணும்.

இப்பொ நெனைச்சாப் பைத்தியக்காரத்தனமாத் தோணத்தான் செய்யறது. ஆனா, பிரியத்தை விடப் பைத்தியக்காரத்தனமான ஒண்ணு பூலோகத்திலேயே கெடையாதுடா அம்பி.

எந்த நகரத்துக்குப் போனாலும், வீடுகள்லே காவலுக்கு இருக்கிற கூர்க்காக்கள் கண்ணுலே பட்டால் கொஞ்சம் கூர்ந்து கவனிப்பேன். அந்த ஸோமிட்ஸுப் பயலா இருக்குமோ, இல்லே, தப்பிச்சுப் போன ஊமையன்களாயிருக்குமோ ன்னு. ஆனால் பார், அவங்கள்லே ஒரு முகத்துக்கும் இன்னொரு முகத்துக்கும் வித்தியாசமே தெரியாது...

**மா**மா மறுபடியும் மௌனமானார். பாதி மூடிய கண்களில் காட்சிகள் விரைந்துகொண்டிருப்பதுபோல இமைகளுக்கு உள்புறம் விழிக் கோலிகள் உருண்டு அலைந்தன. தரையில் கொஞ்சம் தள்ளிச் சின்னப் பொட்டாக ஒரு சிவப்பு வெல்வெட் பூச்சி நகர்ந்து கொண்டிருந்தது. செல்லச்சாமி வாத்தியார் அதன் பெயர் இந்திர கோபம் என்று சொல்வார். இன்னும் ஏகப்பட்ட சொற்கள் அவரிடமிருந்து தெரிந்துகொள்ளக் கிடைத்திருக்கின்றன. அசுணப் பறவை, சாதகப் பட்சி,

அனிச்சப் பூ, பேசா மடந்தை... மாமாவுக்கு வாத்தியாருடன் நல்ல சிநேகிதம். பறவைநத்தத்துக்கு மாமா வரும்போதெல்லாம் மணிக்கணக் காக உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள் இருவரும்...

நனவுலகத்துக்குத் திரும்பியவர் மாதிரி கண்களைத் திறந்து தொண்டையைக் கனைத்துக்கொண்டார் மாமா.

...இப்போ நெனைச்சுப் பார்த்தா எல்லாமே புதிர் மாதிரி இருக்குடா அம்பி. நான் ஏன் மிலிட்டிரிக்கிப் போனேன். அத்தனை வருஷ ஸர்வீஸுக்கு அப்பறம் வேண்டாத விஷயத்திலே போய் ஏன் மூக்கை நொழைச்சேன். அத்தனை தூரத்தையும் அத்தனை வயசையும் பத்திரமாய்த் தாண்டி வந்த கிழவன், என்னோட இடத்திலே வந்து ஏன் செத்துப் போனான்... தற்செயல்கள். எல்லாமே தற்செயல்தான். கல்கியோட தொடர்கதை நகர்ற மாதிரி.

மாமா சிரித்தார். சந்தோஷமான சிரிப்பு அல்ல அது. பற்கள் பலவும் உதிர்ந்துவிட்ட மாமாவின் வாய் சிரிப்பதற்காகத் திறந்தபோது, மேலும் வசீகரமிழந்தது முகம்.

நம்ம கணக்குகளெல்லாம் வெறும் ஆறுதலுக்குத்தான். நம்மளும் கணக்குப்போட்டோம்ங்கிற ஆறுதலுக்கு. மத்தபடி, நடக்கிறதெல்லாமே தர்க்கத்தை மீறித்தான் நடக்கறது. வெறும் சாப்பாடு, தூக்கம், துணிமணி, படுக்க இடம் இதோட மனுஷங்க தேவை நின்னுடுத்துன்னு வையேன். லோகத்திலே இத்தனை களேபரங்கள் நடக்க வாய்ப்பேயில்லைடா அம்பீ. யாரோ பைத்தியக்காரன் கைக்கு வந்தபடி கிழிச்சுப்போட்ட காயிதக் குப்பை மாதிரி இருக்கு வாழ்க்கை. நடக்கற எந்த ஒண்ணுக்கும் நிஜமான காரணம் புரியறதில்லே. என்னையே பாரேன், ஸெர்வீஸை விட்டு வெளியிலே வந்தவன், நேரா ஊருக்கு வந்து சேராமெ ஊர்ஊரா ஏன் அலைஞ்சேன், யாரோ ஒரு சின்னப் பயலைத் தேடி. பெத்த தாயோட கடைசி முகத்தைக் கூடப் பாக்கக் குடுத்து வைக்காமே.

குடும்பத்தோட மூத்த பிள்ளையாப் பிறந்துட்டு, பெத்த தகப்பனுக் குக் கொள்ளி போடலே. பாசமா வளத்த தாய்க்கும் கொள்ளி போடலே. எனக்குக் கொள்ளிபோட , கல்யாணம் பண்ணிப் பிள்ளை பெத்துக்கவும் இல்லே.. சண்டாளண்டா அம்பி நானு... சண்டாளன்.... சண்டாளன்...மகா சண்டாளன்...

மடேர் மடேரென்று தலையில் அடித்துக்கொண்டு குமுறினார். சந்திரசேகரன் மாமாவின் கைககளை இறுகப் பிடித்துக்கொண்டான்.

இன்று இருள் கடுமையாக இருக்கிறது. கருமேகங்கள் அடர்ந்த

வானத்தில் ஒரு நட்சத்திரம் கூடத் தட்டுப்படவில்லை. காற்றில் ஈரம் ஜாஸ்தியாய் இருக்கிறது. இருட்டின் மணத்தில் லேசான மண்வாசனை கலந்திருக்கிறது. எங்கோ மழை பெய்துகொண்டிருக்கிறது. சாமிக் கோனார் தோப்பின் மர ஓலைகளிலும் கிளைகளிலும் அவலமான சலனங்கள்.

தவளைகளின் சங்கீதம் ஆரம்பித்துவிட்டது. அடிவயிற்றிலிருந்து சீராகக் கிளம்பும் ஒலியில் பிரமாதமான தாளக்கட்டு செறிந்திருக்கிறது. உரிய இடைவெளிகளில் துணைப்பாட்டு மாதிரிச் சேரும் கூகையின் குரல். மழையை வரவேற்கத் தோப்பின் உறுப்பினர்கள் எல்லாருமே தயாராய் இருக்கிறார்கள், மழை வரும் நாட்களில் ஒன்றாயிருந்து ஆனந்திக்கவும், மழை வறண்ட நாட்களில் ஒன்றாயிருந்து வெதும்பவு மாக வாழ்முறை அமைந்த உறுப்பினர்கள்.

இரண்டு கைகளாலும் தலையை இறுக்கிப் பிடித்துக் கவிழ்த்திருந்த மாமாவின் தோளைத் தொட்டு, சந்திரசேகரன் மிருதுவாய்ச் சொன்னான்.

போறும் மாமா. போலாம்.

சொன்ன பேச்சுக் கேட்கும் குழந்தையின் பாவனையுடன் பவ்வியமாக உடனே எழுந்தார் கிச்சா மாமா.

தோட்டத்தின் மூங்கில் படல் கதவைத் திறந்து அவர்கள் வெளியேறும்போது, மழையின் முதல் சொட்டு தன் முன்னங்கையில் விழுந்ததை உணர்ந்தான் சந்திரசேகரன்.

*

## பின்னுரை

**எ**ன்னுடைய இரண்டாவது நாவல் இது.

குறிப்பான எந்தத் திட்டங்களும் இல்லாமல், தோன்றும்போது தோன்றுவதை எழுதுகிறவனாகவே நவீனத் தமிழ் இலக்கியத்தோடு ஊடாடி வந்திருக்கிறேன். சில வரிகளே கொண்ட கவிதையாக இருந்தாலும் சரி, பக்கம் பக்கமாக எழுத அழைத்துச் செல்லும் நாவலாக இருந்தாலும் சரி, அந்தப் படைப்பின் முதல் சொட்டு எனக்குள் எப்போது எவ்வாறு விழுந்தது என்று யூகிக்க முடிந்ததேயில்லை. அதற்காக, அதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் நான் பின்வாங்கியதுமில்லை; வந்து கலைந்த கனவிற்கான நனவுலகக் காரணிகளை அறிந்துவிட முயலாதவர்கள் வெகு சொற்பமாகவே இருக்கக்கூடும்.

சில வருடங்களுக்கு முன்னால், திபெத்திய இளம் சந்நியாசி ஒருவன் பல நாட்கள் மலையேறி ரகசியமாக இந்தியாவுக்குள் நுழைந்தது பற்றிப் பரபரப்பாகச் செய்திகள் வந்தன. சீனாவின் தூண்டுதலின் பேரிலேயே அந்தச் சிறுவன் வந்து சேர்ந்தான் என்றும், இல்லை, சீனாவின் விருப்பத்துக்கு எதிராகத் தப்பி ஓடி வந்துவிட்டான் என்றும் விதவிதமான அரசியல் ஹேஷ்யங்கள் உலவின. பிறகு வழக்கம்போல எல்லோரும் மறந்து விட்டார்கள். அந்தப் பையனும் முழு வாலிபனாகியிருப்பான் இப்போது.

அந்தச் சமயத்தில் என்னைப் பீடித்திருந்தது அந்தச் செய்தி. ஆசையை அறவே அழிக்கச் சொன்ன புத்தர்பிரானின் வழித்தோன்றலாகத் தன்னை வரித்துக் கொண்ட துறவியை அரசியல் தலைமை தொடர்பான காரணங்கள் தேசம் விட்டு தேசம் துரத்துவதில் இருந்த ஆழ்ந்த முரண் பல காலம் உறுத்திக் கொண்டிருந்தது.

*1990* -களின் துவக்கத்தில் கோவில்பட்டியில் இருந்தபோது, The Devil's Guard என்றொரு புத்தகம் படிக்கக் கிடைத்தது. ஜெர்மானிய

ராணுவத்தில் உயர்நிலை அதிகாரியாகப் பதவி வகித்து, ஸோவியத் ரஷ்யாவில் போர் புரிந்து, இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஸோவியத் துருப்புகளிடம் சரணடைய விருப்பமின்றித் தப்பி வந்த ஒரு முன்னாள் நாஜியின் சுயசரிதம் போன்ற நூல் அது. உலகப்போர் முடிந்த பிறகு, ஃபிரான்ஸ் அரசாங்கத்தின் கூலிப்படை அதிகாரியாக மாறி வியட்நாமுக்குள் சென்று பணிபுரிந்த நாட்களைப் பற்றியது. (இந்த நாவலை முன்னிட்டு மீண்டும் ஒருமுறை படித்து விடுவதற்காக அந்த நூலைத் தேடியபோது, கிடைக்கவில்லை. இத்தனைக்கும் என்னிடம் சொந்தமாகவே இருந்த நூல்தான் அது. ரூபாய் நாணயங்களைப் போல, புத்தகங்களுக்கும் தன்னிச்சையான பிரயாணம் ஒன்று இருக்கிறது என்று ஆறுதல்படுத்திக்கொண்டேன்.) அவர் தன்னுடைய அசல் பெயரை வெளியிடத் தயாராயில்லை. ஜோஸஃப் ஹான்ஸ் வெய்ஸ்முல்லர் என்ற புனைபெயரில்தான் சொல்ல விரும்பியதைச் சொல்லியிருக்கிறார் அந்த நூலில்.

வெவ்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு நாடுகளை விட்டு வெவ்வேறு காலகட்டங்களில் புலம் பெயர்ந்திருந்தாலும் திபெத்தியத் துறவிச் சிறுவனுக்கும், ஜெர்மானிய ராணுவ அதிகாரிக்கும் சம்பவித்த வெளியேற்றங்களின் ஒற்றை அடிப்படையாகத் தென்பட்ட அகதித் தன்மை வெகுநாட்களுக்கு என்னுள் தொந்தரவாகக் கிடந்தது.

**பு**னைகதையின் உயிர் அதன் சாரத்திலில்லை, உருவத்தில்தான் இருக்கிறது என்று எனக்கு ஒரு நம்பிக்கை. சொல்லித் தீர்ந்துவிட்டன எல்லாக் கதைகளும். மறுகூறலுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் புனைவு, சொல்லலின் நூதனத்தில் மட்டுமே தன் உயிரை வைத்திருக்கிறது.

ஒரு கதையின் வடிவத்தில் பல கதைகளைச் சொல்லிப் பார்ப்பது என்ற முயற்சியை எனது முதல் தொகுப்பான **ஒளிவிலகலில்** உள்ள கதைகள் அனைத்திலும் செய்திருந்தேன். அந்தக் கதைகளைக் கைப்பிரதி யாகப் படித்தபோதெல்லாம், நண்பர் சாரு நிவேதிதா சொல்வார்:

> இந்தக் கதைகள் ஒண்ணொண்ணையும் ஒரு நாவலா எழுதலாமே நீங்க.

நான் சிரிப்பேன். ஒருபோதும் முயற்சித்ததில்லை.

பகடையாட்டைத்தையும் ஒரு நீண்ட சிறுகதையாகத்தான் எழுதியிருந்தேன். மேற்சொன்ன இளம்துறவியும், அவனுடைய பொறுப் பாளராக உள்ள கிழவரும், ராணுவ அதிகாரியும், ஒரே குழுவாக இந்தியா வுக்குள் நுழைவதாகவும்,மேஜர் க்ருஷ் என்ற இந்திய ராணுவ அதிகாரி யைச் சந்திப்பதாகவும் எழுதப்பட்ட கதை. இறுதியில் நேரும் குயுக்தி யான சிறு திருப்பத்தின் விளைவாக, கதையின் அடிப்படையே தலை கீழாக மாறிவிடும் விதத்தில் எழுதப்பட்டிருந்தது. கைப்பிரதியைப்

படித்துவிட்டு, நண்பன் தண்டபாணி சொன்னான்.

இது ஒரு சிறுகதைக்கான விஷயமே இல்லை. நாவலாக வர வேண்டியது.

பகடையாட்டம் என்ற தலைப்பிலேயே எழுதப்பட்ட அந்தக் கதையை மறுபடியும் வாசித்தபோது, தண்டபாணி சொல்வது சரிதான் என்றே எனக்கும் பட்டது. இதற்கு வாகாக, அந்தச் சமயத்தில் இரண்டு புத்தகங்கள் வாசிக்கக் கிடைத்தன.

ஆஷ்விட்ஸ் வதைமுகாமின் தலைமைப் பொறுப்பு வகித்த ருடால்ஃப் ஹெஸ்ஸின் The Commandant of Auschwitz என்ற வாக்குமூலம் மற்றும் லாப்ஸங் ரம்ப்பாவின் The Rampa Story. வதை முகாம் நடவடிக்கைகளின் நியாயப்படுத்தலாக ஒன்றும், ஆக்கிரமிப்பின் கொடுமைகளை எடுத்துச் சொல்லுவதாக இன்னொன்றும் அமைந்த நூல்கள்.

இந்த நாவலுக்கான களம் உருவான விதம் இது.

முன்னரே எழுதியிருந்த சிறுகதையின் பிரதான பாத்திரங்களை அப்படியே தக்கவைத்துக்கொண்டு அகலமாகக் கதை வளர்ந்தது. எழுதிச் செல்லும் பாதையில் நுண்ணிய அளவில் தனிமனிதர்களுக்கிடையிலும், மகத்தான அளவில் அமைப்புக்கும் தனிமனிதனுக்கும் இடையிலும் நிலவும் உறவுநிலைகளின் பின்புலமாகச் செயல்படும் உளஅரசியலைப் பெருமளவில் கவனம் கொண்டு நகர்ந்தது.

என்னுடைய முதல் நாவலான **குள்ளச் சித்தன் சரித்திரத்தை** எழுதத் தூண்டுதலாகவும், உதவிகரமாகவும் இருந்த நூல்களின் பெயர்ப் பட்டியலைப் பார்த்துவிட்டு, இந்தப் பட்டியலால் வாசகனுக்கு என்ன லாபம் என்கிற மாதிரிக் கேள்வியெழுப்பினார் ஒரு நண்பர். வாசிப்ப வரோடு உரையாடக் கிடைத்த சந்தர்ப்பத்தில், அந்த நேரத்துக்கு இந்த நாவல் சம்பந்தமாக மனதில் தோன்றுவதையெல்லாம் கொட்டிவிடும் ஆசைதான் காரணம். தவிர, நாவலின் கதாபாத்திரங்கள் மற்றும் சம்பவங் களின் ஊடாக ஓடும் நீரோட்டம் என்னுடைய அக அவசங்கள் சார்ந்தவை யாக இருந்தபோதிலும், புறக் களம் தொடர்பான மூலங்களை எழுத்தில் பதிவு செய்யும் நேர்மை குறித்த அக்கறையும் அவசியமானதுதானே.

**மி**ன்சார ரயிலின் நெரிசலில் ஓரளவு பாதகமின்றிப் பயணம் செய்து அன்றாடம் அலுவலகம் சென்று மீள்வதும், மாத ஆரம்பத்தில் கை சேரும் சம்பளத்துக்குள் அந்த மாதத்தையும், எதிர்காலத்தின் நிச்சயமின் மையையும் திணிக்கும் பிரயத்தனத்தில் சதா ஈடுபட்டிருப்பதுமான வாழ்க்கை முறை என்னுடையது. இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக நானே தேர்ந்துகொண்ட வாழ்முறைதான் இது என்பதால்,

இதன் ஆதாரத்தில் உள்ள சாகச வறட்சிக்கும் முழுப்பொறுப்பு - ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் மாத்திரம் - நானேதான்.

இதற்கு ஈடுகட்டும் விதமாகத்தான் புனைகதை என்று வரும் போது, அதன் உருவத்திலும் சொல்முறையிலும், வேறுவேறு விதமாகப் பயணம் செய்ய ஆசைப்படுகிறேனோ என்று கேட்டுக் கொள்கிறேன். மறுபுறம், இந்த மாதிரியான நேரடிக் கேள்விகளுக்குள் ஒருபோதும் சிக்கக் கூடியதில்லை படைப்புணர்வின் உந்துதல் என்று ஒரு சமாதான மும் தோன்றுகிறது.

தவிர்க்க முடியாத இன்னொரு கேள்வியும் இருக்கிறது.

கற்பனையான நாடு ஒன்றை உருவாக்க வேண்டிய அவசிய மென்ன? உலக வரைபடத்தில் இருக்கும் ஒரு நாட்டைக் களமாகக் கொள்வதில் என்ன சிரமம்?

இந்த கேள்வியை இன்னும் ஆழமாக எடுத்துக்கொண்டு, பொதுவான அரசியல் சித்தாந்தங்கள் மற்றும் கருத்தியல் நிலைபாடு களின் புகார்க் கணைகளிலிருந்து தப்பிக்கும் விதமாகத்தான் இந்த உத்தி பயன்படுகிறதோ என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கேள்விக்கு அறுதியான பதில் எதுவும் என்னிடம் கிடையாது. ஆனால், சமூகவியல் கேள்விகள் மாத்திரமே அறுதியானவை என்று சொல்வதற்கில்லை.

நேரடி அரசியல் கருத்துக் கள மோதல்களில் பங்கெடுக்காமல் விலகி நிற்பதும் அழுத்தமானதொரு அரசியல் செயல்பாடுதான் என்று தீர்மானகரமாக அறிவிக்கப்பட்டுவிட்ட காலகட்டம் இது. தனிப்பட்ட சார்பு நிலை கொள்ளாத மனிதர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதப்படும் நாட்கள். இதில் படைப்பாளியின் மேல் சுமத்தப்படும் அக நிர்ப்பந்தம் இன்னும் காத்திரமானது.

ஆனால், அகிலம் முழுவதும் நிகழ்ந்தேறி வரும் நடைமுறை அரசியல் செயல்பாடுகளின் விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் சக மனிதர்களுடன் பகிர்ந்துகொண்டவாறே, இவை அனைத்துக்கும் வேற்று மனிதனாக உணர்வுகொள்ளும் சுதந்திரம் எந்தவொரு தனி மனிதனுக்கும் உண்டு என்றுதான் நம்புகிறேன், அவன் வவ்வாலுக்குச் சமமானவன் என்ற இளக்காரமான தீர்ப்புக்குப் பிறகும்.

பகடையாட்டத்தைப் பொறுத்தவரை, ஸோமிட்ஸியா என்ற புனைவு நிலத்தைக் கற்பிதம் செய்ததற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. நான் பிறக்க நேர்ந்த நாட்டைத் தவிர, வேறு எந்த நாட்டைக் களமாகக் கொண்டு எழுதினாலும் அந்த நாட்டின் புற, அக குணாம் சங்களைப் பொறுத்தவரை, நான் அந்நியனாகத்தான் இருப்பேன்.

இந்த நாவலின் களமாகக் கட்டமைக்கப்பட்ட ஸோமிட்ஸியா

என்ற நாட்டுடன் எனக்கு உருவாகிய சுவாதீனம் அளவிட முடியாதது. அந்த நாட்டின் நிலப்பரப்பிலும், குடிமக்களின் அகப் பரப்பிலும், அதன் அரசியல் நிர்வாக மட்டங்களிலும் மிகச் சுதந்திரமாகப் போய் வர முடிந்தது என்னால். கூட்டுவாழ்க்கையின் தவிர்க்கவியலாத அங்கமாகி விட்ட துயரத்தை, வேதனைகளைச் சித்தரிக்கக் கிடைத்தது.

இந்த நாவலின் பக்கங்களை எழுதிய நாட்களில், அலாதியான புத்துணர்ச்சியுடனும் மிகுந்த செயலூக்கத்துடனும் இருந்தது என் மனநிலை. படைப்புக்குக் கிடைக்கும் எதிர்வினையின் சாதக பாதக அம்சங்களைக் காட்டிலும், எழுதும்போது உண்டாகும் மனக் கிளர்ச்சி தான் உண்மையான பெறுபலன் என்று தோன்றுகிறது. அந்த லகரியை முன்னிட்டே, மேலும் எழுத வேண்டும் என்ற ஆவலும் தொடர்கிறது.

இந்த நாவலின் உருவம் சம்பந்தமாகவும், சொல்லல் முறையின் த்வனி மற்றும் ஒழுங்கு சம்பந்தமாகவும் எனக்குள்ளிருந்த குழப்பங்களைத் தீர்த்துக்கொள்ள வெகுவாக உதவிய நண்பர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் பிரியமாக நினைவு கூர்கிறேன்.

அந்த வகையில், நண்பர்கள் தண்டபாணி, வசந்தகுமார், தேவதச்சன், ஜெயமோகன், மோகனரங்கன் ஆகியோருக்கு என் அளவு கடந்த நன்றி உரித்தாகிறது.

நாவலை ஆழ்ந்து படித்து, செறிவூட்ட உதவும் விதமாக விவாதிக்கக்கூடிய நண்பர்கள் வாய்த்தது என்னுடைய நல்லூழ் என்றே தோன்றுகிறது.

**யுவன் சந்திரசேகர்**

03. 08. 2004



மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா

# பகடையாட்டம்

யுவன் சந்திரசேகர்

